தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—100

இங்கிலாந்தின் வரலாறு - III

(A HISTORY OF ENGLAND)

ஆசிரியர் :

பேராசிரியர் ஜி. எம். டிரெவெலியன், ஓ. எம்.

டிரினிட்டி கல்லூரி ஆசிரியர் 1940–1951,
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்து,
தற்கால வரலாற்றுத் துறையில்
அரசரின் கட்டளைப் பேராசிரியராகப்
பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழாக்கம் :

எம். எக்ஸ். மிராண்டா, எம்.ஏ., பி.டி.,
விரிவுரையாளர்,
இலயோலா கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—March, 1966

B.T.P. No. 100

HISTORY OF ENGLAND—III

G. M. Trevelyan

Translation

M. X. Miranda

PRICE Rs. 5-00

Original English language Editioւ Third Edition (New Impression 1960) by Longmans, Green & Co., Ltd., London. This translation of 'A History of England' is published by arrangement with Messers Longmans, Green & Co., London.

Printed by
Amurtha Printers,
111-C, Arcot Road,
Madras-24.

அணிந்துரை

(திரு எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன **இங்கிலாந்தின் வரலாறு – III** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 100ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 135 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும் ; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

உள்ளுறை

ஆறும் பிரிவு

படங்கள்

இங்கிலாந்தின் வரலாறு

(தொகுதி III)

ஆறும் பிரிவு

பிற்கால ஹனேவர் அரசர்கள். யந்திர யுகத்தில் கடலாதிக்கம். அரசியலமைப்பு குடியாட்சியாக மாறுதல்.

தோற்றுவாய்

மூன்று ஜார்ஜ் அரசர்களின் ஆட்சியின் கீழ் பாராளுமன்ற உயர் குடியாட்சி (Parliamentary aristocracy) பிரிட்டனின் கடலாற்றலை நெல்ஸன் (Nelson) காலத்திய சிறந்த நிலைக்கு உயர்த்தி இருந்தது. இங்கிலாந்து கடல் கடந்த பேரரசு ஒன்றை இழந்துவிட்ட போதிலும் பிறிதொன்றைப் பெற்றிருந்தது. ஸ்காட்லாந்துடன் நட்புப் பூணுவதில் வெற்றி கண்டது. ஆனால், அயர்லாந்திடமிருந்து நீடித்த தொடர்பறுப்பு செய்து கொண்டிருந்தது. இன்னும் இளமைப் பருவத்திலே இருந்த இயந்திரப் புரட்சி தழைக்க, நாட்டின் சூழ்நிலைகளை இந்த உயர்குடியாட்சி காத்துத் தந்ததெனினும், புரட்சியின் சமூக விளைவுகளைக் கட்டுப் படுத்தவும் அல்லது அதன் அரசியல் சிக்கல்களைப்பற்றிய எந்த முன்னறிவைப் பெறவும் முடியாமல் இருந்தது. விக்கு, டோரி உயர் குடி ஆட்சியினர் தம் நீண்ட காலத் தலைமையின் கீழ்ப் புது முறையானதொரு அரசியலமைப்பை அமைத்திருந்தனர். இவ்வமைப்பு அமைச்சரவையையும் (Cabinet), பிரதமரையும் (Prime Minister) அச்சாணியாகக் கொண்டு, பாராளுமன்றத்தின் ஆட்சியைத் திறமை பெறச் செய்தது. இங்கிலாந்தின் பொது மக்கள் சபை(House of commons) இவ்வமைப்பின் துணைகொண்டு தான் முடியரசு வல்லாட்சிகளுடன் (Despotie monarchies) தொடுத்த பல போர்களில் வெற்றி கண்டு, பிட் (Pitt) காசில்ரீ (Castlereagh) ஆகியவர்கள் தலைமையின்கீழ் நெப்போலியனைக் கூட அடிபணியச் செய்து, ஐரோப்பாவுக்கு அமைதியையும்

இங்கிலாந்துக்கு ஒரு நூறுண்டுக் காலப் பாதுகாப்பையும் பெற்றுத் தந்தது.

தொழிற் புரட்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள சமூகச் சூழ் நிலைகளுக்கு ஏற்ப, மேற்கூறிய ஆட்சி முறையைப் பயன்படுத்திக் கொள்வதுதான் ஹனோவர் வம்ச (House of Hanover) பிற்காலம் அரசர்களை எதிர்நோக்கியிருந்த பொறுப்பாகும். இது வெற்றி பெற அரசியல் ஆட்சி முறையைக் கட்டுப்படுத்தும் பணியில், நடுத்தர வகுப்பு மக்களையும், தொழிலாளி வகுப்பு மக்களையும், பங்காளிகளாகச் சேர்த்துக் கொள்ளுகின்ற தேவை ஏற்பட்டது (1832-1867). இந்த ஏற்பாடுகளைச் செய்யத் தவறியிருந்தால் பாராளுமன்ற முறை முறிந்திருப்பதோடு, சமூகப் பிரிவுகளுக் குள் போர் மூண்டிருக்கும். இத்தகைய விளைவுகளின் நிழலை வருங்காலத்தில் பீட்டர்லூ (Peterloo) படுகொலை, ஆறுகட்டளைச் சட்டங்கள் (Six Acts) போன்ற நிகழ்ச்சிகளிலும் காண் கிறோம் (1819).

மிக இக்கட்டான சில நிலைமைகளைச் சீர்படுத்தியதுதான் ஆங்கில அரசியலின் தனிச் சிறப்பு என்பது கண்கூடு 1688ஆம் ஆண்டுப் புரட்சியே ஆங்கில வரலாற்றின் கடைசிப் புரட்சி. அதிக விரைவின்றி எதையும் செய்யாமலும், செய்தவைகளைச் சிதைக்கா மலும், மக்களாட்சியைப் படிப்படியாக அமைத்துக் கொண்டிருந்த மாறுதலானது, அரசியல் உரிமைகளைப் பெரும் புரட்சி எதுவு மின்றி எல்லாருக்கும் வழங்கியது. இந்தத் திட்டம் எப்படி வெற்றி பெற்றது? எல்லாச் சமூக வகுப்புகளையும் கட்சிகளையும் சேர்ந்த மக்கள், பொதுவாக ஆழமான அரசியல் பண்பையும் நல்லெண்ணத்தையும் இதற்காக வழங்க முடிந்தது. ஏனெனில் விக்டோரியா அரசியாரின் காலத்தில் பிரிட்டன் அமைதியையும், வெளிநாட்டுத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பையும் பெற்றி ருந்ததோடு, அவ்வூழியின் நடுவாண்டுகளில், நாடு என்றும் கண்டிராத வகையில் செல்வச்சீரும் பெற்று விளங்கியது. இறுதி யாக அரசியல் வாக்குரிமை (Political Franchise) யாவருக்கும் வழங்கப்பட்டதால், நாட்டுக்குப் பொதுவான ஒரு கல்வித்திட்டம் தேவைப்பட்டது (1870). இதைத் தனி நபர்களும் பல திறப்பட்ட சமய நிறுவனங்களும் தோற்றுவித்து, துண்டுதுண்டாக நடத்திக் கொண்டிருந்த முயற்சிகளிலிருந்து உருவாக்க வேண்டியி ருந்தது.

இவ்வித அரசியல் நிலைமாற்றம் செம்மையாக ஏற்பட்டதன் மூல காரணம் பழைய இரு கட்சி முறைக்கு (Two-Party system)

உயிர் கொடுத்து, அதனை வன்மை பெறச் செய்ததுதான். நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய டோரிக்கட்சியின் தனிப்பெரும் தலைமையின் போது ஏற்பட்ட கூட்டு அரசியல் முறை, தனிப் பண்புடைய ஆங்கில ஒழுக்கமரபின் வழிவந்த இருகட்சிகள் வகித்த இடத்தைப் பிடித்துக் கொண்டது எனலாம். 1830-1832 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றம் சீர்திருத்த மசோதா (Reform Bill) கொண்டு வந்த போது, விக்குகள் புதிய யுத்த முழக்கங்களாலும், நாட்டுநலத்திட்டங்களாலும் தங்கள் ஆட்சி மரபுகளில் இருந்த குறைகளை நீக்கிக் கொண்டார்கள். அது முதல் இரு கட்சிகளும் முன்னேக்கிச் சென்றன. அவர்களின் போக்கு அதி விரைவாக மாறிக்கொண்டிருந்த உலகில் அடுத்தடுத்து நிகழக் கூடிய சமூக உறவுகளை, பல உருவங்களைக் காட்டும் கருவிபோல் (Kaleidoscopic) காட்டிற்று.

விக்டோரியா அரசியார் காலத்தில் முற்போக்குக் கொள்கையினரையும் (Liberals), பழமை விரும்பும் கட்சியினர் என்ற கன்ஸர்வேடிவ்கள் (Conservatives), இரண்டாம் சார்லஸ் (Charles II) காலத்திய விக்குக்களுடனும் டோரிகளுடனும் வழி வழியாக இணைத்த அடிப்படைக் கொள்கை, ஆங்கில மதச்சபைக்கும் (Church) இணங்காதாருக்கும் (Dissent) இடையே இருந்த இடைவிடாத பகைமையே. ஆங்கில நாட்டின் சமயத்துறையில் நிலவிய பிளவு (Dualism) மதச்சபை சில தனி உரிமைகளைக் கொண்டிருந்த வரையில் அரசியல் அரங்கிலும் பிளவை ஏற்படுத்தியது. இந்தப்பிளவு விக்கு, டோரிக் கட்சிகளின் மரபொழுக்கங்களில் காலம் விட்டுக் காலம் மாறும் போது மட்டும் இருந்த செயற்கையான நிரந்தரத்தன்மையை மாற்றி, ஏறத்தாழ இரு நூறு ஆண்களுக்கு மேல் அவற்றிற்கு ஓர் உண்மை நிலையைக் கொடுத்தது பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிலாளர் இயக்கத்தின் ஒரு பகுதி இணங்காதார்கையில் சிக்கி, நிலைநாட்டப்பட்ட திருச்சபை (Established Church)யின் செல்வாக்குக்கு முழுவதும் வெளியே நின்றது. அரசியலில் இருந்த பிரிவுகள், தொழிலாளர் வகுப்பின் தீவிரவாதத்தை (Radicalism) ஓரளவு முற்போக்கு விக்குக் கட்சியுடன் (Whig-Liberal party) இணைந்தன. தொழிலாளர்கள் அரசியல் வாக்குரிமைகளைப் பெற்றுத் தர இந்தக் கட்சியையும், பொருளாதாரச் சமூகச் சீர்திருத்தங்களைப் பெற தங்கள் சொந்த வழிகளான தொழிற்சங்க இயக்கம், கூட்டுறவுச் சங்கங்கள், ஆரம்ப சோசியலிசம் (Incipient Socialism) போன்ற முறைகளையும் கையாண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஆங்கிலேயர்களில் பெரும் பகுதியினர் ஒரே சமயப் பிரிவைச் சார்ந்தவ

ராக இல்லாவிடினும் சமயப்பற்றுள்ளவராக இருந்தனர். இப் பண்பு தன்னிலே பல சிக்கல்களுக்குப் பிறிதொரு காரணமென்றாலும், கட்சிகள், சமூகப் பிரிவுகளுக்குள் ஏற்படும் பூசல்களில் ஒரு நிலையான சக்தியாகவும் விளங்கியது.

புதுக் காலத்தின் குடியாட்சித் தன்மைக்கேற்பப் பாராளுமன்ற ஆட்சி முறையையும் தல ஆட்சி முறையையும் படிப்படியாக மாற்றியமைத்துக் கொள்வதானது, புதிய சமூகத்தைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட வேண்டிய பல பெரும் மாற்றங்களின் ஒரு சிறு பகுதியே. ஏழு மில்லியன் மக்கள் எத்தனையோ தொல்லைகள் பட்ட நாட்டில், நாற்பது மில்லியன் மக்களின் வாழ்வை ஓரளவு சகிக்கத் தக்கதாகப் பலதிறப்பட்ட புது அமைப்புகளை உருவாக்க வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டு இனப் பெருக்கமும், தனி நபர்களின் ஆற்றல்களும் சிறந்திருந்த காலம் என்ற போதிலும், கூட்டு வாழ்வும், நிறுவன அமைப்புகளைச் சார்ந்த வாழ்வும் மந்த நிலையில் இருந்தன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டோ, பாராளுமன்ற, நகராண்மைக் கழகங்கள் (Municipalities), மதச் சபைகள் (Church), பல்கலைக் கழகங்கள் Universities), பள்ளிகள், சிவில் துறைப் பணிகள் (Civil Service) ஆகியவற்றால் புதிய ஜனநாயக உணர்வை ஊட்டியது. மேலும், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையுடனும் தொடர்புடைய பொதுவானதும் தனிப்பட்டதுமான, வாழும் நிறுவனங்கள் பலவற்றையும் படைத்தது. கொடை வளத்தையும் பண்பாட்டையும் நோக்காகவுடைய குழுக்கள் (Committees), ஆணைக் கழகங்கள் (Commissions), கழகங்கள் (Boards) சங்கங்கள் (League), உதவிச் சபைகள் (Benefit Societies), கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவை வளர்ந்த காலம் அது. வாய் பேசா விலங்குகள் கூடச் சீரான முறையில் காப்பாற்றப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கூட்டு வாழ்வு, நிறுவனஞ் சார்ந்த வாழ்விலும் (Institutional life) புதுப்புது அமைப்புகளைப் படைப்பதில் மத்திய காலத்தோடு போட்டியிட்டது. எனினும் தனிநபர் முயற்சியிலும் தன்னுதவியிலும் அது பதினெட்டாம் நூற்றாண்டிற்கு எவ்வகையிலும் பின் தங்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்திருந்த பல பெரியார்களைப் பற்றிப் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அந்நூற்றாண்டு படைத்த புது நிறுவனங்களின் பட்டியல் அதைவிட நீளமானது; சிறந்தது.

அரசாங்கத்திலும் மக்கள் செயல்களிலும் தோன்றிய புதுப் படைப்புகள் சிக்கல் நிறைந்தவையாகையால் இந்நூலில் அவைகளைப் பற்றிச் சுருங்கக் கூறுவது அரிதென்றாலும், அவற்றில் பல,

நமது அன்றாட வாழ்க்கையின் நிகழ்ச்சிகளாக நமக்கு மிகவும் பழக்கமானவை. விக்டோரியா அரசியார் ஆட்சியின் இறுதிக் காலத்தில் கண்கூடாக விளங்கியபடி, புதிதாகத் தோன்றிய நாட்டு ஆட்சி முறையின் சிறப்பியல்பு என்னவென்றால், ஒரு புறத்தில் தனியார்களின் அன்புப் பணிகளுக்கும் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கும் இடையே ஏற்பட்ட நெருங்கிய தொடர்பும், மறுபுறத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் தல ஆட்சிகளுக்கும் இடையே வளர்ந்த உறவுகளுமாகும். சமூகம் முழுவதையும் கவனத்தில் கொண்டு மத்திய அரசும், தல அரசுகளும் அதன் தேவைகளை நிறைவு செய்ய முன் வந்து, கல்வி, மருத்துவம், பொதுநல ஏற்பாடுகள் போன்ற வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் தனிநபர்கள் செய்து வந்த முயற்சிகளில், அறிவுடன் அக்கறை காட்டத் தலைப்பட்டன. தல ஆட்சிகளுக்குக் கருவூலக் (Treasury Grants in Aid) கொடைகள், தொழிற்சாலை மேற்பார்வை, அரசாங்க ஈட்டுறுதித் (இன்ஸ்யூரன்ஸ் Insurance) திட்டங்கள், தற்காலக் கல்வி முறை முதலியவற்றின் மூலம் அரசாங்க உதவி அளிக்கவும் (State aid) அவற்றைச் செயல்படுத்தவும் கட்டுப்பாடு செய்யவும் விரிவானதொரு திட்டம் தோன்றியது. இங்கிலாந்தில் தனிநபர்கள் தாமாக விரும்பி முன் வந்து அரசர் ஆதரவுடன் செய்துவந்த பற்பல பணிகள், பிற ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் முழுவதும் அரசாங்கத்தால் செய்யப்பட்டன. சில நாடுகளில் அவை அறவே இல்லாமலும் இருந்தன.

மத்திய அரசுக்கும் தல அரசுக்கும், தனியார் முயற்சிகளுக்கும் அரசாங்கம் நடத்திய தொழில்களுக்கும் இடையேயுள்ள சிக்கலான நிலையற்ற உறவுகளை, அறிவு வளமும், அனுபவமும், ஆழ்ந்த மரபுகளும் கொண்டு அரசியல் சார்பற்று வளர்ந்த கிரேட் பிரிட்டனின் (Great Britain) நிலையான சிவில் பணித்துறை அலுவலரே ஒழுங்குபடுத்தினர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாம் கால் பகுதியில் சிவில் பணியில் நுழைவோருக்குப் பகிரங்கப் போட்டித் தேர்வுகள் (Open Competitive Examination) ஏற்பட்டதால் சிவில் பணி, அரசியல் தரகின் (Jobbery) பிடியிலிருந்து மீட்கப்பட்டது. பெரும் வெற்றி கண்ட இத்தேர்வுகள் புதுமையானதொரு திட்டம்.

புது யுகத்தின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் பிரிட்டன் கண்ட வழிகள், மக்களின் சிறந்த நடைமுறை வழியான புதுவது புனையும் ஆற்றலையும் காட்டியதோடு, வன்மையான நாட்டு மரபு ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் விளங்கின. ஐரோப்பாக் கண்டத்தின் சமகாலத்திய இயக்கங்களிலிருந்து

மிகக் குறைந்த அளவில்தான் எதுவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. பாராளுமன்ற முறை இங்கிலாந்தின் தனியுடைமை. தல ஆட்சி ஆங்கில முறைப்படி சீர்திருத்தப்பட்டு விவரிக்கப்பட்டது. தொழிற்சாலைக் கண்காணிப்பு, தொழில் சங்கங்கள், கூட்டுறவு இயக்கங்கள் பிரிட்டனில் முதலில் தோன்றியவை. தேர்வுகள் மூலம் ஆள் பொறுக்கும் விநோத முறையைக் கையாண்ட சிவில் பணி நாட்டு மரபுகளை யொட்டி அமைந்திருந்தது.

மனிதப் பண்பு, ஜனநாயகம், கல்வி ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினாலும் தொழில் முறையில் உண்டான மாறுதல்களாலும் கூலி பெற்று உழைக்கும் ஆண்களும் பெண்களும் பெருங்கூட்டமாக ஆலைகளிலும் அலுவலகங்களிலும் ஒன்று சேர்ந்தனர். இதன் விளைவாகச் சமுதாயத்தில் மாதரின் நிலையைப்பற்றிய புதுக் கருத்துகள் எழுந்தன. முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்த பெண்கல்வி இன்னும் இரு தலைமுறைகளில் ஆண் கல்விக்கு ஈடாக உயர்ந்தது. குடும்பத்தில் பெண்ணின் நிலை சட்டப்படி பல மாறுதல்களை அடைந்தது. அதற்கு மேலாய் நடைமுறையிலும் பொது மக்கள் எண்ணத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இறுதியாக அவர்களுக்கு அரசியல் வாக்குரிமையும் கொடுக்க வேண்டுமென்ற இயக்கத்தை யாரும் நகைப்பிற்குரியதாகக் கருதவில்லை.

பிரிட்டனில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய அமைதி, வளம், பாதுகாப்பு ஆகியவையின்றி இந்தப் பெரும் மாறுதல்களெல்லாம் அமைதியான முறையில் நிகழ்ந்திருக்க முடியாது. வாட்டர்லூ யுத்தம் (waterloo) நடந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்த கிரிமியப் போராகிய (Crimean War) இடைநிகழ்ச்சியைத் தவிர, ஐரோப்பிய நாடுகளின் சச்சரவுகளில் தலையிடாமல் விலகிக் கொள்வதே பிரிட்டனின் பொதுவான கொள்கையாயிற்று. சக்தி-சமநிலை ஓரளவு தற்காலிகமாகச் சிக்கலின்றி ஒழுங்கு படுத்தப்பட்டிருந்ததால், எந்த ஒரு நாடோ அல்லது அதன் கூட்டு நாடுகளோ (vassals)[1] ஐரோப்பாவை அடிமைப்படுத்துவதைத் தடுக்க, போர் உதவி கோரி பிரிட்டனை யாரும் அழைக்கவில்லை.

[1] அக்காலத்தில் ஐரோப்பாவில் மிகவும் சக்தி வாய்ந்த நாடாகிய ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி நாடுகள் அமைத்திருந்த முக்கூட்டு ஒப்பந்தத்துடன் 1886ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரிட்டன் கொண்டிருந்த தொடர்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, பாலோடன் (Falloden) லார்டு கிரே (Lord Grey) தனது வாழ்க்கைக் குறிப்புகளில் கூறுகிறார். 'அமைதியையும் நிலைத்த பாதுகாப்பையும் தரக்கூடிய நோக்கத்தோடு ஐரோப்பாவில் எந்தப் பலமிக்க நாடும் தலைமை தாங்குவதை. கொள்கையளவில்

ஒரு சில எதிர்பாராத நெருக்கடிகள் நிகழ்ந்திருந்த போதிலும், கென்ட் உடன்படிக்கையின் பின் (Treaty of Ghent) அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் பிரிட்டன் கொண்டிருந்த உறவு மிக முக்கியம் பெற்று விளங்கியது. கனடா எல்லையின் இருபக்கங்களில் நிரந்தரமாகப் படைகளைக் குறைத்துக் கொள்வதென காசில்ரீயும் (Castlereagh) மன்ரோவும் (Monroe) செய்துகொண்ட ஒப்பந்தமாகிய சாதனைதான் இந்த நல்லுறவினை நல்கியது. இந்த உடன்பாட்டின்படி மேற்கு நோக்கிக் கனடாவின் எல்லை நீண்டு பரவிக்கொண்டிருக்கும்போது, அதனால் கண்டிப்பாக ஏற்படக்கூடிய பெரும் சச்சரவுகள் யுத்தமின்றித் தீர்த்துக் கொள்ளப்பட்டன. மேலும் அலபாமா (Alabama) கோரிக்கைகளை மூன்றும் நபரின் பொதுவர் தீர்ப்புக்கு (Arbitration) விட்டு விடுவதென கிளாட்ஸ்டன் (Gladstone) ஒப்புக்கொண்டது, இதே நட்புறவின் மற்றொரு வெற்றி. இதே முறையில் ஆப்பிரிக்கா, ஆசியா நாட்டுப் பகுதிகளைப் பங்கிடுவதில் பிரிட்டனுக்கும் ஜெர்மனி பிரான்ஸ் நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட சச்சரவுகள், சில சமயங்களில் இக்கட்டான நிலையை அடைந்தபோதிலும், 'அமைதியையே பிரிட்டனின் தலைசிறந்த நலனாகக்' கருதிய லார்டு சாலிஸ்பரி (Salisbury)யின் பெருமுயற்சியால், பொதுவர் தீர்ப்புகளாலும் உடன்பாடுகளினாலும் அவை போரின்றி முடிவு செய்யப்பட்டன.

நிலைத்த அமைதியும், விக்டோரியா அரசியார் கால உலகின் நிலைமை காரணமாக வளர்ந்த பிரிட்டனின் வாணிகமும், தொழிலும் அவற்றின் விளைவான வியக்கத்தக்க வளமும், பிரிட்டன் புதிய சமூக அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் மிக நல்ல சூழ்நிலைகளை உருவாக்கின. பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கை யுத்தமோ யுத்தத் தயாரிப்போ அல்ல. ஆனால் ஆண்டுதோறும் வளர்ந்து வளங்கொழித்த வெளிநாட்டு வாணிகத்தையும் ட்ரபால்கர் (Trafalgar) வாட்டர்லூ (Waterloo) போர்களின் பெரு வீரர்கள் விட்டுச் சென்ற புதிய குடியேற்றப் பேரரசையும் முன்னேற்றுவதுதான். நெப்போலியப் போர்களின் பின்னர், பிரிட்டனின் மக்கள் பெருக்கமும், தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டங்களினால் (Industrial Insurance) நிவாரணம் பெறாத வேலையின்மையும், எண்ணிக்கையற்ற ஆங்கிலேயரையும்

பிரிட்டன் எதிர்த்ததில்லை. இத்தகைய கூட்டுறவுகளை ஆதரிப்பதே அதன் முதல் விருப்பம். வல்லமை பெற்ற நாடு யுத்த வெறி கொள்ளும் போதும், அதனால் பிரிட்டனின் நலன்கள் அச்சுறுத்தப்படும்போதும் மட்டுமே, பிரிட்டன் தற்காப்பு உணர்ச்சியால் உந்தப்பட்டு உறுதியான கொள்கையுடன் சக்தி-சமநிலையிலிருந்து விலகிப்போகிறது.'

ஸ்காட்லாந்தியரையும் குடியேற்ற நாடுகளுக்கு விரட்டின. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் குடிபெயர்ந்தவர்களில் பலர், உழவுத் தொழிலாளர்களும் அரை விவசாயிகளுமாவர். தமக்கென நிலத்தைப் பெற்று அதில் தாமே உழைப்பதில் பேரார்வம் கொண்டவர்கள். அந்நூற்றுண்டின் முடிவில் தான் இங்கிலாந்தின் கிராமிய வாழ்க்கை நலிவுற்றது. இதனிடையில் நவீன நகர வாழ்வும் கிராம மக்களைக் கவரத் தொடங்கியதால், ஆங்கில இனம் கிராம நிலங்களில் தங்கி வாழ்வதை விரும்பாமல், நகரவாசிகளாக மாறக்கூடிய ஆபத்து தோன்றியது.

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் குடியேற்றங்கள் 'நாடுகள்' என்ற தகுதிபெற்ற டொமினியன் (Dominian) ஆகிவிட்டன. அரை நூற்றுண்டும், அதற்கு மேலும் உள்நாட்டுப் பொறுப்புகளில் தன்னுட்சி பெற்று விளங்கிய பின்னர், அவை யாவும் உலக நிகழ்ச்சிகளைக் கனடா, ஆஸ்திரேலியா (Australia), தென் ஆப்ரிக்காவெனத் தத்தமது நாட்டின் கோணத்திலிருந்தே நோக்கத் தொடங்கின. இந்த நிலையில் குடியேற்றப் பேரரசை ஒருவகையான கூட்டாட்சி அரசியலமைப்பில் (Federal constitution) இணைக்கலாம் என்று, பேரரசு இயக்க காலத்தில் (Imperialist Movement) கனவு கண்டு கொண்டிருந்த, ஆங்கில அரசியல் தலைவர்களின் நம்பிக்கை மலர்ந்து கனி தராமலே போய்விட்டது. 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் ஜெர்மனியுடன் போர் மூண்டு பிரிட்டன் பேராபத்தில் மூழ்கியபோது வன்மையற்ற ஒருவித பொதுநல உறவும், ஒத்துணர்வும் பேரரசைப் பிணைத்து நின்றன.

இயல் 1

அடக்குமுறையும் சீர்திருத்தமும்

அடக்குமுறையும் சீர்திருத்தமும், 1815–1835.—*தானியச் சட்டமும்* (Corn law) *வருமான வரியும்—காபெட்டு—பீட்டர்லூவும் ஆறு கட்டளைச் சட்டங்களும்—டோரிக் கட்சிச் சீர்திருத்தங்கள் — பீலும், ஹஸ்கிஸனும்* (Huskisson) —*காசில்ரீயும்* (Castlereagh) *கானிங்கும்* (Canning)—*வெலிங்டனின் அமைச்சரவை—விக்குகளும் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும்—நகர பரிபாலனசபைச் சட்டங்கள்* (Municipality Corporation Act)—*அடிமை ஒழிப்பு—பெல்ஜியம்.*

அரசர்கள் : மூன்றும் ஜார்ஜ். இறப்பு 1820 ; *நான்காம் ஜார்ஜ்* 1820–1830 ; *நான்காம் வில்லியம்* (William IV) 1830–1837.

நெப்போலியப் போர்களின் முடிவில் ஏற்பட்ட அமைதியினுல் விலைவாசிகள் இறங்கவே, அநேக குடியானவர்களும், வர்த்தகர்களும் அழிந்தனர். தற்காலிகமாகக் கூலிகளின் வாங்கும் திறன் (Purchasing Power) அதிகரித்ததென்றுலும், கணக்கற்ற மக்கள் வேலை இழக்கச் செய்தது. ஆங்கில வரலாற்றிலே முதல் முறையாக அமெரிக்காவிலிருந்தல்ல, ஆனுல் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியான வெளிநாட்டு உணவுப் பொருள்களினுல், உள்நாட்டு விலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. மலிவான தானியங்களின் இறக்குமதியைத் தடை செய்யும் நோக்கத்தோடு, 1815ஆம் ஆண்டின் தானியச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனுல் அதை ஏழை மக்களும், அவர்கள் தமது உணவுக்காக மட்டும் கூலி முழுவதையும் செலவிடுவதை விரும்பாத நடுத்தர மக்களும், எரிகிற நெருப்பில் ஊற்றிய எண்ணெயாகக் கருதினர். ஆலைத் தொழிலாளர்களும் வேலையாட்களும் முதல் முறையாக வெகுண்டெழுந்து, ஒன்றுபட்டு நிலக்கிழார் வகுப்பினர் அரசியல் அதிகாரத்தைத் தனியுரிமை ஆக்கிக் கொள்ளக் கையாண்ட இம்முறையைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நடுத்தர வகுப்பாரும் கீழ்நிலை வகுப்பாரும் சேர்ந்து அமைத்த முதல் கூட்டு முன்னணி சீக்கிரமே மடிந்தென்றுலும், முற்றிலும் மறைந்து விடவில்லை. ஏழை மக்கள் வறுமையின் காரணமாக அமைதியற்ற நிலையில் உழன்று, காபட்டு, ஹண்டு போன்றவர்களின் தலைமையில் செய்துவந்த கிளர்ச்சிகள், நான்காண்டுகளின்பின் பீட்டர்லூ படுகொலையிலும், ஆறு கட்டளைச் சட்டங்களிலும் போய் முடிந்தன. நடுத்தர வகுப்பு மக்கள், தங்கள் தலைவரான ஹென்ரி பிரௌஹாமும் (Henry Brougham) பாராளுமன்றத்திலிருந்த விக்கு கட்சித் தலைவர்களும், வருமான வரியை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் கண்ட வெற்றியில் பூரித்துச் சிறிது காலம் அரசியல் அரங்கிலிருந்து விலகிக்கொண்டார்கள். பிரிட்டன் தீவின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்த, 'கண்ணியம் வாய்ந்த பெருமக்கள்', அமைதிக் காலத்தில் வருமான வரி தொடர்ந்து விதிக்கப்படுவதையும், 'ஆலை முதலாளிகள் தமது நிறுவனங்களை மேற்பார்வையாளர்கள், ஒற்றர்கள், பல அதிகாரிகளின் சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டுமென் வலுவந்தப்படுத்தப்பட்டதையும்' எதிர்த்துப் பாராளுமன்றத்திற்குப் பல விண்ணப்பங்களைக் கொடுத்தார்கள் (1816). இப்போராட்டப் புயலுக்கு அரசாங்கம் பணிவதைத் தவிர வேறு வழி இல்லை. பொது

மக்கள் அரசாங்கக் கொள்கைகளைக் கட்டுப்படுத்துவதன் முதல் படி இதுவென்றாலும், தவறான திக்கில் இது போய்க்கொண்டிருந்தது வருந்தத்தக்கது. ஏற்கெனவே மட்டுமீறி விதிக்கப்பட்டிருந்த மறைமுக வரிகளின் விகிதத்தை அதிகரித்ததால், வரிப்பளு செல்வரை அழுத்தியதைப் போலவே ஏழைகளையும் நசுக்கியது. இந்த நிலைமை 1842ஆம் ஆண்டில் பீல் (Peel) வருமான வரியைத் திரும்பவும் விதித்த காலம் வரை நிலவியது.

மறைமுக வரிகள் மூலம் வந்த வருவாய், ஊதியம் பெறும் பணிகளுக்கும் (Sinecures), ஓய்வூதியங்களுக்கும் (Pension), உயர்குடி அரசியல் தரகர்கள் பெற்றிருந்த பதவிகளுக்கும், பொருள் நிதி மிகுந்த செல்வர்களிடமிருந்து பெற்ற அரசாங்கக் கடன்களுக்கு வட்டி செலுத்தவும் செலவிடப்பட்டது. அரசியல் தரகுகளையும், நாட்டுக் கடன்களையும் வேறுபடுத்தாமல், காபட்டு, சகலத்தையும் கண்டனம் செய்தது குழப்பத்தை உண்டாக்கியது. அக்காலத்திய தீவிர வாதிகளுக்கு, 'வரிப்பணத்தை விழுங்கும்' மனிதப் பண்பற்ற இனம், வரி கொடுப்போரின் நலன்களுக்கு முற்றிலும் வேறுபட்டவர் என்று தோன்றியது. இவ்வாறு மாறுபட்ட வழிகளில் விக்குகளும் தீவிர வாதிகளும் வரியைக் குறைப்பதன் மூலமும், ஆள் குறைப்பின் மூலமும் மக்களின் குறைகளைத் தீர்க்கலாமென்று எண்ணினார்களே யொழிய, வரிச் சுமையைப் பகிர்வு திருத்த முயன்றார்களில்லை. ஆனால் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாக்கள் நிறைவேறிய பின், இவர்களே அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, ஆள்குறைப்பின் மூலம் 'மிகப் பெரும்பான்மையான மக்கள் பெருவாழ்வு பெறுதல்' என்ற குறிக்கோளைக் கண்ணிய முறையில் அடையமுடியாது என்பதை விரைவில் கண்டனர்.

நீதியைப் பற்றியும் பிற துறைகளைப் பற்றியும் காபட்டு, வெறிகொண்டு, பிதற்றி, பெருவாரியாகப் பொருளற்ற பல எழுதினாரென்றாலும்,[1] ஆங்கில வரலாற்றில் அவர் சிறந்ததும் நன்மை பயக்கக்கூடியதுமான பெருந்தொண்டு புரிந்தார்.

[1] 'ஹைடு பார்க் முனை'யைப் பற்றி (Hyde Park Corner) 1826-ல் குறிப்பிடும்போது காபட்டு எழுதுவார்: 'அக்காலத்தின் பெருவீரன்' என்று தம்மை அழைத்துக்கொண்டு பிதற்றும் பிரௌஹாம், இதன் அண்மையில் வாழ்கிறார். அதே இடத்தில் 'ஆங்கில மாதர்களின்' ஆடையற்ற அக்கிலிசின் சிலையும் (Achilles) நிற்கிறது. அதன் அடியிலே 'வெலிங்டன்' என்ற சொல் மட்டும் கொட்டை எழுத்திலும் மற்றவை சிறு எழுத்துக்களிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. எனவே மானங்கெட்ட வரிப்பண விழுங்கிகளும் நிதிகளைக் களவாடுவோரும், இச்சிலையின் முன் அஞ்சலி செய்யும்போது பிரௌஹாமாகிய பெருவீரனை வணங்குவதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள்.

பேய்ன் (Paine) தோற்றுவித்து, பீல் அழித்த, தொழிலாளர் இயக்கத்தைக் காபட்டு உயிர்ப்பித்தார். இதனை அவர் அமெரிக்கக் குடியரசுக் கட்சியினர் (Republicans) அல்லது பிரெஞ்சு ஜேக்கோபினர்கள் (Jacobins) நடத்திய இயக்கங்களைப் போலல்லாமல், தொழிலாளர் வகுப்பின் வாக்குரிமைகளைக் கோரி, குறை தீர்க்கும் ஒரே வழி என்ற முறையில், ஒரு பாராளுமன்ற இயக்கமாகவே வளர்த்தார். 1816-ல் காபட் தமது செல்வாக்கின் உச்சநிலையில் இருந்தபோது, அவரது நூல்களைப்படித்த பலரைக் கலகங்கள் செய்வது, வைக்கோற் போர்களைக் கொளுத்துவது, போன்ற தகாத செயல்களிலிருந்து திருத்தி, அரசியல் வாதங்களிலும் அமைப்புகளிலும் ஆர்வம் கொள்ளும்படி செய்தார் என்று குறிப்புகளில் காணக்கிடக்கின்றது பத்திரிகைத் தொழில் (Journalism) வளராத அக்காலத்தில், திறமையுள்ள பத்திரிகை ஆசிரியனாக இருந்து, இதுவரையில் யாரும் செய்திராத வகையில் ஏழை மக்களின் பொறுக்க முடியாத வறுமை நிலையைப் பற்றி அவர் எழுதியிருக்காவிட்டால், அவரின் அறிவுரைகளுக்கு எவரும் செவி சாய்த்திருக்க மாட்டார்கள். நகரத்திலோ, கிராமத்திலோ மத நிலையங்களிலோ, அரசாங்கத்திலோ அதிகாரம் செலுத்திய ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் பணி முதல்வர்களுடன் தமக்கு எதிராகச் சேர்ந்து கொள்கிறார்கள் என்று ஏழை மக்களுக்குத் தோன்றியது. அவர்களின் கட்சியை எடுத்துக்கூறி வழக்குரைப்பார் யாருமில்லை. மத்திய அரசாங்கத்தைப் போல் தல ஆட்சியிலும் அவர்களுக்கு வாக்குரிமையுமில்லை. தொழிலாளர் அரங்கில் தங்கள் எண்ணிக்கை ஆற்றலைக் காட்டக்கூடிய அளவில், தொழிற்சங்கங்களை அமைக்கவும், அவர்களுக்கு சட்டத்திற்குட்பட்ட வழிகள் எதுவுமில்லை. அவர்களின் கோரிக்கைகளுக்குத் திண்ணமான முதல் குரலெழுப்பிய பெருமகன் காபட்.

காபட்டு. ஜான்புல் (John Bull) என்று அழைக்கப்பட்ட அக்கால ஆங்கிலேயர் மரபை சேர்ந்தவர். பழமையும். நன்மணம் பரப்பும் நாட்டுப் புறத்தையும், உழவரையும், ஏரையும், கூரை வேய்ந்த குடிசைகளையும் விரும்பும் பண்பினர் அவர். வெளி நாட்டாரையும், கொள்கை ரீதிகளையும் வெறுத்த அவர் பேயினையும், அவரது மானிட உரிமைகளையும் (Rights of man) ஒப்புக் கொள்ளாமல், ஜேக்கோபினரின் எதிரியாகத் தன் பத்திரிகைத் தொழிலைத் தொடங்கினர். ஆனல் ஆங்கிலேயரின் பழம் பெரும் உரிமைகள் பறிபோனதாக அவர் கண்டாரோ, அல்லது நினைத்துக் கொண்டாரோ, உடனே அவற்றைக் காக்கப் பேரொலியெழுப்பிக் கொண்டு புறப்பட்டுவிட்டார். இதனல் அவருடைய பழைய நண்பர்கள் பெருங் கொதிப்பும் திகைப்பும் கொண்டார்

கள். அவர் எழுதிய 'அரசில் பதிவேடு' (Political Register) ஆலைகளின் வேலிகளுக்கருகில் கூடிய பாமர மக்களுக்கு உரக்கப் படித்துக் காட்டப்பட்டது (1832—1835). கண்ணியம் வாய்ந்த மக்கள் கூட, கயவன் காபட்டின் திறமையான கண்டனங்களைப் படித்து, சிரித்து அவனது ஆணவத்தைச் சபித்து, தாம் படித்த வற்றைச் சிந்தித்துக்கொண்டே தம் வழி போனார்கள். இந்த முறையில்தான், மேல் வகுப்பு மக்கள் ஏழைகள் படும் பாடுகளை யும், அவர்களின் பரிதாப வாழ்க்கைகளையும் பற்றி முதல் முதலில் காண முடிந்தது. தமது உரிமைகளைத் திருடி, துன்புறுத்தி, இழிவு படுத்த எல்லோரும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்வதாக எண்ணிக் கொண்டிருந்த ஏழை மக்கள், காபட்டிடம் எத்தனை அன்பு கொண்டிருந்தார்கள் என்பதை நாமே முடிவு செய்யலாம். தெரிந்தும் தெரியாமலும் வறியவரை வாட்டி வதைத்த கூட் டத்தை எதிர்க்க வல்லவனொருவனை வையகம் வரவேற்றது. பழம் பெரும் வேளாண்மை மரபுடனும், புதர் வெளிகளில் நின்ற மதுக் கடைகளுடனும் மறைந்து கொண்டிருந்த பண்டை இங்கிலாந்து, தன் இறுதி முயற்சியாக எதிர்க்க முடியாத ஏற்றம் மிகுந்த காபட் என்ற வல்லானை. பருத்த உடலில் வெளுத்த மனம் உள்ளானை, அழிந்தாலும் பழி தீர்க்கும் இழி குணம் இல்லானைப் படைத்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரிட்டனுக்குப் பல நன்மை களைப் பெற்று தந்த தத்துவத்திற்குட்படாத தீவிரவாதத்தின் (unphilosophic Radicalism) தந்தையாகக் காபட் விளங்கினர். அவரது தீவிரவாதம் ஒரு கொள்கையன்று. ஆனல் வறியவரை நசுக்கும் கொடுமைகள் கண்ட விடத்து, பொங்கித் துடிக்கும் ஓர் எழுச்சி. அது முற்போக்குச் சக்திகளுடன் சில சமயங்களில் கூட்டுச் சேர்ந்தாலும் அவற்றோடு பிணைக்கப்பட்டதன்று. தலையிடாமைக் கொள்கையுடன் இணைந்ததும் அன்று. பல திறப் பட்ட அரசியல் அறிஞர்களையும் கட்சிகளையும் கவர்ந்து, அவர்கள் பணியின் மூலம், அது தொழிற்சாலைச் சட்டங்களையும் (Factory Acts) தானியச் சட்டங்களையும் நிறைவேற்றி, வாக்குரிமை, கல்வி, பேச்சுரிமை, பத்திரிகை உரிமை ஆகியவற்றையும் புகுத்தி, இறுதியில் கீழ்த்தர மக்கள் மீது மேல் வகுப்பினர் கொண்டிருந்த எண்ணங்களை முற்றிலும் மாற்றி வெற்றி கண்டது. பென்பதாமும் (Bentham) மில்லும் (Mill) காபட்டை விட அறிவில் சிறந்தவர்கள். ஆனல் அவர்கள் தங்களின் படிப்பறைகளிலிருந்து கொண்டு காபட்டின் உதவியில்லாமல் இங்கிலாந்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றியிருக்க முடியாது.

தொழில்புரட்சியால் ஒருவித தன்னுணர்வைப் பெற்ற காலத்திலிருந்து, தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரப் போக்குகளினூடே இடைவிடாமல் மாறிமாறிச் சுழன்று வந்திருக்கிறது. வாட்டர்லூப் போரின் முடிவில் அதன் போக்கு அரசியல் மயமானது. அதன் ஆற்றல்கள் இன்னும் தொழிலாளர் சங்கங்களின் அமைப்பைப் பெறவுமில்லை; உயர்ந்த கூலி[1] கோரிய நிறைவேருத விருப்பத்தைத் தவிர, எவ்விதப் பொருளாதாரக் கொள்கைகளுடனும் திட்டங்களுடனும் அது இணையவுமில்லை. 1815ஆம் ஆண்டின் தானியச் சட்டம் அரசியல் போக்கிற்கு ஒரு அறை கூவலாகத் தென்பட்டது. எந்த விதமான பொருளாதாரப் பாராளுமன்றச் சீர்திருத்தமானாலும் அதுவே முதல்படியெனக் கோரப்பட்டது.

மேல்தர வகுப்பினரையும் அரசாங்கத்தையும் எதிர்த்து, அமைப்பற்ற தொழிலாளர்களைச் சீர்திருத்தப் போராட்டத்தை (1817–1819) நடத்த விட்டு விட்டு, நடுத்தர வகுப்பினர் இன்னும் நடு நிலைமை கொண்டு ஒதுங்கி நின்றனர். விக்குகளைக் கொண்ட உயர்குடி முற்போக்குக் கட்சியினர் கூடப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சிக்கலைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டு வெறும் பார்வையாளர்களாக இருந்தனர். டோரிகளின் அடக்குமுறைகளை இகழ்ந்தும், தீவிர வாதிகளின் விளம்பரங்களைத் தாக்கியும் வந்த விக்குகள் சொந்தத் திட்டங்கள் எதையும் வழங்கவில்லை. எனவே அரசியல் நாடகம் முழுவதும் லிவர்பூல் (Liverpool) வெல்லிங்டன் (Wellington) காசில்ரீ (Castlereagh) ஆகியோரால் நடிக்கப்படவேண்டியிருந்தது.

வாட்டர்லூ வீரர்களும், அமைதி மாநாட்டில் கலந்து கொண்ட பெரு மக்களும், உள்நாட்டில் உள்ள இக்கட்டான சிக்கல்களை ஒழுங்குபடுத்தப் போதிய ஆர்வம் பெருதது ஒரு அவப்பேறே. கடின அடக்கு முறைகளைத் தவிர, அரசியல் பொருளாதார முறையான வேறு கழுவாய்கள் அவர்களுக்குத் தோன்றவில்லை. பிரிட்டன் கையாண்ட ஜேக்கோபிய அழிப்பு முறைகள்

[1] அரசியல் நடவடிக்கைகளை எப்போதும் இகழ்ந்து பேசும் ராபர்ட். ஓவன் (Robert Owen) இக்காலத்தில் வள்ளல் தன்மையுடைய பணி முதல்வராகத் திகழ்ந்தாரே யன்றி, ஜனநாயகப் பண்புள்ள தலைவராக இன்னும் மாறவில்லை. போர் முடிந்த முதலாண்டுகளில் கூட அவர், தமது சொந்தப் புதுலானர்க் ஆலைகளில் (New Lanark Mills) தாம் வழி காட்டியது போல, தொழிற்சாலைகளில் வாழ்க்கை நிலைமையும், கல்வி வசதிகளையும் முன்னேற்ற வேண்டுமென்று தமது உடன் பணி முதல்வர்களையும், அமைச்சரவையையும், பாராளுமன்றத்தையும் தூண்டிக் கொண்டிருந்தார். அவர் சொற்களை மக்கள் கேட்டிருந்தால் இன்று நாம் வாழும் உலகம் வேறுவிதமாகக் காட்சியளிக்கும்.

ஒரு சிறு பகுதியினை, அதுவும் போர்க்காலத்தில் அடக்கி வைப்பதில் வெற்றி கண்டிருந்தன. ஆனால் இப்பொழுதோ அவைகள் நாட்டிலே பெரும்பான்மையோருக்கு எதிராக அமைதிக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. கலகக்காரர்கள் அரசுத் துரோகப் (treason) பெருங் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அச்சிடுவோரும், பத்திரிகை ஆசிரியர்களும் சட்ட எதிர்ப்புக் குற்றம் சாட்டப்பட்டாலும் அவர்களின் வழக்குகளை ஆய்ந்த நடுத்தர வகுப்பு நடுவர்களால் பல தடவைகளில் காப்பாற்றப்பட்டனர். தீவிர வாதிகளுக்கு எதிராக ஒற்றர்களும், நாடறிந்த ஆலிவரைப் (Oliver) போல் ஐயத்திற்கிடமான குற்றவாளிகளைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தூண்டுவதற்காக அமர்த்தப்பட்ட கையாட்களும் (Agents Provocateurs), அரசாங்கத்தால் ஏவி விடப்பட்டனர். ஆளுரிமைக் காப்புச் சட்டம் (Habeas Corpus Act) நிறுத்தி வைக்கப்பட்டது எல்லாவித பத்திரிகை வெளியீடுகளின் மீது இதழுக்கு நான்கு பென்ஸ் வீதம் விதிக்கப்பட்ட வரி தீவிரவாதிகளின் பிரச்சாரத்தை மட்டுமல்ல, கூடிய வரையில் எல்லா வகையான அறிவைப் பெறும் வழிகளையும் ஏழை மக்கள் பெற முடியாமல் அடைத்து விட்டது. 1836ஆம் ஆண்டுவரை ஒரு பென்னி மதிப்புள்ள பத்திரிகையின் ஒவ்வொன்றும் குறைந்தது ஐந்து பென்ஸுக்கு விற்கப்பட வேண்டுமென்று, பாராளுமன்றத்தின் அறிவாழம் ஆணையிட்டது.

பொதுக்கூட்டங்கள் பெரும்பாலும் தடை செய்யப்பட்டிருந்தன. எல்லாக் கூட்டங்களையும் தடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும் ஏனெனில் மான்செஸ்டர் (Manchester) செயின்ட் பீட்டர்ஸ்பீல்டு திடலில்(St. Petr's Fields)பாராளுமன்றச் சீர்திருத்தங்களைக் கோருவதற்காகத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் பெருமளவில், ஆனால் அமைதியான முறையில், குழுமியிருந்த போது, பேரச்சம் கொண்ட நீதிபதிகள் (Magistrates)சிறு நிலக்கிழார் படையை ஏவிச் செய்த துப்பாக்கிச் சூட்டில் பன்னிருவர் உயிரிழந்தனர் (ஆகஸ்ட் 16, 1819). நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் காயப்பட்டனர்

விசாரணைக்குக் காத்திராமலே அமைச்சரவை இந்த இரங்கத்தக்க தவறை ஒப்புக் கொண்டது. ஆனால் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மாறுபட நினைத்தார்கள். தீவிர வாதிகளில் உழைப்பாளர்களும் கிராமங்களில் உயர் பதவியிலிருந்த விக்குகளும், சுக மாளிகைகளிலே வாழ்க்கை அனுபவித்திருந்த வணிகர்களும், தங்கள் சக குடிமக்கள் உணர்ச்சியற்ற முறையில் கொல்லப்பட்டதைக் கண்டு கொதித்தனர். இந்நிகழ்ச்சி வாட்டர்

லூாவுக்கு நாடு செலுத்த வேண்டிய நன்றியை அழித்து விட்டதால் பீட்டர்லூா எனப்பட்டது போலும். எல்லாப் பிரிவுகளேயும் கட்சிகளேயும் சேர்ந்த சகல பிற்காலத் தலைமுறைகளின் உள்ளத்தில் இது ஆழமாகப் பதிந்தது. ஏனெனில், இதுவரை எதிர்மறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஜேக்கோபிய எதிர்ப்பு டோரி வாதிகள், நாட்டை இட்டுச் சென்ற ஆபத்தான மாய வழிக்கு ஒரு முடிவு வந்தது. எனினும் உடனடியாக ஒரு மாற்றுக் கொள்கை ஏற்படவில்லை. சமரச நோக்கமில்லாத நிலையில் அமைதியை எப்படியும் நிலைநாட்ட வேண்டி, அவ்வாண்டு மாரிக் காலத்தில் ஆறு கட்டளைச் சட்டங்கள் (Six Acts) கொண்டுவரப்பட்டன.

அடுத்த பிப்ரவரித் திங்களில் வன்முறைத் தீவிர வாதிகள் (Physical-force Radicals) திஸ்ஸில்வுட் (Thistlewood) தலைமையில், உணவு நேரத்தின் போது அமைச்சரவையை முற்றிலும் அழித்துக்கட்டும் நோக்கத்தோடு கேட்டோ தெருச் சதி (Cato Srteet Conspiracy) நடத்தினர் (1820). இதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டப்பட்டது. ஆனல் மேற்கூறிய சதியின் மிக அருவருக்கத்தக்க தன்மை கண்டும். அரசாங்கத்திற்குக் கிடைத்த ஆதரவு நிலைக்காமல் போனது வியப்பு தருகின்ற செய்தி. நான்காம் ஜார்ஜ் (George IV) அரசர் அரியணையேறிய போது, அவர் மன நிறைவுக்காகக் கோடையில், அமைச்சர்கள் கரோலின் அரசியாருக்கு (Queen Caroline) எதிராக நிறுவிய மணவிலக்கு நடவடிக்கையாகிய சுவையற்ற இடை நிகழ்ச்சி, தீவிரவாதிகள் முன் கண்டறியாத வகையில் மக்கள் வெறுப்பைப் பெறச் செய்தது. நாட்டுக் குடி மக்கள் அரசியாரின் நடத்தையைப் பற்றி ஐயப்பட்டார்களேயன்றி அரசனின் நடத்தை பற்றி எள்ளளவேனும் ஐயுறவில்லை. அரசர் ஒரே நேரத்தில் இரு பெண்களை மணந்திருந்தார் என்ற உண்மை பொதுவாக மக்களுக்குத் தெரியாது. ஆனல் பலபேர் அவ்வாறு ஐயுற்றதுண்டு. அரசர் வெளிப்படையாக இரு பெண்களுடன் வாழும் போது, நாட்டின் பிரபுக்கள் முன்னிலையில் அரசியாரின் நற்பெயரைக் கெடுக்கும் வகையில், அரசரின் கையாட்கள் இத்தாலியிலிருந்து கீழ்த்தரமான சாட்சிகளைக் கொண்டு வந்ததைக் கண்டு, ஆங்கிலேயரின் நேர்மைக் குணம் புண்பட்டது. 'தண்டனை மாசோதா' (Bill of pains and penalties) மக்கள் சபைக்குப் போகா முன்னரே தள்ளுபடி செய்யப்பட்டது. ஜார்ஜ் க்ருயிச்சாங் (George Cruikshank) தலைமையில் உருவாகிக் கொண்டிருந்த கேலிச் சித்திரக்காரர்களின் பிற்காலத் தலைமுறை, நான்காம் ஜார்ஜ் அரசரின் பொலிவிழந்த உருவத்தையும், வீறிட்டு அலறும்

பெண்களின் உடல்களை, சிறுநிலக்கிழார் படையினர், கில்ரே (Gillray) காலத்தில் ஃபாக்ஸ் (Fox) ஜேக்கோபியர்களை (Jacobins) விலங்குத் தன்மையில் தாக்கியது போன்ற அதே கொடூர பாவங் கொண்டும் தீட்டினார்கள்.

அரசியின் விசாரணைக் குழப்பம் ஒருவாறு ஓய்ந்து அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு நாட்டின் மன வெழுச்சி புத்துயிர் பெற்ற போது, டோரிக் கட்சி அமைச்சரவை மீட்கப்பட்டு, டோரிக் கட்சியினர், இன்னும் பத்தாண்டுகளுக்குப் பதவியைக் கைப்பற்றினார்கள். மூன்று சூழ்நிலைகள் இந்த வாய்ப்பினை அவர்களுக்கு உதவின. முதலாவதாக வணிகத்துறை கண்ட வளம். இரண்டாவதாகப் பாராளுமன்றத்தில் அவர்களின் ஒரே எதிரிகளாயிருந்த விக்குகள் நலிவு. மூன்றாவதாக உள்நாட்டு நடப்புகளைவிட வெளி நாட்டு நிகழ்ச்சிகளில் அறிவுத் திறத்தைக் காட்டி, தன் ஆற்றலால் அமைச்சரவையில் புதுமுறைகளைப் புகுத்திய, டோரிகளின் தனிப் பெரும் தலைவரான கானிங்கின் எழுச்சியை இதுவரை எதிர்த்துக்கொண்டிருந்த காசில்ரீயின் மறைவு (1822).

இதனைத் தொடர்ந்து எட்டு ஆண்டுகளில் (1822-1829) அண்மைக் காலத்தில் நிலவிய ஜேக்கோபியர் எதிர்ப்பு வன்முறைகளும், 1689ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்த ஆங்கில அரசியல் அமைப்பும், எதிர்பாராத இடங்களில் பிளந்து சிதையத் தொடங்கின. வாக்குரிமைத் திட்டம் பொதுமக்களில் எந்த வொரு பெரும் பகுதிக்கும் அதிக அளவில் நேரடிப் பிரதிநிதித்துவம் (Direct Representation) கொடுக்கவில்லை யெனினும், காலத்தின் புது எழுச்சியைப் பாராளுமன்றம் உருநிழல் காட்ட முற்றிலும் தவறில்லை. சிதைந்த பரோக்களின் (Rotten Boroughs) ஒழிப்பு, விக்குக் கட்சியினருக்கு நல்ல வாய்ப்பு வழங்கும் வரை, பழைய இரு கட்சி முறை மீள முடியவில்லை. ஆனால் நாட்டின் பொது எண்ணங்களை எதிரொலிப்பதில் தொகுதி முறை சிறிது பயன்பட்டது. டோரிக்கட்சி அமைச்சரவைக்குள்ளே இரண்டு பிரிவுகள் இருந்தன. கானிங்கும் (Conning) ஹஸ்க்கிசன்னும் (Huskisson) வெகு முற்போக்கு பண்புள்ளவர்கள்.[1] வெல்லிங்டனும் (Wellington) பழந்தலைவரான லார்டு எல்டனும் (Lord Eldon) பழமையைப் பேணுவதில் உறுதியையும், தலைமை

[1] 19ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திற்குப் பின்னரே 'லிபரல்' என்பது ஒரு கட்சியின் பெயராயிற்று. அதற்கு முன்னர் அச் சொல் முற்போக்குக் கருத்துக்களைக்கொண்ட எவரையும், அவர் தீவிரவாதி, விக்குக் கட்சியினன் அல்லது கானிங்கைப் பின்பற்றிய டோரி என்ற வேறுபாடின்றிக் குறித்தது.

அமைச்சர் லிவர்பூலும் (Liverpool) பகுத்துணர்வுடைய பீலும், அமைதியை நிலைநாட்டும் ஆர்வமும் கொண்டிருந்தனர். வெல்லிங்டன் தலைமை அமைச்சராகிய காலை, பழுத்த அனுபவமுள்ள பெருந்தலைவர்கள் எதிரிகளைத் தோற்கடித்தனர். தொடர்ந்து நடந்த பல நிகழ்ச்சிகளால், கானிங் கொண்டு வர நினைத்த பல சீர்திருத்தங்களைவிட முற்போக்கான திட்டங்களை டோரிகள் நிறைவேற்ற வேண்டியதாயிற்று.

டோரிக் கட்சியின் கடைசி எட்டாண்டு ஆட்சியின் விளைவு, முக்கியமான பல சீர்திருத்தங்களும், ஒரு தலைமுறைக்கு மேலாக அதிகாரம் தாங்கி இருந்த, ஜேக்கோபிய எதிர்ப்பு டோரிக் கட்சியின் கலைப்புமே. இக் கட்சிக்குப் பதிலாக, பாராளுமன்றச் சீர்திருத்த நெருக்கடியின் போது புதியதொரு விக்கு முற்போக்கு (Whig-liberals) கட்சியும், பழமை காக்கும் கான்சர் வேடிவ் கட்சியும் (Conservative) தோன்றி வருங்காலத்தில் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தன (1830-1832). இப்படியாக விநோதமான ஒரு குழப்பத்தின் பின்னர்,பாராளுமன்ற நடவடிக்கைகள் பழைய இரு கட்சி முறைக்குத் திரும்பின. எனினும் சீர் திருத்தப்பட்ட பாராளுமன்ற வாழ்வில் புதுப்புது பிரிவுகளும், நலன்களும், பிரச்சினைகளைப் (Issue) பற்றிய பெருஞ் சிக்கல்களும் இடம்பெற்றன.

டோரிக் கட்சி ஆட்சியின் இறுதிக் காலத்தில் நிறைவேறிய முற்போக்குச் சீர்திருத்தங்களில் மிக முக்கியமானது, தொழிலாளர் சங்கங்களைச் சட்டவிரோதமாக்கிய தொழிலாளர் கூட்டத் தடைச்சட்டமாகும் (Combination Acts) (1824-1825). இந்த நடவடிக்கை அமைச்சரவையின் எந்த ஒரு பிரிவின் சாதனையுமல்ல. ஆனல் மாறிக்கொண்டு வந்த பொதுமக்கள் எண்ணமும், பாராளுமன்றத்தில் தீவிரவாதிக்கட்சி உறுப்பினரான ஜோசப் ஹூம் (Joseph Hume) என்பவரின் துணையுடன் பாராளுமன்றத்திற்கு வெளியிலிருந்து பணிபுரிந்த தையற்கார பிரான்சிஸ் பிளேஸ் (Francis Place) என்ற தீவிரவாதியின் அறிவாற்றலும் உண்டாக்கிய விளைவு. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டு நிலைமைகளை நேரடியாகக் காட்டவும், கோரிக்கைகளுக்கு அவர்களை இணங்கவைக்கும் நோக்கத்தோடும், பிளேஸ் வடபகுதி மாவட்டத் தொழிற்சாலைகளிலிருந்து சாட்சிகளையும் விண்ணப்பங்களையும் உருவாக்கி, அவற்றை வெஸ்ட்மினிஸ்டருக்குக் கொண்டுவந்தார்.

உள்துறைச் செயலாளராக (Home Secretary) பீல் பணியாற்றியபோது, சில முக்கிய சீர்திருத்தங்களைத் தூண்டிய பெருமை அவரைச் சாரும். லங்காஷையரில் பெரும் உற்பத்தியாளர் ஒருவரின் மகனை இளைய ராபர்ட் பீல், ஹாரோ (Harrow) கிரைஸ்ட் சர்ச்சு (Christ Church) போன்ற கல்வி நிலையங்களின் மூலமாக, அதுகாலை ஆளுங்கட்சியாக இருந்த டோரிகளுக்கு அறிமுகமானர். இளமையில் இங்கிலாந்திலுள்ள மதகுருக்கள் பிரபுக்களின் அபிமானத்தைப் பெற்று, அவர்களின் அரசியல் வகையாளாகவும், 'நலன் விளம்பியாகவும்' (Spoksman), அயர்லாந்தின் மேலாட்சிக் கட்சி (Ascendancy Party) யின் கோரிக்கைகளை எடுத்துரைப்பவராகவும் விளங்கினர். பழங்கால டோரிக் கட்சி மிகச்சிறப்புற்றிருந்த காலத்தில்தான், பீல் அக்கட்சியுடன் கொள்ளக்கூடிய ஆயுட்கால உறவுகள் உருவாக்கப்பட்டன. அக்காலை தீபகற்பப் போர் (Penninsular War) நடந்து கொண்டிருந்தது. அவர் பத்தாண்டுகளுக்கு முன் பொது வாழ்வில் புகுந்திருந்தால், தான் கானிங் அல்லது ஹஸ்கீசனைப்போல் ஒரு முற்போக்குக் கொள்கையுள்ள பழமை விரும்பி (Liberal-conservative) என்ற உண்மையை உணர்ந்திருப்பார். அக்கட்சியைக் காப்பாற்றும் இறுதிக் கட்டத்தில் போராடிக் கொண்டிருந்த தலைவர்கள், அவர் மேல் வைத்திருந்த நம்பிக்கை, நெருக்கடி காலங்களில் அதிக பயன் தரவில்லை.ஆனல் அவரே கட்சியின் பேராதரவைப் பெற்ற பெருந்தலைவர்களுள் ஒருவராக நின்று போராடி இருந்தால், நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கமுடியும். 'தான் தொடங்கிய எந்தப் போராட்டத்தின் முடிவும் இவ்வாறுதான் இருக்குமென பீல் என்றுமே முன்நோக்கியதில்லையென,' வெல்லிங்டன் ஒரு சமயம் முறையிட்டார். அரசியல் வாதி என்ற கோணத்திலிருந்து வெல்லிங்டன் மொழிந்த கருத்தில் அதிக உண்மை இருக்குமென்றாலும், பீலிடம் குற்றம் கண்டதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. 'எங்குச் செல்கிறோம் என்று தெரியாமலே செல்பவன் எவனும் நெடுந்தூரம் செல்லமாட்டான்' என்ற கிராம்வெல்லின் கூற்று, மேற்கூறிய உண்மையை விளக்கும். விரைவில் பல மாறுதல்கள் நடந்து கொண்டிருந்த அக்கால இங்கிலாந்தின் தனிப்பண்பு என்னவென்றல், அதன் தலைசிறந்த அரசியல் வல்லுநர் எவரும் வருவது நோக்கும் திறனற்று இருந்ததுதான்.

1822ஆம் ஆண்டில் உள்நாட்டுத் துறையில் லார்டு சிட்மவுத்துக்குப் (Lord Sidmouth) பதிலாகப் பீல் பதவியேற்றபின், அரசாங்கம் தீவிரக் கட்சித்தொழிலாளர்களுக்கு எதிராகப்பயன்பட்டு வந்த உளவறிதலும் பிற அடக்கு முறைகளும் அழிக்கப்பட்டு, சமூக வகுப்புகளுடனும் கட்சிகளுடனும் அரசாங்கம்

கொண்ட உறவுகள் சிறிது நன்னிலையடைந்தன. குற்றவியல் சட்டத்தைச் (Criminal law) சீர்திருத்த வேண்டுமெனச் சிலகாலமாக பென்தாமும், ரோமில்லியும்(Romilly), சர் ஜேம்ஸ் மாக்கின்டோசும் (Sir James Mackintosh) நடத்தி வந்த போராட்டத்தின் முக்கிய கொள்கைகளைக் கொண்ட சட்டங்களையும் பீல் நிறைவேற்றினர். நூற்றுக்கு மேலான பலவேறு குற்றங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மரண தண்டனையை நீக்கினர். இறுதியாக 1829-ல் ஆங்கில நாட்டின் வரலாற்றிலே முதல் முறையாகத் திறமையுள்ள சிவில் காவலர் படையை (Civiian Police) நிறுவினர். இதனைப் பொதுமக்கள் பீலின் இருபெயராலும் அன்புடன் அழைத்தனர். பொதுவான குற்றங்களை ஆராய்வதில் இக் காவலர் படை சிறந்த சமூகப் பயனை விளைவித்தது. தீவிரக் கட்சியின் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதிலும், அதனைப் போல், அரசியல் துறையில் கைத்தடியையே ஆயுதமாகக் கொண்டு எத்தகைய கூட்டத்தினரையும் தைரியமாக எதிர்க்கக் கூடிய இந்தச் சிவில்படை இராணுவ வீரர்களுக்குப் பதிலாகப் பணிஆற்றியது. படைவீரர்களைப் போலன்றி இக்காவலர்கள் உதவியால் குழப்பங்களின் முதல் அறிகுறிகளை அடக்கி முளையிலேயே கிள்ளிவிடமுடியும். காவல் படை நிறுவப்பட்டிருந்த நகரங்களில் இனி லார்டு ஜார்ஜ் கார்டன் காலத்தில் நடந்தது போல் கலகங்களோ பீட்டர்லூ படுகொலைகளோ நடக்காது. புதுப்படையினரை மட்டும் சரியான நேரத்தில் அனுப்பியிருந்தால் பிரிஸ்டல் (Bristol) நகரில் இரண்டாண்டுகளின் பின்னர் நடந்த பாராளுமன்றச்சீர்திருத்த மசோதாபற்றிய கலவரத்தைத் தடுத்து நிறுத்தி இருக்கமுடியும். முதலில் லண்டனில் மட்டும் நிறுவப்பட்ட காவலர் படை அடுத்த தலைமுறைக்குள் மக்களின் ஒருமுகமான வேண்டுகோளுக்கிணங்க, நாடுமுழுவதும் பரவினர். முதலிலிருந்து இவர்கள் படை சாராத நீலவண்ணச் (Civilian Blue) சீராடையுடுத்து, தொடக்க காலத்தில் தலைக்கவசங்களுக்குப் பதில் உயர்வான தொப்பிகளை அணிந்திருந்தனர்.

அதே காலத்தில் நாட்டின் நிதிப் பொறுப்பை ஹஸ்கிஸன் பெற்றுக்கொண்டார். அப்போது நிலவிய சுங்கவரி முறையை வருவாயைப் பெருக்கும் வழியாகவோ,காப்பியல் திட்டமாகவோ (Protection) நோக்கினலும் அது பல முறைகேடுகளும், தொடர்பற்ற சோதனைகளும் மலிந்து கிடந்த ஒரு குழப்பக்காடாக இருந்தது மட்டுமின்றிப் பல வழிகளில் வாணிகத்தின் வளர்ச்சிக்கும் இடையூருக இருந்தது. 'தடையில்லா வாணிக முறையை' (Free trade) முற்றிலும் புகுத்திட ஹஸ்கிஸன் விரும்பவில்லை. மேலும் வருமான வரி விதியைப் புதுப்பிக்கும் முயற்சிகளைப்

பொதுமக்கள் இன்னும் எதிர்த்துக்கொண்டே இருந்ததால், வருவாய் தரும் பல வழிகள் அடைபட்டுக்கிடந்தன. இருந்தாலும் சுங்க வரிகளில் பலவற்றைக் குறைத்தும் எஞ்சியவற்றிற்கு விளக்கமான நோக்கங்களை வகுத்தும் சீரமைப்பு செய்தார். ஒரே ஒரு பொருள் மட்டும் மிகப் புனிதமானதாகக் கருதப்பட்டது. அதாவது தானியம். நாட்டுப்புறக் குடியானவர்களில் ஒரு பகுதியினர் சிதைந்த பரோக்களைத் தனியுரிமையாகக் கொண்டு, பாராளுமன்றத்தில் செல்வாக்குப்பெற்றிருந்த வரையில் ஆங்கில அரசியலில் 'தானியந்தான் அரசன்'.

ஹஸ்கிஸன் காலத்தில் தான் முதன் முதலில் அரசாங்கம் கப்பல் போக்குவரத்துச் சட்டங்களில் (Navigation Acts - 1823) பெரும் அளவில் தலையிடுவதைக் காண்கிறோம். இந்த நாவாய்ச் சட்டங்கள் ஒன்றரை நூற்றாண்டுகளாகப் பிரிட்டிஷ் துறைமுகங்களில் ஆங்கிலக் கப்பல் தொழில் தனியுரிமையுடன் விளங்கச் செய்தன.[1] ஆங்கிலக் வாணிகக் கப்பற் படை முழுப் பலம் பெற்றுவிட்டதால், ஆடம்ஸ்மித் (Adam Smith) அன்று புகழ்ந்து பாராட்டிய இந்தச் செயற்கையான ஆதரவை நிறுத்திக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. தடையில்லா வாணிபத்தை நாட்டின் கொள்கையாக ஏற்றுக்கொண்டு எஞ்சியிருந்த பாதுகாப்பு வரிகள் ஒழிக்கப்பட்டபோது, கப்பற் போக்குவரவுச் சட்டங்களை (1849) ரத்துசெய்யும் பணி நிறைவெய்தியது. இந்தச் சட்டங்கள் அளித்த தனியுரிமைகள் நீக்கப்பட்டதால், ஆங்கிலக் கப்பல் உரிமையாளர்களும் கப்பல் கட்டுவோர்களும் முன்னேற்றமான முறைகளைக் கையாளவேண்டியதாயிற்று. விக்டோரியா அரசி காலத்திய பிரிட்டன், தொழிலாதிக்கம் பெற்று விளங்கியதால்,நீர்வழிப்போக்குவரத்தைச்சார்ந்த இரும்பு நிலக்கரி காலத்தின் வருகையை இங்கிலாந்து முற்றிலும் பயன்படுத்திக் கொண்டது. மரக்கட்டைகளைப் பெறுவதில் இருந்த தொல்லைகளும் இதற்கு ஒரு காரணம். உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் எளிதாக விற்கப்படக்கூடிய, நிலக்கரியின் ஏற்றுமதி ஆங்கிலக் கப்பல் தொழிலுக்குப் பேருக்கத்தைக் கொடுத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும் வரையும் வன்மையான போட்டியின்றிப் பிரிட்டிஷ் ஆங்கிலக் கடல் வாணிபம் வளர்ந்தது.

அமைச்சரவையில் காசில்ரீயின் செல்வாக்கு மறைந்து கானிங் வலிமை பெற்ற தனியாற்றலுடன் எழுச்சி பெற்றதானது,

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 4, பக்கம் 87-88 அடிக்குறிப்புகளும் மேற்பட்டவையும் காண்க.

உள்நாட்டு நடவடிக்கைகளில் மாறுதல் விரும்பிய சூழ்நிலை களுக்குத் தூண்டுதலாக இருந்தது (1822). மேற்கூறிய இரு பெரியார்களின்சாதனைகளின் அரங்கமாகிய வெளிநாட்டுத் துறை யில் கானிங், காசில்ரீயின் கொள்கைகளை மாற்றவில்லை. ஆனால் உயர்குடி இயல்புடன் பிறரிணக்கம் நாடாது ஒதுங்கி இருப்பதை விரும்பிய காசில்ரீயைப் போலன்றி, கானிங் மக்கள் சபையின் கருத்துகளையும் எல்லாப் பொது மக்களின் ஆதரவையும் ஆர்வத்துடனும் கோர விரும்பினார். காசில்ரீ, கிரென்வில் (Grenville) ஆட்சிகளில் வெளிநாட்டுத் துறை முதிய அரசி லறிஞர்களின் கையில் மர்மமாக இருந்த காலம் முடிந்து விட்டது. கானிங்கின் புதிய பிரசார முறைகள், பால்மர்ஸ்டன் (Palmerston), கிளாட்ஸ்டன் (Gladstone), டிஸ்ரேலி (Disraeli) காலங் களில் வளர்ந்து, வெளிநாட்டுக் கொள்கையை மையமாகக் கொண்ட பொதுத் தேர்தல்களின் வெற்றி தோல்விகளை முடிவு செய்யும் என்பதை யாவரும் உணர்ந்தனர். நூற்றாண்டின் இறுதியில் லார்டு சாலிஸ்பரி (Lord Salisbury) காசில்ரீயின் அமைதியான முறைகளைக் கையாண்டு, வெளிநாட்டுக் கொள்கை யில் சிறுமாறுதலைச் செய்தார்.

ஜனநாயகப் பண்பும் ஆய்வறிவும் பெற்றிலங்கிய அக் காலத்தின் இயல்பைத் தழுவி, கானிங்கின் வருகை அரசியல் முறைகளில் பெரியதோர் திருப்பத்தைக் குறித்தது. ஆனால் அவரால் வெளிநாட்டுக் கொள்கையின் போக்கில் மாறுதல்கள் ஏற்படவில்லை. அது சென்று கொண்டிருந்த விரைவு அதிகரித்தது. ஆனால் அதில் முற்போக்குப் பண்பும் நாட்டு இயல்பும் வற்புறுத் தப்பட்டன.

ஐரோப்பியப் பொதுநலம் நாடிய காசில்ரீ,பன்னாட்டுச்சிக்கல் களைத் தீர்த்துக்கொள்ள அடிக்கடி வல்லரசு மாநாடுகளைக் கூட்டு வதை வரவேற்றார்(1815—1822).ஆனால் இவ்வல்லரசுகள் மக்களின் பிரதிநிதிகள் இல்லாமையாலும், இவை குறிப்பிட்ட இனங்களின் பிரதிநிதிகள் இல்லையென்றதாலும் தற்காலத்துச் சர்வ தேச சங்கத்தைப்போல் (League of Nations) ஓர் அமைப்பைப் பெற வில்லை. அதற்கு மாறாக இம்மாநாடுகள் ஆஸ்திரியத் தலைவரான மெட்டர்னிச் (Metternich) தன் பிற்போக்குக் கொள்கையை விடாமல் பற்றிக் கொண்டிருந்த ஸார் அலெக்சாண்டர் (Czar Alexander) போன்றவர்களின் தலைமையில் விடுதலை வேட்கை யையும், நாட்டுணர்ச்சியையும் (Nationalism) அழிக்க ஒன்று பட்டிருந்த புனிதக் கூட்டு (Holy Alliance) நாடுகளின் அடக்கு முறைக் கருவிகளாகப் பயன்பட்டன. பிற நாடுகளின் உள்துறைச்-

சிக்கல்களில் இங்கிலாந்தை ஈடுபடுத்த விரும்பாத காசில்ரீ, ஐரோப்பாவின் மாநாட்டு நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதைப் படிப்படியாகக்குறைத்துக் கொண்டார். உழைத்து உருக்குலைந்த அவர் தற்கொலை செய்து கொண்டார் (1822). கிரேக்க இத்தாலிய நாடுகளின் விடுதலை இயக்கங்களை வன்மையாகவும் வெளிப்படையாகவும் எதிர்த்ததிலிருந்து, காசில்ரீ தமது அரசியல் முன்னோர்களின் முற்போக்குக் கொள்கைகளை ஊக்கமுடன் ஆதரிக்கவில்லையென்று நாம் எண்ணக்கூடும்.[1]

காசில்ரீயின் பணியை ஒரு விதத்தில் தொடர்ந்தாற்றிய கானிங், ஐரோப்பாவின் பிற்போக்குக் கட்சிகளை வன்மையாக எதிர்க்கின்ற ஒரு போக்கைத் தோற்றுவித்தார். இங்கிலாந்து அரசாங்கம் வல்லாட்சிக்கும், ஜேக்கோபியக் கொள்கைக்கும் இடையேயுள்ள ஒருவித அமைப்பை ஆதரிக்கிறதென்பது காசில் ரீயைவிடக் கானிங்கிற்கு உறுதியாகத் தெரியும். அவருடைய இளமையில் சிறந்த ஜேக்கோபிய எதிர்ப்பு வாதத்தைத் தூண்டி எழுப்பிய அதே ஆங்கிலப் பண்புதான், இன்று நடு வயதான வெளிநாட்டு அமைச்சராக, அவரை வல்லரசுகளின் அச்சமாகவும் ஐரோப்பிய முற்போக்காளரின் நம்பிக்கையாகவும் உருவாக்கியது. பிரிட்டனின் படை பலத்தாலும், பண உதவியாலும் ஐரோப்பாவின் முடியரசுகளுக்கு மீட்டுக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை, அவை போலந்து முதல் போர்ச்சுகல் வரை எங்கும் அரசியல் இனக் கலாச்சார உரிமைகளை அழிக்கப் பயன் படுத்துவதைக் கண்டு, வெகுண்ட நாட்டு மக்களின் உணர்ச்சி களில் கானிங்கும் பங்கு கொண்டார். அரசனை ஆதரிப்போரும், (Royalists) சமயக் குருமார்களும் (classicals) மிகுந்திருந்த பிரான்ஸை, ஸ்பெயினின் சுயாட்சி இயக்கத்தைப் படை பலங் கொண்டு வீழ்த்த, புனிதக் கூட்டு அழைத்ததற்காக, அனைத்து இங்கிலாந்தும் கட்சி வகுப்பு வேறுபாடுகளின்றி கடுங்கோபங் கொண்டது (1823). ஆனால் கானிங் ஸ்பெயின் நாட்டின் மீது பிரான்ஸ் தொடுத்த படையெடுப்பைக் கண்டித்ததோடு நிறுத்திக்கொண்டு, நாட்டை எந்தவிதச் சூழ்முறைகளிலும் ஈடு படுத்தாமல் தந்திரமாய் விலகிக் கொண்டார். அல்லது புதிய தோர் தீபகற்பப் போர் மூண்டிருக்கும். இங்கிலாந்தின் அரசியல் சூழ்ச்சித் திறமும் இழிவான முறையில் தோல்வியடைந் திருக்கும்.

[1] காசில்ரீயையும் அவருடைய 1815ஆம் ஆண்டு ஐரோப்பிய திட்டத் தையும் பற்றி இங்கிலாந்தின் வரலாறு II, பிரிவு 5, இயல் 6, பக்கம் 360-363-ம் மேற்பட்டவையும் காணவும்.

மத்தியத் தென் அமெரிக்கக் குடியேற்றங்கள் முடியரசை எதிர்த்து நடத்திய கிளர்ச்சியாகிய ஸ்பானிய அரசியல் நெருக்கடியாகிய அடுத்த சிக்கலில் கானிங் தம் செல்வாக்கை முற்றிலும் பயன்படுத்தி இருக்க முடியும். ஏனெனில் பொலிவார் (Bolivar) தலைமையில் போராடிய கிளர்ச்சிக்காரர்களை அடக்க பிரான்ஸோ அல்லது புனிதக் கூட்டுறவோ அனுப்பக்கூடிய வீரர்கள், ஆங்கிலக் கடற்படையின் ஒத்துழைப்பின்றி அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்க முடியாது. மேலும் தென் அமெரிக்காவின் விடுதலை, பிரிட்டனின் பொருள் நலத்துடன் நெருங்கிய தொடர்புடையதொன்று. ஸ்பெயினுக்குச் சொந்தமான அமெரிக்கக் குடியேற்றங்களுடன் பிரிட்டன் செய்து வந்த வாணிகத்திற்கு ஸ்பெயின் விதித்திருந்த கட்டுப்பாடுகள் கடந்த முந்நூறு ஆண்டுகளாக நாடறிந்த முக்கிய பிரச்சினையாக இருந்தன. இக்குடியேற்றங்கள் உரிமை பெற்று, பிரிட்டனுடன் நட்புறவு கொண்டு, ஆங்கில வணிகருடன் வர்த்தகம் செய்ய இணங்குமானால், இச்சிக்கலுக்குத் தீர்வு காண இதுவொரு பொன் வாய்ப்பு. இதனால் டிரேக்கும் (Drake), கடற் கொள்ளையரும், வால்போல் (Walpole) காலத்தில் ஜெங்கின்சின் செவியும் (Jenkin's ear) தோற்றுவித்த எத்தனையோ மனப்புழுக்கங்களும் பகைமைகளும் இறுதியாகப் புதைக்கப்பட்டு முடிவுறும்.

இங்கிலையில், இங்கிலாந்தின் புதிய தொழிற்சாலைகளில் தேங்கிக் கிடந்த செய்பொருள்களை விற்கப் புதிய சந்தைகளைத் தேட வேண்டுமென்ற ஆங்கில வணிகர்களின் அவாவும், உலகமெங்கும் விடுதலைப் பணியை ஆதரித்து ஆங்கிலேயர் காட்டிய உண்மையான உற்சாகமும், கிளர்ச்சி அரசாங்கங்களின் கடல் தளதியான கோச்ரேன் (Cochrane) சிலி, பெரு கரைகளுக்கப்பால் பெற்ற வெற்றிகளை இங்கிலாந்து பாராட்டியதும், பிரான்ஸும்; அதன் கையாளான பொய்யாணைக்கும், வெறிக்கும் பெயர் பெற்ற ஸ்பெயின் அரசர் பெர்டினண்டும் (Ferdinand VII) அண்மையில் தீபகற்பத்தில் பெற்ற வெற்றிகளுக்குப் பதில் தென் அமெரிக்கக் கிளர்ச்சிக்காரர்களிடம் தோற்றதைக் கண்டு இங்கிலாந்து கொண்ட மகிழ்ச்சியும்—இவை யாவும் ஒன்று கலந்தன. பழைய நிலைமைக்கு ஈடாக, தான் புதியதோர் உலகைத் தோற்றுவிப்பதாகப் பாராளுமன்றத்தில் கானிங் பறைசாற்றிய போது, பொது மக்களின் மேற்கூறிய உணர்ச்சிகளைத்தான் தட்டியெழுப்பினர். பழைய போக்கினையே விரும்பிய எல்டனும் (Eldon) வெல்லிங்டனும் (Wellington) தங்கள் சகாவாகிய கானிங், பொது மக்கள் தலைவராக (Demagogue) மாறி விட்டதைக் கண்டு எல்லையற்ற வெறுப்புக்கொண்டனர்.

தென் அமெரிக்காவின் விடுதலையை ஆதரித்துப் பேரறிக்கை செய்வதிலும், அதற்காகப் போராடுவதிலும் ஆங்கில அரசியல் தலைவர்களும் மக்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்களுடனும் தலைவர்களுடனும் ஒன்றித்து நின்றனர். அமெரிக்கக் குடியரசுத் தலைவரான மன்ரோ (Monroe) வருங்காலத்தில் சிறப்பும் முக்கியத்துவமும் பெற்ற மன்ரோக் கொள்கையை (Monroe Doctrine) வெளியிட இந்த வாய்ப்பைப் பற்றிக்கொண்டார்(டிசம்பர், 1823). இதன்படி அவர் எந்த ஐரோப்பியநாடும் அமெரிக்கக்கண்டத்தில் தாங்கள் இதுவரை பெற்றிருந்ததேயல்லாமல் புதிய பகுதிகளையும் அரசியல் செல்வாக்குகளையும் பெறும் உரிமையை மறுத்தார். அதுகாலை புனிதக் கூட்டு வல்லரசுகளை எச்சரிப்பதே இதன் நோக்கமென்றாலும், வருங்காலத்தில் கிரேட் பிரிட்டனுக்கும் ஒரு மறைமுக எச்சரிக்கையாக இருந்தது. கானிங் இதனை விரும்பவில்லை. கனடாவின் எல்லைப் படைக் குறைப்புச் சிக்கலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குக் காசில்ரீ காட்டிய நட்பை, இன்று கானிங் காலத்திலோ, அவரின் சீடரான பால்மர்ஸ்டன் (Palmerston) தலைமை அமைச்சரானபோதோ காண முடியவில்லை.[1] எனினும் கானிங் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இங்கிலாந்து கொண்டிருந்த சிக்கல்கள் உறங்கிக் கிடந்தன. ஆனால் உடன் பிரச்சினையாகிய மன்ரோக் கொள்கையைப் பொறுத்த அளவில் ஆங்கிலம் பேசும் இனத்தின் இரு பெரும் பிரிவுகள் ஒன்றுபட்டு நின்றன. எனினும் தலைவர் மன்ரோவின் கொள்கையல்ல, ஆனால் இங்கிலாந்தின் கப்பற்படையே ஸ்பானியக் குடியேற்றங்களின் விடுதலைப் புரட்சியை, பிரான்ஸோ அல்லது புனிதக் கூட்டோ அடக்கி விடாதபடி தடுத்தது (1825 – 1826).

தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலுமுள்ள பரந்த நாடுகள் மட்டுமல்ல, உலக அரசியல் படத்தில் உள்ள ஒரு சிறு நிலப் பகுதியும்கூட, கானிங் கைத்திறத்தின் சின்னத்தை இன்னும் தாங்கி நிற்கிறது. கிரீஸ் நாட்டின் (Greece) விடுதலை கானிங்கின் பணி. பரந்த அட்லாண்டிக்கில் செய்ய முடிந்தது போல் லெவாண்டில் (Levant) ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாவற்றையும் கானிங்கால் கட்டுப்படுத்த முடியவில்லை. துருக்கியை (Turk) எதிர்த்து கிரீஸ் நடத்திய கிளர்ச்சியைப் பற்றிப் புனிதக் கூட்டு அரசுகள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தன. இக்கிளர்ச்சியை எதிர்ப்பவர்களின் சார்பில் ஆஸ்திரியா துருக்கியை ஆதரித்தது. ருசியா தன் சொந்த நோக்கங்களுக்காகவும்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3 காண்க.

பாரம்பரையான ஒத்துணர்வு காரணமாகவும் கிழக்கு நாட்டுக் கிறிஸ்துவர்களின் (Eastern Christians) தலைமையைத் தாங்கியது. ஓரளவு சமய,கலாச்சாரச்சார்பு கொண்டு பிரான்ஸ் ருசியாவைப் பின்பற்றியது. எனவே இங்கிலாந்து செய்யக்கூடிய முடிவு மிக முக்கியமான தொன்று. காசில்ரீயின் போக்கைப் பின்பற்றி வெல்லிங்டன் துருக்கியை ஆதரித்தார். ஆனால் இங்கிலாந்தின் பொதுமக்களோ, கவி பைரனின் (Byron), தற்பலியாலும் மரணத்தாலும் உளமுருகி, பண்டைக் கிரேக்கரின் உயர்ந்த பண்பினை ஆழமாய்ப் பின்பற்றும் வகையில் அன்றைய கலாச்சாரம் விளங்கியதாலும், 'க்ளெப்ட்ஸ்' (Klephts) என்ற கிரீஸ் விடுதலை வீரர்கள் பண்டைத் தெர்மோ பைலே (Thermopylae) யுத்த வீரர்களுடன் ஒப்பிட்டுப் போற்றினர்கள். துருக்கிய கொடுங் கோலாட்சியின் பெருங் கேடுகளை ஆதரிப்பதைவிட லெவாண்டில் ருசியாவின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தடுக்க உரிமை பெற்ற கிரீஸ் நாட்டைத் தடைச்சுவராகப் பயன்படுத்துவது சிறந்தது என்ற எண்ணம் கானிங்குக்கு உதித்தது நன்மையே. நாட்டுணர்ச்சியின் மூலமே ருசியாவின் ஆதிக்க வெறியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கானிங்கின் கொள்கை, கிரீஸ் சம்பந்தப்பட்ட அளவில் வெற்றியைத் தந்தது. ஆனல் கிரிமியப் போரின் போதும் பால்மர்ஸ்டன், ரஸ்ஸல் (Russel) கிளாஸ்டன் போன்ற ஆங்கில அரசியல் தலைவர்கள் காலத்திலும் அதற்கு இருபது ஆண்டுகளின் பின்னர் டிஸ்ரேலி ருசியாவுக்கு அஞ்சி, பால்கன் கிறிஸ்துவர்களின் (Balkan Christians) நலன்களைப் பலியாக்கிய போதும் கானிங்கின் கொள்கை கைவிடப்பட்டது.

கிரீஸைப் பொறுத்த வரையில் கானிங் திட்டம் வெற்றி பெற்றது. ஆங்கில, பிரெஞ்சு, ருசியக் கடற்படைகள் அட்மிரல் கார்டிங்டன் (Admiral Cordington) தலைமையில் நவாரினே குடாவில் (Navarino Bay) துருக்கியக் கப்பல்கள் ஊதிப்பறப்பது போல் சிதறி அழிந்தன (அக்டோபர், 1827). இந்த அழிவோடு, ஐரோப்பிய அரசியல் அரங்கில் ஒரு பெருஞ் சக்தியாக இருந்த புனிதக் கூட்டும் கலைக்கப்பட்டது. வெல்லிங்டன் தலைமையமைச்சராகியபோது, நவாரினே நிகழ்ச்சிக்காக வருந்தினரென்றாலும் அதன் விளைவுகளின் முக்கியத்தை அவ்வளவு எளிதாக மதிப்பிட அவரால் முடியவில்லை.

லார்டு லிவர்பூல் அமைச்சரவையில் வெளிநாட்டு அமைச்சராக இருந்தபோது கானிங், புது ஐரோப்பாவிலும் புது இங்கிலாந்திலும் புதுமை உணர்வூட்டும் முற்போக்குக் கொள்கைகளை மிகுதியாகத் தூண்டிவிட்டார்; அதனல் உறுதியான விக்குத்

தலைவர்கள் மறைந்தபோது பிரிட்டனின் முன்னேற்றக் கட்சி கானிங்கைத் தங்கள் தலையாய வீரராக வணங்கி வாழ்த்தினர். எனவே லிவர்பூல் பிணியுற்று ஓய்வு பெற்றபோதும், டோரி அமைச்சரவையில் பிளவு உண்டாகிய போதும், கானிங் அரசாங்கத்தை அமைத்தார் (பிப்ரவரி, 1827). இதில் பழந்தலைவர்கள் குழுவைச் சேர்ந்த வெல்லிங்டன், பீல், எல்டன் போன்றவர்கள் சேரமறுத்தாலும் புதுத்தலைமை அமைச்சர் பாராளுமன்ற விக்குக் கட்சியினைப் பாதிப்பேரின் ஒத்துழைப்பையும், நாட்டில் முன்னேற்ற மனப்பாங்குள்ள மக்களின் நல்லாசியையும் பெற்றார். சின்னாட்களில் பீட்டு இறந்தபோது (ஆகஸ்ட், 1827), அவரது அமைச்சரவை குறிப்பிடத்தக்க வகையில் எதையும் நிறைவேற்றாமலே மறைந்தது. ஆனால் அதனை அமைத்ததான உண்மை, கட்சியைக் கலைத்து மாற்றியமைப்பதில் மிக முக்கியமான வொரு படியாக விளங்கியது. பால்மர்ஸ்டன், மெல்போர்ன் (Melbourne) போன்று கானிங்கைப் பின்பற்றிய டோரிகள் பலர் பாராளுமன்றச் சீர்திருத்தங்களை நிறைவேற்றிய விக்குக் கட்சியில் சேர்ந்து அதனைப் புதுப்பித்து விரிவாக்கினர்.

கானிங் இறுதி வரையில் பாராளுமன்றச் சீர்திருத்தங்களை எதிர்த்ததை இங்குக் குறிப்பிடவேண்டும் ஒருவேளை அரசியல் அரங்கிலிருந்து அவர் விலகியது அவரே இயக்கிவிட்ட அரசியல் மாற்றத்தின் விரைவினைத் துரிதப்படுத்தியது போலும். சிதைந்த பரோக்களை நீண்ட நாள் பாதுகாத்திருக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் இங்கிலாந்தில் அவர் ஒருவரே. ஆனால் அவருடைய இறப்பிற்குப் பின்னர் சகலமும் பாராளுமன்றச் சீர்திருத்தக்காரர் கைகளில் சிக்கின. கானிங், ஹஸ்கிஸன் தலைமையில் ஒளி வீசி இலங்கிய சீர்திருத்தப்படாத பாராளுமன்றமும், டோரிக் கட்சியும் புதுயுகத்தில் நாட்டை வழி நடத்தும் என்ற நம்பிக்கைத் தீயை, வெல்லிங்டனின் தலைமையில் அரசாங்கத்தை அமைத்த உயர் டோரிக் கட்சி அணைத்துவிட்டது (1828–1830).

ஆனால் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா பிரச்சினையின் அடிப்படையில் கட்சிகள் இறுதியாகத் திருத்தி அமைக்கப்படும் முன்னர், சமயங்களுக்குப் பொதுநலச் சமத்துவத்தை (Civic equality of religion) வழங்கும் புதுக்கோட்பாடானது, சிலமுக்கிய சலுகைகளை வெல்லிங்டன், பீல் அமைச்சரவையிடமிருந்து பறித்துக் கொள்ளுமாறு சில நிகழ்ச்சிகள் தூண்டின. காலப் போக்கில் அரசியல் அறிஞர்கள் வகுத்த வழிகள் யாவற்றையும், அவர்களே கண்டு மலைத்து நிற்கும் வகையில் அழித்து, கரை புரண்டோடும் கால வெள்ளம் தன் இயற்கை விரைவோடு வந்து

கொண்டிருந்தது. 1827-ல் கானிங் சோதனைச் சட்டத்தை (Test Act) ரத்து செய்வதைத் தடுக்கத் தம்அமைச்சரவையையேஅடகு வைப்பது அவசியமெனவும், கத்தோலிக்கர் விடுதலையைப் பற்றித் (Catholic Emancipation) தம் சொந்தக் கருத்துகள் ஒருபுறமிருக்க, அந்தப் பிரச்சினையை அதன் வழியே விட்டு விடுவது நல்லதென்றும் முடிவு செய்தார். ஆனால் 'விட்டுக் கொடுக்கப் போவதில்லை' என்ற அடிப்படையில் வெல்லிங்டன் பதவியேற்ற பதினைந்து திங்களில் இந்த இரண்டு நிவாரண மசோதாக்களும் முற்போக்குத் தீவிரமுள்ள டோரி அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டு நாட்டின் சட்டங்களாயின.

கத்தோலிக்கரும், புரோட்டஸ்டாண்டு இணங்காதாரும் (Protestant Non-Conformists) அரசாங்கத்திலும் நகராட்சியிலும் பதவிகள் பெருதவாறு தடை செய்த சோதனைச் சட்டம் இரண்டாம் சார்லஸ் அரசர் ஆட்சி முதல், மதச்சபையால் (Church) உடன்படிக்கையின் பேழையாகக் (Ark of the Covenant) கருதப்பட்டு வந்தது. இதன் அடிப்படையில்தான் அவர்கள் ஹனோவர் வமிசத்திற்கு ஆங்கில அரியணையைத் தந்த புகழ் பெற்ற புரட்சி ஏற்பாட்டை ஒப்புக்கொண்டிருந்தனர். லார்டு ஜான் ரஸ்ஸலின் (John Russel) தீர்மானப்படி சோதனைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது (1828). இது உடனடியான விளைவுகளை ஏற்படுத்தவில்லையென்றாலும் அடிப்படையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. ஏனெனில் பாராளுமன்ற நகராட்சித் தேர்தல் ஜனநாயக முறையில் நடத்தப்பட்டபோது, இணங்காதார் (Dissenters) பதவியேற்க முடியவில்லை. 1835-ல் நகர பரிபாலன சபைச் சட்டம் (Municipal Corporations Act) 1867-ல் இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும் (Second Reform Bill) நிறைவேற்றப்பட்ட போதுதான் சோதனைச் சட்டத்தின் ரத்து, இணங்காதார்களின் முழு உரிமைகளைப் பெற்றுத் தந்தது.

1829ஆம் ஆண்டு இன்னும் சிறப்பான ஓர் உரிமையும் கொடுக்கப்பட்டது. கடந்த ஆறு ஆண்டுகளாக டேனியல் ஓக்கானலைத் (Daniel O'connel) தளபதியாகவும், மதகுருக்களை அதிகாரிகளாகவும் கொண்டு, அயர்லாந்து மக்கள் 'கத்தோலிக்க சங்கத்தின்' மூலம் (Catholic Association) நல்ல அமைப்புக்கு உட்பட்டிருந்தார்கள். அதிகாரத்திலிருந்த எல்லாரும், இந்த இயக்கத்தை வெறுத்தாலும், மக்களின் ஒற்றுமை உறுதியாக இருந்தது. பலநூற்றுண்டுகளாக அடக்குமுறைகளினால் வன்மை பெற்றுவிட்ட மந்தை இயல்பு உணர்ச்சிகளைக் (Instincts of herd–

morality) கொண்டிருந்த பாமரக் குடியானவர்களின் நாடாகிய அயர்லாந்தைப் போல் எந்த மனிதக் கூட்டமும் அத்தனை ஒற்றுமையோடு அமைதிக்குக் கட்டுப்படவில்லை. ரோமன் கத்தோலிக்கர்கள் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் இடம் பெறுவதைத் தடைசெய்யக் கூடாதென்பதுதான் ஒக்கானல் கோரிய கத்தோலிக்கர் விடுதலை (Catholic Emancipation). வாட்டர்லூ பெருவீரராகிய வெல்லிங்டன் அயர்லாந்துக்கத்தோலிக்கர் சங்கத்தின் எதிர்ப்பைக் கையாளமுடியாமல் விட்டுக்கொடுத்தார். ஆள்குறைப்புத் திட்டத்தாலும், புதுவரிகளாலும் பாதிக்கப்பட்டு மிகவும் சுருங்கிவிட்ட ஆங்கிலப்படை பசித்த கைக்கூலிகளிடமிருந்தும், குடியானவர்களிடமிருந்தும், ஆங்கிலக் குடிகளின் உடைமைகளைக் காப்பாற்றக்கூட முடியவில்லை. கலகக்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைத் தவிர மாற்று வேறு வழி இல்லாதபோதுகூட அவர்களுக்குச் சலுகைகளை வழங்க உறுதியாக மறுத்த வெல்லிங்டன், பொதுமக்களின் இரத்தம் வீணில் சிந்தப்படுவதை மனதார என்றும் வெறுத்தார். பீலும், வெல்லிங்டனும் ஒக்கானலின் கோரிக்கைகளுக்குப் பணிந்த போது (1829) அவர்கள்மேல் நம்பிக்கை கொண்டிருந்த உயர் டோரிக் கட்சியினர் கோபங்கொண்டார்கள். வெல்லிங்டன் கூடத் தான் கத்தோலிக்கருக்கு விடுதலை கொடுத்த ஓராண்டுக்கு முன் தான், கத்தோலிக்க விடுதலையில் நம்பிக்கை கொண்ட சகலரையும், கானிங்கைப் பின் பற்றியவர்களையும் தம் அமைச்சரவையை விட்டு நீக்கி இருந்தார். இதன் விளைவாக டோரிக் கட்சி தற்சமயம் ஒன்றையொன்று வெறுக்கும் மூன்று பிரிவுகளாகப் பிளந்து கிடந்தது. கானிங்கைப் பின்பற்றுபவர்கள், உயர் டோரிகள், வேறு வழியின்றி அரசாங்கத்தை ஆதரிப்பவர் ஆகியோரே அப்பிரிவினர். பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும், சீர்திருத்த அமைச்சரவையும்தான் வெல்லிங்டனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. இதற்கு அவரின் விவேகமற்ற அரசியல் தவறுகளே காரணம்.

பாக்ஸின் (Fox) மறைவுக்குப்பின், பெயரளவில் விக்குகளின் தலைவராக இருந்த லார்டு சார்லஸ் கிரே (Lord Charles Grey) எதிர்க் கட்சித் தலைமையை ஏற்று நடத்தினர். தற்கால அரசியல் தலைமுறைகளைப் பொறுத்தவரையில் இவருடைய தலைமை சிறப்பாக அமையவில்லை. நார்த்தம்பிரியா (Northumbria) கடற்கரையில் இருந்த அவருடைய இல்லத்தின் கிராமியப் பொழுதுபோக்குகளும், நூல் நிலையமும், அவரது பதினைந்து குழந்தைகளும், வெஸ்ட்மினிஸ்டரின் (Westminster) அரசாங்க அலுவல்களைவிட, அவருக்கு அதிகக் கவர்ச்சிகளைத் தந்தன.

ஆனால் கிரே ஆர்வமுள்ள இளைஞராக இருந்தபோது ஃபாக்ஸ் 1792-ல் பாராளுமன்றச் சீர்த்திருத்தத்தை அறிவிக்கத் தூண்டு வதில்பெரும்பங்கு எடுத்துக்கொண்டார். மேலும்போர்ட்லாந்தும் (Portland) விக்குப் பிரிவினைக்காரர்களும் பர்க்கைப் (Burk) பின் பற்றி ஜேக்கோபிய எதிர் பணியில் சேரக் காரணமாகவும் இருந் தார். பெரும்பாலான சிதைந்த பரோக்களை அழித்துப் பாராளு மன்றப் பகிர்வுத் திருத்தம் செய்வதுதான், இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சியைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடைய கிரே என்றும் விட்டுக்கொடுக்கவில்லை. தொழிலாளர் வகுப்புத் தீவிரவாதிகள் மட்டும் இதில் ஈடுபட்டிருந்ததால், இச் சீர்த் திருத்தத்திற்கு இன்னும் காலம் வரவில்லையென்ற எண்ணத்தில், கிரே அக்கொள்கையைப் பிரசாரம் செய்வதையும் சில ஆண்டு களாக நிறுத்தி இருந்தார். ஆனால் இந்தப் பிரச்சினைக்காக, 'ஒத்துணர்வுடனும் உறுதியாகவும்' பொதுமக்களும், அதிலும் சிறப்பாகப் பெருமதிப்பும் வன்மையான செல்வாக்குமுள்ள நடுத்தர வகுப்பினர்களும் போராடும் காலம் வரை காத்திருப் பது அவசியமென்பது அவருடைய கருத்து. கிரேயின் எதிரிகள் பீதியும் அவருடைய நண்பர்கள் வியப்பும் கொள்ளுகின்ற வகை யில் அவர் எதிர்பார்த்த காலமும் இறுதியாக வந்துவிட்டது. நேர்மைக்குச் சான்ருக விளங்கிய கிரே தம் வாக்குப்படியே தனது கிராமியத் தனிமையை மூன்ருண்டுக் காலத்துக்கு உதறித் தள்ளிவிட்டுத் தன் இடைக்காலக் கனவாகிய சீர்திருத்தப் பாராளுமன்றத்தை இங்கிலாந்துக்கு அளிக்கமுன்வந்தார்.

1830ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சீர்திருத்தம் சில உடனடிச் சூழ்நிலைகளிலிருந்து இயற்கையாக எழுவதுபோல் தோன்றியது. நாட்டின் வளக்குறைவு, உழைப்பாளர்களின் வன்முறைகள்,நகரத்திலும் கிராமத்திலும் நிலவிய அவநம்பிக்கை தங்கள் முன்னிலையிலேயே பெரும் சமுதாயக் கிளர்ச்சி ஏற்படு மென நடுத்தர வகுப்பினர் கொண்ட அச்சம், அக்கிளர்ச்சியை அடக்குமுறைகளால் அழிக்கமுடியாது என்ற உறுதி—இன்னோ ரன்ன நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, வெல்லிங்டனின் தவறுகளால் டோரிக் கட்சியினர் போட்ட அரசியல் தப்புக் கணக்குகளும், பாரிஸில் பத்தாம் சார்லஸ் அரசரின் (Charles X) பிற்போக்கு அரசாங்கத்தை, பிரெஞ்சுப் புரட்சியைப் போல் சமூக மாற்ற மில்லாமலே வீழ்த்திய ஜூலைப் புரட்சியும்(July Revolution) மேற் கூறிய சூழ்நிலைகளுடன் சேர்ந்து கொண்டன. பெருநிலக்கிழார் முதல் வண்டியோட்டி வரை, பஞ்சாலையுரிமையாளர் முதல் ஆலைத் தொழிலாளிவரை ஒருவர் பாக்கியின்றி யாவரும் வேறு பட்ட பொருள்படவும், அழுத்தமாகவும் பாராளுமன்றச் சீர்

திருத்தத்தைப்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். பிரேரேபிக் கப்பட்ட புது வாக்குரிமைகளின் தன்மையையும் வரையறை பற்றியும் மாறுபட்ட கருத்துகள் வெளியிடப்பட்டன. ஆனால் சிதைந்த பரோக்களை வெறுப்பதில் ஒன்றுபட்ட எண்ணம் காணப்பட்டது. அவைகளின் உரிமையாளர்களிடம் சமரசத் திற்குக் கெஞ்சுகின்ற நிலை மாறிவிட்டது. அவர்கள் பரோ வெறி கொண்டு நாட்டின் பிறப்புரிமையைச் சூறையாடுவோர் என்று பொதுப்பழி சுமத்தப்பட்டார்கள். புதிதாகத் தோன்றியுள்ள தொழில்சாலை மாவட்டங்களும் அவைகளில் செல்வ நிலைக்கும் மக்கள் தொகைக்கும் ஏற்றபிரதிநிதித்துவத்தைப்பெறவேண்டும் என்பதில் பொதுப்படையான உடன்பாடு இருந்தது. சிதைந்த பரோக்களுக்கு எதிராக எல்லா வகுப்பினரும் ஒன்றுபட்டு நின்றதைத் தாம்ஸ் ஆட்வுட் (Thomas Attwood) திறமையுடன் நடத்திய 'பர்மிங்காம் அரசியல் ஐக்கியம்' (Birmingham Political Union) தெளிவாகக் காட்டியது. நாற்பது ஆண்டுகளுக்குப் பின் பர்மிங்காமின் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீர்திருத்தவாதிகளின் வீடுகளைத் தீக்கிரையாக்கினர். இன்றோ அதன் குடிகள் மிட்லாந்து தலைநகரமான பர்மிங்காம், பாராளுமன்றத்தில் இடம் பெற உரிமை பெற்றது என உணர்ந்தனர்.

இவ்வியக்கத்திற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை விக்குப் பாராளுமன்றக்கட்சியிடம் ஒப்படைக்கும் காலம்வந்துவிட்டதென கிரே பிரபுவும், இளந் தலைமுறையைச் சேர்ந்த லார்டு ஜான் ரஸ்சல், லார்டு டர்ஹாம் போன்ற அவருடைய முதிர்ந்த துணைவர்களும் எண்ணினர்கள். எல்லா பரோக்களினும் பத்து பவுன் வாடகை செலுத்தும் யாவருக்கும் வாக்குரிமை தந்து பாராளுமன்றத் திருத்தப் பகிர்வை முழு மூச்சாகச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் உயர்குடி யைச் சேர்ந்த விக்குத் தலைவர்கள் இங்கிலாந்தின் நடுத்தர வகுப்பினருக்குத் தலைமை தாங்க வந்தனர். தொழில் புரட்சியின் விளைவாகப் பதினெட்டாம் நூற்றுண்டைவிடத் தற்போது நடுத்தர மக்களின் செல்வாக்கு உயர்ந்திருந்தது. வெஸ்லியன் கொள்கையின் (Wesleyanism) வளர்ச்சியாலும், இணங்காதாரின் தொகை உலகத்தில் பாதியளவு பெருகியிருந்தது. எனவே நடுத்தர வகுப்பினர்களைத் தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை, தேர்தல் முறை திருத்தத்தின் அடிப்படையில் உயர்குடி விக்குகள் திரும்பப் பெற்றதானது, பிரிட்டனின் பெரும் சக்தியாக விளங்கு மெனத் தோன்றியது. இந்தக் கூட்டுறவின் பிரதிநிதியாக விளங்கியவர் பாமரனாகிய ஹென்ரி புரோஹாம் (Henry Brougham). நடுத்தர வகுப்பு மக்களின் தலைவரும், அவர்கள்

கோரிக்கைகளின் போராட்ட வீரருமாகிய இவர், தமது முரட்டுத்தனமான ஆனல் கீழ்த்தன்மையுள்ள இயல்புகளால், இயந்திரங்களும் மக்களின் எண்ணங்களும் வளர்ந்தோங்கிய புது யுகத்தின் உருவமாகவே அமைந்திருந்தார். விக்குக் கட்சி தலைவர் களுடனும். 'எடின்பரோ ரிவியூ' (Edinburgh Review) என்ற பத்திரிகையுடனும் தொடர்பு கொண்டிருந்தார். 1830–ல் எந்த விக்கு அமைச்சரவையும் அவரில்லாமல் அமைக்கப்பட முடிய வில்லை. அவரது அறிவுக் கூர்மைக்கும் அமைச்சரவையில் சக உறுப்பினராக அவர் நிறுவியிருந்த நம்பிக்கைக்கும் ஏற்றபடி அவரது செயல்களும், நிலையற்ற எதிர்ப்பாளாக அவர் காட்டிய திறமைகளும் இருந்திருக்குமானல் புரோஹாம், புது யுகத்தின் இணையற்ற அரசியல் அறிஞராக இருந்திருப்பார். அதற்குமாருக அவர் புதுக் காலத்தின் மகத்தான இன்னல்களுக்குள் அமிழ்ந்து விட்டார்.

விக்குகளும், நடுத்தர மக்களும் அமைத்த அரசியல் கூட்டுறவில் இன்னும் பல புதிய முகங்களும் வந்து சேர்ந்தனர். மெல்போர்ன், பால்மர்ஸ்டன்[1] போன்ற கானிங்கைப் பின் பற்றிய தலைவர்களும், வட இங்கிலாந்தின் நடுத்தர வகுப்பினர் களின் பிரிதிநிதிகளான, சர் ஜேம்ஸ் கிரஹாம் (Sir James Graham) ஸ்டான்லி (Stanley) போன்ற சுதந்திரவாதிகள், ஓரளவு பாராளுமன்றச் சீர்திருத்தங்கள்தான் நாட்டை ஈடேற்ற முடியும் என்று அண்மையில் நம்பினர்கள். இவர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற 1830 ஆம் ஆண்டு இலை யுதிர் காலத்தில் வெல்லிங்டனை எதிர்பார்த்தனர். ஆனல் வெல்லிங் டனே 'பிரதிநிதித்துவ முறை நாட்டு மக்களின் முழு நம்பிக்கை யைப் பெற்றிருக்கிறது. ஆகவே மேலும் அதனை அபிவிருத்தி செய்வது மனித அறிவிற்கு அப்பாற்பட்ட'தென அறிவித்து, மித வாதிகளின் வாயை அடைத்துவிட்டார். இந்தப் புகழ்பெற்ற அறிக்கையின் விளைவாக, ஸ்டான்லியும் கிரஹாமும் பாராளு மன்றச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக விக்குகளுடன் உடனடியாகக் கூட்டுச் சேர்ந்தனர். கானிங்கைப் பின்பற்றிய தலைவர்களும், பால்மர்ஸ்டனும், மெல்போர்னும் அது முதல் விக்குத் தலைவர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டு, தங்கள் ஆயுள் முடியும் வரை செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.

[1] இன்னெரு கானிங் வழித் தலைவரான ஹஸ்கிஸன் 1830-ல் மான் செஸ்டர் லிவர்ப்பூல் ரயில் வழி (Manchester-Liverpool-Railway) திறப்பு விழாவின்போது விபத்துக்குள்ளாகி மாண்டார். அதுகாலை அவர் கிரே பிரபுவுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தார்.

வெல்லிங்டன் அமைச்சரவை ஆட்டங்காணவே, உயர் டோரிக் கட்சியினர், வெல்லிங்டனும், பீலும் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக வஞ்சம் தீர்க்கும் வழியில் ஒரு நெருக்கடியான வாக்கெடுக்கின் போது, அவர்களுக்கு எதிராக ஓட்டளித்து வீழ்த்தினர்கள். 1830 நவம்பரில் வெல்லிங்டன் பதவியிலிருந்து வீழவே, அமைதி, ஆட்குறைப்பு, பாராளுமன்றச் சீர்திருத்தம் ஆகியவற்றைக் கொள்கைகளாகக் கொண்ட புதிய அமைச்சரவையை நிறுவும்படி 'மாலுமி அரசராகிய' (Sailor King) நான்காம் வில்லியம் லார்டு கிரேயை அழைத்தார்.

உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் கிரேயின் அமைச்சரவை உயர்குடித் தலைவர்களைக் கொண்டிருந்தது. ஆனால் விக்கு அமைச்சரவையில் இருந்த உயர்குடித் தலைவர்கள் திறமையும் சிறந்த பாராளுமன்ற அனுபவமும் பெற்றிருந்தார்கள். லார்டு டர்ஹாமின் பொது மேற்பார்வையில் டர்ஹாமும், லார்டு ஜான் ரஸ்ஸலும் உருவாக்கி,மக்கள் சபையில் லார்டு ஆல்த்ராப்பினல் (Lord Althorp) கொண்டுவரப்பட்டச் சீர்திருத்தச் சட்டம் அதிக அளவில் வெற்றி பெறவில்லையென்று குறைகூறப்பட்டாலும், அது வெற்றிப்பெற்ற வரையிலும் அக்காலத்திய சீர்திருத்தப் பிரியர்களையும், எதிரிகளையும் திகைப்படையச் செய்தது. டோரிகள் குறிப்பிட்டது போல் அத்திட்டம் 'ஒரு புதிய அரசியலமைப்பு'. ஏனெனில் ஒரு வகையில் அரசியல் அதிகாரங்கள் புதிய சமூகப் பிரிவுகளுக்கும் நாட்டின் புதிய மாவட்டங்களுக்கும் விரிவு செய்யப்பட்டது.

சிதைந்த பரோக்கள் யாவற்றையும் முற்றிலும் அழித்து விடக்கூடிய மசோதாவை யாரும் எதிர்பார்க்கவில்லை. எனவே புதுத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது லாண்ட் என்ட் (Land's End), ஜான் ஒகுரோட் (John O' Groats) வரையிலும் எதிர்ப்புக் குரல்கள் ஒலித்தன (மார்ச், 1831). மிதப் போக்குடைய சீர்திருத்தங்களை எதிர்பார்த்த டோரிகள் இதனை எதிர்க்கத் தொடங்கினர். பெரும் செல்வாக்குள்ள தொழிலாளர் தலைவர்களும் அமைப்பாளர்களுமான பிளேஸ், காபட்டு போன்றவர்கள் 'இம்மசோதாவை, மசோதாவை முழுவதையும் மசோதா ஒன்றை மட்டுமே' தீவிரமாக ஆதரித்தார்கள். ஏனென்றால் அது சமயம் பதவியிலிருந்த மக்கள் சபையிலும்,அக்கால நிலவி வந்த பொது மக்கள் எண்ணத்தைப் பொறுத்த வரையிலும், தொழிலாளர் வாக்குரிமை நிறைவேற்றுவது பின்னல் அரிதாகி விடுமென்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விக்குகள்

மசோதாவின் முடிவைப்பற்றி என்னதான் சொன்னாலும் நியமனம் செய்யப்பட்ட பரோக்களையும் சொந்த நலன்களை இணைக்கும் பழம்பெரும் மரபு மட்டும் நீக்கப்படுமானால் எப்படியும் ஒருநாள் இந்த மசோதா வந்தே தீரும் என்பதை அவர்கள் முன் நோக்கினார்கள்.

புதிதாக வாக்குரிமை பெற்ற பரோக்களில் இருந்த மேல் நடுத்தர வகுப்பினரும், கடைக்காரர்களும் பத்துப் பவுன் வாடகை செலுத்தும் வீட்டாருக்கு வாக்குரிமை வழங்கியதில் தமது கோரிக்கைகள் யாவும் நிறைவுபெற்று விட்டதை உணர்ந்தனர். இன்னும் வாக்குரிமை பெறாத நடுத்தர வகுப்பினரில் பாதிப் பேர், புதிய தொழில் பகுதிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குரிமையில் தங்கள் நலன்களுக்கு மறைமுகமான பிரதிநிதித்துவம் பெற வழியுண்டா எனத் தேடினர். ஓல்டு சேரத்துக்கு பதில் (Old sarum) மான்செஸ்டர் நகரம் இரண்டு உறுப்பினர்களைப் பெற்றதும், ஏதோவொரு கார்னிஷ் (Cornish) குக்கிராமத்துக்குப் பதில் ஷெப்பீல்டு (Sheffield) பிரதிநிதித்துவம் பெற்றதும் சீக்கிரமே தானியச் சட்டங்கள் மறைய வழி செய்யும். ஆனால் பெருநிலக் கிழார்களும், குத்தகைக் குடியானவர்களும் இந்த ஆபத்தைப் பொருட்படுத்தவில்லை. புது மசோதாவின்படி கவுண்டி (County)களின் பிரதிநிதித்துவம் அதிகரித்ததும் குத்தகைக் குடியானவர்கள் பெற்ற வாக்குரிமைச் சலுகைகளும் அவர்களை மகிழ்வித்தன. நாட்டுப்புறத் தொகுதிகளில் இந்தச் சலுகைகள் நிலக்கிழார் வகுப்பின் செல்வாக்கை உயர்த்தினவேயன்றிக் குறைக்கவில்லை.[1]

நடுத்தர மக்கள் பாதிப்பேரிடையேயும், நிலக்கிழார்கள் எல்லாரிடையேயும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் திட்டம் நாட்டு மக்களிடம் பெரும் உற்சாகத்தைத் தூண்டியது தற்காலத்தில் புதுமையாகத் தோன்றலாம்.

[1] 1832-க்கு முன்னர் இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு கவுண்டிக்கும் (கோட்டம்) இரண்டு பிரதிநிதிகள் வீதம் இருந்தனர். ஆனால் பரோ உறுப்பினர்கள் நானூறு பேர் இருந்தனர். அவர்களில் பலர் சிதைந்த பரோக்களின் பிரதிநிதிகள். 1830-ல் லிக்குகள் இருநூறு சிதைந்த பரோக்களில் அறுபதில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இருநூறில் நூற்று நாற்பது சிதைந்த பரோக்கள் இப்பொழுது முற்றிலும் அழிக்கப்பட்டன. இன்னும் அறுபது பரோக்களின் தேர்தல் உரிமை புதிய பத்துப் பவுன் வாக்குரிமையால் மீட்கப்பட்டது. பிரெஸ்டன் (Preston), வெஸ்ட் மினிஸ்டர் போன்ற ஒரு சில பகுதிகளில் ஒரு முகமான பத்துப் பவுன் வரம்பைப் பயன்படுத்தியதால் வாக்குரிமை ஓரளவு வரையறைக்குட்படுத்தப்பட்டது. இதனால் அப்பகுதி சிலவற்றில் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

ஆனால் 'சிதைந்த பரோக்கள் ஒழிக!' என்னும் முழக்கம் யாவரையும் ஒன்று படுத்தியது. பழைய அதிகாரப் பகிர்வுப்படி நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நன்மையடைந்த அநேகரும், சீர்திருத்த மசோதாவினால் தமது நிலையங்களின் கலைப்பும் மானிய மறுப்பும் ஏற்படுமென்று எண்ணிய மதகுருமார்களும் மட்டுமே இதில் விலகி நின்றார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி புது மசோதா கட்டாயக் கோவில் வரி (Compulsory Church rate) ரத்தையோ அல்லது பல்கலைக் கழகங்களில் இணங்காதாரை அனுமதிக்கும் விதியையோ ஏற்படுத்தவில்லை. வாக்குரிமை மேலும் விரிவாக்கப்படும் வரை, 1832ஆம் ஆண்டு மசோதாப்படி நடுத்தர வகுப்பு மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கும் முறை சீராக அமையவில்லை.

கிரேட் பிரிட்டனின் வரலாறு கண்டிராத பதினைந்து திங்கள் அரசியல் கிளர்ச்சியின் பின்னர் (மார்ச் 1831 – மே 1832) பிரபுக்களின் பலத்த எதிர்ப்பிற்கிடையே சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்த முதல் நெருக்கடியான பொதுத் தேர்தலில், சீர்திருத்தத்திற்கு ஆதரவாக நிலையற்ற ஒரு தனி வாக்குக்குப் பதில் நிச்சயமான நூற்று முப்பத்தாறு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன (மே, 1831). இரண்டாவது சிக்கல், பிரபுக்கள் சபையில், அண்மையில் டோரிகள் தோற்றுவித்திருந்த பிரபுக்களாலும் மேற்றிராணிமார்களின் தொகுதியாலும் சீர்திருத்த மசோதா தள்ளப்பட்டது தான் (அக்டோபர் 1831). அவ்வாண்டு மாரிக்காலத்தில் தொழிலிலும் விவசாயத்திலும் பெரும் இன்னல்கள் ஏற்பட்டன.[1] காலராப்பிணி பரவியது. பிரபுக்களின் செயலைக் கண்டித்துப் பொதுமக்கள் கொண்ட கோபத்தினால் பெரும் சமூகக் குழப்பம் ஏற்படும் சூழ்நிலை இருந்தது. ஆனால் சிந்திக்கும் திறனுள்ளவர்கள், பிரிஸ்டல் கிளர்ச்சியின் (Bristol Riots)பாடத்தை எச்சரிக்கையாகக் கொண்டனர். பர்மிங்காமைப் பின்பற்றி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தோன்றியிருந்த 'அரசியல் சங்கங்கள்' (Political Unions) இந்த வன்முறை இயக்

[1] 1830 ஆம் ஆண்டு நவம்பரில் விக்குகள் முதன் முதலில் பதவியேற்ற போது, சில தென் கோட்டங்களில் உள்ள குடியானவர்கள் அரைக் கிரவுண் தினக்கூலி கோரிச் செய்த 'கடைசிக் குடியானவர்கள் கிளர்ச்சியை' அவர்கள் எதிர்க்க வேண்டியிருந்தது. கிளர்ச்சி செய்த பசித்த விவசாயத் தொழிலாளர்கள் சிறிய அளவில் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தனர். ஆனால் இரத்தம் ஏதும் சிந்தப்படவில்லை. அச்சம் அடைந்த விக்குகள் அவர்களை மிகவும் வன்மையாகத் தண்டித்தனர். அவர்களில் பலர் தூக்கிலிடப்பட்டனர். நானூற்று ஐம்பது பேர் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப் பட்டார்கள்.

கத்தை நடத்திக் கொண்டிருந்தன. சீர்திருத்த மசோதா தள்ளி விடப்படுமானால் உண்மையான உள்நாட்டுப் போரே ஏற்படக் கூடிய அச்சத்தை இந்தச் சங்கங்களின் தோற்றம் உணர்த்தியது.

மசோதாவை ஆதரித்த தொழிலாளர் மக்களே பிரிந்து போய்த் தாமே ஒரு புரட்சி இயக்கத்தைத் தொடங்கிவிடுவார்களோ என்பதுதான் மசோதாவுக்கு ஏற்பட்ட புதிய ஆபத்து. அப்படியானால் அமைதியை நிலைநாட்டுகின்ற முயற்சியில் மேலும் பல எதிர்ப்புகள் தோன்றக் கூடும். ஆனால் நடுத்தர வகுப்பு மக்களிடம் நீண்ட நாளாகக் காணப்பட்ட அரசியல் விழிப்பற்ற தன்மை மாறியதால், தீவிர வாதிகளுக்கும் டோரிகளுக்கும் ஏற்படவிருந்த மோதல் காரணமாகச் சமூகம் அழிவதற்கு முன் மசோதாவை நிறைவேற்ற உறுதிபூண்டனர். மசோதாவை நிறைவேற்றுவதால்தான் நாட்டின் நிலைத்த அமைதி ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டது. எந்த அரசியல் படகோட்டியும் அனுபவித்திராத வகையில், எதிர்ப்புப் புயலில் சிக்கித் தவித்த நேர்மைக் குணம் படைத்த மாலுமியாகிய, அமைதியிழந்த அரசர் நான்காம் வில்லியம் தமக்குள்ள தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி, புதுப் பிரபுக்களை நியமித்து, மசோதாவை எப்படியும் நிறைவேற்றப் போவதாக கிரே பிரபுவுக்கு வாக்களித்தார். ஆன் அரசியார் காலத்தில் டோரிக் கட்சியின் அமைச்சரவையின் சார்பில் ஊட்ரெக்ட் ஒப்பந்தத்தைப் (Treaty of Utrecht) புதிய பிரபுக்களை நியமித்து நிறைவேற்றிய முன் நிகழ்ச்சி இப்போது பயன்பட்டது. எனினும் கடைசி நேரத்தில் அரசர் வில்லியம் தயங்கினார். டோரிகளைப் பதவியேற்கச் செய்து, அவர்கள் தமது சொந்த வழியில் மசோதாவை நிறைவேற்றச் செய்யலாமா என்றுகூட முயன்றார். இதுதான் பேர் பெற்ற 'மே தினங்கள்' என்றழைக்கப்பட்ட இறுதி நெருக்கடியை விளைவித்தது(மே. 1832). லார்டு கிரே பதவி துறந்தார். வெல்லிங்டன் திரும்பவும் பதவியேற்று வன்முறையில் ஆள்வார் என்று நாடு நம்பியது. பெரு நகரங்கள் எதிர்க்கத்தயாராகின. ஆனால் அம்முயற்சி தோற்றுவிட்டது என்பதைப் பீல் கண்டார். அரசரும் பிரபுக்களும் இணங்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் திரும்பவும் வெற்றிகரமாகப் பதவி ஏற்றார்.

சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாயிருந்த இந்த நெருக்கடி, 'புதிய அரசியலமைப்பில்' இருந்த பொதுமக்கள் ஆற்றலின் வியக்கத்தக்க வலிமையைக் காட்டியது. பொதுமக்கள் திரண்டு, ஆளும் வகுப்பிடமிருந்து நவீன மகாசாசனத்தைக் (Magna Carta) கட்டாயமாகப் பெற்றுவிட்டார்கள்.

இது முதல் நாடு தனது சொந்த இல்லத்தை ஆளும் உரிமையைப் பெற்று விட்டது. ஆனால், 'குறிக்கப்பட்ட நாடு' என்பதன் அரசியல் தன்மை, இந்தப் போராட்டத்தைவிடக் குறைந்த வல்லந்தத்துடன் அடுத்தடுத்து நிகழ்ந்த பல வாக்குரிமைக் கிளர்ச்சிகள் வரை (1867, 1884, 1918) பயன்பட்டது. பத்துப்பவுன் வாடகை வீட்டுக்காரரும், குத்தகைக் குடியானவர்களும் எப்போதும் 'நாட்டை' அமைக்கும் அம்சங்களாக இருக்கமுடியாது. நாட்டில் நடந்த அமைதியான புரட்சியால் தங்கள் சொந்த நலன்களை இழந்த பரோ உரிமையாளர்களைப் போல் இவர்களும் நாட்டை ஆள எந்த வரையறுத்த உரிமைகளையும் கொண்டிருக்கவில்லை.

ஸ்காட்லாந்தில் பிரதிநிதித்துவ முறை இங்கிலாந்தைவிட மோசமாக இருந்தது. டுவீட் ஆற்றுக்கு(Tweed)வடக்கே கவுண்டித் தேர்தல்கள்கூட ஒழுங்காக நடக்கவில்லை, அரசியல் முறையாகச் சொன்னால் ஸ்காட்லாந்து முழுவதுமே ஒரு சிதைந்த பரோ. சீர்திருத்த நெருக்கடியின் போது வட பகுதி மக்கள் ஆட்சியின் வல்லந்தம் இங்கிலாந்தைவிட அதிகமாக இருந்தது. 1832ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தியர் கிர்க் (Kirk) சபையைத் தவிர, வேறுபல பொதுமக்கள் மன்றங்களின் மூலம் தங்கள் கருத்துகளை வெளியிடும் வாய்ப்பு உண்டாயிற்று. சீர்திருத்த மசோதாவின் உடனடி விளைவு, 1833ஆம் ஆண்டில் ஏற்பட்ட 'பர்க் சட்டம்' (Burgh Act). இதன்படி பதினைந்து ஆண்டிற்குப் பின் ஸ்காட்லாந்தின் வரலாற்றிலே முதல் முறையாகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராண்மைக் கழகங்கள் (Municipalities) நிறுவப்பட்டன.

இங்கிலாந்தில் நகர பரிபாலன சபைச் சீர்திருத்தச் சட்டம் (Municipal Corporations Act) 1835-ல்தான் ஏற்பட்டது. பாராளுமன்றச் சிதைந்த பரோக்கள் வீழ்ச்சியடைந்த போது, தல ஆட்சியில் அவற்றை ஒத்த துணைத் தொகுதிகளான நகராட்சிப்பரோக்களும் அழிவுற்றன. பழைய ஆட்சியின் கீழ் இவை என்றுமே கலைக்கப்பட்டிருக்காது. 1835 ஆம் ஆண்டுச் சட்டம் சீர்திருத்த மசோதாவைவிட ஜனநாயகப் பண்பு மிக்கதாக இருந்தது. ஏனெனில் அதன்படி வரி செலுத்தும் எல்லோருக்கும் புதிய நகராட்சிக் கழகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. இறுதியாக ஆங்கில நிறுவனக் கூட்டமைப்பு வாழ்வின் நெருக்கடி காலம் முடிவுற்றது. இனி, சமூகத்தின் புதிய பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்றபடி சமூகவாழ்வு திருத்தி அமைக்கப்படத் தொடங்கியது. ஜெரமி பென்தாம் (Jeremy Bentham) மரணப் படுக்கையில் கிடந்தாலும், அவர் எழுப்பிய உணர்ச்சி

நாட்டில் முழுவதும் பரவி வந்தது. 'அதன் பயன்தான் என்ன?' என்ற அவருடைய வினு ஒன்றன்பின் ஒன்ருகப் பொருளின்றிப் போற்றப்பட்டு வந்த பல துறைகளில் ஒலித்தது. விக்குக் கட்சியின் சீர்திருத்த அமைச்சரவையோடு மன்னர் ஆணைக் குழுக்களும்(Royal commissions)அவற்றின் அறிக்கைகளும் தோன்றின. நகர பரிபாலன சபைச் சட்டம் இது தந்த முதற்கனி.

இந்தச் சட்டம் முதலில் மாநகரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. 1888-ல் லார்டு சாலிஸ்பரி அமைச்சரவை தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்டி கவுன்சில்கள் (County Councils) என்ற ஆட்சிக் கழகங்களை நிறுவும் காலம் வரை நாட்டுப்புற மாவட்டங்கள் அமைதிக் காவலர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இவ்வாறு தல அரசாங்க வகைகளில் வேறுபாடு இருக்கக் காரணம் நாட்டுப்புற இங்கிலாந்தின் மக்களின் எண்ணங்களைக்கூட நிலக்கிழார்கள் கட்டுப்படுத்தினர்கள். ஆனல் நகரைச் சார்ந்த இங்கிலாந்தில் ஜனநாயகப் பண்பு ஏற்கெனவே நிலவியது.

1835ஆம் ஆண்டின் நகர பரிபாலனச் சபை சட்டம் அநேக பகுதிகளுக்கு விரிவு செய்யப்படவில்லையென்ருலும், பல முக்கியமான நகரப் பகுதிகளில் பொதுமக்கள் ஆதரவையும், வரியை விதிக்க அதிகாரம் உள்ள ஓர் அமைப்பையும் ஏற்படுத்தியது. இதிலிருந்து புதிய அதிகாரங்கள் வலுப்பெறுவதைக் காணலாம். அடுத்த நூற்ருண்டு முழுவதும் நகர பரிபாலன சபைகளுக்கு நிலைத்த பல அதிகாரங்கள் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தன. இறுதியில் அவைகள் தல ஆட்சியின் எல்லாத் துறைகளுக்கான அதிகாரங்களைப் பெற்றன. மதுக்கடைகளுக்கு (Public-houses) அனுமதி (Licensing) வழங்குதலும், நீதித்துறை அதிகாரங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவினுல் செலுத்தப்படக் கூடாது என்பதற்காக இவை இரண்டு மட்டும் விலக்கப்பட்டிருந்தன. நகராட்சிக் கழகங்கள் ஒரு காலத்தில் பொதுமக்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதியளித்தல், டிராம் (Tram) வண்டிப் போக்குவரவு, குடிநீர், வீட்டு வசதிகள் ஆகியவற்றைக் கொடுத்து, பெருவாரியான தொழிலாளர்களுக்கு வேலை தரக்கூடிய பணி முதல்வர்களையும், வணிகர்களையும் உருவாக்குவார்கள் என்று 1835ஆம் ஆண்டில் யாரும் முன்நோக்கவில்லை.

1835ஆம் ஆண்டு முதல் ஒயிட்ஹால் (Whitehall) மாளிகையில் இருந்த அரசாங்கத் துறைகளுக்கும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தல அரசுகளுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதன்

படி தல ஆட்சி மேற்பார்வை செய்யப்பட்டு, அவைகளின் வரி களுக்கு உதவியாகப் பொது வரிப் பணத்திலிருந்து கருவூலக் கொடைகளையும் பெற்றது (Treasury grants). இவையாவும் எதிர் பாராத முன்னேற்றங்களென்ருலும் 1835–ல் விக்குகள் துணிந்தும் ஒரு முகமாயும் கொண்டுவந்த சட்டத்தின் நன்மைகள். இதன் மூலம் தொழில்புரட்சியின் மட்டுமிஞ்சிய சமூகவிளைவுகளை ஓரளவு எட்டிப்பிடிக்கும் சீரிய பணி தொடங்கியது. ஆனல் இப்பணி களெல்லாம் ஆட்குறைப்புக்கு இடம் இல்லை. ஆட்குறைப்பே நிவாரணம் என்ற கொள்கை மறந்துவிட்டது.

1833-ல் லார்டு ஆல்திராப் முதல் தொழிற்சாலைச் சட்டத்தை (Factory Act) கொண்டுவந்தார். இதன்படி முறையே குழந்தை கள், சிறுவர்களின் வேலை நேரங்கள் சட்ட முறையாக நிர்ணயிக்க பட்டன. இதன் முக்கிய நன்மை சட்டத்தை அமுலாக்க அரசாங்க மேற்பார்வையாளர்கள் ஏற்படுத்தியதே. இச்சட்டம் தோன்றிய போது இதன் பயனை யாரும் உணரவில்லை. பொது நல வாழ்வில் மலர்ந்து கொண்டிருந்த புதியவொரு முன்னேற்றத்தின் முதல் கட்டம்தான் இச்சட்டம்.

சீர்திருத்த மசோதாவின் இன்னெரு உடனடி விளைவு, 1833 ஆம் ஆண்டுச் சட்டப்படி பிரிட்டிஷ் பேரரசு முழுவதும் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டதாகும். தனது பணியை வியக்கத்தக்க வகையில் நிறைவேற்றிவிட்டு வில்பர்ஃபோர்ஸும் (Wilberforce) இறந்தார். அவரது வாழ்வின் இறுதி நாட்களில் அடிமை வியா பார எதிர்ப்புப் பணி சர் தாமஸ் ஃபோலல் பக்ஸ்டன் (Sir Thomas Fowell Buxton) என்பவரால் புரோஹாமின் (Brougham) துணைகொண்டு நடத்தப்பெற்றது. வில்பர்ஃபோர்ஸ் தம் இயக்கத்தைத் தொடங்கியபோது, அடிமை வியாபாரத்தை ஆதரித்தவர்கள் பிரிஸ்டலிலும் லிவர்பூலிலும் இருந்த ஆங்கிலக் கடல் கப்பல் தொழில் அதிபர்களே[1]. அடிமைவியாபாரம் நிறுத் தப்பட்டபின் வியாபாரத்தை ஆதரித்தவர்கள் குடியேற்றங்களில் இருந்தது போல் அதிக அளவில் இங்கிலாந்தில் இல்லை. அடிமை களின் இறக்குமதி நிறுத்தப்பட்டாலும், இருந்தவர்களைக் கொண்டு அவர்கள் இனவிருத்தி செய்யமுடியும். மேற்கிந்தியத் தீவுகளிலும்(West Indies)பிற வெப்பமண்டலக்(Tropical)குடியேற் றங்களிலுமிருந்த தோட்டத் தொழில் அதிபர்கள் அடிமைகள் விடுதலை இயக்கம் வெற்றி பெற்ருல் தமக்கு அழிவுதான் என்

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 6, பக்கம் 381 - 384-ம் மேற்பட்டவையும் காண்க.

பதை உணர்ந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் கட்சியை முறையாக எடுத்துக்கூறவில்லை. மேலும் நீக்ரோக்களையும், நீக்ரோக்களை ஆதரித்த சமயம் பரப்பும் மிஷனரிகளையும் (Missionaries) சரியாக நடத்தவில்லை. அவர்களின் வன்முறைகளை ஆங்கிலப் பொதுமக்களும், அப்போது சமயத்துறையில் செல்வாக்கு பெற்றிருந்த சுவிசேஷ நற்செய்தி பரப்புவோரும் (Evangelicalism) இணங்காதாரும் (Non Conformity) கோபங்கொள்ளும்படி செய்தன. 1833ஆம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சட்டத்தால் அடிமை முதலாளிகளுக்குத் தாய்நாடு மனமுவந்து இருபது மில்லியன் பவுன்களை ஈட்டுத் தொகையாகக் கொடுத்தது.

பெல்ஜிய நாட்டுச் சிக்கலைத் தீர்த்தது விக்கு அமைச்சரவையின் மற்றொரு பெரும் வெற்றி. 1830–ல் பாரிஸ் புரட்சிக்குப் பின்னர் பெல்ஜியம் ஹாலந்தின் கூட்டுறவில் இருந்து விலகியபோது அடுத்த கலகம் ஏற்பட்டது. இந்தக் கூட்டுறவை 1815ஆம் ஆண்டு உடன்படிக்கைகள் நிறைவேற்றி வைத்திருந்தன. பாதி முற்போக்கு இயல்பும், பாதி சமயச் சார்புமுடைய இக்கிளர்ச்சியை முற்போக்கு வாதிகளும் மதகுருமார்களும் தூண்டிவிட்டார்கள். 1815ஆம் ஆண்டு உடன்படிக்கைகளை இந்தப் பொது மக்கள் கிளர்ச்சி மீறிவிட்டதால் அவர்களை அடக்க வேண்டுமென கிழக்கு ஐரோப்பிய பிற்போக்கு வாதிகள், புனிதக் கூட்டுறவை பின்பற்றிக் கூறினார்கள். ஆனால் கிரேட் பிரிட்டனில் கிரேயைத் தலைமை அமைச்சராகவும், பால்மர்ஸ்டனை வெளிநாட்டு அமைச்சராகவும் கொண்டிருந்த முற்போக்கு விக்கு அமைச்சரவையின் கருத்துவேறு. ஆனால் பெல்ஜியத்தைத் தன்நாட்டோடு சேர்த்துக் கொள்வதையோ அல்லது பிரஸல்ஸில் (Brussels) ஒரு பிரெஞ்சு இளவரசரின் ஆட்சியை நிறுவியோ பிரான்ஸ் அங்குச் செல்வாக்கு பெறுவதைப் பிரிட்டன் வன்மையாக எதிர்த்தது. பாரிஸில் இருந்த ஷோவனிஸ்ட் (Chauvinist)கட்சி, 'நாட்டவர் அரசராகிய' லூயிஸ் பிலிப்பாலும் (Louis Philippe), ருசியா, ஆஸ்திரியா, பிரஷ்யா (Prussia) போன்ற பகை நாடுகளுக்கு எதிராக முற்போக்கு இங்கிலாந்தின் நட்பை விரும்பிய அவருடையஅமைச்சர்களாலும், மிக சிரமத்துடன் அடக்கி வைக்கப்பட்டிருந்தது. இது மிகவும் இக்கட்டான ஒரு நிலைமை எனினும் பல நெருக்கடிகளின் பின்னர் ஓரளவு நல்ல முறையில் தீர்வுகாணப்பட்டது. இதன்படி இளவரசர் சாக்ஸே–கோபக்கொதாவின் லியோபால்டு (Prince Leopold of Saxe-Coburg Gotha)பெல்ஜியத்தின் அரசராகஏற்றுக் கொள்ளப்பட்டார். 1831–ல் இவர் இங்கிலாந்து அமைச்சர்களின் நெருங்கிய நண்பரும் வருங்கால அரசியாராகிய விக்டோரியாவின் அன்பு மிகும் அம்மானும் ஆவர். இந்த வெற்றிகளுக்கு மகு

டம் வைத்தாற் போல 1839-ல் டச்சு பெல்ஜிய எல்லைத் தகராறு பற்றிய பெருஞ்சிக்கலைத் தீர்த்து, பெல்ஜியத்தின் நடுநிலைமையை உறுதிப்படுத்தும் ஒப்பந்தமொன்றை பால்மர்ஸ்டன் நிறைவேற்றினர். இந்த உடன்பாட்டில் பெல்ஜியம், பிரிட்டன், பிரான்ஸ், ருசியா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டன. இவ்வாருக, பிரிட்டனுக்கு ஆபத்தில்லாத வகையில், நெதர்லாந்தில் (The Netherlands)ஓர் அரசை ஏற்படுத்தவேண்டுமென்ற இங்கிலாந்தின் நெடுநாளைய ஆவல் நிறைவெய்தியதோடு, அதன் பயன் மேலும் பல காலம் நீடித்தது.

இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

இரு கட்சி முறை அழியவில்லை—ஓராண்டுக்காலம் அமைக்கப்பட்ட முயற்சி—அமைதியின் வெற்றிகள் குடியேற்றமும் பேரரசும்—தானியச் சட்டங்கள்: வருமான வரி நீக்கம்—வில்லியம் காபெட்—தீவிர வாதிகள், விக்குகள், டோரிகள்—பீட்டர்லூ: கேட்டோ தெரு—அரசியாரின் விசாரணை : முற்போக்கு டோரிகள்—தொழில் சங்கங்களுக்குச் சட்ட அதிகாரம்; பீல்—சட்டச் சீர்திருத்தம்:போலீஸ் ஹஸ்கிஸ்சன்—காசில்ரீயும், கானிங்கும்—ஸ்பெயின்: தென் அமெரிக்கா—மன்ரேக்கொள்கை : கிரீஸ்—கானிங்கும் வெல்லிங்டனும்—மதத்தில் சமத்துவம்—கிரே : பாராளுமன்றச்சீர்திருத்தம்—விக்குத் தலைவர்கள்—விக்கு அமைச்சரவை: சிதைந்த பரோக்கள்—பெரும் சீர்திருத்த மசோதா—மே நாட்கள்—மாநகராட்சிக் கழகச் சட்டங்கள்—தொழிற்சாலைச் சட்டங்கள்: அடிமை ஒழிப்பு—பெல்ஜியம் சுதந்திரம் பெறுதல்.

மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. ஸ்பென்சர் வால்போல் (Spencer Walpole)
History of England from 1815, Vols. I-III.

2. வெப்ஸ்டர் (Webster)
Foreign Policy of Castlereagh, and Temperley, Ditto, Canning.

3. கிரஹாம் வாலஸ் (Graham Wallas)
Francis Place.

4. கோல் (Cole)
William Cobbett and Short History of the British Working class Movement.

5. டிஸ்ஸி (Dicey)
Law and Opinion in England (On Bentham)

6. டிரவெலியன் (Trevelyan)
Lord Grey of the Reform Bill.

7. பட்லர் (Butler)
The Passing of the Great Reform Bill.

8. போரிட் (Porritt)
The Unreformed House of Commons (2 vols.) for details of the old system.

9. சர் டி. லி. மர்ச்செனட் (Sir D. Le. Marchant)
Lord Althorp.

10. ரெட்லிக்கும் ஹிர்ஸ்ட்டும் (Redlich and Hirst)
Local Government in England, Vol. I.

11. சர் ஹெர்பட் மாக்ஸ்வெல் (Sir Herbert Maxwell)
Wellington.

12. அட்லே (Atlay)
The Victorian Chancellors, Vol. I, for Brougham.

13. பேஜ்ஹாட் (Bagehot)
Biographical Sketches.

இயல் 2

பொருளாதார நெருக்கடியும் சீர்திருத்த மசோதாக்களும்

விக்குகளின் பொருளாதார நெருக்கடி—பீலும் புதிய கான்சர்வேடிவ் கட்சியும்—புதிய இரவலர் சட்டம்—1846-ல் தானியச் சட்டங்களின் ரத்து—டிஸ்ரேலியும் (Disraeli) பீலும்—விக்கு-பால்மர்ஸ்டன் ஆட்சி—சிவில் பணி அமைப்பு—விக்டோரியா அரசியார்—கிரிமியாவும் (Crimea) இத்தாலியும்—நாட்டு வளமும், சமூக நிவாரணங்களும்—வாக்குரிமைப் போராட்டமும், 1867 ஆம் ஆண்டு இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும்.

விக்டோரியா அரசி, 1837.

நான்காம் வில்லியம் (William IV) ஆட்சியின்போது பென்தாமின் தூண்டுதல்களாலும் தீவிரவாதிகளின் வற்புறுத்துதல்களாலும் உந்தப்பட்டு, விக்கு அமைச்சரவை பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவின் மூலமும், நகர பரிபாலன சபைச் சட்டத்தாலும், அரசாங்கத்தின் நிறுவனங்களில் பொதுமக்களின் பிரதிநிதித்துவம், தற்கால ஆட்சித் திறமைகள், போன்ற அமிசங்களைப் புகுத்தி இருந்தார்கள். இவையாவும் முதற்படிகளென்றாலும், முக்கியம் வாய்ந்த கன்னி முயற்சிகளாகும். விக்குகள் அக்காலத்திய சமூகச் சிக்கல்களை உணரக்கூடிய ஓர் அரசியல் பேரறிஞரையோ, அல்லது ஒரு பேராற்றல் மிக்க நிதியமைச்சரையோ உருவாக்கி இருந்தால், பொறுமையிழந்து பெருந்தொல்லைப்பட்டுக் கொண்டிருந்த நாட்டு மக்களுக்குத் தாங்கள் நம்பிக்கை ஊட்டி இருந்த நலமான வழியிலே நல்ல வழிகாட்டிச் சென்றிருக்க முடியும். ஆனால் ஒருகாலத்தில் சார்லஸ் மான்டேகு (Charles Montague), கோடால்பின் (Godolphin), வால்போல் (Walpole) போன்றவர்களின் சேவைகளால் நலம்பெற்று விளங்கிய விக்குக் கட்சியினர் இன்று பொருளாதாரச் சிக்கலினால் முடக்கப்பட்டு, வருமான வரியையும், தடையில்லா வாணிபத்தையும், பொருளாதாரப் புதிரை விடுவிக்கும் கருவிகளாகக் கொண்டு ஒரு தீர்வுகாணும் பொறுப்பைப் பீலிடம் ஒப்படைத்திருந்தார்கள். விக்டோரியா அரசி அரியணை ஏறியபோது கருவூலத்தலைவர் (Chancellor of the Exchequer) 'நிரந்தரப் பற்றுக்குறைகளின் துணையுடன் வரவு செலவுத் திட்டம் ஒன்றை (Budget) ஆவலாய்த் தேடிக்கொண்டு, வெறுமையான பணப்பெட்டி மேல் அமர்ந்திருந்தார்' என மிக அரிதான நகைச்சுவையோடு குத்தலாகப் பீல் குறிப்பிட்டாராம்[1].

ஆகவே பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா நிறைவேறிய ஆறுண்டுகளுக்குள், விக்குக் கட்சியினர் திட்டப்பஞ்சத்தில் திண்டாடுகிறார்கள் என்பதும் நாட்டின் பொருளாதாரத் தொழில் துறைகளில் ஏற்பட்டிருந்த சிக்கல்களைத் தீர்க்க மேலும் வழி

[1] சொந்தக்காரணங்களுக்காகப் பீலை வெறுத்த ஓக்கானல் கூறினார்: 'பீலின் புன்முறுவல் சவப்பெட்டி மேல் வைக்கப்பட்டிருக்கும் வெள்ளித் தட்டைப் போன்றது.' அவருடைய கூச்சப்பண்புகளைப் புரிந்து கொள்ளாத கட்சி உறுப்பினர் அவரைக் கடின மனதும் இறுமாப்பும் கொண்டவரென நினைத்து ஒதுக்கியதோடு 1846-ல் அவரை நீக்கிவிடும் அளவுக்கும் சென்றனர். ஆனால் அவரை நன்குணர்ந்த அமைச்சரவை சகாக்கள் அவரை என்றும் ஆதரித்து பீலின் சீடர்கள் என்றழைப்பார்கள் (Peelites). விக்டோரியா அரசியார் கூட அவரை உணர்ந்துகொள்ளாத வரைக்கும் பீலை வெறுத்தார்கள். ஆனால் அவரை அறிந்துகொண்டபின் நிலைமை மாறிற்று.

யின்றி இருக்கிருர்களென்பதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. எனவே புது அரசாங்கத்தை அமைத்து எதிர்க்கட்சி அமைச்சரவையை நிறுவலாம் என்ற பாராளுமன்ற நடைமுறை இருந்தது நாடு பெற்ற பேறே. இங்கிலேயில் பீல், சீர்திருத்த மசோதாவிற்குப் பின்னர் அழிவுற்றுக்கிடந்த டோரிக்கட்சியின் சிதைவுகளிலிருந்து புதியதோர் 'கான்சர் வேடிவ்' கட்சியைத் திருத்தி அமைத்திருந்தார். மேலும் அன்றைய ஸ்டான்லி, கிரஹாமைப்போலச் சிதைந்த பரோக்களின் ஒழிப்புத் திட்டத்தை ஆதரித்த பல தலைவர்களேயும் பீல் கவர்ந்திருந்தார். பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிட்டனை வேறுபடுத்திய ஒரு தனிப்பண்பு என்னவென்ருல் அதன்மேல் வகுப்பைச்சார்ந்த பல பிரிவினர்கள் தங்கள் தனியுரிமைகளே இழந்த பின்னர், அரசியல் துறவு கொள்ளாமல் புதிய நிலைமைகளுக்கேற்பத் தங்களே அழைத்துக்கொண்டார்கள். இன்று வன்மையாகத் தாக்கப்படும் 1832ஆம் ஆண்டுச் சீர்திருத்த மசோதாவின் குறைகள்தான், மேல் வகுப்பினர் இங்கிலாந்தில் அரசியல் வாழ்வோடு கொண்ட பரம்பரைத் தொடர்பைக் கட்டுக்கோப்பு முறியாமல் காத்திருக்கின்றன. அல்லது அரசியலை முழுநேர அலுவலாகக் கொண்ட ஓர் அரசியல் வாதிகளின் புது வகுப்பே ஏற்பட்டிருக்கும். தவணைகளில் வாக்குரிமை வழங்கும் முறையில் காரண காரியத்தொடர்பு இல்லையென்று தோன்றலாம். ஆனல் ஜனநாயக முறையில் நாட்டை ஆளக்கூடிய தொடர்பான ஓர் இயக்கம் படிப்படியாக வளர்வதில் நாட்டிற்குப் பெரும் நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன.

1834ஆம் ஆண்டில் பீல் வெளியிட்ட டாம்வொர்த் அறிக்கையில் (Tamworth manifesto) சீர்திருத்த மசோதாவை அதன் சிக்கல்களுடன் முடிவுற்றதோர் சாதனேயாக ஒப்புக்கொண்டார். அந்தச் சிக்கல்கள் எவை என்பதைப் பீல் அறிந்திருந்தார். நடுத்தர வகுப்பிலிருந்து தோன்றிய காரணத்தாலும், வணிகர் உற்பத்தித் தொழிலதிபர் வகுப்புகளுடன் அவருக்கு இயல்பாக இருந்த இன உறவு காரணமாகவும், அநேக டோரிகளேயும் விக்குகளேயும் விட நாட்டில் பொருளாதாரத் தேவைகள் என்ன என்பதைப் பீல் தெரிந்து கொள்ள முடிந்தது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் நடுத்தர வகுப்பு மக்களின் எண்ணங்களே உணர்ந்த பீல், ஏழை மக்களின் துன்பங்களுக்காகவும் பரிவு காட்டிஞர். தான் தலைமை தாங்கிய நிலக்கிழார்களின் மனப்பான்மையைக் கூட அவர் அவ்வளவு அதிகமாக அறிந்து ஒத்துணர்வு காட்டவில்லை. நடுத்தர வகுப்பு மக்களின் கட்சியைத் தாம் விரும்பும் சிறப்பான வழிகளில்

அரசாங்கத்தின் ஒரு கருவியாகப் பயன்படுத்தலாமென்பது அவர் கருத்து.

எனினும் புதிய கான்சர்வேடிவ்கட்சியில் சொந்தநலன்களும், நோக்கங்களும் கொண்டவர்கள்பெரும்பான்மையாக இருந்தனர். இவர்கள் பீலின் நண்பர்களையும் உற்பத்தித் தொழில் அதிபர்களையும் வெறுத்தனர். தானியச் சட்டங்களையும் மதச்சபையையும் பாதுகாப்பதில் பேரார்வம் காட்டினார்கள். ஆக்ஸ்போர்டு (Oxford), கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக் கழகங்களில் இணங்காதாரை அனுமதிக்கவும், அயர்லாந்து மதச்சபையின் (Irish Establishment) மட்டுமிஞ்சிய செல்வத்தைச் சமயச் சார்பற்ற காரியங்களுக்குப் பயன்படுத்தவும் விக்குகள் கொண்டிருந்த திட்டத்தின் காரணமாக, மதச்சபை பேராபத்தில் இருப்பதாக இவர்கள் நம்பினார்கள். மேற்கூறிய இழிவுகள் ஏற்படாமல் பிரபுக்கள் சபை (House of Lords) தடுக்கமுடியும். இதுபோன்ற சிக்கல்களில் பீலும், அவருடைய சீடர்களும் அக்கறை காட்டினார்கள். ஆனால் கார்லைல் (Carlyle)போன்றவர்கள் வரிச்சலுகையளித்தலும் பொதுமக்கள் நல்வாழ்வு வசதிகள் ஏற்படுத்தலும்தான் பாராளுமன்றமும் அமைச்சரவையும் செய்யக்கூடிய பணிகள் என்று சுட்டிக்காட்டினார்கள். இதுபோன்ற பொருளாதார பிரச்சினைகளின் பல அமிசங்களிலும்தான் பீலின் எண்ணமும் இதயமும் ஒருங்கே புதைந்துகிடந்தன. வருங்காலப் பீல்வழி அரசியல் அரசியல் அறிஞர்களான கிரஹாம், அபர்டீன் (Aberdeen),கார்டுவெல் (Cardwell), கிளாட்ஸ்டன் (Gladstone) போன்ற நெருங்கிய நண்பர்களையும் சகாக்களையும் பீல் தன்பால் இழுத்துக்கொள்வதில் வெற்றி கண்டது போலத் தன் கட்சியினரைத் தன்னோடு சிந்தனை யொருமைப்பாடு கொள்ளும்வகையில் கவரமுடியவில்லை. ஏனெனில் பீலிடம் ஆளும் நலனும் பொதுமக்களை இணங்கவைக்கும் திறனும் இல்லை. பீல் சீர்திருத்த மசோதாவிற்கு முற்பட்ட கானிங்காலத்தில் தான் அரசியல் பயிற்சியைப் பெற்றிருந்தார். அக்காலத்தில் அமைச்சரவையின் முடிவே சட்டமாகக்கொள்ளப்பட்டது. சீர்திருத்த மசோதாவிற்குப் பின்னர் அமைச்சரவைக்கும் அதன் உள்ளே இருந்த பிரிவுகளுக்கும் உள்ள புதுத் தொடர்புகளை அறிந்துகொண்டதைவிட அச்சரவைக்கும் பொதுமக்களுக்கும் உள்ள புது உறவுகளை அதிக நன்றாக அறிந்துகொண்டார்கள்.

1841ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களின் விளைவாக விக்குகள் கடைசியாக அரசாங்கத்தைப் பீலிடம் கையளிக்குமுன்னே

பீல், வெல்லிங்டனின் இசைவுடன் புதிய இரவலர் சட்டத்தை (New Poor Law) இயற்றியதன் மூலம் (1834) முக்கியமானதோர் சமூகச் சீரமைப்பைத் தொடங்கிவிட்டார்கள். நாசாவ் சீனியரும் (Nassau Senior) அவருடைய துணை ஆணையர்களும் கொடுத்த ஆலோசனையின் பேரில் விக்குகள் கூலிக்கு உதவியாக வரி கொடுக்கும் ஸ்பீன்ஹாம்லாந்து திட்டத்தைஒழித்துவிட்டார்கள்.[1] இவ்வாறாகத் தென் இங்கிலாந்தில் தொழிலாளர்களிடையே வறுமையைக் குறைத்து அவர்களிடம் தன்மானம், தன்னுதவி போன்ற பண்புகளைப் புத்துயிர் பெறச் செய்யும் பணியைத் தொடங்கி வைத்தார்கள். மிக முக்கிய தேவையான இத்திட்டம் இரக்க சிந்தனையின்றி கொள்கை முறையில் இயக்கப்பட்டதால் இப்பிரச்சினையின் மனிதப் பண்பாகிய அமிசம் மறக்கப்பட்டது. வெளி நிவாரணங்கள் (out-door relief) தான் நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களின் பிழைப்பு வழியாக இருக்கும்போது வாழ்கூலி கொடுக்காமலும், வேலையற்றவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் ஏழை விடுதிகளைத் (Workhouse) தவிர வேறு இருக்கை வசதிகளைச் செய்யாமலும், அவற்றை ஒருமுகமாக நீக்கியது மட்டுமே மிஞ்சிய செயல். 'ஸ்பீன்ஹாம்லாந்து' திட்டத்தில் இருந்த வறுமைதரும் விளைவுகளைக் கண்டு அஞ்சிய இரவலர் சட்ட ஆணையாளர்கள், உரிமையோடு வெளியே வாழ்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கையை விட 'ஏழை விடுதிகளின்' வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்க வேண்டுமென்பதை ஒரு கொள்கையாகவே கொண்டனர் போலும். அக்காலத்திய பொருளாதாரக் கோட்பாடுகளுங்கூட ஏழைகள் விடுதிகளைத் தவிர வேறு சட்ட பூர்வமான வழிகளில் தொழிலாளர்களின் வாழ்க்கை வசதிகளைச் சீர்படுத்தி அந்தப் பிரச்சினைக்கு பிறகோணத்திலிருந்து தீர்வுகாணமுடியும்என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. தற்காலத்தைப் போல ஓய்வூதியங்களும் ஈட்டுறுதித்திட்டங்களும் இல்லாத அக்காலத்தில் முதியவர்களும் பிணியாளர்களுங்கூட வீட்டிலே வாழ வழியின்றி இருந்தனர். தாங்கள் செய்யாத குற்றத்திற்காக ஏழை விடுதிகளுக்கு அவர்கள் அனுப்பப்பட்டிருந்த போதும் அங்கே அவர்களுக்கு நல்ல கண்காணிப்பு கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் 'ஆலிவர் டுவிஸ்ட்'(Oliver Twist) என்ற நூலின் இளம் ஆசிரியர் ஏழை விடுதிகளில் வாழ்ந்தவர்கள் பட்ட துன்பங்களைப்பற்றி விளக்கமாக எழுதினார் (1838). இதன்மூலம் அவர் ஆணையாளர்கள் பின்பற்றிய பென்தாமின் கொள்கை வாதங்களை விட்டுவிட்டு

1 இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 7, பக்கம் 403-க்கு மேற்பட்டவை காண்க.

மனிதனை நேரடியாகப் பாதித்த உண்மைகளில் அக்கரை காட்டுமாறு கோரினர். இந்த உண்மைகளில்தான் புதிய விக்டோரியா யுகத்தின் இளந்தலைமுறைகள் பேரார்வம் காட்டி வந்தனர்.

இந்தத் தீவிர நடவடிக்கைகளினால் இரவலர் தொல்லை ஒழிக்கப்பட்டது. இடத்திற்கு இடம் இருந்த மாறுபாடுகளும் மதகுரு ஆளுகை வட்டங்களின் மித மிஞ்சிய உரிமைகளும் தான் பழைய இரவலர் சட்டத்தின் குறைகள். நாட்டுக்குப் பொதுவாகவும் ஒரு முகமான தன்மையுடனும் விளங்கிய புதிய இரவலர் சட்டம் முதலில் சிறிது வல்லந்தமாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், பின்னர் பொதுமக்களின் எண்ணப்படி தேவையான நிவாரணங்களையும் முன்னேற்றங்களையும் செயல்படுத்த நல்ல முறையில் உதவியது. ஏழை விடுதிகள் அவப்பேறு பெற்ற மக்களின் சிறை என்ற நிலை படிப்படியாக மாறிவந்தது. ஓய்வூதியங்களும் தேசிய ஈட்டுறுதித் திட்டமும் செயல்படும் வளங்குறைந்த காலமாகிய இன்னும் கூட ஏழை விடுதியில் அதிகப் பேரைக் காண்பது அரிது.

புதிய இரவலர் சட்டத்தின் மட்டில் கூலி ஊதியம் பெறும் வகுப்பினர் அதிருப்தி கொண்டனர். அதனால் எந்தவித அரசியல் விளைவும் ஏற்படாத நிலையில் அவர்கள் மற்றொரு சீர்திருத்த மசோதா வந்தால்தான் வெஸ்ட்மினிஸ்டரில் தங்கள் கோரிக்கைகள் செயல்படும் என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்தார்கள். இது போலவே லார்டு சாப்ட்ஸ்பெரி (Lord Shaftesbury) நூற்புத் திறமை கொண்ட ஃப்பீல்டன் (Fielden) தலைமையில் தொழில் சாலைகளில் உழைப்போரின் வேலை நேரத்தைச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கும் பத்துமணி மசோதாவைக்கோரி மேற்கூறிய கூலியூதிய வகுப்பினர்நடத்திய கிளர்ச்சியும்முற்போக்குக் கான்சர்வேடிவ் கட்சிகளில் பிளவையுண்டாக்கியது. அம்மசோதா 1847ஆம் ஆண்டு வரை நிறைவேற்றப்படவில்லை.[1] தொழில் உற்பத்தியுள்ள மாவட்டங்களில் தொடர்ந்து நடந்தேறிய கிளர்ச்சிகளாலும் அவற்றின் விளைவான இன்னல்கள் காரணமாகவும் மக்கள் உரிமைச் சாஸன இயக்கம் (Chartism) தோன்றியது (1838). 1867-லும் 1884-லும் வழங்கப்பட்ட உரிமைகளையே மக்கள் உரிமைச் சாஸன இயக்கத்தார் கோரினர்கள். அதாவது 1832ஆம்ஆண்டுச் சீர்திருத்த மசோதாவின்படி வாக்குரிமைவழங்கப்படாத மக்களுக்கு உரிமை வழங்குவதே. அவர்கள் கொண்டு-

[1] இங்கிலாந்தின் வரலாறு-III-பிரிவு 6, இயல் 2 காண்க.

வந்த மக்கள் சாஸனத்தின் (People's Charter) அம்சங்களும் முற்றிலும் அரசியல் சம்பந்தமானவை. ஆனால் அவர்களின் கிளர்ச்சியின் நோக்கமும் இயல்பும் சமூகத்தன்மை பெற்றவை இவ்வியக்கம் நடுத்தர வகுப்பினர் வழங்கிய உதவிச் சலுகைகளை உதறித் தள்ளி வறுமையில் உழன்ற கூலி ஊதியம் பெறுவோர் எழுப்பிய வகுப்புணர்ச்சிக் குமுறலாக வெடித்தது. தற்போது பொதுமக்கள் எண்ணங்களை முன்னைவிடத் தெளிவாகக் காட்டும் அடுத்த மானியமான பாராளுமன்றத்திலும் அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. மக்கள் உரிமைச் சாஸன இயக்கமாகிய தீக்குறியின் நிழலை பின்னணியாகக் கொண்டுதான் தொழிற் சாலைச் சட்டங்கள் (Factory Acts), தானியச் சட்ட ரத்து, சம்பளத்திற்குப் பதில் பொருள்களைக் கொடுப்பதைத் தடை செய்யும் சட்டம் (Acts against truck payments), சாப்டீஸ்பெரியின் சுரங்கச் சட்டம், சாட்விக் அறிக்கைகள் (Chadwick's Report) சுகாதாரத் துப்புரவு, பொது மக்கள் பிரச்சினை என்பதைப் பாராளுமன்றம் ஒப்புக் கொள்ள செய்தபின் வெளிவந்த பொது மக்கள் சுகாதாரச் சட்டம் (Public Health Act) ஆகியவை வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டன.

இந்த முறையில் மக்கள் உரிமைச் சாஸன இயக்கம், உழைப் பாளி மக்களின் நிலையை உயர்த்தி, நோக்கங்கள் பலவற்றையும் பெறச் செய்தது. ஆனால், அவர்களின் அரசியல் திட்டமான ஆடவர் வாக்குரிமை குறிப்பிட்ட வகுப்புக் கோரிக்கையாக வற்புறுத்தப்பட்டவரையிலும், நடுத்தர வகுப்பாரின் அமைப் புக்கும் தலைமைக்கும் உட்படாமல் பணி முதல்வர்களை எதிர்ப்ப தனால் மட்டுமே அதனைப் பெறலாம் என்று கருதப்பட்ட வரை யிலும், வெற்றி பெற வழி இருப்பதாகத் தெரியவில்லை. நடை முறைப் பயனுள்ள அரசியல் வாதிகள் என்ற முறையில் மக்கள் உரிமைச் சாஸன இயக்கத் தலைவர்களால் அதிக பயன் ஏற்பட வில்லை. 1860 ஆம் ஆண்டையொட்டித்தான் இயக்கம் வெற்றி கண்டது. ஏனெனில் அப்போதுதான் வாக்குரிமை வழங்கப் படாத பெரும்பான்மையினரைக் கொண்டிருந்த நடுத்தர வகுப்பு மக்கள், பிரைட் (Bright), கிளாஸ்டர் போன்றோர் தலைமையில் கூலி யூதியம் பெறும் மக்களுடன் சேர்ந்து, வாக்குரிமை மேலும் வழங்கப்பட வேண்டுமெனக்கோரினர்கள்.

தற்போது நடுத்தர வகுப்பாருக்கும் உழைப்பாளி மக்களுக் கும் இடையே ஏற்பட்ட நல்லிணக்கம் சார்டிஸ்டு இயக்கத்தின் தொடக்ககாலத்தில் இருந்ததை விட முன்னேறி இருந்த ஒரு காரணம் இடைக்காலத்தில் சமூகத்தில் பல தரப்பட்ட நிலையி

லுள்ள மக்களின் செல்வ நிலை பெருகி, வறுமையால் வளர்ந்திருந்த மனக்கசப்புகள் நீங்கியதாகும். இதன் வேறுகாரணங்கள், பீல் அமைச்சரவையின் காருண்ய நீதி வளமும், தானியச் சட்டங்கள் ஒழிக்கப்பட ஏதுவாக இருந்த சூழ்நிலைகளும், காப்டனின் (Cobden) தானியச்சட்ட எதிர்ப்புச் சங்கமும் (Anti-Corn-Law League) (1846)ஒரே விதமான நோக்கங்களைக் கொண்டிருந்த உழைப்பாளி, நடுத்தர வகுப்புகளை நல்ல முறையில் இணைத்துப் பயன்படுத்தியது. ஆறுண்டுகளாகத் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் பின்னர், அவர்கள் வன்மையாக எதிர்த்த நிலக்கிழார் வகுப்பின்மேல் பெற்ற வெற்றி கூலியூதியம் பெறும் மக்களைச் சமுதாயத்திலிருந்து அரசியல் முறையாக விலக்கி விடாமல் காத்தது. இது ஓரளவு உயர்குடி மக்களையும், நடுத்தர வகுப்பாரையும் இணைத்து நின்ற மெல்போர்ன், பால்மர்ஸ்டரின் விக்குக் கட்சி கூலி யூதியம் பெறும் மக்களையும் நடுத்தர வகுப்பாரையும் இணைத்து நின்ற கிளாஸ்டனின் முற்போக்குக் கட்சியாக மாறுதலடைய படிப்படியாக வழி வகுத்தது.

சமூகப் பிரிவுகளிலும் கட்சிகளிலும் இருந்த சிக்கலான அமைப்புகளாலும், உட்பிரிவுகளாலும் இரட்டைக் கூட்டுறவுகளாலும் பின்னிப் பிணையப்பட்டு இருகட்சி முறை இன்னும் பாராளுமன்றத்தில் செயல்பட்டு வந்தது. மக்கள் உரிமைச் சாஸன இயக்கமும் ராபர்ட் ஓவனின் 'மிக்குயர் தேசியத் தொழிற்சங்கமும்' (Grand National Trade Union) சிறந்திருந்த காலத்தில் (1838) அச்சுறுத்திய வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதில் விக்டோரியா காலம் வெற்றி பெற்றது[1]. (1833) முழுவதும் கிராமிய மயமாக இருந்த மாவட்டங்களுக்கு வெளியே வாழ்க்கை நிலைகளில் நிரந்தரமாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் வகுப்புப் போர் எந்த வடிவிலாவது நிகழ்ந்தே இருந்திருக்கும். சமுதாயத்தின் உய்வு மக்களில் பல பிரிவினர்களிடம் காணப்பட்ட நல்லெண்ணத்தாலும் முயற்சிகளாலும் மட்டுமல்ல, வணிகத்துறையின் முன்னேற்றத்தாலும் 1840ஆம் ஆண்டுக்கு மேல் காணப்பட்ட செல்வ நிலை உயர்வாலும் ஏற்பட்டதாகும். விக்டோரியா அரசியார் ஆட்சியின் இடைக்காலத்தில் பிரிட்டன் உலக உற்பத்தியின் நிலைக்களமாக விளங்கியது. உணவுப் பொருள்களுக்

[1] ராபர்ட் ஓவன் கூலி ஊதியம் பெறுவோரை அரசியல் போராட்டங்களிலிருந்து நீக்கித் தீவிரப் புரட்சியற்ற பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் சோஷியலிசத்தில் ஈடுபடுத்த விரும்பினார். ஜனநாயக முறையில் வாக்குரிமையைப்பற்றி அவர் என்றும் அக்கறைப்படவில்லை. அவரே ஒரு வல்லாட்சி மனபோங்குள்ள பணிமுதல்வராக இருந்து, தொழிலாளர்களின் வாழ்வை அவர்களின் நலங்கருதி அமைத்தவர். ஆனால் பென்தாமைப்போல் சமுதாயத்தை மேலிருந்து திருத்தி அமைக்க முடியாதென்பதைச் சூழ்நிலைகள் மூலம் அறிந்து உணரும்படியாயிற்று.

கும், கச்சாப் பொருள்களுக்கும் பதிலாக நிலக்கரியையும், செய் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு உலகத்தின் பல நாடுகள் பிரிட்டனை நம்பி இருந்தன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நடுத்தர வகுப்பு மக்கள் முழுத் தடையில்லா வாணிபக் கொள்கையில் பேரார்வம் கொண்டிருந்தனர். நிலாக்கிழார் வகுப்பின் தலைமையை ஓரளவு நன்றியோடு நடுத்தர வகுப்பினர் ஏற்றுக்கொண்டபோதிலும், வாணிபத்தைப் பொறுத்த வரையிலும் அவர்கள் நிலக்கிழார்களை எதிர்த்து உறுதியாக நின்றனர். கொள்கைகளைப்பற்றிய உரிமைகளைத் தர வேண்டுமென்ற நிபந்தனையின்மேல் நகரமாந்தர் நிலப்பிரபுக்களின் தலைமையை ஏற்று நடப்பது பண்டை இங்கிலாந்தின் வழக்கம். 1832 ஆம் ஆண்டுச் சீர்திருத்த மசோதாவின்படி வாக்குரிமை பெற்ற பத்துப் பவுன் வாடகை வீட்டார்களும் கூட நிலப்பிரபுக்களையே தங்கள் பிரதிநிதிகளாகக் கொண்டிருந்தனர். 1867-ல் இரண்டாம் சீர்திருத்த மசோதா வரும் வரை நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும் காப்டன், பிரைடின் நிலையிலுள்ளவர்களும் பொதுமக்கள் சபையில் இடம் பெற்றிருந்ததை, அவர்களைச் சுற்றி இருந்த டோரி விக்குக் கட்சி நிலப்பிரபுக்களில் சிலர் இதை ஒரு விநோதமாகச் சகித்துக்கொண்டனர். மற்றும் பலர் அதனை அவமதிப்பாகக் கருதி வெறுப்புக் காட்டினர். ஏனெனில் அக்காலத்தில் பணம்படைத்த நடுத்தர வகுப்பினருக்கும் பழைய நிலப் பிரபுக்களுக்குமிடையில் வேறுபாடுகள் இன்னும் இருந்தன. பொதுச் சமத்துவம் ஏற்பட வழியான 'பொதுக்கல்வி (Public School Education) முறையைப்' பெற்று அவர்கள் இன்னும் சமுதாயத்தின் எந்தவொரு நிலையிலும் இணையவில்லை. சில சமயங்களில் சமய வழிபாட்டு முறைகளிலும் வேறுபாடுகள் இருந்தன. அக்காலத்தில் இத்தகைய வேறுபாடுகள் ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் இணங்காதார் தடை செய்யப்பட்டது போன்ற சில சமூக உண்மைகளுக்குச் சான்று பகர்ந்தன. மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் ஒன்று பண்பாடு, பண்டை இலக்கியங்களையும் மற்றது விவிலியத்தை (The Bible) யும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒன்று விளையாட்டுகளிலும், அரசாங்கத்திலும் நிலவும் உண்மையிலும் ஆர்வம் கொண்டது. மற்றதோ வணிகக் கணக்குப் பேரேடுகளைக் கட்டிக்கொண்டு, தற்கால வணிகரைப்போல் பொழுதுபோக்குகளிலும் 'வார இறுதி' (Week-ends) ஓய்வுகளிலும் ஆர்வம் காட்டாதிருந்தது.

1832 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் மேல் வகுப்பு மக்கள் தம்முடன் சேராது ஒதுங்குவதையும், அவர்களுக்கு வேண்டிய வரையே ஆதரிப்பதையும் நடுத்தர வகுப்பார் சகித்துக்கொண்டு வந்தார்கள். ஆனால் தானியத்தடையில்லாவாணிபப் பிரச்சினையில் இரு வகுப்பாரும் ஒன்று சேர்ந்து வாக்குரிமை பெறாத மக்கள் சக்தியைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டிருந்தனர். பாராளு மன்றச் கான்சர்வேடிவ் கட்சி தானியச் சட்ட ரத்தை எதிர்த்து நின்றது. விக்குக்கட்சியோ இந்தச்சிக்கலில் பிரிவுபட்டுக் கிடந்தது. பீல் தமது பேர் பெற்ற அமைச்சரவையின் தொடக்கத்தில், (1842–1845) வருமான வரியை மீண்டு விதித்து, அதன் உதவியால் பல இறக்குமதி வரிகளைக் குறைத்ததால் நாட்டின் வாணிகம் வளர்ந்தது. ஆனால் வெளிநாட்டுத் தானியங்களின் மேல் விதிக்கப் பட்டிருந்த வரிகளை நீக்க அவரால் முடியவில்லை. தானியப் பிரச்சினை தான் தலைசிறந்து விளங்கிற்று. நாட்டுப்புறஅயர்லாந்தில் ஓக்கானலின் கத்தோலிக்கச் சங்கம் எவ்வளவு வன்மை பெற்றிருந்ததோ அந்த அளவுக்குத் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் தொழில் மயமான இங்கிலாந்தில் வலிமை பெற்று விளங்கியது. 1829–ல் அயர்லாந்துக்குப் பணிந்த பீல் 1846–ல் தானியச் சட்ட எதிர்ப்புக்கும் பணிந்தார். ஆளப்படுவோரின் விருப்பப்படியே அரசாங்கம் இயங்க வெண்டுமென்ற நல்லெண் ணமும், பாராளுமன்றத்தில் தானியச் சட்டங்களின் பொரு ளாதார விளைவுகளைப் பற்றிக் காப்டன் நிகழ்த்திய உரைகளும், 1845–1846-ல் அயர்லாந்தில் ஏற்பட்ட உருளைக்கிழங்குப் பஞ்சமும் பீலின் முடிவைத் தூண்டின. தானியச் சட்டங்களை ரத்தாக்கி இராவிட்டால், அயர்லாந்து மக்கள் ஆயிரக் கணக்கில் செத்து மடிந்திருப்பார்கள். பிரிட்டனில் வெளிநாட்டுத் தானியங்கள் மேல் விதிக்கப்படும் வரியை ஒருதரம் நிறுத்தி வைத்தால், பெரும் புரட்சியின்றி மீளவும் அவைகளை விதிக்க முடியாது. உடனடி யாகத் தானியச் சட்டத்தை முற்றிலும் ரத்து செய்தது பிரிட்டன் ஐக்கியச் சட்டத்தின் (Act of Union) எதிர்பாராத விளைவு.[1]

தானியச் சட்ட ரத்து முதலாம், இரண்டாம் சீர்திருத்த மசோதாக்களின் இடைக்காலத்தில் நடந்த மிக முக்கியமான அரசியல் நிகழ்ச்சி என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதன் முதலில் அது கான்சர்வேடிவ் கட்சியை முறியடித்து ஏறத்தாழ

[1] வெல்லிங்டன் தமக்கேயுரிய பாணியில் பீலின் அரசியல் தடு மாற்றத்தை ஆதரித்தார். அவர் பீலின் கொள்கைகளை ஒப்புக்கொண்ட தால் அல்ல. ஆனால் பீலின் அமைச்சுத் திறமையால் அவருக்குள்ள நம்பிக்கையாலேதான் ஆதரவு தந்தார். 'கெட்டுப்போன உருளைக்கிழங்கு கள் பீலைக் கடுமையாகப் பயமுறுத்திவிட்டன' என்று அவர் இறுதியாகக் குறிப்பிட்டார்.

இருபது ஆண்டுகள் விக்குகளிடம் அதிகாரம் சென்றது. அவர்களுக்கு ஆலோசனை கூறவும், வாக்கு பலத்தை அதிகரிக்கவும், சில வேளைகளில் பீலின் சீடர்களான அபர்டீன், கார்டுவெல், கிரஹாம், நிதித்துறைத் திறமை பெற்ற கிளாஸ்டன் போன்றவர்களும் விக்குகளுடன் சேர்ந்து கொண்டனர்.

பீலுக்கு விரோதமாகக் கான்சர்வேடிவ் தனி உறுப்பினர்கள் கிளர்ச்சி செய்வார்களென்று பொதுவாக எதிர்பார்க்கப்படவில்லை (1846). டிஸ்ரேலி பதவியிலிருந்த காலத்தில் பகைவராகிய பீலைத்தாக்கி மொழிந்த எதிர்ப்பு முழக்கங்கள் பாராளுமன்றத்தின் விரும்பத்தகாத அம்சங்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டின. தீப்பட்டால் வெடி மருந்து வெடிக்காமல் இருக்குமா? தானியச் சட்டங்களைப் பொருளாதாரத் திட்டங்கள் என்ற கோணத்தில் டிஸ்ரேலி நோக்கியதாகத் தெரியவில்லை. சீக்கிரமே அவர் 'காப்பியல் முறையை' (Protection) 'இறந்து பட்ட இழிவு' எனப் புறக்கணித்துப் பேசினர். ஆனல், முற்காலத்தில் பாலிங்புரோக்கைப் (Bolingbroke) போல, டிஸ்ரேலியும் நாட்டுப்புறக் கட்சியிலிருந்த கனவான்களுடன் பதவி முறையான தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களை மகிழ்விக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. நாட்டுப் பார்வையாளர் போல ஆங்கில நிறுவனங்களை டிஸ்ரேலி கூர்ந்து கவனித்த போது, இங்கிலாந்தின் வரலாற்று முக்கியம் பெற்ற பாராளுமன்றச் சபைகளெல்லாம் அவரைக் கவர்ந்தன. ஆனல் எதிர்க்கட்சியாக இருந்த விக்குகளின் தானியச் சட்டத்தை ரத்து செய்ததால் பீல் 'இங்கிலாந்தின் கனவான்களை' துன்புறுத்தியதோடு காட்டியும் கொடுத்து விட்டார். இதைப் பற்றித் தங்கள் உணர்ச்சிகளை அவர்கள் வெளியிட முடியாதிருந்த நிலையில், டிஸ்ரேலி இக்கனவான்களின் தலைவராகித் தனக்கே முட்டுக்கட்டையாக இருந்த பீலை எதிர்க்கத் தொடங்கினர். பீலை வீழ்த்துவதில், டிஸ்ரேலி பெற்ற வெற்றி இன்னும் இருபது ஆண்டுகளுக்கு விக்குகளை அதிகாரம் பெற முடியாமல் செய்ததோடு கட்சியின் பின்னிலையிலிருந்த டிஸ்ரேலியையே ஸ்டான்லிக்குப்பின் கட்சித் தலைவராகப் பதவியேற்கும் நிலைக்குக் கொண்டு வந்தது. அன்று மக்களின் செல்வாக்கைப் பெற்றுப் புகழின் உச்ச நிலையில் இருந்த பீலும், அவர் கட்சியும் எவ்வாறு மீள முடியாத வகையில் திடீரெனத் தலைகீழாகக் கவிழ்ந்தனரோ அவ்விதமே இருபத்தோர் ஆண்டுகளின் பின் (1867) தன் கட்சிக்கும் வீழ்வதற்காக டிஸ்ரேலி பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

பேரறிவாற்றலுக்குச் சில தனி உரிமைகள் உண்டு. அதற்காக யாரும் முறைப்பட முடியாது. ஏனெனில் பேரறிஞர் மட்டும்தான்

ஆபத்து மிகுந்த போர் நிகழ்ச்சிகளையும், புரட்சி விவரங்களையும் போன்ற பாராளுமன்ற நடிவடிக்கைகளைச் சமகால அரசியல் ஆர்வமுள்ளவர்களுக்கும் வரலாற்று மாணவர்களுக்கும் கவர்ச்சியானதாக ஆக்க முடியும். பால்மர்ஸ்டன் டிஸ்ரேலி, கிளாஸ்டன் போன்றவர்கள் தத்தமது சொந்த வழியில் ஜனநாயகப்பண்பின் கருத்துகளைக் கவர்ந்து, பாராளுமன்ற அரசாங்கம் வெற்றி பெற்று வளரத் தமது தனி ஆர்வங்களைக் காட்டும்படியாகவே தோன்றினார்கள் போலும். இத்தனையார்வம் இல்லாத காரணத்தால் பல நாடுகளில் பாராளுமன்ற நிறுவனங்கள் நீரில்லாச் செடிகளைப்போல் நலிந்து மடிந்தன.

தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தின் வெற்றி நடுத்தரவகுப்பார் நிலப்பிரபுக்களின் மேலும், தொழில் நலன்கள் விவசாய நலன்களுக்கு மேலும் பெற்ற குறிப்பிடத்தக்க முதல் வெற்றி. ஆனால் விவசாய நலன்கள் கருதியோரிடையே ஒன்றுபட்டகருத்துக்கள் இருக்கவில்லை. சிறு துண்டு நிலங்களுக்கு உரிமை கொண்டோ அல்லது அவற்றில் குடியேறியோ இருந்த குடியானவர்கள் அதிக அளவில் இருந்திருப்பார்களானால் பெரிய குடியானவர்களும், நிலக்கிழார்களும் இந்தப்போராட்டத்திலே தனித்து நின்றிருக்கமாட்டார்கள். நிலமில்லா விவசாயத் தொழிலாளரின் குறைகளைப் பற்றி அரசியல் அறிஞர்கள் அதிகமாக அக்கறைப் படவில்லை. அப்படியே சில வேளைகளில் அவர்களின் கருத்துகளை அரசியல்வாதிகள் தேடியபோது மலிவான உணவுக் கொள்கையை அவை முழுவதும் சார்ந்து இருந்தன.

பெரிய குடியானவர்களும், நிலக்கிழார்களும் தானியச் சட்டரத்து விவசாய நலன்களை அழித்துவிடவில்லையென்பதைச் சீக்கிரமே கண்டனர். ஆஸ்திரேலியாவிலும், காலிபோர்னியாவிலும், (California) புதிய பொன் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பணத்தின் மதிப்பு குறைந்தபோதுங் கூட, வெளிநாட்டு இறக்குமதிகள் தானிய விலை உயர்வைத் தடுத்தன. தானிய விலைகள் இன்னும் ஒரு தலைமுறை அதே நிலையில் இருந்தன. நாடுசெழித்தபோது மக்களின் ரொட்டி உணவுப் பழக்கமும் அதிகரித்தது. விக்டோரியா அரசி ஆட்சியின் இடைக் காலத்தில் இருந்தது போல் இங்கிலாந்தில் எக்காலத்திலும் கிராமிய வீடுகளும், பண்ணைகளும் அவ்வளவு செல்வமாகவும், மக்கள் தொகை சிறந்தும் உல்லாசமாகவும் இருந்ததில்லை. இப்பொற்காலத்தில்தான் ட்ரொலோப்பின் (Trollope) நவீனங்களும், ஜான்லீச்சின் (John Leech) ஓவியங்களும் சிறப்பு பெற்றன. நகரங்களுக்கும் நாட்டுப்புறங்களுக்கும் இடையே நிலவிய கசப்பு உணர்ச்சிகளின் முக்கிய

காரணங்களை 'நாட்டின் பெரும் சமூகப் பிரிவுகள்' மறந்துவிட்ட தால் அடுத்த முப்பது ஆண்டுகளில் இங்கிலாந்தின் சமூகநிலைமை யாரும் கண்டு பொறாமைப்படக்கூடிய அளவு முன்னேறிவிட்டது. கண்டங்களுக்குக் குறுக்கே சென்ற ரயில் வழிகளாலும் (Trans-Continental Railways) நீராவிக் கப்பல் போக்குவரத்தாலும், அமெரிக்காவிலிருந்து உணவுப் பொருள்கள் பெருமளவில் இறக் குமதி செய்யப்பட்டதால், டிஸ்ரேலியின் அமைச்சரவை ஆட்சி யின் போது இங்கிலாந்தின் தானிய உற்பத்தி மிகக் கடுமையா கப் பாதிக்கப்பட்டது. அனைத்துலகிலும் அமைக்கப்பட்டிருந்த ஆங்கில வாணிபம் எல்லாப்பகுதிகளிலிருந்தும் உணவை இறக்கு மதி செய்தது. இன்று நாட்டில் நிலவும் விவசாய நிலைமை அப் போதுதான் வளரத் தொடங்கியது.

1846ஆம் ஆண்டு தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் பெற்ற வெற்றியானது, புதிய அரசியல் கல்வியும் பிரசார முறைகளும் கண்ட வெற்றியாகும். இவையாவும் ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் வழிகள். ஆனால் இம்முறைகளெல்லாம் நாடு செழித்து, சமூக அமைதி நிலவிய நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறிது காலம் செயல்படவில்லை யென்றாலும், 1867ஆம் ஆண்டிலும் 1884 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட சீர்திருத்த மசோதாக்களின் விளைவாக எண்ணற்ற மக்கள் வாக்குரிமை பெற்ற போது இரு கட்சிகளின் பொதுவுடமைகளாகிவிட்டன.

நிலக்கிழார்களுக்கும், ஆலை முதலாளிகளுக்குமிடையே தானி யச் சட்டங்களின் விளைவாகக் கடும் பூசல்கள் எழுந்தன. அவர் கள் ஒவ்வொருவரும் மற்றவரால் துன்புறுத்தப்பட்ட மக்களின் குறைகளுக்காகப் போராடத் தொடங்கினர். கிராமத் தொழிலா ளியின் குறைந்த கூலியும், இரங்கத்தக்க வாழ்க்கை வசதிகளும் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்க மேடைகளில் எடுத்துச்சொல்லப் பட்டன. ஆலைத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் எதிர்த்தரப்பார் சார்பில் வாதங்களாக வழங்கப்பட்டன. இப்படி யாக வாக்குரிமை பெறாதவர்களின் குறைகள் விளம்பரம் பண்ண பட்டுச் சில சமயங்களில் நிவாரணமும் பெற்றன. நிலக்கிழாருக் கும் ஆலை முதலாளிக்கும் இடையே இருந்த பரஸ்பர மோதல் களின் விளைவாகச் சாப்ட்ஸ்பெரியின் சுரங்கச்சட்டமும் (Shaftesbury's Mines Act) (1842), புகழ் பெற்ற பத்து மணி மசோதாவும் (Ten Hours Bill) (1847) நிறைவேற்றப்பட்டன.[1] விவசாயத்

[1] இம் மசோதாவினால் தொழில்சாலைகளில் உழைத்த இளம் பெண் களும் சிறுவர்களும தினமும் பத்துமணிக்குமேல் வேலை செய்யக்கூடா தெனவாயிற்று. ஆனால் உண்மையில் ஆலைகளில் வேலைஏற்பாடுகள்காரண

தொழிலாளர்களுக்காக அதிக அளவில் ஒன்றும் செய்யப்பட (1842-1847) வில்லை. ஏனெனில் அவர்கள் தொழில் சங்கங்கள் அமைக்கப்பட்டு தொழிற்சாலைகளில் ஒன்றுகூடிய ஆலைத் தொழிலாளர்களைப் போலல்லாமல் நாட்டில் பல பகுதிகளிலும் பரவலாகச் சிதறிக்கிடந்தார்கள். இதனால் அவர்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளைப் பற்றி அச்சம் அதிகமாக இருந்ததோடு அவர்களுக்கு உதவுவதும் சிரமமாக இருந்தது.

தானியச் சட்டப் பிரச்சினை முடிவுற்ற காலை, விக்டோரியா ஆட்சியின் இடைக்காலத்தில் ஓங்கி நின்ற வாணிபத் தொழில் முன்னேற்றத்தின்கீழ் சமூகச் சிக்கல்களும், வறுமையில் வாடிய கீழ்த்தர மக்களின்புரட்சியும் சிறந்துநின்றன. உணர்ச்சிப்பெருக்குகள் தளர்த்தப்பட்டு நின்றதை அக்கால அரசியல் காட்டியது. 1846 முதல் 1866 வரை பீலைப் பின்பற்றிய விக்குகளின் ஆட்சி பெருமதிப்பிற்குரிய லார்டு பால்மர்ஸ்டன் தலைமையில் சிறந்தோங்கி, அமைதியாக நடந்துகொண்டிருந்தது. இடர்ப்பாடுகள் அதிகமில்லாத அக்காலத்திற்கு அவருடைய சாதனைகள் மிகப் பொருத்தமுள்ளவைகளாக விளங்கின. வெளி நாட்டிலோ, உள் நாட்டிலோ எந்தச்சிக்கலைப் பற்றியும் அச்சம் தரக்கூடிய சூழ்நிலை சிறிதும் இல்லை. ருசியாவுடன் போர் மூண்டாலும் அதனால் இங்கிலாந்துக்குத் தொல்லை அதிகம் இருக்கவில்லை.

கிளாஸ்டன் பழைய டோரிக் கொள்கைகளை விட்டுவிட்டு, நீண்ட நாட்களாகத் தீவிர முற்போக்கு வாதியாக மாறிக்கொண்டிருந்தார். இந்நிலையில் அவர், அரசியல் அறிஞன் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியானது உறுதியான நிதி நிலையைத் தந்து, தான் அனுபவத்தில் கண்டபடி பொதுப்பணத்தைக் கவனமாகவும் நாணயமாகவும்செலவிடும் நல்ல கருவூல மரபுகளைஏற்படுத்துவதுதான் என்பதை உணர்ந்தார். நிரந்தர சிவில் பணியின் பல துறைகளில் ஒழுங்கமைப்புகளும், மரபொழுக்கங்களும் வளர்ந்து வந்த சிறப்பான காலம் அது. இவை அடுத்த ஆட்சியில் வைட்ஹால் (Whitehall) அரசாங்கத் தலைமை அலுவலகத்தில்

மாக வயது வந்த ஆண்களின் வேலை நேரமும் இதன் விளைவாகக் குறைக்கப்பட்டது. இந்த மசோதாவைத்தான் பிரைட் (Bright) எதிர்த்தார். குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தொழிற்சாலைச் சட்டங்களை அவர் எதிர்க்கவில்லை. பத்துமணி மசோதா விக்குகளையும், கான்சர் வேடிவ்களையும் பிளவுபடுத்தியது. 1833-ல் விக்கு அரசாங்கம் கொண்டு வந்த மசோதாதான் பதிமூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளித்து ஆலைக்கண்காணிப்பாளர் மூலம் அதைச் செயல்படுத்தியது. இதைப்பற்றிய முழு விவரங்களுக்கு ஹட்சின்ஸூம் (Hutchins) ஹாரிசன்னும் (Harrison) எழுதிய 'History of Factory Legislation' ஐயும் ஹாமண்டு (Hammond) எழுதிய 'Shaftesbury' யையும் படிக்கவும்.

இருந்த பல பதவிகளின் ஆட்சிப் பொறுப்பைத் தாங்கும் வகையில் பயிற்சி பெற்று வந்தன. அதே நேரத்தில் சிவில்பணி அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல் தரகுகளை விடுத்து, தேர்தல்களை நடத்தச் செயலாய்வு செய்து கொண்டிருந்தனர். மாதர்களின் திறமைகளைக் கண்டுபிடிப்பதில் தேர்வுகள் பயனுடைய முறை என்ற கருத்து ஆக்ஸ்போர்டு,கேம்பிட்ரிஜ் பல்கலைக்கழகங்களிலிருந்து பிறந்தது. அங்கே நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து தேர்வுகள் வழக்கிலிருந்து வந்தன. பால்மர்ஸ்டன் பொதுப்பணி பற்றி மன்னர் பேராட்சி (Regency) வகுத்திரு முறைகளில் ஊறிக் கிடந்ததால் அரசாங்கமே ஆள்பொறுக்குகின்ற முறையை முற்றிலும் மாற்றி, தேர்வுக் குழுவின் பொறுப்பில் விட்டு விடுவதை வன்மையாக எதிர்த்தார். ஆனால் புதுக்காலத்தின் பண்போ தனிச்சலுகைகளையும் உயர் குடியானவர்களின் திறமையற்ற தன்மைகளையும் விரும்பவில்லை. பால்மர்ஸ்டன் இறந்ததும் இந்தப் பிரச்சினையில் அதிக அக்கறைகொண்டிருந்த கிளாஸ்டன் அரசாங்கப் பணிக்கான சகல துறைகளிலும் பகிரங்கப் போட்டித் தேர்வு முறையை ஏற்படுத்தினர் (1870).

வருங்கால நோக்குடைய ஒரு தலைமுறை விக்டோரியா ஆட்சி இடைக்காலத்தின் வளமான ஆண்டுகளைப் பயன்படுத்திப் பின்னர் வரவிருந்த வளங்குறைந்த ஆண்டுகளுக்கான ஏற்பாடுகளைச் சமூகச்சட்டங்கள்மூலமும்தொடக்க, நடுத்தரக்கல்விகளுக்கு ஒரு தேசியத் திட்டத்தை தருவதனாலும் செய்திருக்கவேண்டும் (1847–1865). பொதுச் சுகாதாரத்துறையில், ஒரு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் பொதுப்படையாகக் குறைகளுக்கு நிவாரணம் கோரும் குரலொலி நாட்டில் குறைந்திருந்த தென்றாலும், எல்லாக்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் நாடுகண்ட வளத்திற்காக நன்றிகாட்டி வாளாவிருந்தினர். நாட்டின் செழிப்பினால் மூடி மறைத்துக் கொள்ளப்பட்ட உணர்ச்சிகளும் கசப்பான உண்மைகளும் திரும்பவும் பாராளுமன்றத்தின் கண்களில் படாது என்று அவர்கள் இறுமாந்து இருந்தனர்.

கல்வியைப் பொறுத்தவரையில் அதில் அக்கறைகாட்டிய இளவரசர் ஆல்பர்ட்டை (Prince Albert) ஒரு ஜெர்மனியர் என்றும், பொதுக்கல்விக் கோரிக்கையை ஒருபற்று வெறியென்றும், அது இங்கிலாந்தைப் போல உலக மேம்பாடும் பண்பாடும் இல்லாத மத்திய ஐரோப்பிய நாட்டில் செயலூக்கமுள்ள மக்களுக்குத் தேவைதான் என்றும் கருதினர். எனினும் கல்விப் பிரச்சினையில் தலையிடுவது அரசியல் தவறின் உச்ச நிலையாகும்.

ஏனெனில் அக்காலத்தில் மதச் சபைகள் இணங்காதார்களின் எதிர்ப்பைத் தூண்டாமல் எவ்விதக் கல்விச் சீர்திருத்தமும் செய் திருக்க முடியாது. விக்குகளும் வால்போலின் கொள்கைப்படி பிரபுக்கள் சபையின் வாயில் கட்டுண்டு தூங்கிக் கிடந்த சமய நிறுவனங்களாகிய கொடிய நாயைத் தூங்க விட்டுவிடுவதே விவேகமென்று கருதினர். பீலைப் பின் சென்ற கான்சர்வேடிவ் களுடன் கூட்டுச் சேர்ந்திருந்த விக்குகள் இணங்காதாரின் குறை பாடுகளான கட்டாயக் கோவில் வரிகளுக்கும் பல்கலைக் கழகங் களின் அனுமதித் தடைக்கும் நிவாரணம் தர முடியவில்லை. வாழ்க்கை வசதிகளும், வளமும் பெருகிக் கிடந்த அக்காலத்தில் குறைகளைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பதே அரிது. எனினும் பிரைட் (Bright) மட்டும் தனியே கிடந்து, குரைத்துக் கொண்டிருக்கும் நாய்போலக் குரலெழுப்பிக் கொண்டிருந்தார். அவருடைய தனிக் குரல் ஒருநாள் பலத்த கிளர்ச்சிக் குரலாக மாறவும் முடியும்.

உள்நாட்டின் சூழ்நிலைகள் இவ்வாறு இருக்க இக்கால அர சியல் அரங்கின் முக்கிய ஆர்வம் வெளிநாட்டு விவகாரங்களைச் சார்ந்து நின்றது. இத்துறையில் பால்மர்ஸ்டன் ஒளி பெற்றிலங் கவே பிறந்திருந்தார். எவரும் மறுக்கமுடியாத அளவுக்கு அவர் ஒளிவிட்டு மிளிர்ந்தார். ஆனல் அவர் இவ்வாறு மின்னுவதற்குக் காரணமாயிருந்த பொன்னின் கதையோ அன்றும் என்றும் சிக்கல் நிறைந்த ஒன்று.

பீலைப் போலவே பால்மர்ஸ்டனும் தீபகற்பப் போர்க்காலத் தில் டோரி அமைச்சராகப் பொது வாழ்வைத் தொடங்கி, பின் னர் கானிங்கின் சீடராகி, வலிமைபெற்ற தன் முதுமையின் போது கானிங்கைப் பின்சென்ற டோரியும் உயர்குடிவிக்கும் சேர்ந்த ஒரு கலப்புக்கட்சிக் கொள்கை கொண்டிருந்தார். வெளி நாட்டு வல்லரசுகளுக்கு எதிராகக் கானிங்கையும் விக்குகளையும் பின்பற்றிப் பிரிட்டிஷ் பொதுமக்களின் உணர்ச்சிகளை எடுத் துரைத்தார். சமயத்திலும், மதச்சபையிலும் தலையிடாத மனப் பான்மையினுலும் அரசவையின் (Court) செல்வாக்கை எதிர்ப்பதி லும் விக்கு உயர் குடிப்பண்பு பெற்று விளங்கினர். உள்நாட்டு அரசியலில் ஜனநாயகம் வளர்வதையும் சிறப்பாக வாக் குரிமையை எல்லாருக்கும் வழங்குவதையும் எதிர்த்த பால்மார்ஸ் டன், வெளிநாட்டுக் கொள்கையை ஓரளவு பொதுமக்கள் கட்டுப் படுத்துவதை வரவேற்றுர். ஏனெனில் தான் வெளிநாட்டு அமைச்சராக இருக்கும்வரையில் தன் அரசருக்கோ சக அமைச்சர்களுக்கோ அல்ல, ஆனல் பொதுமக்களுக்கே பொறுப்புள்ளவர் என்று கருதினர். கானிங்கைப்

போலத் தம் வெளி நாட்டுக் கொள்கைகளுக்கான ஆதரவை அரசவைக்கும், அமைச்சரவைக்கும் எதிராக நடுத்தர வகுப்பாரிடமிருந்தே கோரினார். அவ்வாறுஅவர் செய்ததற்குச் சரியான காராணங்களைப் பால்மர்ஸ்டன் காட்டியது போல் கானிங்கால் காட்டமுடியவில்லை.

பால்மர்ஸ்டனின் புகழ் நாட்டில் மிகுந்திருந்தது; மக்கள் சபையில் ஓரளவுதான் பரவி இருந்தது; அமைச்சரவையிலும் ஏறத்தாழ இருந்தது; ஆனால் அரசவையிலோ ஒன்றுமே இல்லை. மக்களிடையே பால்மர்ஸ்டன் பெரு மதிப்புப் பெறக்காரணம், கனிவான முறையில் மக்கள் அவரை கிழபாம் (Old Pam) என்று அழைக்கக் காரணம், அவரிடம் விளங்கிய பெருந்தன்மையே. இரண்டாவதாக அவருடைய கொள்கைகளின் இயல்பு. அதில் இருவிதக் கவர்ச்சி காணப்பட்டது. ஆஸ்திரியா, ருசியா, நேப்பில்ஸ், ரோம் போன்றநாடுகளில் விளங்கிய வல்லரசுகளுக்கு எதிராக முற்போக்குக் கட்சியினர்கள் கொண்டிருந்த வெறுப் புணர்ச்சியோடு பிரிட்டன் உரிமைகளை விட்டுக் கொடுக்காத தன்மையையும் கலந்தார். பின்னதைப் பிற்காலத் தலைமுறைகள் போலி 'நாட்டுப்பற்று' (Jingoism) என்று அழைத்திருப்பார்கள். பால்மர்ஸ்டன் உணர்ச்சிபொங்கக் கூறுவது போல்,'ஒருபிரிட்டிஷ் குடிமகன் உண்மையில் ரோமானியக் குடிமகனே' (Civis Romanus). அவன் ஏதென்ஸ் நகரில் பணத்தைக் கொள்ளையடிக்கும் மால்டா யூதனாக இருந்தாலும், பிரிட்டன் கடற்படையின் பாதுகாப்பு அவனுக்கும் உண்டு. 1848ஆம் ஆண்டின் விடுதலை இயக்கம் ஐரோப்பாவில் வீழ்ச்சி அடைந்த பின், ஹங்கேரி, இத்தாலி போன்ற இடங்களில் ஆஸ்திரிய, ரஷ்யக் கொடுங்கோலாட்சிக்குப் பலியானவர்களுக்கும், இதே அமைதியான முறையில் பரிவு காட்டினார். எனவே அரசியாரையும் ஆல்பர்ட் இளவரசரையும் எதிர்த்து, பிரிட்டனின் சார்பில் பால்மர்ஸ்டன் கைக்கொண்ட போக்கு பயனற்றதும், இழிவானதும் அல்ல. ஏனெனில் உலக வல்லரசுகளின் மத்தியில் அரசியலமைப்பு உரிமையில் நலம் விரும்பும் ஒருவராவது இன்னும் இருக்கிறார் என்பதை இது உணர்த்தியது.

அரச சபைக்கும் பால்மர்ஸ்டனுக்குமிடையே எழுந்த பூசல்கள், அவருக்குக் குன்றாத வீரவாழ்க்கையின் மகிழ்ச்சியாகவும் அரசியாருக்குப் பெருந்தொல்லையாகவும் இருந்தன. நான்காம் ஜார்ஜ் பேராட்சியாளாராகவும் அரசராகவும்இருந்த காலத்தில் அரசசபைஇருந்த நிலை இன்று விக்டோரியா அரசியாரின் ஆதரவில் தலைகீழாக மாறிக் கிடந்தது. அரசருக்குப் பதிலாக ஜார்ஜ்

ஆட்சிசெய்த போது நடந்தவற்றைப் பால்மர்ஸ்டன்நினைவு படுத்திக்கொள்ள விரும்பினர். ஆனல் பேராட்சியாளரைப்பற்றி அவர் அக்கறைப்படவில்லை. அந்தக் காலத்தில் உரிமையற்ற மக்களுக்கு முன் மாதிரியாக இருப்பதற்காக வணிகர்களுக்கோ மற்றவர்களுக்கோ அரசர்களும் பிரபுக்களும் அமைச்சர்களும் நன்றி பாராட்ட வேண்டுமென்று அக்காலத்தில் யாரும் எதிர்பார்க்கவில்லை. அரசியலிலும் இதே முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நடந்துகொண்டு வந்தன.

மூன்றும் ஜார்ஜ் அரசரும், நான்காம் ஜார்ஜ் அரசரும் சீர்திருத்தங்களை எதிர்ப்பதில் உயர்டோரிக்கட்சிக்கு நிகராகக் கருதப்பட்டனர். ஆனல் விக்டோரியா அரசியார் தமது இளமையில் ஆலோசகரான லார்டு மெல்போர்ன் (Lord Melbourne) கற்பித்தபடி பிரிட்டிஷ் அரசரின் வலிமை அமைச்சர்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதிலோ, அன்றிப் பொதுமக்களின் விருப்பங்களை எதிர்ப்பதனலோ, வெற்றி பெருது என்ற பாடத்தை என்றும் மறக்கவில்லை. அக்காலத்தில் அரசியார் விக்குகளுக்கு ஒரே வஞ்சனையாக ஆதரவு தந்தார்களென்பது, உண்மையென்றுலும் பீலை நன்ருக அறிந்து கொண்டபின், அவரின் திறமைகளுக்காக பீலை மதித்தார். இளவரசர் ஆல்பர்ட்டின் தூண்டுதலின் பேரில் வெளிநாட்டு அரச வமிசங்கள் மட்டில், சிறப்பாக ஜெர்மனி நாட்டின் மீது—அவர்கள் கொண்டிருக்க வேண்டிய தனிப்பட்ட அன்பு வற்புறுத்தப்பட்டது. ஆனல் உள்நாட்டு விவகாரங்களில் அவர்கள் காட்டிய கட்சிச்சார்பற்ற முற்போக்கு மனப்பான்மை வளர்ந்தது. இத்தகைய பண்பு அரசியாரின் மாணவக்கணவரால் (Student Consort) பக்குவப்படுத்தப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் பொதுமக்கள் கற்பனையிலும் புதிய பேரரசு அமைப்பிலும் ஆங்கில முடியரசு வகித்த இடத்தைத் தற்சமயம் அது பெறவில்லை. ஆனல் அண்மைக்கால ஆட்சிகளின் தீய மரபொழுக்கங்களிலிருந்து அரசராட்சி விடுவிக்கப்பட்டிருந்தது. அரசியாக ஆண்ட தம் நீண்ட வாழ்வில் விக்டோரியா தம் அமைச்சர்களின் நடவடிக்கைகளை நுணுக்கமாகக் கவனிப்பது வழக்கம். கருத்து வேறுபாடுள்ள இடங்களை அமைச்சர்களுக்குச் சுட்டிக்காட்டித் திருத்தங்களைச் செய்யவும் தூண்டினர்கள். ஆனல் தம் கருத்துக்களை அறிந்த பின்னரும் அமைச்சர்கள் ஒருமனப்பட்டு நின்ருல் பொதுக் கொள்கைகளை மாற்றவோ, திருத்தவோ என்றும் முயலவில்லை. மேலும் அவர்களுடைய எதிர்க்கட்சியினிடமும், சிறப்பாகப்

பிரபுக்கள் சபையிலும் அடிக்கடி தம் செல்வாக்கைப் பயன் படுத்தி இரு சபைகளுக்குள் நேரவிருந்த மோதல்களைப் பல முக்கியமான சந்தர்ப்பங்களில் தடுத்தும் வந்தார்கள். அரசியார் ஆட்சியின் பிற்பகுதியில் கிளாஸ்டன் தலைமையில் பேரார்வ முள்ள முற்போக்கு வாதிகள் புத்துயிர் பெற்றிருந்தபோது இத்தகைய நிகழ்ச்சிகளைப் பெரிதும் காணலாம் (1869–1884)

விக்டோரியா அரசியார் ஆட்சியின் இடைக்காலத்தின் இருப தாண்டு அமைதியான அரசியல் போக்கும் வளமிகுந்த செல்வ நிலையும் கிரிமியாப் போரினால் தடைபட்டன (1854–1856). வாட் டர்லூ நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டதால், பிரிட்டனின் புதுத் தலைமுறைகள் எளிதாகப் போருணர்ச்சி பெற்றனர். நவீன பத்திரிகைகள், சிறப்பாகப் பால்மர்ஸ்டனின் செல்வாக்கில் இருந்த விளம்பரப் பகுதி குறிப்பிட்ட செய்திகளைத்தாங்கி, போரு ணர்ச்சியையும் ருசியாவுக்கு எதிராக வெறுப்பையும் தூண்டிவிட் டது. ருசியாவைப் பகைவனைத் தெரிந்தெடுத்தது ஒருதலை முடி வாகத் தோன்றக்கூடும். ஆனால் ருசிய வல்லரசைப்பற்றிய அச்சம் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் வளர்ந்து வந்தது. ருசியா சாரின் மூலமாக சக்தி-சம நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தலாம் என்று கருதியது. ருசியாவின் அண்டை நாடுகளான ஆஸ்திரியா வும் பிரஷ்யாவும் அல்ல. ஆனால் பிரான்ஸும் இங்கிலாந்தும் சாரை எதிர்த்து, அதன்மூலம் 'ஜெர்மனியின் விடுதலை' போன்ற பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாமென்று நினைத்தன. இதன் கார ணம் ஓரளவு அரசியல் தொடர்புடையது. ஆஸ்திரியாவும், பிரஷ் யாவும், ருசியாவும் சமீபத்தில் 1848ஆம் ஆண்டுக் கிளர்ச்சிகளை அடக்கி வெற்றி கண்டிருந்த பழைய புனிதக் கூட்டுக் கொள்கைக் காக ஒன்று சேர்ந்து நின்றன. ஆனால் விக்டோரியாவின் பிரிட்ட னும் மூன்றும் நெப்போலியன் (Napoleon III) பிரான்ஸும் தனித் தனியே மாறுபட்ட வழிகளில் முற்போக்கான சில நோக்கங்களைக் கொண்டிருந்தன. போலந்தைத் துன்புறுத்தியதும் பிற்போக்கு வாதியான சார் நிக்கோலாஸின் (Czar Nicholas) உதவியைக் கொண்டு 1849-ல் ஆஸ்திரியா நாடு ஹங்கேரியை(Hungary) வீழ்த் தியதும் இங்கிலாந்தின் முற்போக்கு உணர்ச்சிகளை இழிவுபடுத் தியது.

ஆனால்பால்மர்ஸ்டனும் ரஸ்ஸலும் ரஷ்யாவுடன்போர்தொடுக் கக் காரணமாயிருந்த வாய்ப்பு, துருக்கியின் பாதுகாப்பைப் பற் றியதாகும். இங்கிலாந்து 1853–ஆம் ஆண்டின் 'வியன்னகுறிப்பின் படி' (Vienna Note) பிரேரேபித்த உடன்பாட்டு நிபந்தனைகளை ருசியா ஒப்புக்கொண்டதும் துருக்கி மறுத்துவிட்டதும் உண்மை.

இவ்வாறு அரசியல் விவேகமிலெறி வெளியிடப்பட்ட நிபந்தனைகளைப் பொதுமக்கள் சபையில் கண்டித்தபோது அமைச்சர்கள் அவற்றிற்குப் போதுமான விளக்கம் தரமுடியவில்லை. ஆனால் போர்தொடுக்க வேண்டுமென மக்கள் உற்சாகத்துடன் துடித்ததே இவற்றிற்குச் சரியான பதில். பால்கன் தீபகற்பத்தில் (Balkan) உரிமை இழந்து நின்ற நாடுகளின் நிலைமைகளைப்பற்றியோ, அல்லது அவைகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றியோ, அக்காலப் பிரிட்டன் மக்களுக்கு அதிகமாக ஒன்றும் ஊகிக்க முடியவில்லை. எனவே கானிங், கிரீஸின் உரிமையை நிலைநாட்டி இருந்தது போல்வே, ருசியாவும் பால்கனில் சுதந்திர பல்கேரியாவையும் (Bulgaria) சர்வியாவையும் (Servia) நிறுவிய போது ருசியாவின் முன்னேற்றத்தை இங்கிலாந்து தடைசெய்ய முடியவில்லை. ருசியாவின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தடுக்க பழைய துருக்கிய முறையே (Turkish system) சிறந்தது எனக் கொள்ளப்பட்டது.

பால்கனுக்கு வெளியே ஐரோப்பாவின் முக்கிய எதிர்ப்புச் சக்தியாக இருந்தவர் ஸார் நிக்கோலாஸ் என்பது. உண்மையே. கிரிமியாப் போருக்கு மக்கள் காட்டிய உற்சாகமானது, அக்காலத்திய சூழ்நிலைகளினால் உருவாக்கப்பட்ட முற்போக்கு வாதமும், போலி நாட்டுப் பற்றும், இணைந்த ஒரு கலப்பு உணர்ச்சியாகும். பால்மர்ஸ்டன் இதன் உயர்வடிவமாகத் திகழ்ந்தார். இந்தப்போர் ஒரு விடுதலைப்போராகக் கருதப்படவில்லை. ஏனெனில் ஆஸ்திரியாவும் ஆங்கிலோபிரெஞ்சுகூட்டில்சேர அழைக்கப்பட்டது. ஆஸ்திரியா மறுத்தபோதுதான் கவுரின் (Cavour) சிறு நாடாகிய பீட்மாண்டு (Piedmont) அளிக்க முன்வந்த உதவி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆஸ்திரியாவுக்குப் பதில் பீட்மாண்ட்டைத் தெரிந்து கொண்டது பின்னர் இத்தாலியின் விடுதலையை விரைவுபடுத்தியது. ஆனால் போரின் தொடக்ககாலத் திட்டம் இதுவன்று.

கிரிமியாப் போரின் நன்மையான விளைவுகளில் ஒன்று பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் மூன்றும் நெப்போலியனுக்கும் இடையே ஏற்பட்ட நட்புறவாகும். ஆனால் அக்காலை பிரான்ஸ் திரும்பவும் போர் வழியில் செல்லும் போக்கைக்கொண்டிருக்க இங்கிலாந்தின் மேம்பட்ட உணர்ச்சிகளோ நெப்போலிய ஆதிக்கத்தின் தொடக்க நிலையை எதிர்க்கத் தயாராகிக் கொண்டிருந்தன. பிரான்ஸின் அரியணையைச் சூழ்ச்சித்திறத்தால் அடைந்திருந்த வியத்தகு நெப்போலியன் தன் மாமனின் வாழ்க்கையை படித்தது வீண்போகவில்லை. கிழக்கு ஐரோப்பிய வல்லரசுகளையும் இங்கிலாந்தையும் பகைத்துக்கொள்வது பிரெஞ்சுப் பேரரசுக்


குப் பெரிய இடராக முடியும் என்பது அவருக்கு நன்கு தெரியும். எனவே அவர் பிரிட்டனின் நட்புறவை வெகு ஆவலாக விரும்பினார். பால்மர்ஸ்டனும் அவரை முழுவதும் நம்பினார். ஆனால் பிரிட்டன் மக்கள் ஐயுற்றார்கள். எனவே ருசிய எதிர்ப்புக் கூட்டுத் தற்காலிகமாகவாவது பிரெஞ்சுப் போரைத் தடுக்க உதவியது.

கிரிமியாப்போர் ஆங்கில இராணுவப்பயிற்சியின் சிறப்பையும் மேலிடத்தின் திறமையின்மையையும் படை அமைப்பின் போதா நிலையையும் அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையையும், உணவு தளவாடங்கள், மருத்துவ உதவியின் பற்றாக் குறையையும் வெளி படுத்தியது. ஆங்கிலக் கப்பற்படை தங்கியிருந்த பாலக்லாவா (Balaclava) துறைமுகத்திலிருந்து ஆறு மைல் தூரத்தில் இருந்த படைவீரர்கள் போதியஉணவுப் பொருள்கள் இல்லாமல் பட்டினியால் இறந்தனர். வீணாகச் செத்துமடிந்து கொண்டிருந்த திறமையான வீரர்களுக்குப் பதில் அனுப்பப்பட்ட பயிற்சியற்ற புதுப் படைகள் ரெடான் (Redan) முற்றுகையில் தோற்று (1855) ஆல்மாவிலும் (Alma) இன்கர்மானிலும் (Inkerman) பிரிட்டனின் படைகள் முந்திய ஆண்டில் பெற்றிருந்த வெற்றிகளின் பெருமையை ஐரோப்பாவின் முன் இழந்து நின்றன (செப்டெம்பர், நவம்பர், 1854).

அக்கால இங்கிலாந்தின் தொழில் வணிகத் திறமைக்கும், இராணுவஅமைப்பின் குறைகளுக்கும் பெரியவேறுபாடுகள் இருந்தன. குதிரை வீரர் படைத் துறையிலும் (Horse Guards) போர் பணிமன்றத்திலும்(War Office)இருந்த முட்டுக்கட்டை மனப்பான்மையாலும் படையைச் சீர்திருத்த வேண்டுமெனப் பொதுமக்கள் விரும்பாத இக்கேடுகள் விளைந்தன. சிதைந்த பரோக்கள்,நகராட்சிக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள், மதச் சபைகள், சிவில்பணித் துறை ஆகியவையாவும் பல திறப்பட்ட வகைகளில் குற்றங்கள் நீக்கப்பட வேண்டுமென்றும், மாற்றங்களை ஆக்கவேண்டுமென்றும் உணர்ந்தன. ஆனால் வாட்டர்லூ யுத்தத்தின் பின்னர் நாட்டில் நிலவிய அமைதிகாரணமாக போர்ப்பணிமன்றத்தின் செலவுகள் அதிகப்படாத வரையில் இராணுவத்தின் நிலைமையைப்பற்றி யாரும் அக்கறைப்படவில்லை. திடீரென யுத்த வெறியால் உந்தப்பட்ட ஆங்கிலேயன் தன்னிடம் பெரு வீரர்படை இருப்பதாக நினைவுபடுத்திக்கொண்டான் போலும். பழைய தீப கற்பப் போரில் கண்ட வெற்றிகளைப் பெறலாமென்று மனப்பால் குடித்துக் கொண்டு, ருசியாவுக்கு எதிராக இவ்வீரர்களை அனுப்பியும் வைத்தான். ஆனால் படை வீரர்களின் ஊக்கத்தையும் பழங்காலத்துப் பிரவுண் பெஸ் (Brown Bess) வகைத் துப்பாக்கியையும் தவிர

வெல்லிங்டன்காலஇராணுவத்தில் எஞ்சியதுவேறெதுவும்இல்லை. அக்காலத்தில் தளபதிகளுக்கும் படைத்தலைமைப்பணிமன்றத்திற்கும் எதிராகப் பெருங் கூக்குரல்கள் எழுப்பப்பட்டு வந்தன. எனினும் போர் முடிந்ததும் படையைச் சார்ந்த காரியங்களைப் பற்றிய பழைய அக்கறையின்மை மீண்டும் நிலவியது. ஆகவே கிளாஸ்டன் அமைச்சரவையில் கார்டுவெல் (Cardwell) படைத் தலைமைப் பணிமன்ற பொறுப்பை ஏற்கும்வரை இன்னும் பன்னிரு ஆண்டுகளுக்குப் படைச் சீர்திருத்தம் ஒத்திவைக்கப்பட்டது (1868).

கிரிமியாப் போரினல் நாட்டு மக்களிடையே ஏற்பட்ட பரபரப்பு, அரசியல் துறையில் அவ்வளவு குறிப்பிடத்தக்க அளவில் காணப்படவில்லை. அரசியல் கொள்கைகளைக் காப்ட



படம் 1

கிரிமியா

னும் பிரைட்டும் குறைகூறிக் கொண்டிருந்த போது, சிறிது எதிர்ப்புகள் தோன்றின. ஆனல் தீவிர வாதிகளில் பலர் போரை வன்மையாக ஆதரித்தனர். பொதுவாக யுத்த நடவடிக்கைகள் திறமையின்றி நடத்தப்பட்டதால் உயர்குடியாட்சி அரசாங்கம் தன் நற்பெயரை இழந்தது என்று சொல்வதே சரி. 'டைம்ஸ்' (The Times) பத்திரிகையின் ஆசிரியராகிய வில்லியம் ரஸ்ஸல் (William Russell) யுத்தநிருபர் தொழிலை (War Correspondent) தோற்றுவித்து என்றுமில்லாத வகையில் போர்த்தள

பதிகளைப் பொதுமக்கள் நேரடியாகக் குறை கூறும் வண்ணம் செய்தார். இவர் டைம்ஸ் பத்திரிகைக்குக் கொடுத்த விபரங்களினால் செபாஸ்டபூல் (Sebastopol) முற்றுகையின் போது ஆங்கிலப்படைகள் இருந்த திடுக்கிடச் செய்யும் நிலைமையைப்பற்றிய முக்கியமான இராணுவ இரசியங்களை எதிரி அறிந்து கொள்ள முடிந்தது. அதே நேரத்தில் இந்த விளம்பரத்தினால் காலந் தாழ்த்தாமல் வேண்டிய நடிவடிக்கைகளைச் செய்யப் பொது மக்களும் பாராளுமன்றமும் தட்டியெழுப்பப்பட்டன. இந்த நெருக்கடியில் போரையே விரும்பாத அபர்டீனுக்குப் பதில் பால்மர்ஸ்டன் தலைமை அமைச்சராக வந்தது பொருத்த முடையதே.

ஆனால் கிரிமியாப் போரில் பலியான 25,000[1] வீரர்களினால் வருங்காலத்தில் அநேக உயிர்கள் காப்பாற்றப்பட்டன. ஏனெனில் போரின் உண்மையான வீரர் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் தான் (Florence Nightnigale). சிவில் இராணுவத்துறைகளில் சிறப்புப் பெற்ற நவீன செவிலிப்பணியும் (Nursing) தற்கால சமுதாயத்தின் கல்வியறிவும் பயிற்சியும் பெற்ற மாதர்கள் ஆற்றக் கூடிய பணியும் அவர்களின் நிலையைப்பற்றிய புதியதோர் கருத்தும்தான் போரின் சிறந்த விளைவுகள் என்பதில் ஐயமில்லை. இதைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நைட்டிங்கேலினால் ஆதரிக்கப்பட்ட ஜான் ஸ்டூவர்ட் மில்லின் (John Stuart Mill) மாதர் வாக்குரிமை இயக்கமும், பெண்கள் கல்லூரிகளின் தோற்றமும், பெண்பள்ளிகளின் முன்னேற்றங்களும் ஏற்பட்டன. இவ்வாறு இதுவரை புறக்கணிக்கப்பட்ட உயர்தரக்கல்வியின் பயனை அரசியாரின் குடிமக்களின் பாதிப்பேர் பெறுவதற்கு வழி செய்யப்பட்டது. செபாஸ்டபூலின் முன் உள்ள பனியுறைந்த இரத்தம் படிந்த அகழிகளும், ஸ்குட்டேரி மருத்துவ மனைகளின் இரங்கத்தக்க நிலையும் போர்வீரர்களின் பண்பையும் உரிமைகளையும் பற்றி நாட்டு மக்கள் நேர்மையான முறையில் அறிந்து கொள்ளும்படி செய்தன. இதுமட்டுமின்றிக் குளிரில் வாட்டும் மேட்டு நிலங்களில் போராடிய வீரர்களின் துன்பங்களுக்கும் போர்க்களங்களுக்கும் சம்பந்தமற்றவை எனத் தோன்றக்கூடிய புதுக்கருத்துகளையும் இவை தெளிவாக்கின.

[1] நைட்டிங்கேல் அம்மையார் கூற்றுப்படி இவர்கள் 16000 பேர் திறமையற்ற நிர்வாகத்தின் காரணமாக உயிரிழந்தார். ஸ்குட்டேரி மருத்துவ மனையில் அவர்கள் பணியாற்றியபோது நாற்பத்திரண்டு விழுக்காடாக இருந்தச்சிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு இருபத்திரண்டு பேர் என்ற விகித்திற்குக் குறைத்தார்கள்.

விக்டோரியா அரசி காலத்தில் பிரிட்டனின் வெளி நாட்டுக் கொள்கை பெரிய வெற்றி பெறக் காரணமாக இருந்தது இத்தாலியப் பிரச்சினை. யுத்தமோ பேரபாயமோ இன்றிப் பொதுமக்களின் பகிரங்க ஆதரவைப்பெற்ற அரசியல் திறமை பிரிட்டனைப் பிற வல்லரசுகளின் விருப்பங்களுக்கு மாருக மத்திய தரைக்கடல் பகுதியில் ஐரோப்பாவின் பேரவைகளிலும் இடம்பெறக் கூடிய ஒரு சுதந்திர நாடாக விளங்கச் செய்தது. ஐரோப்பிய அரசியலில் புரையோடியிருந்ததோர் புண்ணை இந்த நிகழ்ச்சி அகற்றி, முதல் உலகப் போர் வரையில் நிரந்தரமான ஆங்கில-இத்தாலிய நல்லுறவை வளர்த்தது.

1848ஆம் ஆண்டில் பால்மர்ஸ்டன் வெளிநாட்டு அமைச்சராக இருந்தார். அதுகாலை இத்தாலியைப் பற்றிய பிரிட்டிஷ் பொது மக்கள் கருத்துகள் கட்சி அடிப்படையில் வேறுபட்டு இருந்தன. இத்தாலியின் சுயாட்சியை ஆதரித்த பால்மர்ஸ்டன் ஆஸ்திரியா இத்தாலியின் லொம்பார்டி (Lombardy) சம வெளிகளை விட்டு அகன்று விட்டால், எத்தகைய பயன்கள் ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டி, அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை நடத்தலாமென்று நம்பினர். ஆனல் பெரும் புரட்சிகள் நடந்து கொண்டிருந்த குறிப்பிட்ட அந்த ஆண்டில் இத்தாலிய சிக்கலைத் தீர்க்கப் பால்மர்ஸ்டனுக்கு எந்த வழியும் தென்படவில்லை. பிரிட்டிஷ் அமைச்சர் என்ற வகையில் தன் முதற் கடமை பொதுவான ஒரு ஐரோப்பிய யுத்தத்தைத் தடுப்பதாகும் என்பதை உணர்ந்தார். இதனல்குறிப்பாக பிரான்ஸ் ஆஸ்திரியாவைத் தாக்கி, அதன் மூலம் யுத்த வெறி கொள்ளக்கூடும். எனினும் பிரான்ஸுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே போரில்லாமல் இத்தாலி விடுதலை பெறுவதில் எந்த முன்னேற்றமும் காணமுடியாதென்பது தெளிவு.

1859ஆம் ஆண்டு கோடையில் இத்தாலியச் சிக்கல் மீண்டும் வலுப்பெற்றபோது பால்மர்ஸ்டன் அமைத்த இரண்டாம் அமைச்சரவை (1859-1865) இன்னும் ஆறு ஆண்டுகள், அதாவது அவர் இறக்கும் வரை நீடித்தது. ரஸ்ஸல் அவருடைய வெளிநாட்டு அமைச்சர். கருவூலத் தலைவராக இருந்த கிளாஸ்டன் அமைச்சரவையில் மிகச் செல்வாக்கு பெற்றிருந்தவர்களுள் மூன்ருவதாக இருந்தார். அநேக காரியங்களில் இம்மூவருக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இத்தாலியப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒருமைப்பாடு இருந்தது. மூவரில் ஒவ்வொருவரும் அமெரிக்கா ஜெர்மனி அண்மைக் கிழக்கு நாடுகளைப் பற்றி அதிகம் தெரிந்திராவிட்டாலும் இத்தாலியைப் பற்றிய சிறப்பான

அறிவு பெற்றிருந்தனர். இதன் விளைவாக 1859-60-ல் நிகழ்ந்த இத்தாலிய நெருக்கடியில் இவர்கள் மூவரும் நற்பயன்கள் ஏற்படும் வகையில் வெகு திறமையுடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டார்கள்.

1848-ல் இத்தாலியச் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியாத நிலையில் இருந்த பிரிட்டன், இப்போது அப்புதிரை விடுவிக்கும் வழி கண்டிருந்தது. லார்டு டெர்பியின் பழைய அமைச்சரவை எவ்வளவோ முயற்சிகள் செய்தும் மூன்றும் நெப்போலியன் பீட்மாண்டுத் தலைவர் கவூரின் கூட்டுறவோடு ஆஸ்திரியாமீது போர் தொடுத்தார் (1859). இத்தாலித் தீபகற்பத்தில் ஆஸ்திரியாவின் செல்வாக்கைநீக்கிவிட்டு அதற்குப்பதில் பிரெஞ்சுச் செல்வாக்கை இத்தாலிய மக்களின் மனம் புண்படாத மறைமுக வழிகளில் புகுத்த வேண்டுமென்பது அவருடைய நோக்கம். ஏனெனில் இத்தாலிய மக்களிடம் அவர் உண்மையான அன்புகொண்டிருந்தார். சுதந்திர இத்தாலி அரசாங்கத்தையல்ல, ஆனால் தம்மையே சார்ந்திருக்கும் பல இத்தாலி நாடுகளை நிறுவ வேண்டுமென்பது அவர் விருப்பம். கவூரோ நெப்போலியனின் உதவியால் ஆஸ்திரியரை விரட்டிவிட்டு இத்தாலிய சுதந்திர நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டு விடுதலையை நிறைவேற்ற எண்ணங்கொண்டார். இவர்கள் இருவரில் கவூர் அதிகத் திறமையுள்ளவராகதால் இறுதியில் அவரே வென்றூர். ஆனல் பிரிட்டனின் உதவியின்றி அவருக்கு வெற்றி கிடைத்திருக்காது.

கிரிமியப் போரின் பின்னர் ருசியா பலமிழந்து, ஆஸ்திரியாவுடன் அதிக நட்புப் பாராட்டாமலுமிருந்தபோதிலும் ருசியாவும் பிரஷ்யாவும் இத்தாலியின் விடுதலையை எதிர்த்து, ஆஸ்திரியாவுக்கு ஆதரவு கொடுத்தன. இந்தச் சிக்கலான நிலையில் இங்கிலாந்து பிரான்ஸைவிட இத்தாலியின் உரிமையையும் ஒற்றுமையையும் முற்றிலும் பரிவுடன் ஆதரித்து, நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கவூரையும் தூண்டியது. கரிபால்டி (Garibaldi) சிசிலி நாட்டு (Sicily) விடுதலையைப் பெற்றபின் பிற்போக்குக் கொள்கையுள்ள நேப்பில்ஸ் நாடும் (Neapolitan Kingdom) மத்திய இத்தாலியில் போப்பின் ஆட்சிக்குட்பட்டிருந்த அரசாங்கமும் நெப்போலியனின் ஆதரவோடு வீழ்ந்தன (1860). ஆஸ்திரியா தன் ஆதிக்கத்தை மறுபடியும் இத்தாலியில் நிறுவும் முயற்சி தோற்கவே, பீட்மாண்ட் அரசின் தலைமையில் ஆங்கில அமைச்சர்களின் அரசியல் விவேகத்தையும் பெற்று, பிரிட்டன் பொதுமக்களின்

உற்சாகமான ஆதரவையும் பெற்று, ஒற்றுமையை நோக்கிப் பெருக்கெடுத்தோடிய இத்தாலிய விடுதலை இயக்க வெள்ளத்தை நெப்போலியன் தடுக்க முடியவில்லை.

ரஸ்ஸல், பால்மர்ஸ்டன் ஆட்சியை முடிவுறச் செய்தது ஐரோப்பிய விவகாரங்களில் ஏற்பட்ட மகிழ்ச்சியற்ற ஓர் இடை நிகழ்ச்சியாகும். ஸ்லீஸ்வீக் – ஹோல்ஸ்டையின் (Schleswig-Holstein) மாநிலங்களைப் பற்றி டென்மார்க்குக்கும் அதன் ஜெர்மானிய அண்டை நாட்டவர்களுக்கும் ஒரு தகராறு இருந்துவந்தது. பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிருந்துதான் ஆங்கில மக்களின் பெரும் பகுதியினர் பிரிட்டனில் வந்து குடியேறி இருந்தனர்.[1] இந்தச் சிக்கலின் தகுதிகளைப்பற்றி ஒருமைப்பாடு இருக்கவில்லை. எனினும் இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பாருடனும் நட்புறவு கொண்ட எந்த நடுநிலைநாடும் சமரசம் செய்து வைக்க வழி இருந்தது. பால்மர்ஸ்டனும் ரஸ்ஸலும் 'சிறு நாடான டென்மார்க்கை'த் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் அளவுக்குச் சென்றார்கள். பிஸ்மார்க்கு (Bismark) அவர்களின் பகட்டுரைகளை அம்பலப்படுத்தியபோது, அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிற்று. 'டென்மார்க்கினுக்கு மட்டுமன்று, அதன் நண்பர் நாடுகளுக்கும்எதிரிகள் பதில்சொல்லவேண்டியதிருக்கும்'என்று பால்-மர்ஸ்டன் அறிக்கையிட்டார். ஆனால் உண்மையில் போர் மூண்டபோது டென்மார்க்கு தனியே விடப்பட்டது. ஏனெனில் பிரஷ்யா, ஆஸ்திரியா அறிந்து ஜெர்மனி (Germany)யின் கூட்டுப்படை பலத்தை இங்கிலாந்தின் ஒழுங்கற்ற படைகள் எதிர்க்கும் நிலையில் இல்லை. விக்டோரியா ஆட்சியின் இடைக்காலத்தில் புகழ் பெற்ற தொண்டர்படையோ (Volunteer Movement) இதுவரை, யில் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டுமே உதவியது. பிரான்ஸும் ருசியாவும் இங்கிலாந்துக்கு உதவும் என்றும் எதிர்பார்க்க முடியவில்லை. ஏனெனில் அண்மையில் வேறு சில நெருக்கடிகளில் இங்கிலாந்தின் அரசியல் கொள்கை அவர்களைப் புண்படுத்தியிருந்தது.

எனவே பால்மர்ஸ்டனின் ஆட்சி இழிவான ஓர்எதிர்ப்போடு முடிவுற்றது. இதன் முக்கியத்துவம் என்ன என்பது மக்களுக்கு அன்று அதிகம் தெரியாது. ஏனெனில் பிரஷ்யாவின் நவீன இராணுவ முடியாட்சியின்முழுஆற்றலும் அது 1866-ல்ஆஸ்திரியாவையும், 1870-ல் பிரான்ஸையும் தோற்கடித்த பின்தான் வெளிப்

[1] இங்கிலாந்தின் வரலாறு–I, முதல் பிரிவு, இயல் 3, பக்கம் 65-க்கு மேற்பட்டவை காண்க.

பட்டது. மக்கள் ஆதரவைப் பெற்றிருந்த பால்மர்ஸ்டனின் எழுச்சியூட்டும் அரசியல் சாதனைகள் இதனோடு முடிவடைந்தன. அது மேலும் தொடர்ந்திருந்தால் மலர்ந்துகொண்டிருந்த புதுஉலகத்திற்குப் பேராபத்தாக மாறி இருக்கக்கூடும். ஏனெனில் தேசிய வெறி உணர்ச்சிகளோடும், தற்கால விஞ்ஞானத்தினாலும், ரயில் போன்ற இயந்திர சாதனைகளினாலும் பெருகியிருந்த பேராற்றல்களின் துணைகொண்டும் போர்தொடுக்கும் விதத்தை ரஷ்யர்கள் கற்றிருந்தார்கள்.

இருபெரும் தலைவர்களில் பால்மர்ஸ்டன் முதலில் இறந்தார். இது அரசியல் வரலாற்றில் பல முக்கிய விளைவுகளை உண்டாக்கியது. ரஸ்ஸல்கோமகன் முற்போக்கு விக்குக்கட்சியின் தலைவரானார் (1865). எதிலும் செய்ததை மாற்றாமல் உறுதியாய் நிற்பவர் என்று ஒருகாலத்தில் கருதப்பட்ட ரஸ்ஸல் வாக்குரிமையை மேலும் விரிவாக வழங்குவதையும், உயர்குடியாளர் விக்குப் பண்பை மாற்றி,கட்சிக்குக் குடியாட்சி முற்போக்குத் தன்மையை அளிக்க வேண்டும் என்பதையும் விரும்பினார். ஆனால் பால்மர்ஸ்டன் இருந்திருந்தால் இவ்விதத் திட்டங்களை எதிர்த்திருப்பார். இதன் விளைவாகக் குணங்களிலும் கொள்கையிலும் தமக்கு வேறுபட்ட கிளாஸ்டனின் உறவையும் முறித்துக்கொண்டிருப்பார். முதுமை காரணமாக, மாறிக்கொண்டு வந்த புதுயுகத்தில் சிறந்த பங்கெடுத்துக்கொள்ள முடியாத ரஸ்ஸல், கட்சியின் உண்மையான தலைமையை ஆற்றல் மிகுந்த கிளாஸ்டன் தாங்கும்படி அனுமதியளித்தார்.

இவ்வாறாக அரசாங்கத்தின் முக்கிய தலைவராக மாறிய கிளாஸ்டன் நகரத் தொழிலாளருக்கும் (Town Artisans), கீழ்நிலை நடுத்தர வகுப்பு மக்களுக்கும் (Lower middle-class), வாக்குரிமை வழங்கும் இயக்கத்திற்குத் தலைவராக விளங்கிய ஜான் பிரைட்டின் கூட்டுறவைப் பெற்றார் (1866). அரசியலில் தொழிலாளர் வகுப்பியக்கத்தின் பலம் இப்பத்தாண்டுகளில் நடுத்தர வகுப்புத் தீவிரவாதிகளுடன் அவர்கள் கொண்ட கூட்டுறவினால் வலுப்பெற்றது. இருவரும் வாக்குரிமை வழங்கப்படாத காரணத்தால் ஒன்று சேர்ந்தனர். நாடு கண்டிருந்த வளத்தின் காரணமாகப் பழைய மக்கள் உரிமைச் சாஸன இயக்கத்தைத் தூண்டி விட்ட வகுப்புணர்ச்சிகள் மறைந்து கொண்டு வந்தன.[1] பிரைட் இத்தகைய கூட்டு இயக்கத்தின் தலைவராகவும் மக்கள் சபையில்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III பிரிவு 6, இயல் 2, பக்கம் 46-47-க்கு மேற்பட்டவை காண்க.

அதன் பிரதிநிதியாகவும் இருந்தார். அவரும் அவரால் ஆதரிக்கப்பட்ட குறிக்கோளும் பெருமதிப்பு பெற்று வந்தன. இதற்குக் காரணம் அமெரிக்க உள்நாட்டுப் போரில் (American Civil War) வடநாடுகளை ஆதரித்த அவரது கருத்துகள் தவறில்லாமல் இருந்ததுதான். பல விக்கு கான்சர்வேடிவ் அரசியல் தலைவர்களும் பலதிறப்பட்ட வழிகளில் தென்னாடுகளுக்குச் சார்பாக இருந்தனர். உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருக்கும்போது (1861-1865) பிரிட்டனின் கருத்துகள் மக்கள் குடியாட்சியையும் உயர் குடியாட்சியையும் அல்லது பரந்த வாக்குரிமையையும் குறுகிய வாக்குரிமையையும் பற்றிக் கொண்டிருந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவகையில் பெரிதும் வேறுபட்டுக் கிடந்தன. இறுதியாக யுத்தம் அபிரகாம்லிங்கனுக்கும் (Abraham Lincoln) வடபகுதியின் ஜனநாயக வாதிகளுக்கும் வெற்றியைத் தந்தது. இங்கிலாந்தின் உள்நாட்டு நிகழ்ச்சிகளை இந்த வெற்றி எவ்வளவு பாதித்தது என்பதைத் தெளிவாக மதிப்பிட முடியாவிட்டாலும் அதன் விளைவு உண்மையில் பெரிது என்பதை மறுக்க முடியாது பல விதிகளுக்கு விலக்காக விளங்கிய கிளாஸ்டன் உள்நாட்டில் ஜனநாயகத்தை விரும்பிய போதிலும், அமெரிக்க உள்நாட்டுப் போரில் தென் நாட்டவரைத் தீவிரமாக ஆதரித்தார். பால்மர்ஸ்டனின் மரணத்துக்குப் பின்னும், அமெரிக்க உள்நாட்டுப் போரின் முடிவிலும், கிளாஸ்டன் பிரைட்டுடன் கொண்ட கூட்டு வாக்குரிமைப் பிரச்சினையை ஆங்கில அரசியலின் முன்னணிக்குக் கொண்டு வந்தது.[1]

முதல் சீர்திருத்த மசோதாவைவிட இரண்டாம் சீர்திருத்த மசோதா (Second Reform Bill) நிறைவேற்றப்பட்ட முறை பெருமளவில் வேறு பட்டது. இந்த வேறுபாடு கடந்த முப்பதாண்டுகளில் ஆளும் வகுப்பாரும், கான்சர்வேடிவ்களும் மாறுதல்களை அரசியல் வாழ்வின் இறுதியாக அல்ல. ஆனால் சாதாரணப் போக்காகப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள் என்பதை வெளிப்படுத்தியது. அன்று சர்ச்சைக்கிடமாயிருந்த டார்வினின் (Darwin) 'கூர்தல் அறக்கோட்பாடு' (Doctrines of evoution) இன்று அரசியல் உணர்ச்சிகளில் தனக்குரிய இடத்தைப் பெற்றுவிட்டதென்று சொல்லலாம்.

எனினும் ஒரு பெரும் போராட்டம் காத்திருந்தது. கிளாஸ்டன் தொழிலாளர் வகுப்பினருக்கு வாக்குரிமை வழங்கச் சிறிய

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3-ல் பிரிட்டன் -அமெரிக்க விடுதலைப் போரைப் பற்றிய விவரங்களைக் காண்க.

தொரு திட்டமே கொண்டு வந்தார். ஆனல் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்ற அடிப்படையில் பால்மர்ஸ்டனை ஆதரிக்கும் நோக்கத்தோடு தான்; அதற்கு முந்திய ஆண்டில் விக்கு முற்போக்குக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார்கள். பேச்சாற்றல் கொண்ட, ஆனல் விவேகமற்ற, ராபர்ட் லோவின் (Robert lowe)தலைமையில் 'அதுலாமின் குகை' (The cave of Adullam) என்ற மாறு பெயரால் அழைக்கப்பட்ட விக்குகளில் அதிருப்தியுள்ள ஒரு பிரிவு டிஸ்ரேலியுடன் சேர்ந்து, இந்தக் குறைந்த அளவு சீர்திருத்தத் திட்டத்தையும் முறியடிக்க முனைந்தனர். இது எதிர்ப்பாளர்களைப் பொறுத்த அளவிலுங்கூட அரசியல் விவேகமற்றது என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் கூலியூதியம் பெறும் தொழிலாளர் நடுத்தர வகுப்பினரை விட அறிவாற்றலிலும், அறநெறியிலும் தாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையில் தான் சீர்திருத்தங்களை எதிர்ப்பதாக லோ(Lowe) வெளிப்படையாகக் கூறினர். இந்த விறுவிறுப்பான கருத்தைப்பற்றியஅவருடைய எச்சரிக்கையற்றபேச்சுக்கள் தொழிலாளிமக்களின் ஆத்திரத்தைத் தூண்டவே, வாக்குரிமைப் போராட்டம் வலுப்பெறலாம் என்ற அச்சம் நிலவியது. பெருந்தொழிற்சாலை நகரங்களிலுள்ள தொழிற் சங்கங்களும், நடுத்தர வகுப்பு மக்களும் சேர்ந்து அரசியல் கூட்டங்கள் அரிதாக இருந்த அக்காலத்திலுங்கூட பிரைட் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டங்களையும் கிளர்ச்சிகளையும் ஏற்பாடு செய்தனர்.

கிளாஸ்டனின் சீர்திருத்த மசோதா தோற்றவுடன், முற்போக்கு அரசாங்கம் பதவி துறந்தது. பாராளுமன்றம் கலைக்கப் படவில்லையெனினும் கான்சர்வேடிவ்கள் பதவி ஏற்றனர். லார்டு டெர்பியின் புதிய அமைச்சரவையில் கருவூலத்தலைவராக இருந்த டிஸ்ரேலி சில வாரங்களுக்கு முன் அவருடைய எதிரியான கிளாஸ்டன் இருந்தது போல, மக்கள் சபைத்தலைவராகவும் அமைச்சரவையின் வன்மை பெற்றவராகவும் விளங்கினர். நன்மைபயக்கும் சிறு காரியங்களில் கீழ்நாட்டுக் கற்பனையுணர்வோடு முழுவதும் ஈடுபட்டு விடாமல், டிஸ்ரேலி இப்போது உண்மைகளை உள்ளவாறு உணரக்கூடிய திறமை பெற்றிருந்தார். நாட்டின் நிலையை உணர்ந்த அவர் சலுகைகள் இன்றி, சமரசம் ஏற்படாதென்பதைக் கண்டார். மேலும் டிஸ்ரேலி தொழிலாளர் மக்கள் மட்டில் லோவை விட அதிகப் பரிவு காட்டினர். கொள்கையளவில் விக்குத்தேர்வில்வேட்பாளர்களுக்காக வாக்குகளை வீணாக்கிய முதலாளிகளுக்கு எதிராக வாக்குரிமையற்றிருந்த தொழிலாளர்களை ஆதரித்துப் பேசுவார். அண்மையில்

வாக்குரிமையை 'விரிவுபடுத்தும் வாதத்தை கிளாஸ்டன் 'டாம்பேயினின் கோட்பாடு' (Doctrine of Tom Paine) என்று குறிப்பிட்டதை டிஸ்ரேலி பழித்துக் கூறியிருந்தாலும், அது டாம் பேயின் கோட்பாடோ அல்லவோ, அதனை நிறைவேற்றும் காலம் வந்து விட்டதை உணர்ந்தார்.

இதைத் தவிர வேறு எந்த நிபந்தனையிலும் டிஸ்ரேலி பாராளுமன்ற நிலையை கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனெனில் கான்சர்வேடிவ் அரசாங்கத்திற்குத் தன்னிலே பெரும்பான்மை இல்லை. மேலும் முற்போக்குக் கட்சி இவ்வாறு தவணைகளில் சீர்திருத்தங்கள் செய்து வாக்குரிமைப் பிரச்சினையைத் தள்ளிப் போடுவதை விரும்பவில்லை. பாராளுமன்றத்திற்கு வெளியே நாடு பெரும் குழப்ப நிலையில் இருந்தது. வாக்குரிமைச் சிக்கலைப் பற்றித் தீர்வு காணும்படி விக்டோரியா அரசியார் ஆலோசனை விடுத்தார்கள். 'சொற்போர் ரூபர்ட்' (The Rupert of Debate) என்றழைக்கப்பட்ட ஸ்டான்லியைப்போல் முதல் சீர்திருத்த மசோதாவை நிறைவேற்றுவதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்ட லார்டு டெர்பி, விக்குகளைத் திறமையால் வெல்லவும், சீர்திருத்த சோதனையைத் தீவிரமாகச் செயல்படுத்தவும் துணிந்தார். ஆகவே, டிஸ்ரேலி இந்தப் பிரச்சினைக்குச் சிறப்பான முடிவுகண்டு நாட்டில் அமைதி நிலைநாட்டினர். அவர் நிறைவேற்றிய திட்டமானது அதற்கு முந்திய ஆண்டில் அதுல்லாமியரும் (Adullamites) கான்சர்வேடிவ்களும் தீவிரமானது என இறுதித் திருத்தங்களுக்குப்பின் தள்ளிவிட்ட மசோதாவை விட அதி தீவிரமானதாக இருந்தது. நாட்டுப்புறத்தொகுதிகளில் வசித்த விவசாயத் தொழிலாளருக்கும் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் இன்னும் வாக்குரிமை வழங்கப்படவில்லையென்ருலும், பரோக்களில் வீடு உள்ளவர்களுக்கு வாக்குரிமை அளிப்பது உண்மையில் (Household suffrage) இரண்டாம் சீர்திருத்த மசோதாவின் முக்கிய கொள்கையாயிற்று (1867).

பின்னர் இந்தச் சீர்திருத்தத்தைப் புகழ்பெற்ற லார்டு சாலிஸ்பரி (Lord Salisbury) என்றழைக்கப்பட்ட லார்டு கிரேன் போர்ன்(Lord Garanborne) கொள்கைகளுக்கு முரணான ஏற்பாடு என்று குறை கூறிய போது, அக்கருத்தைப் பலரும் ஆதரித்தனர். இத்தகைய கருத்துகள் அரசியல் நல்லெண்ணத்தைக் காட்டின போலும். ஆனால் டிஸ்ரேலி ஒருகாலத்தில் பீலை நடத்திச் சென்ற வகையில், இந்தச் சந்தர்ப்பத்தில் டிஸ்ரேலியை நடத்தத் திறமை பெற்றவர் யாரும் இருக்கவில்லை. இவ்வாறு உள்நாட்டுப் பிளவை ஏற்படுத்தாமல். இப்பெரும் மாறுதலை

ஒப்புக்கொண்டதன் மூலம் கான்சர்வேடிவ் கட்சி மக்களாட்சி மலர்ந்து கொண்டிருந்த உலகில், தன் வருங்காலத்தை உருவாக்கி விட்டது. 1868-ல் நடந்த பொதுத் தேர்தலில் உடனடி நன்மை பெற்றவர்களில் ஒருவர் கிளாஸ்டன். மற்றது உண்மையான கான்சர்வேடிவ் யுகம் வருமுன் பலநாள் எதிர்பார்க்கப் பட்ட சீர்திருத்தங்கள் நிறைவேற்றத் திட்டங்கள் வைத்திருந்த முற்போக்குக் கட்சியுமாகும்.

இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

பீலும் கான்சர் வேடிவ்களும்—புதிய இரவலர்சட்டம்—மக்கள் உரிமைச் சாசன இயக்கம்—வகுப்புகளும் கட்சிகளும்—தானியச் சட்டங்கள் நீக்குதல்—பீலும் டிஸ்ரேலியும்—விவசாயத்தில் ஆர்வம்—ஷாப்ட்ஸ்பரி: சிவில்பணி—அரசியல் மிதப்போக்கு-பால்மர்ஸ்டன் — விக்டோரியாவும் ஆல்பர்ட்டும் — கிரிமியாப் போர் — இராணுவச் சீர்திருத்தங்கள் தேவை — ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்—இத்தாலிய நெருக்கடி—டென்மார்க் பிரச்சினை—பிரைட் கிளாஸ்டன் கூட்டு—லோ, டிஸ்ரேலி, உழைப்பாளி மக்கள்—இரண்டாவது சீர்சீருத்தச் சட்டம் நிறைவேற்றப்படல்.

மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. Queen Victoria's Letters (5 Vols.)
2. ஸ்பென்சர் வால்போல் (Spencer Walpole)
   History of England (Vols. IV—VI)
3. தர்ஸ்ஃபீல்டு (Thursfield)
   Peel
4. கிட்சன் கிளார்க் (Kitson Clark)
   Peel
5. டிஸ்ரேலி (Disraeli)
   Lord George Bentinck
6. ஸ்டிராச்சி (Strachey)
   Queen Victoria
7. பக்கிள் (Buckle)
   Disraeli (6 vols.)
8. மோர்லி (Morley)
   Gladstone (2 vols.)
   Cobden (2 vols.)

9. கூக் (Cook)
Florence Nightingale (2 vols.)

10. டிரவெலியன் (Trevelyan)
Bright

11. ஹாமண்டு (Hammond)
Shaftesbury

12. கோல் (Cole)
Robert Owen and Working Class Movement

13. ஹெலிவி (Halevey)
Histoire du Peuple Anglais (Vol. III, 1830—1841)

14. ஆர்தர் பிரையன்ட் (Arthur Bryant)
English Saga

இயல் 3

வெளிநாட்டு முன்னேற்றம், இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சி

தற்காலத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டு முன்னேற்றம்—இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசின் தன்மை—கனடாவின் வளர்ச்சி—அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் உறவு—ஆஸ்திரேலிய ஆசியா—தென் ஆப்பிரிக்கா—இந்தியா.

நெப்போலியப் போர்கள் முடிவுற்றபோது, நாம் ஏற்கெனவே கண்டதுபோல, இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசு வளரும் குழந்தையாக விளங்கியது.[1] அடுத்த நூற்றுண்டில் பெட்ரோல், மின்சாரம், நீராவி, இரும்பு முதலியவற்ருல் முன்னேறிய போக்குவரவு வசதிகளாலும், வாணிப அபிவிருத்தியாலும், வெப்பமண்டலங்களில் மருத்துவ இயலைப் பயன்படுத்திய முறைகளாலும் பேரரசு நிலப்பரப்பிலும், செல்வத்திலும், மக்கள் பெருக்கத்திலும் மேலும் வளர்ந்தது. உள்நாட்டில் நிலவிய நிலைமைகளினுல் வெளிநாடுகளுக்குக் குடிப்பெயர்ச்சியும் ஏற்பட்

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 6, பக்கம் 364-365-க்கு மேற்பட்டவை காண்க.

டது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டுகள் வரை கிரேட் பிரிட்டனில் பெருகிவந்த மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேலும் வெகு காலம் வரை வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க, 'ஏழைகள் விடுதிகளை'த் தவிர வேறு கழுவாய்கள் இல்லை. எனவே நாட்டைவிட்டு மக்கள் இடைவிடாமல் வெளியேறிக்கொண்டிருந்தார்கள்; அதுகாலை அலிகனிமலைகளுக்கு அப்பால் இருந்த சமவெளிகளில் மக்களைக் குடியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அவற்றில் பெரும்பகுதி சென்றுகொண்டிருந்தது. ஆனல் இன்னும் பெரும் பகுதி கனடாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும், தென் ஆப்பிரிக்காவுக்கும் சென்று குடியேறியது. 1830ஆம் ஆண்டுகளையொட்டி, குடியேற்றப் பணிமன்றம்(Colonial Office) குடியேற்றத்தைப் பொறுத்தவரையில் மந்தமாகவும் அறிவற்ற விதத்திலும் நடந்துகொண்டது. ஆனல் லார்டு டர்ஹாமும், கிப்பன் வேக்ஃபீல்டும் (Gibbon Wakefield) மதச்சபைகள், தனி நபர் நிறுவனங்களின் துணைகொண்டு, பிரிட்டிஷ் குடியேற்றங்களின் பிரிட்டிஷ் பற்றிடங்களை முறையான வழிகளில் ஊக்குவிக்கும் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். இதன் மூலம் டௌனிங் சாலையில் இருந்த ஆட்சி பீடமும் குடியேற்றங்களுக்கு நல்ல முறையில் நட்பும் ஆதரவும் தந்தன.

விக்டோரியா அரசியார் காலம் முடியும்வரை, கிரேட் பிரிட்டனில் உள்ள பெரும் பகுதி மக்கள் குடியானவர்களாகவே பிறந்து வளர்ந்தவர்கள். எனவே கடல்களுக்கு அப்பால் நிலங்களைப் பெறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மேலான விருப்பம் இல்லை. தாய் நாட்டிலும், குடியேற்ற உரிமை நாடுகளிலும் உள்ள ஆங்கில இனத்தவர் தாமே விரும்பித்தெரிந்துகொண்டும், பழக்கத்தாலும் கிராமிய வாழ்க்கையை விட்டுவிட்டுக் குறிப்பாக நகரங்களில் சென்று கூட்டமாகக் குடியேறி விடுவார்களோ என்ற அச்சம் அண்மைக் காலத்தில் ஏற்பட்டதொன்ருகும்.

இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசின் மற்ருெரு முக்கிய அம்சம் என்னவென்ருல், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் பெரும் பகுதிகளை வாணிகத் தொடர்புகளாலும், அரசியல் ஆட்சியின் மூலமும் பெரும் அளவில் முன்னேற்றியதாகும். ஆப்பிரிக்காவிலும், கிழக்கு மேற்கு இந்தியத் தீவுகளிலும், நடத்தப் பெற்ற அரசியல் ஆட்சியானது, வில்பர்ஃபோர்ஸ் காலம் முதலும், பிட்டும் அவருடைய கவர்னர்ஜெனரல்களும் இந்திய அரசாங்கத்தைத் திருத்தி அமைத்த நாள் முதற்கொண்டும், டௌனிங் சாலையில் நிலவிவந்த

நலம் விழையும் குறிக்கோள்களுக்கு ஏற்ற முறையில் நடந்தேறி வந்தது. மனிதகுலத்தின் பெரும்பகுதியின்மீது சிறந்த நலன்கள் பொழியப்பட்டிருக்கின்றன. ஆப்பிரிக்காவில் பழங்குடிக்குலங்களுக்குள் நடந்துவந்த போர்களும், அடிமைகளைத் தாக்கித் துன்புறுத்தும் வழக்கமும் நிறுத்தப்பட்டுவிட்டன; இந்தியாவிலும், எகிப்திலும், பிற இடங்களிலும் நவீன விஞ்ஞானத்தின் உலகியல் நலன்களும், அமைப்பு முறைகளும், நாட்டின் சாதாரணக் குடியாளவர்கள் உட்பட யாவரின் நன்மைக்காகவும் பயன்படுத்தப் பட்டன.

ஆனால் ஐரோப்பியரல்லாத சமூகங்களில் ஆளுகின்ற நிர்வாகத் துறையில் இருவிதமான இடர்ப்பாடுகள் உள்ளன. முதலாவதாக மேற்கு இந்தியத் தீவுகளிலும் நிரந்தரமாகத் தென் ஆப்பிரிக்காவிலும், அதிக அளவில் இருந்த ஐரோப்பியக் குடியானவர்களும், வணிகர்களும் சுயஆட்சியை நடைமுறையாக்கிக்கொள்ள எதிர்ப்பு உரிமைகளைக் கோரியதாகும். இரண்டாவதாகக் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் நீண்டகால அமைதிக்கும், நல்ல அரசாங்கத்திற்கும், மேற்கு நாட்டு நாகரிகத்தினுடன் கொண்ட தொடர்புகளுக்கும் பின்னர், இங்குள்ள மக்கள் சுயஆட்சியைக் கோருகின்றபோது ஏற்படக்கூடிய இன்றியமையாத விதமான தொல்லைகளாகும். மோதல்களும் முறிவுமின்றி இந்தச் சிக்கல்களை எவ்வளவு சிறப்பாக, விரைவாக, எவ்வளவு தூரத்திற்குத் தீர்க்க முடியும் என்பதே ஒருவேளை நல்ல அரசாங்கமானது, தன் நன்மைக்காகச் செய்து கொள்ளக்கூடிய மிகச் சிக்கலான பிரச்சினையாகும்.

தொழிற் புரட்சிக்குப்பின்னர் நிலவிய புதிய நிலைமைகள், பிரிட்டன் உலக வாணிபத்திற்கும், நிதிக்கும் முக்கிய சந்தையாகவும், பிறபோக்கு நாடுகளில் உற்பத்தி அரங்கமாகவும் தற்காலிகமாக அனுபவித்து வந்த நன்மைகளைச் சற்று அதிகப்படுத்தின. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாகத் தடையில்லா வாணிபம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏற்றுமதி இறக்குமதி வரிகளும், கப்பல் போக்கு வரவுச் சட்டங்களும் அழிக்கப்பட்டன. குடியேற்ற நாடுகளின் வாணிப நலன்களை, பிரிட்டனின் நலன்களுக்குக் கீழ்ப் பட்டதாகவே கருதுகின்ற பழைய வணிகக் கூட்ட முறை (Mercantile policy) மேற்கூறிய கொள்கை மாற்றத்தின் விளைவாகக் கைவிடப்பட்டது. பிரிட்டிஷ் குடியேற்ற வாணிபத்தைப் பிரிட்டனின் தனியுரிமையாகவே கருதிக் கட்டுப்படுத்துகின்ற விருப்பம் இனி அரசாங்கத்திற்கு இல்லை. எனவே வணிகக் கூட்ட முறை (Mercantile Theory) அழிக்கப்பட்டு விட்டதால்,

இன்றியமையாத முறையில் அதன் விளைவாக எழுந்த உரிமையும், சமத்துவமும் சுயஆட்சியுள்ள குடியேற்றங்கள் தங்களின் விருப்பப்படி வாணிபக்கொள்கைகளை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குவதற்கு வழி வகுத்தன. இதன்படி இவைகள் தமது உற்பத்திப் பொருள்களை இறக்குமதி ஏற்றுமதி வரிகளால், விரும்பினால் தம் தாய்நாட்டுக்கு எதிராகவும் வரிகளை விதித்துப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை பெற்றன. நமது காலத்தில் கூட இந்தக் கொள்கை இந்தியாவைப் பொறுத்த வரையிலும் கூடச் செயல்படுவதைக் காண்கின்றோம்.

பொதுவாகக் காண்கின்றபோது பிரிட்டனின் தடையற்ற வாணிபக் கொள்கையும், நமது குடியேற்ற நாடுகளுடனும், பற்றிடங்களுடனும் செய்யும் வாணிபத்தை நாட்டின் தனியுரிமையெனக் கொள்வதைக் கைவிட்டதும், பிறநாடுகளுடன் இங்கிலாந்து கொள்ளக்கூடிய பல பூசல்களின் முக்கிய காரணங்களை நீக்கி விட்டன. இத்தகைய நாடுகள், இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசில் அடங்கிய உலகத்தின் பெரியதொரு பகுதியோடு செய்துவந்த வாணிபத்தை விட்டுக் கொடுக்கத் தம்மைப் பொறுத்தவரையில் மனதார விரும்பி இருக்கமாட்டா.

கடல் கடந்த குடியேற்றங்களில் புதிதாக நிறுவப்பட்ட சுயாட்சியின் கொள்கை, இங்கிலாந்து இழந்துவிட்ட பதின்மூன்று குடியேற்றங்களில் முன்னாளில் நிலவிய அரசாங்க முறைகளின் விரிவேயாகும். இதே கொள்கையைத்தான் இரு கனடாப் பகுதிகளிலும்[1] பிட் செயலாக்கியிருந்தார். ஆனால் குடியேற்ற உரிமை நாடுகளில் பொறுப்புள்ள பாராளுமன்ற அரசாங்கத்தின் கொள்கைகளைக் காரண காரியத் தொடர்பாகவும், முழுமையாகவும் குறித்த காலத்தில் பயன்படுத்தி வெற்றி கண்ட பெருமை அறிவும் ஊக்கமும் மிகுந்த லார்ட் டர்ஹாமைச் சார்ந்ததாகும் (1838–39). உரிமையே பேரரசு. உறவுகளைப் பாதுகாக்கக் கூடிய சிறந்த வழியென டர்ஹாம் கருதியது அவருக்குச் சிறந்த பெருமையளிக்கும் சாதனையாகும். இத்தகைய உரிமையை அக்காலத்திய விக்கு, பழைமையை விரும்பும் அரசியல் வாதிகள் கருதியது போல, பிரிவினையை, விளைவிக்கும் இன்றியமையாத வழியாக டர்ஹாம் கருதவில்லை.

அந்நூற்றாண்டின் இறுதியில், ஜோசப் சேம்பர்லேன் (Joseph Chamberlain) காலத்தில் கிரேட் பிரிட்டனிலும், குடி

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 4, இயல் 5, பக்கம் 113, பிரிவு 5, இயல் 6, பக்கம் 373 காண்க.

யேற்ற உரிமை நாடுகளிலும், 'பேரரசு' (Empire) என்பதன் பொருள் முழு உணர்வோடு புரிந்து கொள்ளப்பட்டது. ஆனால் விக்டோரியா அரசியார் ஆட்சியின் பிற்பகுதியில், இந்தப் பேரரசைப் பற்றிய உணர்வை ஒரு பேரரசுக் கூட்டாட்சியின் (Imperial Federation) மூலமும், நன்கு ஐக்கியப்பட்ட அரசியல் அமைப்பின் மூலமும், வெளிக்காட்டுகின்ற நம்பிக்கைகள் பலன் தரவில்லை. அதற்குப் பதிலாக முதலில் குடியேற்றங்களாக இருந்து, பின்னர் குடியேற்ற உரிமை நாடுகளாக் (Dominions) மாறிய பகுதிகள் இப்போது தனித்தனி நாடுகளாக முன்னேறிக் கொண்டு வந்தன. எனவே இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசு, அதிகார முறையில் முடியரசினால் இணைக்கப்பட்ட ஆங்கிலம் பேசும் மக்களின் சர்வதேச சங்கமாக (League of Nations)மாறி வந்தது. இத்தகைய பேரரசு ஐக்கியத்தின் வரையறுக்கப்படாத இணைப்புகள் எவ்வளவு வன்மை பெற்றன வென்பதை உலகப் பெரும் போரின் நிகழ்ச்சிகள் காட்டின. இத்தகைய ஒரு பெரும் போராட்டத்தின் பின்னர் வெறும் ஏட்டு அரசியலமைப்பாக மட்டும் இருந்திருந்தால், இந்தப் பேரரசு ஐக்கியம் உயிர்தப்பி வாழ்ந்திருக்க முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசியல் நுண்ணறிவாளர்கள், வட அமெரிக்கக் கொள்கைகளை இரண்டு அரங்கங்களில் செயலாக்க வேண்டியதிருந்தது. அவை கனடாப் பிரச்சினையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமுள்ள தொடர்புகளுமாகும். இவ்விரு பிரச்சினைகளும் ஒன்றையொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. லார்ட் டர்ஹாம், லார்ட் எல்ஜின் (Lord Elgin) போன்றோரின் பணிகளின் பயனாக, கனடாப் பிரச்சினை, மிக விரைவில் சிறப்பான முறையில் கவனிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நமது உறவு விக்கு, கான்சர்வேடிவ் அரசியல் வாதிகளாலும், பிரிட்டிஷ் பொதுமக்களாலும், அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861–1865) வரையிலும் நன்கு உணரப்படவில்லை.

1837–ல் எளிதாக அடக்கப்பட்ட இரண்டு கிளர்ச்சிகள் கனடாவில் எழுந்தன. ஒன்று பிரெஞ்சு வாசிகள் வாழ்ந்த கீழ் மாநிலத்திலும், மற்றது ஆங்கிலம் பேசும் குடியேற்றக்காரர்கள் இருந்த வடக்கு மாநிலத்திலும் நிகழ்ந்தன.[1] பிரிட்டிஷ் தொடர்புகளைப் பொறுத்தவரையிலும் நல்லகாலமாக, இவ்விரு பிரிவினர்களும் பரஸ்பரம் பகைமை கொண்டிருந்ததால், இவர்களில் ஒரு

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 6-ல் பக்கம் 372-ல் உள்ள நிலப்படத்தைக் காண்க.

வரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேரும் விருப்பம் கொள்ள வில்லை. ஆனால் கருணையற்ற ஆட்சி முறையைப்பற்றி இரு தரப் பினரும் மனக் குறை கொண்டிருந்தார்கள். பிட் நிறுவி யிருந்த இரண்டு மாநில அவைகளும், நிர்வாகத் துறைக்கு இடர்ப்பாடு கள் விளைவிக்கலாமே தவிர அதனை நியமிக்கவோ, கட்டுப்படுத் தவோ அதிகாரம் பெற்றிருக்கவில்லை.[1] ஆனால் இவ்வித மாநில அவைகள்தான் இந்தப் பிரச்சினைக்குக் கழுவாய் என்பதையும், அல்லது படை தாங்கிய ஒரு கிளர்ச்சியின் பின்னர் இத்தகைய முறையை அபாயமின்றிப் பயன்படுத்தலாம் என்பதையும், தாய் நாட்டிலிருந்த பிரிட்டிஷ் அரசியல் நுண்ணறிவாளர்கள் நம்ப வில்லை. குடியேற்ற நாடுகளின்நிலைமைகளைப் பற்றிய அறிவு யாரிடமும் இல்லை. முதல் சீர்திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் பின்னர் நிறைவேற்றிய அரசியல் நுண்ணறிவாளர்களிடம் ஜன நாயகத்தில் நிலைத்த நம்பிக்கையும் மிக அரிதாக இருந்தது. ஆனால் நல்ல காலமாக லார்ட் மெல்போர்னின் (Lord Melbourne) விக்குக் கட்சி அரசாங்கம், தங்களின் திறமையும், கடுங் கோபக் குணமும் கொண்ட சக அமைச்சராகிய லார்ட் டர்ஹாமைக் கனடாவிற்கு அனுப்பி வைத்தனர். அமைச்சரவைத் தகுதி பெற்ற வேறு எவரும் இல்லாத வகையில் லார்ட் டர்ஹாம் பேரரசு வாதியாகவும், ஜனநாயகவாதியாகவும் விளங்கினார். அவரும் அவருடைய செயலாளராகிய சார்லஸ் புல்லரும் (Charles Buller) கனடாவிற்கு முழு சுய ஆட்சி வழங்க வேண்டியதன் அவ சியத்தை உணர்ந்தது மட்டுமல்லாமல், புகழ் பெற்ற ‘டர்ஹாம் அறிக்கை’யில் (1839) (Durham Report) அதனை வன்மையாகவும் வலியுறுத்தினார்கள்.

ஆனால் இந்தப் பிரச்சினை இங்கிலாந்தில் யாரும் உணர்ந்திருந் ததையும், டர்ஹாமே கனடாவுக்குச் சென்று நேரில் காணும் வரையிலும் அறிந்திருந்ததையும் விட அதிகச் சிக்கல் மிகுந்திருந் தது. அங்கு பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலம் பேசும் மக்களும் இருந்த இரு நாடுகள் இருப்பதை டர்ஹாம் கண்டார். இவர்கள் தமக்குள் ஒருவருக்கு ஒருவர் எதிராகவும், அரசாங்கத்துடனும் பகைமை கொண்டிருந்தார்கள். மேற்குப் பகுதியில் வந்திறங்கிய பிரிட்டிஷ்காரர்களின் பெருங் கூந்தாலும், பயிர்த் தொழில் முறைகளாலும், பொதுவாகக் கனடா முழுவதிலும் பிரெஞ்சுக் காரர்கள் சிறுபான்மையினராக ஆகிவிட்டனர். ஆனால் தங்கள் சொந்த மாநிலமான தென் கனடாவில் பிரெஞ்சுக் குடியானவர் களின் தொகை, ஆங்கிலம் பேசும் வணிகர்களின் தொகையைவிட

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 6, பக்கம் 373-க்கு மேற்பட்டவை காண்க.

அதிகமாகும். இவர்களுக்குள் இருந்த பிளவை, மத கலாச்சார வேறுபாடுகள் மேலும் விரிவாக்கின. எனவே தென் கனடாவில் அந்தத்தலைமுறைக் காலத்தில் பொறுப்பான சுயஆட்சியை நிறுவ முயற்சி செய்வது அரசாங்கத்தின் முறிவிற்கும், அங்குள்ள சமூகத்தின் இரு பிரிவினருக்கும் இடையே படை தாங்கிய போராட்டம் ஏற்படுவதற்கும் வழி வகுத்திருக்கும். இவ்விரு மாநிலங்களையும் ஒன்ருக இணைத்து, நிர்வாகத் துறைக்கு மேல் முழு அதிகாரம் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே அவையை நிறுவவும் டர்ஹாம் ஒரு துணிச்சலான ஆலோசனையைக் கூறினர். இதனல் பெரும்பான்மையினரான ஆங்கிலம் பேசும் மக்கள் கையில் அதிகாரம் இருக்க முடியும். இந்தத் திட்டம் 1840-ல் ஏற்பட்ட கனடாச் சட்டத்தின் மூலம் (Canada Act) நிறைவெய்தியது. இந்த ஏற்பாட்டைப் பிரெஞ்சுக்காரர்கள் எதிர்த்தபோதிலும், இறுதியாகப் பணிந்துவிட்டனர். இந்தப் புதிய கனடா அரசியல் அமைப்பு லார்ட் எல்ஜினின் மதி நுட்பமும், விரிநோக்கும் கொண்ட உதவியுடன், 1867–ல் ஏற்பட்ட அடுத்த கனடா பெருஞ் சிக்கல் காலம் வரைக்கும் இயங்கியது[1] (1847–1854).


ஆனல் 1867-ல் நிறுவப்பட்ட கனடா கூட்டாட்சிக்கு வழி வகுத்த சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்ருல், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், பிரிட்டனுக்கும் உள்ள உறவுகளைப்பற்றி மீண்டும் தெரிந்துகொள்வது நலம். வெளிநாட்டு அமைச்சராக இருந்த காஸில்ரீக்கு வருங்காலத் தலைமுறைகள் பெருங் கடப்பாடு உடையன. கனடாவின் எல்லையின் இருபுறத்திலும் பரஸ்பர உடன்பாட்டுடன் படைகளைக் குறைத்துக் கொள்ளும்படி அவர் செய்த ஒப்பந்தமே மிகவும் நன்றி சொல்லக் கூடிய சாதனையாகும் (1817). மேலும் பிரிட்டிஷ் பகுதியையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் இன்னும் பிரிக்கும் எல்லையாக உள்ள கிரேட் லேக்ஸ் என்ற ஏரிகளில் வைக்கப்பட்டிருந்த போர்க் கடல் படைகளை அவர் அழித்ததும் மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்ருகும். அடுத்த ஆண்டில் அதே ஊக்கத்துடன் மேற்கு முகமான எல்லையை முடிவு செய்வதற்கு உறுதி கொண்டார்.

[1] டர்ஹாமின் அறிக்கை 1840-ல் அமுலாக்கப்பட்டது. ஆனல் லார்ட் ஜான் ரஸ்ஸலின் முயற்சிகளினல் டர்ஹாமே 1839-ல் லார்ட் மெல்போர்னினல் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட வேண்டியதாயிற்று. இதன் காரணம் பிரௌகாம் (brougham) செய்த சூழ்ச்சிகளாகும். இவற்றை கான்சர்வேடிவ் பிரபுக்கள் தமக்குச் சாதகமாகப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டனர். டர்ஹாமின் சாதனைகளைப் பற்றி பிரௌஹாம் சமர்ப்பித்த கருத்துகளும், டர்ஹாம் அறிக்கையை டர்ஹாம் எழுதவில்லை என்ற அவருடைய பொய்க் கூற்றும் ('Dictionary of National Biography') என்ற அகராதியில் பொருத்தமற்ற முறையில் இடம் பெறுகின்றன. அவை என்றும் அங்கே இருக்காது என்பது என் நம்பிக்கை.

இன்னும் ஒரு தலைமுறைக்கு வாஷிங்டனிலும், டௌனிங் சாலையிலும் இருந்த அரசியல் நுண்ணறிவாளர்களின் கூட்டு முயற்சிகளை ஈடுபடுத்திய இந்த அபாயகரமான செயல், தகராறு எழுவதற்குக் காரணமான எல்லைக் கோட்டின் இரு மருங்கிலும் படைதாங்கிய வீரர்களும், பரம்பரையான இராணுவ ஏற்பாடுகளும் நிலைபெற்றிருந்திருக்குமானால், என்றும் ஒரு அமைதியான முடிவுக்கு வந்திருக்க முடியாது.

காஸில்ரீ காலத்தில் ஒப்பந்தத்தின்படி இந்த எல்லைக் கோடு லேக் ஆப் வூட்ஸ் (Lake of Woods) என்ற பகுதியிலிருந்து, 49° அக்ஷரேகை வழியாக ராக்கீஸ் மலைகளின் (Rockies) உச்சம் வரையும் நகர்த்தப்பட்டது (1818). ராக்கித் தொடருக்கும், பசிபிக் கடலுக்கும் இடையேயுள்ள நாடுகளைப் பற்றிய இறுதியான முடிவு ஒன்றும் செய்யாமல் விட்டு விடுவது என மிக விவேகத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. அக்காலத்தில் மொத்தமாக ஒரிகன் (Oregon) என்று அழைக்கப்பட்ட இப் பரந்த பிரதேசத்தில் இன்னும் இரு நாடுகளையும் சேர்ந்த வேடுவர்களும் கண்ணி வைத்து மிருகங்களைப் பிடிப்போருமே வாழ்ந்து வந்தனர். இவர்கள் வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள பசிபிக் பெருங்கடலையே நம்பி இருந்தனர். இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகளும், கிரேட் பிரிட்டனும் ஒரிகனில் இணைந்து வாழ்ந்ததால், மக்கள் தொகை குறைந்திருந்த இப்பகுதியில் அமைதி நிலவியது. ஆனால் 'கிளர்ச்சிக் குமுறல்கள் ஒலித்த நாற்பதாம் ஆண்டுகளில்' ஒரிகன் காட்டு வழியில் சூடேறியிருந்த அமெரிக்க ஜனநாயக அணியின் தொடக்கம், ராக்கி எல்லைகளுக்கு அப்பால் வெடித்துச் சிதறியது.

அமெரிக்கர்கள் விரிந்து பரவும் நிலையில் இருந்தனர். இதுவரை உலக வரலாற்றில் கண்டிராத வகையில் அவர்கள் இயற்கையை வென்றும், வெகு விரைவில் புதியதோர் கண்டத்தில் மக்களை நிரப்பிக்கொண்டும் இருந்தனர். மெக்ஸிக்கோப்போர் (Mexican War) நடந்த காலம் அது. எல்லையற்ற விதத்தில் விரிந்து பரவும் உணர்ச்சியும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிறப்பானதோர் கதியைப் பற்றியும் ஓரளவு பக்குவமற்ற உண்மையான எழுச்சியைப் பிரதிபலித்த வெற்றுரைகள் மேலோங்கியிருந்த காலமும் அதுவாகும். 1844ல் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவரின் தேர்தல்களில் ஒன்று 'ஐம்பத்திநான்கு நாற்பதைக் கொடு, அல்லது (54°-40°) போராடுவோம்' என்ற அறை கூவலின் விளைவாக வெல்லப்பட்டது. இதன் பொருள் என்னவென்றால் 54°-40° செக்டண்டு அக்ஷரேகை வரையிலும் உள்ள நிலப்பகுதிகளுக்கு


HUDSON BAY
HUDSON BAY COMPANY'S TERRITORY
(Purchased by Dominion Government 1869)
ONTARIO
L. Superior
L. Michigan
L. of the Woods
Winnipeg
Canadian Pacific Railway
LINE OF 1818 (Latitude 49°)
LOUISIANA
(Purchased from France by U.S.A. in 1803)
Latitude 42°
English Miles
0 100 200 300 400 500
Latitude 51° 40'
Rocky Mountains
"OREGON"
(Joint occupation 1818-1846)
LINE OF 1846
To U.S.A. 1846
To U.S.A. 1848 after Mexican War
BRITISH COLUMBIA
Joins Dominion 1871
CALIFORNIA
Vancouver I.
Nootka Sound 1790
Joins Dominion 1871
ALASKA

உரிமை கோருவதாகும். இக்கோரிக்கை பிரிட்டிஷ் பேரரசையே பசிபிக் கடற்கரையிலுருந்து முழுவதும் துண்டித்துவிடும். ஆனல் மேற்கு முகமாக விரிவடைந்து கொண்டு செல்வதற்குக் கனடாவுக்கும் உரிமை உண்டு. அறிவில் சிறந்து அமைதி நாடும் இங்கிலாந்தின் அமைச்சருக்குள் தலைசிறந்தவரான பீல் இப்பிரச்சினையில் உறுதியும், இணக்கமும், நேர்மையும் காட்டினர். அவர் பதவி துறந்த அதே நேரத்தில் (1846) பீல் தானியச்சட்டத்தைப் போன்றதொரு முக்கியமான சாதனையை நிறைவேற்றினர். காஸில்ரீ 49° அக்ஷரேகையையொட்டி நிர்ணயித்திருந்த எல்லையை நீடிப்பதன்மூலம் மேற்குக்கடல் வரையிலும், எல்லையை நேர்மையான முறையிலும், அமைதியாகவும் வரையறுத்தார். அட்லாண்டிக் முதல் பசிபிக் வரையிலும் உள்ள பிரிக்க முடியாத எல்லையைக் காக்க, காவல் தளங்களோ, இருதரப்பினர்களின் ஆயுதங்களோ இல்லை. ஆனல் அதனைப்பாதுகாப்பது இருபெரும் நாட்டுமக்களின் நல்லெண்ணமும், நட்புணர்ச்சியுமாகும்.

இவ்வாறு நல்லெண்ணமும், அறிவும் பெற்றிருந்த பின்னர், பண்டை நாட்களின் சமயச் சமூக வேறுபாடுகளும், போர்களும், அறியாமையும், தப்பெண்ணங்களும், மறைந்து கிரேட் பிரிட்டனும், அமெரிக்க ஐக்கியநாடுகளும் ஒருவரைஒருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்று தோன்றியது. பிரிட்டிஷ் நிறுவனங்கள் நெகிழாத முறையில் உயர்குடிப்பண்பு பெற்று விளங்குவது மாறி, ஜனநாயகத்தன்மை பெறும் மாறுதல் நிலையை அடைந்து கொண்டிருந்தன; அமெரிக்கர்களும் குறுகிய மாநில மனப்பான்மையை விட்டுக் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தாய் நாட்டுடன் கொண்டிருந்த பழங்காலச் சச்சரவுகளை மறந்து பிரிட்டனுடன் நல்ல முறையில் வாழவும் வாய்ப்பிருந்தது. பதினேழாம் நூற்றுண்டு முதல் இதுவரை நடந்திராத வகையில் மீண்டும் அமெரிக்காவில் வந்தேறிய பிரிட்டிஷ் மக்களால் இருதரப்பினரின் குடும்பங்களுக்கு இடையே தனிப்பட்ட உறவுகள் உருவாகிக் கொண்டிருந்தன. இந்த உறவுகள் தற்கால அஞ்சல் முறையினல் நன்கு நிலைபெற்றன. ஆனல் அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையே நிலவிய இத்தகைய தனிப்பட்ட உறவுகள், இங்கிலாந்தில் வாக்குரிமை இன்றி இருந்த சாதாரண மக்களிடையே தான் காணப்பட்டது அவ்வப்பேருகும். உயர் குடியாளரும், மேல் நடுத்தர வகுப்பினர்களும், அமெரிக்கர்களுடன் கலப்பு மணம் செய்து கொள்ளும் வழக்கத்தையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து கொள்ளும் வழக்கத்தையும் இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை; அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861–1865) இங்கிலாந்தின் பன்னட்டு உறவுகளில் புதிய

தோர் நெருக்கடியை உண்டாக்கிய காலத்தில், மேற்கூறிய உயர் குடி, மேல் நடுத்தர வகுப்பினர்தான் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையையும், பத்திரிகைகளையும், பாராளுமன்றத்தையும் கட்டுப்படுத்தினர்.

பால்மர்ஸ்டனும், ரஸ்ஸலும் நடத்திய அரசாங்கம் போர்க் காலத்தில் (1861–1862) சிறந்த முறையில் செயல்பட்டது. ஆல்பர்ட் இளவரசர் தன் மரணப்படுக்கையில்பயன்படுத்திய கட்டுப்பாட்டினால், நமது அமைச்சர்கள், குடியரசுத் தலைவர் லிங்கனின் (Lincoln) அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட 'டிரென்ட்' (Trent) நிகழ்ச்சியை அமைதியான வகையில் தீர்த்துக்கொள்ள முடிந்தது. அபகேடான சிறிது தயக்கத்திற்குப் பின்னர்,அடிமை வாணிபத்தை ஆதரித்த தென்னாட்டுப் பிரிவினைக்காரர்களுக்கு நன்மை பயக்கும் முறையில் மூன்றும் நெப்போலியனுடன் சேர்ந்து போராட்டத்தை முடிக்கும் நோக்கத்துடன் அதில் தலையிட மறுத்து விட்டனர். ஆனால் பிரிட்டிஷ் மேல் வகுப்பு மக்களின் ஆதரவு தென் நாடுகளின் சார்பாக இருந்தது. இவை 'பஞ்ச்' (Punch) 'டைம்ஸ்' (Times) போன்ற பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இப்பத்திரிகைகளின் மட்டில் நியூ இங்கிலாந்தின்பொது மக்கள் எண்ணம் சிறிது உணர்ச்சி வயப்பட்டதாக இருந்தது. அடிமை வாணிபத்திற்குப் பொதுவாக ஆதரவு இல்லை. ஆனால் அடிமை வாணிபம் அல்ல, ஐக்கியமே பிரச்சினை என்று அறிக்கையிட்டு, தலைவர் லிங்கன் போரைத் தொடங்கியபோது, பல ஆங்கிலேயர்களுக்கு இந்தக் கூற்றின் உண்மை விளங்கக்கூடிய அளவிற்கு அமெரிக்காவைப்பற்றி அவ்வளவு அதிகமாக ஒன்றும் தெரியாது. அமெரிக்க ஐக்கியத்தில் உறுப்பினராகத் தென் பகுதியை வலுவந்தம் பண்ண முடியுமா என்பதை ஐயுற்றதற்காக ஆங்கிலேயரைக் குறை கூற முடியாது. ஆனால் கிளர்ச்சிசெய்த தென் கூட்டுக்கழக அமைப்பிலும்கூட, எல்லா அடிமைகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக லிங்கன் அறிக்கையிட்டபோது இங்கிலாந்தின் பொதுமக்கள் எண்ணம் வடநாடுகளுக்கு ஆதரவாகத் திரும்பியது (அக்டோபர், 1862). முதலில் இருந்து இறுதி வரையிலும், ஜான்பிரைட் (John Bright), W. E. ஃபாஸ்டர் (W. E. Foster) போன்றவர்களின் மூலம் நன்கு விபரமறிந்திருந்த இங்கிலாந்தின் உழைப்பாளி மக்களும், கீழ் நடுத்தர வகுப்பாரும் அடிமைகள் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு ஒரு குடியரசை உருவாக்குவதை எதிர்த்து வட நாடுகளின் ஜனநாயகத்தை ஆதரித்தார்கள். வட பகுதி வெற்றி பெற்ற பின்னரும், லிங்கன் கொலை செய்யப்பட்ட பின்னும், ஒவ்வொருவரும் வடக்கு நாடுகளையே ஆதரித்தனர். ஆனால் போர் நடந்து கொண்டிருந்தவரை

யிலும், இங்கிலாந்தில் வாக்குரிமையை விரிவுபடுத்துவதை மக்கள் ஆதரித்தோ, அல்லது எதிர்த்தோ கொண்டிருந்த கருத்துகளுக்கு ஏற்ப அமெரிக்கப்பிரச்சினையிலும் பிரிட்டிஷ்காரர்களின் ஆதரவில் பிளவு ஏற்பட்டிருந்தது.

போராட்டக் காலத்தில் பிரிட்டிஷ்காரர் கொண்டிருந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக வடபகுதி ராஜ்யங்கள் பெரும் கோபங் கொண்டிருந்தன. தென்பகுதியோ, அதிகமான உதவியை எதிர்பார்த்திருந்தபோதிலும், சிறிது மகிழ்ச்சி கொண்டது. அட்லாண்டிக் கடலின் இருமருங்கிலும் நிகழ்ந்த நடவடிக்கைகளின் பொதுவான போக்கு, இருநாட்டு மக்களும் ஒருவரை யொருவர் நன்ருகப் புரிந்து கொள்வதற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கும் போது, இங்கிலாந்திற்கு எதிராக அமெரிக்கக் கருத்துகள் திடீரெனத் திரும்பிவிட்டன. உள்நாட்டுப்போரின் தற்செயல் நிகழ்ச்சிகளின் காரணமாக விளைந்த இத்தகைய தொடர்பறுப்பு நிரந்தரமாக இருக்கவில்லை. ஆனல் ஆங்கிலோ-அமெரிக்க இணக்கமானது நல்ல முறையில் வளர்ந்து கொண்டு வருகின்றபோது இப்பிளவு ஏற்பட்டது உறவுகளைப்பாதித்தது. கிரேட் பிரிட்டனுடன் பகைமை கொண்ட அயர்லாந்து மக்களும், பிரிட்டனை விட வேறுபட்ட மரபொழுக்கங்களையும், கலாச்சாரத்தையும் கொண்ட ஐரோப்பியர்களும் பெரும் அளவில் அமெரிக்காவில் குடியேறத்தொடங்கியதால், அமெரிக்கக் குடியரசின் வெளிப்படையான ஆங்கிலோ சாக்ஸானியப் பண்பு, அந்நூற்ருண்டின் இறுதியில் பெரிய மாற்றத்தைக் கண்டது.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர் நடந்த குறிப்பிடத்தக்க தூதாண்மை மரபுரிமை, புகழ் பெற்ற அலபாமாக் கோரிக்கைகளாகும் (Alabama Claims). வெளிநாட்டு அமைச்சராக இருந்த ரஸ்ஸல் கேடு சூழ்ந்த நீராவிக் கப்பலை, பெர்க்கன் ஹெட் (Birkenhead) துறைமுகத்துள்ள லேய்ர்ட் (Laird) தளங்களிலிருந்து தப்பியோடும்படி கவலையீனமாக அனுமதி வழங்கிவிட்டார். தென் நாடுகளின் கூட்டு அமைப்பின்கீழ் மேற் கூறிய கப்பலும் வட நாடுகளின் வாணிபத்தைச் சூறையாடப் புறப்பட்டு விட்டது. போர் முடிந்த பின்னர், வட ராஜ்யங்களுக்கு எதிராக இங்கிலாந்து கொண்டிருந்த ஆத்திரம், பெர்க்கன் ஹெட் (Birkenhead) நிகழ்ச்சிக்காக மட்டு மீறிய நஷ்ட ஈடுகளைக் கோருவதன் மூலம் வெளியிடப்பட்டது. இந்தச் சிக்கல் பல ஆண்டுகளாக நீடித்தபோதிலும், 1872-ல் ஜெனிவாவில் கண்ணியமான முறையில் முடிவு செய்யப்பட்டது. இப்போது தலைமை அமைச்சராக இருந்த கிளாட்ஸ்டோன் (Gladstone) தென் ராஜ்

யங்களின் சார்பில் போர் நடந்து கொண்டிருந்த போது காட்டப்பட்ட ஆதரவுக்கு நஷ்ட ஈடு கொடுக்கின்ற முடிவை ஒரு மூன்றும் நபர் சமரசத்திற்கு விட்டுவிட இசைவு தந்தார். இந்த நடவடிக்கை உலக சமரசம், அமைதி ஏற்பாடு களின் வரலாற்றில் முக்கியவொரு படியாகும். அந்நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டுகளில், தலைவர் கிளிவ்லாந்துக்கும் (Cleveland) லார்ட் ஸாலிஸ்பெரிக்கும் இடையே வெனிசூலா (Venezuela) எல்லைத் தகராறு பற்றிய பெரும் சிக்கலும் சமரசத்தின் மூலமே தீர்க்கப்பட்டது (1895). இதனையடுத்து கியூபா பிரச்சினையைப் பற்றி ஸ்பெயினுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நிகழ்ந்த போரில் (1898) இங்கிலாந்தின் பொதுமக்கள் எண்ணம் குறிப்பிடத்தக்க வகையில் அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் ஐரோப்பாக் கண்டத்தில் இத்தகைய ஆதரவு குறைவாகவே இருந்தது. இந்த இரு நிகழ்ச்சிகளும், பிரிட்டிஷ் கொள்கைகளும், பொதுமக்கள் ஆதரவும் நிரந்தரமாக அமெரிக்காவின்பால் அடைந்துவந்த நட்புணர்ச்சிக்குச் சான்று பகர்ந்தன.

உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருக்கும்போது, முடிவுற்றவுடனேயும், வட ராஜ்யங்கள் பிரிட்டன் மீது கொண்டிருந்த ஆத்திரமும், கனடா எல்லையில் அயர்லாந்து ஃபெனியர்களின் (Irish Fenians) நடவடிக்கைகளும், கனடாவின் சுதந்திரம் அபாயத்தில் இருக்கிறதென்பதை எச்சரித்தன. நல்ல காலமாக ஒரு தலைமுறைக் காலம் இயங்கிய முழுச் சுய ஆட்சி அதன் பணியை நிறைவேற்றி முடித்திருந்தது. நியூ பவுண்ட்லாந்து நீங்கலாக, பிரிட்டிஷ் வட அமெரிக்காவின் சுயாட்சி பெற்ற குடியேற்றங்கள் யாவும், தாமாகவே விரும்பி ஒரு நெருங்கிய கூட்டாட்சியை நிறுவி இருந்தன (1867). இதன் உடனடியான நோக்கம் என்னவென்றால், அண்மையில் இருந்த பெரும் குடியரசின் ஆக்கிரமிப்புப் போக்கை நெறிமுறையாக எதிர்ப்பதாகும். இந்தக் கூட்டாட்சி ஏற்படப் பெரும் அளவில் காரணமாக இருந்த கனடாவின் அரசியல் நுண்ணறிவாளர் ஸர் ஜான் மாக்டேனெல்டு (Sir John Macdonald) என்பவராவர். இதற்கிடையில் கனடாவின் பொது ஐக்கியத்தின் இணைப்பு என்ற நிபந்தனையின் கீழ் இந்தக் கூட்டாட்சிக் கொள்கையானது, பிரெஞ்சு தென் மாநிலத்திற்குத் தனிப்பட்ட சுயஆட்சியை வழங்கியது. இதற்குள் பிரிட்டிஷ், பிரெஞ்சு சமூகங்கள் தங்களுக்குள் ஏற்பட்ட மோதல்களைக் குறைத்துக்கொண்டு, அடுத்தடுத்து அமைதியாக வாழக் கற்றுக் கொண்டார்கள். மேலும் பிரெஞ்சுக்காரர்கள், பாராளுமன்ற அரசாங்கத்திற்கு ஏற்பத் தங்கள் போக்குகளை மாற்றி அமைத்துக்கொண்டனர்.

கூட்டாட்சி வெற்றிகரமாக அமைக்கப்பட்டதால், இனியும் கிரேட் பிரிட்டனின் வழியாக அல்லாமல் தன் சொந்தப் பொறுப்பிலேயே, கனடா நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் உறவு கொள்ள முடிந்தது. கூட்டாட்சி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கனடாவின் புதிய ஒற்றுமையுணர்ச்சி, கனடா பஸிபிக் ரயில் வழியையும் நிறுவியது. இதனால் மேற்குப் பகுதியில் வெகு தூரத்தில் இருந்த பிரதேசங்களில் பிரிட்டிஷ் கொடியின் நிழலில் ஆங்கிலம் பேசும் மக்கள் குடியேறி வாழ முடிந்தது. புதிய கனடா நாட்டின் முதுகெலும்பு போன்றது இந்த ரயில் வழி[1].

பத்தொன்பதாம் நூற்றூண்டில் ஆஸ்திரேலியா வெளி உலகத் தொடர்பிற்கு அப்பாற்பட்ட பகுதியில் இயங்கி வந்தது. ஆஸ்திரேலியா பிரெஞ்சுக் கனடாவைப் போன்று புதிய பிரச்சினைகள் எதையும் மரபுரிமையாகப் பெறவில்லை. அதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்றதொரு அண்டை நாடும் இருக்கவில்லை. ஆனால் ஆஸ்திரேலியாவின் வரலாறும், கனடாவின் வரலாற்றைப் போல, ஆயிரக்கணக்கான மைல் தூரமுள்ள பாலைவனங்களால் பிரிக்கப்பட்ட பல தனித் தனிக் குடியேற்றங்களை நிறுவிய கதையாகும். இவை பத்தொன்பதாம் நூற்றூண்டின் நடுவில் முழு சுயாட்சி பெற்று, அந்நூற்றூண்டு முடிவதற்குள் நீண்ட ரயில் வழிகளால் இணைக்கப்பட்ட ஒரு பொருளாதார ஐக்கியத்தையும் உண்டாக்கிவிட்டன. 1867-ல் கனடாவில் ஏற்பட்டது போன்று, 1901-ல் ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சி ஐக்கியத்தை நிறுவும் காலம் வந்து விட்டது. ஆனால் ஆஸ்திரேலியாவின் கூட்டாட்சி ஐக்கியம், கனடாவின் ஐக்கியத்தைப் போன்று அவ்வளவு நெருங்கியதல்ல. ஆஸ்திரேலிய அரசியலின் தனிப்பண்பு தொழிற்கட்சியின் தொடக்க கால ஆற்றலாகவும், பெரும் பண்ணைகளையும், நாட்டு நிலங்களையும் சமமாகப் பங்கிட்டு கொள் வேண்டு மென்று 'ஸ்குவாட்டர்கள்' என்ற கட்சியினருடன் நடத்தப் பெற்ற ஜனநாயகப் போராட்டமாகவும் விளங்கியது. ஆஸ்திரேலியக் கண்டத்திலிருந்து சகல கறுப்பு மனிதரையும் விலக்கிவிட வேண்டுமென்ற கொள்கையும், தற்கால ஜப்பானைப் பொறுத்த வரையில் இவ்விதக் கொள்கையினல் ஏற்படக் கூடிய விளைவுகளும், அண்மையில் ஆஸ்திரேலியாவின் வன்மையான தேசிய உணர்ச்சிகளை, பிற நாடுகளுடன் கொள்ளக் கூடிய தூதாண்மை உறவுகளுடன் நெருங்கிய வகையில் தொடர்புபடுத்தியுள்ளன. இதனால் பிரிட்டனுடன் கொள்ளக் கூடிய உற

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3-ல் 80ஆம் பக்கம் உள்ளயடம் 2 காண்க.

வின் முக்கியத்துவமும் விளங்குகின்றது. தன் நாட்டின் விரைவான வளர்ச்சியைத் தியாகம் செய்தும் கைக்கொள்ள வேண்டுமென ஆஸ்திரேலியா உறுதி பூண்டுள்ள உயர் குறிக்கோள் என்னவென்றால், மேலான உடலாண்மையும், உயர்ந்த வாழ்க்கைத் தரமும் கொண்ட வெள்ளையர்களின் சமத்துவ சமூகத்தை நிலைநாட்டுவதாகும்.

நியூஸிலாந்து பிற இனங்களையும், மோரிக் குலத்தினரையும் (Maori) தம் நாட்டில் இணைந்து வாழ அனுமதிக்கலாம் என்ற கருத்தை, கிப்பன் வேக்ஃபீல்டு என்பவர்தான் பொது மக்களின கவனத்திற்குக் கொண்டு வந்தார். 1837-ல் அவர் தோற்றுவித்த நியூஸிலாந்து சங்கம் (New Zealand Association), பிரான்ஸ் இத்தீவுகளைக் கைப்பற்றிக் கொள்வதைத் தடுக்க, சரியான நேரத்தில் அங்கே முதல் பிரிட்டிஷ் பற்றிடங்களை நிறுவியது. ஒன்றரை மில்லியன் மக்களைக் கொண்ட நியூஸிலாந்து, மிகச் சிறிய தீவுகளில் ஒன்றென்றாலும், பிரிட்டிஷ் சுய ஆட்சி பெற்ற குடியேற்ற உரிமை நாடுகளில் மன நிறைவும், அன்பிற்குத் தகுதி பெற்றதும் ஆன நடாகவும் விளங்குகின்றது.[1]

தென் ஆப்பிரிக்காவின் வரலாற்றிற்கும், பிறகுடியேற்ற உரிமை நாடுகளின் வ்ரலாற்றிற்கும் ஒற்றுமையும், வேறுபாடுமுள்ள அம்சங்கள் பல இருக்கின்றன. ஆஸ்திரேலியாவிலும், கனடாவிலும் நடந்தது போலவே, தென் ஆப்பிரிக்காவிலும், ரயில் வழித் தொடர்புகளின் யுகமும், அரசியல் கூட்டாட்சியும் ஏற்படு முன்னர், பெரும் பரப்புள்ள பாலைவனங்களால் பிரிக்கப்பட்ட பெரிய துண்டுபட்டுக் கிடந்த பல சமூகங்கள் நிறுவப்பட்டிருந்தன. இங்கும் கனடாவைப் போலவே, ஆங்கிலேயர் குடியேறுவதற்கு முன்னர், ஏற்கெனவே இருந்த மற்றொரு ஐரோப்பிய இனத்தின் காரணமாக, குடியேற்றம், சுயஆட்சி ஆகியவற்றைப்

[1] சுயாட்சி பெற்ற குடியேற்ற உரிமை நாடுகள் இன்று உள்ளவாறு மக்கள் தொகை பின்வருமாறு :

கனடா	...	10,376,786 (1931)
ஆஸ்திரேலியா	...	6,630,600 (1933)
நியூஸிலாந்து	...	1,463,278 (1926)
தென் ஆப்பிரிக்கா	...	2 மில்லியனுக்குச் சற்றுக் குறைவான வெள்ளையர் தொகை.

இதே காலத்தில் கிரேட் பிரிட்டனின் (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து) மக்கள் தொகை 44,790,485 (1931). போர் முடிந்த பின் அயர்லாந்துச் சுதந்திர நாடு குடியேற்ற நாட்டு உரிமையும், அல்ஸ்டர் பொறுப்புள்ள சுயாட்சியும் பெற்றுள்ளன. 1926-ல் வட அயர்லாந்து 1,256,561 மக்களையும், சுதந்திர அயர்லாந்து மூன்று மில்லியனுக்குச் சற்றுக்குறைவான மக்கள் தொகையையும் கொண்டிருந்தது.

பற்றிய பிரச்சினைகள் மிகவும் சிக்கலுள்ளதாக ஆக்கப்பட்டன. ஊல்ப், மோன்ட்காம் (Montcalm) காலத்தைப் போலவே, அமைதியான ஒப்பந்தம் ஏற்படு முன்னர், கிச்சனர் (Kitchener) போத்தா (Botha) காலங்களிலும் இரத்தம் சிந்திய பல போராட்டங்கள் நடந்தன. எனினும் காப்பாளர் ஆட்சியில் இருக்கும் சுதேசி மக்களின் எண்ணிக்கையை நீக்கி, இன்றைய தென் ஆப்பிரிக்க ஐக்கியத்தில் நான்கில் ஒருவர் என்ற விகிதத்தில் வெள்ளையர் தொகை ஒரு சிறுபான்மைச் சமூகமாகவே இருந்து வருகின்றது. ஆனால் கனடாவோ இயல்பாலும், குடியேற்றத்தாலும் வெள்ளையர்கள் நாடாகும்; ஆஸ்திரேலியாவின் பல பகுதிகள் கறுப்பர்களை ஆதரிக்க முடியுமென்றாலும் கொள்கையளவில், முழு நாடும், வெள்ளையர்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது; ஆனால் தென் ஆப்பிரிக்காவின் சுகமான உள்நாட்டுப் பீட பூமி மேட்டு நிலங்களில் ஐரோப்பிய, ஆப்பிரிக்க இனங்கள் அடுத்தடுத்து வாழ்ந்து வளம் காண்கின்றனர். தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் சுய ஆட்சி கோரி, அதனை வெற்றிகரமாக நடத்தும் அளவிற்கு அதிகமான மக்கள்தொகையினராக இருக்கின்றனர்; இந்த உண்மை சுதேசிகள் பிரச்சினையில் இடைவிடாத நெருக்கடிகளை உண்டாக்கி உள்ளது.

நெப்போலியப் போர்கள் நடந்தபோது, கப்பல் போக்குவரவுத் தளமாக இருந்த நன்னம்பிக்கை முனையைக் கைப்பற்றிய பின்னர், பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்க வரலாற்றின் முதல் கட்டம், டேபில் மலைகளுக்கு அருகில் (Table Mountains) சிறிய சமூகமான போயர்களைப் (Boers) பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆட்சி செய்ததாகும். தொடக்க காலத்தில் தொல்லைகள் பல இருக்கவில்லை. ஏனெனில் போயர்கள் டச்சுக் கொடியின் சுயாட்சி பெற்றிருக்கவில்லை. மேலும் அங்கு பிரிட்டிஷ் குடியேற்றக்காரர்களும் பெரும் அளவில் இருக்கவில்லை. ஆனால் அந் நூற்றாண்டின் மூன்றாவது நான்காவது பத்தாண்டுகளில், அங்கு வந்தேறிய பிரிட்டிஷ் மக்களின் தொகை மிகவும் அதிகமாய் இருந்ததால், மொழி, சட்டம், பழக்க வழக்கங்கள் பற்றிய பல சிக்கல்கள் எழுந்தன. அதே நேரத்தில் பிரிட்டிஷ் பேரரசில் உள்ள சகல அடிமைகளும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள் (1833). போயர்கள் அடிமை விடுதலையை எதிர்க்கவில்லை. ஆனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட நஷ்ட ஈடு முழுவதும் கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் கருதியதற்குச் சில காரணங்கள் உண்டு. அதே ஆண்டுகளில் அவர்களுடைய பண்ணைகளை உள்நாட்டில் வசித்த பழங்குடி மக்கள் தாக்கியபோது அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. லார்ட் மெல்போர்னின் திறமையற்ற குடி

யேற்ற அமைச்சராகிய லார்ட் க்ளெனல்க் (Lord Glenelg) என்பார் சுதேசப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலும், ஒரு குறிப்பிட்ட தூதுக்குத்தான் செவி சாய்க்கக்கூடிய, அதாவது கொண்ட கொள்கை விடாத அக்காலத்திய பிரிட்டிஷ் அதிகாரிகளின் வகுப்பைச் சேர்ந்தவர். எல்லைப்புறக் குடியானவர்களின் மேற்கூறப்பட்ட குறைகளும், அக்குடியானவர்களிடம் விளங்கிய வீரச் செயல் உணர்ச்சியும், 'பெரும் வெளியேற்றத்தின்' (The Great Trek) காரணங்களாகும். போயர்கள் தங்களின் எருது பூட்டிய வண்டிகளில் தம் மனைவி, மக்களை ஏற்றிக்கொண்டு, வெல்டுப் புல்வெளிகளின் ஊடே புகுந்து உள்நாடுகளுக்குள் புகுந்தனர். விவிலிய நூலைப் படிப்பதும், கால்நடை அபிவிருத்தியும், தம்மைச் சுற்றி இருந்த விலங்குகளை வேட்டையாடுவதும், குறி தவறாத தம் துப்பாக்கிகளையும், வெடிமருந்தையும் கொண்டு சுதேச மக்களின் பேராண்மைச் செயல்களைக் கவனிப்பதும் அவர்கள் ஈடுபட்ட பணிகளாகும்.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆப்பிரிக்காவில் இத்தகைய தனித்த வாழ்வை நீண்ட நாள் நடத்த முடியாது. முதலில் நேட்டாலிலும் (Natal) பின்னர் வால் (Vaal) ஆற்றின் இரு கரைகளிலும், பல வகையான பிரிட்டிஷ், ஐரோப்பியக் குடியேற்றக்காரர்கள் இவர்களைத் தொடர்ந்து வந்தேறினார்கள். இவர்களில் சமயம் பரப்புவோர்கள், வேடுவர்கள், குடியானவர்கள், தங்கம், வைரம் வெட்டி எடுக்கும் சுரங்கத் தொழிலாளர்கள், முதலாளித்துவ வாணிப யூகம் செய்வோர் போன்ற பல வகையானவர்கள் இருந்தார்கள். இந்த நூற்றாண்டு முழுவதிலும், பல வகைகளில், தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த பழைய, புதிய வகையான வெள்ளைச் சமூகத்தினரிடையே மீண்டும் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டன.

போயர்களும், பிரிட்டிஷ்காரர்களும் கைகலப்பில் ஈடுபடாதபடி நீண்ட காலமாகவே, ஆப்பிரிக்காவில் இருந்த போராண்மைப் பழங்குடிகள் தடுத்து வந்தன. ஆனால் சூலு (Zulu) குலத்தவர்களைப் பிரிட்டிஷ் படைகளும், அதிகாரிகளும் அடக்கி, சமரசப்படுத்தியபின்னர் (1879), போயர்களின் நிலைமை அதிகப் பாதுகாப்புப் பெற்றது. இந்த நெருக்கடியான கட்டத்தில், பிரிட்டிஷ் அரசாங்கம், சிறப்பாக கிளாஸ்டன் தலைமையில் இயங்கிய அரசாங்கம், டிரான்வால் (Transvaal) போயர்களுடன், ஏதோ ஒரு வித உடன்பாடு காணத் தயங்கிக் கொண்டிருந்ததால், மஜுபா (Majuba) நிகழ்ச்சி நடப்பதற்கு வழியாயிற்று (1881). கேப் குடியேற்றத்திலிருந்த (Cape Colony) டச்சுக்காரர்கள், வால் ஆற்

றிற்கு அப்பால் இருந்த தமது இரத்த உறவுகொண்ட சகோதரர்களுடன் சேர்ந்து விடுவார்களோ என்ற அச்சத்தினால் கிளாஸ்டன் பிரிட்டிஷ்காரர்களின் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. எனவே தென் ஆப்பிரிக்கக் குடியரைப்போலவே டிரான்வாலும் சுதந்திரத்தை மீண்டும் பெற்றது. டிரான்வாலில் தங்க, வைரச் சுரங்கங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதால். 'மஜுபாக் கொள்கை' வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. பொருளீட்டுவதில் ஏற்பட்ட போட்டி, எக்காலத்தையும் விட இப்போது, பொது நோக்குடைய வாணிபப் பெருமக்களுக்கும், அரசியல் அதிகாரத்தைச் சுரங்கத் தொழிலாளர் கையில் விட்டு விடாதபடி சுரங்கங்களைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய டச்சுக் குடியானவனுக்கும் இடையே பெரும் வேறுபாடுகளை உண்டாக்கியது.

இதே காலத்தில் டிரான்ஸ்வாலுக்கு மேற்கிலும், வடக்கிலும் ஸிஸில்ரோட்ஸும் (Cecil Rhodes) அவருடைய சாஸனம் பெற்ற கம்பெனியும்[1] புதிய பிரிட்டிஷ் குடியேற்றங்களை நிறுவிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான் ரொடீஷியா (Rhodesia)பிறந்தது. உள்நாட்டில் இவ்வளவு பேராசையுடன் புகுந்து குடியேறியது, சில அச்சங்களின் காரணமாக ஓரளவு தூண்டப்பட்டதாகும். ஜெர்மன் தென் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து போர்த்துக்கீஸியப் பகுதிகளை இணைக்கும் நோக்கத்துடன், ஜெர்மனியர்கள் ஆப்பிரிக்காக் கண்டம் முழுவதும் பரவி விடக் கூடும் என்று ரோட்ஸ் தீவின் மக்கள் பயந்தனர். சரியான காலத்தில் இந்த ஏற்பாட்டைச் செய்தார்களானால், பிரிட்டிஷ் இனம் இனிமேல் ஒருபோதும் மேற்கு நோக்கி முன்னேற முடியாதவாறு துண்டிக்கப்பட்டு விடுவார்கள். எனவே ரோட்ஸ்தீவினர், ஸாம்பஸி (Zambesi) ஆற்றிற்கு அப்பால் உள்ள பிரதேசங்களுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்தச் சரியான காலத்தில் முயன்றது. இதே பகுதிகளில் லிவ்விங்ஸ்டனும் (Livingstone) பிற பிரிட்டிஷ் சமயம் பரப்புவோர்களும் இதற்கு முந்திய தலைமுறையில் மத்திய ஆப்பிரிக்காவில் உள் பகுதிக்குள் நுழையும் வழியை வகுத்ததோடு அங்குள்ள பழங்குடிகளையும் எப்படி நல்ல முறையில் நடத்தலாம் என்பதையும் காட்டிச் சென்றிருந்தார்கள். இதற்குச் சற்று வடக்கே பிரிட்டன் எகிப்தைத் தனதாக்கிக்கொண்டிருந்தது. எனவே பிரிட்டனுக்குச் சொந்தமான பிரதேசம் வழியாக நன்னம்பிக்கை முனையிலிருந்து கெய்ரோ வரை செல்லும் ரயில் வழி

1 இங்கிலாந்தின் வரலாறு-I பிரிவு 3, இயல் 6, பக்கம் 770-ன் அடிக்குறிப்பும் மேற்பட்டவையும் காண்க.

யானது, எழுச்சிமிக்க ரோட்ஸ் நாட்டு மக்களுக்கு ஏற்பட முடியாத ஒரு சாதனையாகத் தெரியவில்லை.

நடை முறைக் கற்பனையாளராகிய ரோட்ஸ் ஆப்பிரிக்காவின் புவியியலிலும் வரலாற்றிலும் சிறந்த ஒரு முத்திரையை விட்டுச் சென்றார். ஆனால் அவர் சாதித்தன யாவும் அவர் முதலில் செய்ய விரும்பினவை அல்ல. அவர் பிரிட்டிஷ் டச்சு இனங்களுக்குள் உடன்பாடு காண விரும்பினார். ஆனால் துயரம் நிறைந்த பல ஆண்டுகளாக அவ்விரு இனங்களுக்குள் பகைமையே மேலோங்கி இருந்தது. ரோட்ஸ், கேப் குடியேற்றத்தின் தலைமை அமைச்சராக இருந்தபோது தென் ஆப்பிரிக்கக் குடியரசின் தலைவரும் பழைய உலகத்து பிற்போக்கினர் வகையைச் சேர்ந்த போயருமான பால்க்ருகர் (Paul kruger) என்பவருடன் பொறுமை இழந்து மோதிக்கொண்டார். இதை அடுத்து டிரான்ஸ்வால் மீது படைதாங்கிய தாக்குதலும் செய்யத்திட்டமிடப்பட்டது. ஜேம்ஸ்சன் என்பாரின் படையெடுப்பு (கிறிஸ்துமஸ், 1845) ஆப்பிரிக்காவிலுள்ள டச்சு இனம் முழுவதையும் வெறுப்புடனும், ஐயத்துட



படம் 3

தென் ஆப்பிரிக்கா, 1899

னும் ஒன்றுபடச் செய்தது. க்ருகரும் முழு வன்மையுடன் படைக் கலங்களைச் சேர்க்கவே, இரண்டாம் போயர் யுத்தம் மூண்டது. ஏனெனில் இங்கிலாந்தில் குடியேற்றப் பணி மன்றத்திலிருந்த செம்பர்லேனும் தென் ஆப்பிரிக்காவில் இருந்த சர் ஆல்பிரட் மில்நரும் (Sir Alfred Milner) நெருக்கடியில் இருந்த சிக்கல்களைப் போரின் மூலம் தீர்த்துக் கொள்வதல்லாமல் மாற்று வழி காண முடியவில்லை.

எதிர்பாராத பின் வாங்கல்களும், போயர் குடியானவர்களின் வெறி கொண்ட கொரில்லா முறை எதிர்ப்பு முறைகளினால் நீடித்த தென் ஆப்பிரிக்கப்போர் (1899–1902) பிரிட்டிஷ் பேரரசைப் பொறுத்த வரையில் பல முக்கியமான விளைவுகளை உண்டு பண்ணியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் ஆதிக்கம் செலுத்திய ஓரளவு செருக்கு நிறைந்த பேரரசுக் கொள்கையை இப்போர் அழித்தது. இந்த உணர்ச்சி ஒரு காலத்தில் பிரிட்டிஷ் பேரரசுத் தத்துவத்தைப் பிரசாரம்செய்யும் நோக்கத்திற்குப் பயன்பட்ட போதிலும் உருவாகிக் கொண்டிருந்த அபாயமிகுந்த புதிய யுகத்தில் பல தொல்லைகளைத் தந்திருக்கும். இரண்டாம் போயர் யுத்தத்தின் அபாயமிக்கபண்பு எல்லாக் கட்சியைச் சேர்ந்தோர்களும் பேரரசின் கடமைகளையும் கதியையும் பற்றி மிதப்போக்கும், பரந்த நோக்கும் கொள்ளும்படி செய்தது. இதனால் படைத் திறைமைக்கும், இராணுவச் சீர்திருத்தத்துக்கும் புதியதொரு ஊக்கம் கொடுக்கப்பட்டது. பன்னிரு ஆண்டுகளுக்குப்பின் இதன் விளைவாகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டியிருந்தன. நாம் இத்தகைய தொல்லைகள் இல்லாமல் போயர் யுத்தத்தை எளிதாக வென்றிருந்தால் ஜெர்மன் யுத்தத்தை வென்றிருக்கவே மாட்டோம். இறுதியாக, இந்த யுத்தம், உற்சாகமும், ஊக்கமும் கொண்ட உதவியைக் கானடாக்காரர்களிடமிருந்தும், ஆஸ்திரேலியர்களிடமிருந்தும் பெற்றது. இவர்கள் இன்னலில் இருந்த பேரரசுக்காகப் போராடத் தென் ஆப்பிரிக்காவுக்கு வந்தார்கள்.

போர்க் களத்தில் லார்டு ராபர்ட்ஸும் லார்டு கிச்சினரும் பெற்ற வெற்றியின் விளைவாக டிரான்ஸ்வாலும் ஆரஞ்சு சுதந்திர நாடும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வெரினிகின்ஜ் (மே 1902 (Treaty of Vereeniging) உடன்படிக்கையின்படி அமைதி நிறுவப்பட்டது. இவ்வொப்பந்தம் கைவிடப்பட்ட ஆப்பிரிக்கப் புல்வெளிகளை இன்னும் பற்றிக் கொண்டு போராடிய படைத் தலைவர்களுக்குக் கண்ணியமான நிபந்தனைகளைக் கொடுக்க முன் வந்தது. கிரேட் பிரிட்டன் ஆப்பிரிக்கப் பண்ணைகளை மீட்டுத்

தரும் பொறுப்பை உடனடியாக ஏற்றுக்கொள்வது, டச்சு ஆங்கில மொழிகள் வேறுபாடு இன்றி சம நிலையில் மதிக்கப்படுவது, படிப்படியாக பிரிட்டிஷ் கொடியின் கீழ்ப் பொறுப்புள்ள முழு சுய ஆட்சியை வழங்குவது—ஆகியவை முக்கிய நிபந்தனைகளாகும். இந்த வாக்குறுதிகள் யாவும் காப்பாற்றப்பட்டன. பால்ஃபோரும்(Balfour), மில்நரும் பிற கான்சர்வேடிவ்களும் வன்மையான எதிர்ப்புக் குரல்களும் முன்னெச்சரிக்கைகளும் எழுப்பிய போதிலும் 1906 ஆம் ஆண்டிலேயே சர் ஹென்ரி கேம்பெல் பேனர்மன் (Sir Henry Campbell–Bannerman) என்பாரின் தலைமையில் பொறுப்புள்ள சுய ஆட்சி வழங்கப்பட்டது. இதன் விளைவாகத் தென் ஆப்பிரிக்க சமரசம் ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர்(1910)ஆப்பிரிக்கத் துணைக் கண்டம் முழுவதும், ரொடீசியாவையும் சில சுதேசக் காப்பாளர் நாட்டையும் தவிர, தென் ஆப்பிரிக்க ஐக்கியம் என்ற கூட்டாட்சி நிறுவப்பட்டது. 1902-ல் பிரிட்டிஷ் படைகளை இறுதி வரையில் எதிர்த்து நின்ற தளபதிகள் போதாவும், ஸ்மட்சும் (Smuts) தென் ஆப்பிரிக்க ஐக்கியத்தின் தலைவர்களாக 1914–18-ல் ஜெர்மனிக்கு எதிராகப் போரை நடத்தினர்கள். இதன் மூலம் பிரிட்டிஷ் பேரரசு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த போது அதன் படை பலமும் ஆத்மீக பலமும் வெகுவாக உயர்ந்தன.

பதினெட்டாம் நூற்றுண்டில் மொகலாயப் பேரரசு சிதைந்ததும் அதனைத் தொடர்ந்து இந்தியாவில் ஒருவரோடு ஒருவர் போர் புரியும் தலைவர்களும், அரசர்களும், வீரக் குலங்களும் விளைவித்த குழப்ப நிலை காரணமாகப் பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பெனி பெருமளவில் இராணுவ நடவடிக்கைகளும் அரசியல் பொறுப்புகளும் எடுக்க வேண்டியதாயிற்று. பிரெஞ்சுக்காரர்கள் தமது ஐரோப்பிய எதிரிகளான பிரிட்டிஷ்காரரை இந்தியாவை விட்டு விரட்ட முயன்றதால் மேற்கூறிய நடவடிக்கைகள் விரைவு பெற்றன. இந்தியாவில் முன்னேறிச் சென்று பிரிட்டனின் அமைதியையும் ஆதிக்கத்தையும் இந்திய சுதேச அரசர்களின் நாடுகள் எல்லாவற்றிலும் நிறுவ வேண்டும் என்பதை முதன் முதல் உணர்ந்த கவர்னர் ஜெனரல் லார்டு வெல்லஸ்லி ஆவார் (1798—1805). அவருடைய மராட்டிய யுத்தங்கள் இந்திய தீபகற்பத்தில் கிழக்கிலும் தெற்கிலும் நிகழ்ந்து வந்த தாக்குதல்களையும் குழப்பங்களையும் தடுத்த போதிலும் மத்திய இந்தியாவில் அமைதியின்மைக்கு காரணமாக இருந்த பகுதிகள் சீர்படுத்தப்படாமலே விடப்பட்டன. வெல்லஸ்லி ஓய்வு பெற்ற பின், பிரிட்டனின் பொறுப்புகளைக் குறைத்துக் கொண்டு மேலும் இந்தியா

வில் பிரிட்டிஷ் பேரரசு பரவுவதைத் தடுக்க ஒரு முயற்சி செய்யப் பட்டது.[1]

ஆனால் பாதுகாப்பற்ற நீண்ட எல்லைப்புறத்துக்கப்பால் உடன்பாட்டுக்கு உட்பட்டு அமைதி ஏற்படும் என்ற வீணான நம்பிக்கையில் குழப்பத்தை நிலவ விடுவது முடியாத தென்பதைச் சில நிகழ்ச்சிகள் விரைவில் காட்டின. வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் நிலவிய குழப்ப நிலைமை பிற இடங்களிலும் அமைதி ஏற்படுவதைத் தடை செய்தது. லார்டு ஹேஸ்டிங்ஸ், லார்டு வெல்லஸ்லியின் முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்றினார். அவர் காலத்தில் நேப்பாளத்தில் கூர்க்கா (Gurkha) மலைவாசிகள் போரினால் அடக்கப்பட்டனர் (1814–16). அது முதல் நேப்பாளம் நமது நட்புறவு நாடாகவும் நமது இந்தியப் படைகளுக்கு ஆள் திரட்டும் முக்கிய அரங்கமாகவும் விளங்கி வருகிறது. மேலும் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் மராட்டியத் தலைவர்களும் மத்திய இந்தியாவின் எல்லைக் கூட்டங்களும் இறுதியாக மூன்றும் மராட்டிய யுத்தத்திலும் பிண்டாரிப் போர்களினாலும் முறியடிக்கப்பட்டனர் (1816–18). ஆறுண்டுகளுக்குப் பின்னர் வட கிழக்கு இந்தியாவில் பர்மியப் படைகள் அஸ்ஸாமைத் தாக்கிய போது முதல் பர்மியப் போர் (1824–26) மூண்டது. இது முதல் தொடங்கிய பர்மிய ஆக்கிரமிப்பு 1853–லும் 1886–லும் முடிவுற்றது. தீபத்திய சீன வழி மரபினரான பர்மியர்களுக்கும் இந்தியாவின் சமய இன பின்னல்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆனால் பிரிட்டிஷார் இந்தியாவில் நிறுவிய அதே ஆட்சி முறை, சில மாறுதல்களுடன், இந்தக் கிழக்குப் பிரதேசத்திலும் நிறுவப் பட்டது.

லார்டு ஹேஸ்டிங்ஸ் காலத்திலும் அவருடைய உடனடியான பின்னேடி காலத்திலும் நிகழ்ந்த நாடு சேர்க்கும் நடவடிக்கைகளும் போர்களும் முடிந்தபின்னர் வட மேற்கு எல்லைப்புற நெருக்கடிகளும் ஆப்கானிஸ்தானத்தின் பதானியர்களுடனும் (Pathans) பஞ்சாபின் சீக்கியர்களுடனும் ஏற்பட்ட தொடர்புகள் மீண்டும் போர்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் வழி வகுத்தன. அமைதி நிலவிய இடைக்காலத்தில் லார்டு வில்லியம் பென்டின்க்கும் (Lord William Bentinck) திறமையும் நேர்மையுமுள்ள பிற பொதுநல ஊழியர்களும் பிரிட்டிஷ் ஆட்சியின் நலன் நாடும் விருப்பத்தையும் இந்தியர்கள் பிரிட்டனின் அறக்காவலில் இருக்கின்றார்கள்

1 இங்கிலாந்தின் வரலாறு-*II*, பிரிவு 5. இயல் 6-ம் அதே பகுதியில் பக்கம் 378-ல் உள்ள படம் 10-ஐயும் காண்க.

என்ற எண்ணத்தையும் நன்கு வலியுறுத்தினார்கள். கிளைவ் வாரன்ஹேஸ்டிங்ஸ் கால முதல் வெல்லெஸ்லி லார்டு ஹேஸ் டிங்ஸ், மெற்காப்ஃ (Metcalfe), லாரன்ஸ் சகோதரர்கள் காலம் வரைக்கும் போர்களிலும் நாடு சேர்ப்பதிலும் ஈடுபட்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் அறக்காவல் உணர்ச்சி இருக்கவில்லையென்று கூற முடியாது. இந்தியாவின் சாலைகளில் சுற்றித் திரிந்த பரம் பரைக் கொலைகாரர் கூட்டமான தக்கர்களை அழிப்பதைத் தவிர வேறு வன்மையான எதிரியை வெல்லவோ, அல்லது இந்து விதவைகளைச் சுட்டெரிக்கும் வழக்கமான சதியை அரைமனதாய் ஆதரித்தவர்களை எதிர்ப்பதைத் தவிர வேறு கிளர்ச்சிகளை அடக் கவோ லார்டு பென்டின்க் (1828-1855) அழைக்கப்படவில்லை. பென்டின்க்கின் வெற்றிகள் அமைதியின் வெற்றிகளாகும்.

1813-ல் கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவுடன் செய்து வந்த பிரிட்டிஷ் வாணிபத்தின் தனியுரிமை அழிக்கப்பட்டது. இருபதாண்டுகளுக்குப் பின் (1833) கம்பெனி சீனாவுடன் செய்து வந்த பிரிட்டிஷ் வாணிபத்தின் தனியுரிமையும் முற்றுப் பெற்றது. ஜான் கம்பெனி (John Company) என்றழைக்கப்பட்ட கிழக்கு இந்தியக் கம்பெனி வாணிப நிறுவனமாக இருந்த நிலைமை முற்று பெற்ற போதிலும் 1858 வரை அரசியல் அதிகாரத்தைப் பெய ரளவில் கொண்டிருந்தது. ஏனெனில் உண்மை அதிகாரம் அரச ரின் அமைச்சர்களிடம் கொடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டன. 1833ஆம் ஆண்டின் புதிய பட்டயச் சட்டம் (Charter Act)பென்டின்க் பின்பற்றிய கொள்கையின் ஒரு சிறப்பைக்கீழ்க் கண்ட சொற்களால் வெளியிட்டது. 'எந்த இந்திய சுதேசியும் மேன்மை தங்கிய மன்னரின் குடிமகனும் தனது சமயம், பிறப் பிடம், ஜாதி, நிறம் காரணமாகப் பேரரசின் எவ்வித பதவியை யும் வேலையையும் செய்ய தெரிந்து கொள்ளப்படுவதிலிருந்து தடை செய்யப்பட மாட்டான்.' பிரிட்டிஷாருடன் சேர்ந்து பணி புரியத்தக்க அளவில் இந்திய ஆட்சித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கும்வேலை இன்னும் தொடங்கவில்லை. பென்டின்க் கும் அவருடைய சகாக்களும் ஆவலுடனும் ஆர்வத்துடனும் இப் பணியிலும் அதனைச் சார்ந்த பிரச்சினைகளிலும் ஈடுபட்டார்கள்.

இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஐரோப்பியர்களுக்கும் இந்தி யர்களுக்குமிடையே பெருமளவில் மனக்கசப்புகள் இருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முந்திய காலத்தைப் பற்றிய நினைவுகள் இன்னும் புதுமையாக இருந்ததால் நலன் கொழிக்கும் நல்லாட் சிக்கு மக்கள் நன்றி கூறிக்கொண்டிருந்தார்கள். இந்தியாவி லிருந்த ஆங்கிலேயரும் ஸ்காட்லாந்தியரும் பெரிதும் பொறுக்கி

எடுக்கப்பட்ட மிகச் சிலரே ஆவர். முற்றிலும் ஆங்கிலச் சமூகத்தை நிறுவக்கூடிய அளவுக்கு அவர்களின் தொகை அவ்வளவு அதிகமில்லை. சில சமயங்களில் உயிருக்கே ஆபத்தாக முடியும் ஆறு மாதக் கடற்பயணம் அவர்களைத் தாய்நாட்டிலிருந்து பிரித்தது. இந்தியா அவர்களின் இரண்டாம் தாயகமாக விளங்கியது. கலப்புத் திருமணங்கள் அரிதென்றாலும், முற்றிலும் தடை செய்யப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் இருந்த அளவுக்கு இரு தரப்பாரிடமும் நிற வெறி வன்மை பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்தையோ ஐரோப்பாவையோ பற்றி இந்தியருக்கு ஒன்றும் தெரியாது. தங்கள் ஆட்சியாளர்களைத் தாங்கள் அறிந்த அநேக கடவுளர்களையும் அரசர்களையும்விட அதிக அன்பு கொண்டவர்களாய், வானத்திலிருந்து வீழ்ந்த வெல்ல முடியாத விந்தைகளாக இந்தியர்கள் கருதினார்கள். இந்த மகிழ்ச்சி நிலையை நிரந்தரமாக்கக்கூடியது எதுவும் இல்லை. இந்தியாவில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கல்வி முறையை விட வேறு முறையில் இன்றியமையாத மாறுதலை நன்மைக்கோ தின்மைக்கோ செய்திருக்க முடியுமாவென்பது கேள்வி.

வில்லியம் பென்டிங்க் ஆட்சியில்தான் ஆங்கிலத்தை கல்விக்கும் ஆட்சி முறைக்கும் பயிற்சி மொழியாக்குவதை ஆதரித்து முடிவு செய்யப்பட்டது. அதுகாலை கல்கத்தாவில் கவர்னர் ஜெனரல் கவுன்சில் அவையின் உறுப்பினராக இருந்த மெக்காலேயின் வன்மையான, ஆனால் மட்டு மீறிய நம்பிக்கை கொண்ட, வாதங்களினால் ஆட்சி மொழிப் பிரச்சினை முடிவு செய்யப்பட்டது. ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியையும் நிரந்தரமாக மக்கள் ஒப்புக்கொண்டிருப்பார்களோ என்பதை எளிதாக நம்ப முடியாது. இந்தியாவை ஒரு குடையின்கீழ் ஆளவேண்டியிருந்ததால் ஒரு பொது ஆட்சி மொழி தேவைப்பட்டது. பிரிட்டிஷாருக்கும் இந்தியர்களுக்கும் இடையே கல்வி, அரசாங்கம் போன்ற துறைகளில் உள்ள தொடர்புகளுக்காக கீழ்நாடுகளின் எண்ணற்ற மொழிகளில் ஒன்றை மற்றவைகளுக்கு மேலாகத் தெரிந்து வன்முறையில் அதனை யார்தான் புகுத்த முடியும்.

ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில் சில அபாயங்கள் இருந்தன. பிற்காலத் தலைமுறைகள் இவற்றை நீக்குவதற்குச் சரியான வழிவகைகளைத் தேடவில்லை. பல நூற்றாண்டுகளாகச் சுய ஆட்சியின் நன்மைகளில் பயிற்சி பெற்றுத் தன்னடக்கத்தையும், பொது அமைதியையும் என்றும் இருக்க வேண்டியவையாகக் கருதிய ஊக்கமுள்ள வெள்ளை இனம் தன் கவிதையிலும் அரசியல் தத்துவத்திலும் உரிமையை வாழ்வின் மணிமுடியென வலியுறுத்தியது.

ஆனல் மனித அனுபவத்தின் மறு முனையிலிருந்த ஒரு நாட்டு மக்கள் மேற்கூறிய இங்கிலாந்தின் உயர் குறிக்கோள்களை உற்றுக் கேட்க நேர்ந்திருந்தால் அதனல் விபரீத விளைவுகள் ஏற்படலாம்; 'புரட்சி நூல்களின் துணை கொண்டு ஓர் ஆட்சியாளர் இனத்தை உருவாக்க நாம் முயன்ருேம்' என்ற கூற்றில் சிறிதளவு உண்மை இருக்கிறது. கல்விப் பாடத்திட்டத்தில் சில தவறுகள் செய்யப்பட்டது உண்மை. மேல்நாடுகளின் இலக்கியத்தையும் மொழியையும் இந்தியப் பள்ளிக்கூடங்கள் பெறமுடியாதவாறு செய்திருந்தால், இந்த விவேகச் செயல் தற்காலத்திய தொல்லைகள் பலவற்றை நீக்கி இருக்கும் என்று சிலர் வாதாடுகிருர்கள். இவர்கள் 1835ஆம் ஆண்டிலேயே ஆங்கிலம் கற்க வேணுமென்று இந்தியர்கள் எவ்வளவு ஆர்வமாகக் கேட்டுக்கொண்டார்கள் என்பதை மறந்து விடுகிருர்கள். இந்தியர்களின் சொந்த இலக்கியமும் சிந்தனையும் மேல் நாடுகளின் அறிவோடு கொண்ட தொடர்பினல் எவ்வளவு மறுமலர்ச்சி அடைந்தது என்பதையும் நமது சக குடிகளாகிய இந்தியரை மேல்நாட்டின் கல்வியிலிருந்தும், விஞ்ஞான . அறிவிலிருந்தும் நிரந்தரமாக விலக்குவது எவ்வளவு இரக்கமற்ற செயல் என்பதையும், இறுதியில் அவர்களை தடுத்திருக்கவும் முடியாது என்பதையும், அவர்கள் மறந்துவிடுகிருர்கள். மேலும் இந்தியர்கள் வன்மையாக வெளியிட்ட ஆவலை நிறைவேற்ருமல், அரசாங்கம் அவர்களை அறியாமலேயே நிலைபெறச் செய்ய முயன்றிருந்தால் அது ஆபத்தான வீண் முயற்சியாகவும் இருந்திருக்கும்.

பென்டின்க் காலத்தில் நிலவிய அமைதிநடவடிக்கைகளுக்குப் பின் முன்னேற்றக் கொள்கை மீண்டும் புத்துயிர் பெற்றது. நாற்பதாம் ஆண்டுகளில் நடந்த போர்களும் ஒப்பந்தங்களும் வடமேற்கு எல்லைப்புறத்தின் கொள்கைகளையும் நில அமைப்பையும் பொதுவான முறையில் முடிவு செய்தன. ஆப்கானிய மலைவாசிகளைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று செய்யப்பட்ட முயற்சியானது (1839-41) ஒரு முழுப் படையைக் காபூலிலிருந்து திரும்பும்போது அழியும்படி நேர்ந்த புகழ்பெற்ற பேர் இழப்பிற்கு வழி வகுத்தது. ஒருவேளை இத் தோல்வி ஒரு மறைமுக நன்மையாகும். ஏனெனில் எதிரியின் தாக்குதல்களைத் தாங்குகின்ற நாடாக ரஷ்யாவுடையவும், பிரிட்டனுடையவும் ஆசியப் பற்றிடங்களுக்கு நடுவே அமைந்து தன் மலைநாட்டு உரிமையை ஆர்வத்துடன் பாதுகாத்து வரும் ஆப்கானிஸ்தானத்தின் நட்புறவுக் கொள்கையைத்தான் இந்திய தீபகற்பத்தின் அமைதியும் பாதுகாப்பும் இறுதியில் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சுதந்திர ஆப்கானிஸ்தான் இருக்கின்ற

காரணத்தால் ஆசியாவில் இருந்த ரஷ்யாவுக்கும் நமக்கும் என்றுமே ஆயுதம் தாங்கிய கைகலப்பு ஏற்படவில்லை.

இவ்வாறு மலைநாடுகளில் ஏற்பட்ட தடைக்குப்பின்னர், சிந்துவும் பஞ்சாபும் கைப்பற்றப்பட்டதால் வடமேற்குச் சமவெளிகளின் பேராற்றுத் திட்டங்கள் யாவும் பிரிட்டிஷாரின் கைகளில் சிக்கிவிட்டன. பஞ்சாபின் சீக்கியர்கள் நாம் 'புரோட்டஸ்டண்டு-இந்துக்கள்' என்று அழைக்கக்கூடிய ஒரு ஜனநாயகப் பண்புள்ள சமயக் கூட்டத்தினராவர். நீண்ட காலமாக இந்தியாவின் சமவெளிகளை முகமதிய மலைக்குடிகளும் மத்திய ஆசியாவின் ஆக்கிரமிப்பாளர்களும் களங்கப்படுத்தி விடாதபடி பாதுகாத்து வந்தனர். சீக்கியர்களின் பெருந் தலைவரான ரஞ்சிட் சிங் (Ranjit Singh) தமது படைகளுக்கு [1]ஐரோப்பிய முறை தழுவிப் பயிற்சி கொடுத்ததோடு ஆங்கிலேயரின் நண்பராகவும் இருந்தார். ஆனால் அவர் இறந்தபின் சிறந்த வீர மரபினராகிய சீக்கியர்கள் சட்லெஜ்ஜைக் (Sutlej) கடந்து பிரிட்டிஷ் இந்தியாவைத் தாக்க தொடங்கினர். இதன் விளைவாக ஏற்பட்ட போராட்டத்தில், மூட்கி (Moodkee), சோப்ரான் (Sobraon), சில்லியன்வாலா (Chillianvallah) ஆகிய போர்கள் இந்திய மண்ணிலே பிரிட்டிஷார் செய்த எந்தப் போர்களையும் போன்று கடுமையானவை.[1] போரில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து சீக்கிய மக்களின் நம்பிக்கையையும் பற்றையும் பஞ்சாபின் நல்ல அரசாங்கத்தின் மூலம் லாரன்ஸ் சகோதரர்கள் தமது பணிகளினால் பெறமுடிந்தது. எனவே இந்தியப் பெருங் கலகம் மூண்டபோது (1857) ஜான் லாரன்ஸ் (John Lawrence) புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பஞ்சாபைப் பாசறையாகப் பயன்படுத்திக் கலகம் செய்த அயோத்தியை (Oudh) மீண்டும் வெல்ல முடிந்தது. இந்த நெருக்கடியில் ஆப்கானிஸ்தானமும் ஆங்கிலேயரோடு நட்புக் கொண்டிருந்ததால் பெருங் கலகம் நடத்தப்படும் வரையில் வடமேற்கு எல்லையில் அச்சமின்றி அத்தனை படைகளையும் எடுத்துப் பயன்படுத்த முடிந்தது.

இந்தியப் பெருங் கலகம் என்பது அதன் பெயருக்கேற்ப பிரிட்டிஷாரிடம் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த சிப்பாய்ப் படைகளில் சிலரும், ஆயுதப் படையில் பெரும் பகுதியினரும் செய்த கிளர்ச்சியாகும். பொதுமக்களை இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்கள் என்று சொல்வதைவிடப் பார்வையாளர்கள் என்று சொல்வது பொருந்தும். இக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்த

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 6, பக்கம் 378, 379-ல் உள்ள படங்கள் 10 ஐயும் 11 ஐயும் காண்க.

இந்தக் குறைபாடுகள் முறைகேடான நிர்வாகத்தினுல் விளைந்த போர் வீரர்களின் குறைபாடுகளே. புனிதப் பசுவினுடைய கொழுப்பையும், பழிக்கப்பட்ட பன்றியுடைய கொழுப்பையும் தேய்த்துக் கொடுக்கப்பட்ட தோட்டாக்கள் போன்ற முன்னெச் சரிக்கையில்லாத நடவடிக்கையை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

வங்காளப் படையின் கலகம் மீரத்தில் தொடங்கியது (மே, 1857). கிளர்ச்சியின் உடனடியான காரணம் திறமையற்ற அதிகாரிகள் சிப்பாய்களை விவேகமற்ற முறையில் கொடுமையாக நடத்தியதாகும். தாங்களே எழுப்பிய புயலுக்கு முன் அதிகாரி கள் செயலற்று நின்ருர்கள். கலகக்காரர்களில் சிலர் டெல்லி நோக்கிப் புறப்பட்டனர். டெல்லியில் பிரிட்டிஷ் படை எதுவும் இருக்கவில்லை. கலகக்காரர்கள் டெல்லியைக் கைப்பற்றினர்; மூன்று வார வீர முற்றுகையின் பின் கான்பூர் வீழ்ந்தது; இதனை யடுத்து சர் ஹென்றி லாரன்ஸ் முற்றுகையின்போது உயிர் நீத்த பிரிட்டிஷ் தூதரின் இருப்பிடம் தவிர லக்நவ் நகரம் முழுவதும் கைப்பற்றப்பட்டது. இந்த மேல் கங்கை பிரதேசத்தில்தான் 1857ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் அப்போது இந்தியாவி லிருந்த பிரிட்டிஷ்காரரும் பற்றுறுதி கொண்ட இந்தியப் படை களும் போராடினுர்கள். 'நாங்கள் மட்டுமே போராட்டத்தை வென்ளும்' என்று இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் பெருமைப் பட்டது பெரும் அளவில் உண்மையாகும். ஆனுல் இங்கிலாந்தி லிருந்து படைகள் வந்து இறங்கிய பின்னும் பல மாதங்கள் வரை வன்மையான போராட்டம் நடந்தது. நிக்கல்சன் (Nicholson), லாரன்ஸ் சகோதரர்கள், ஹவ்லாக்கு (Havelock), அவுட்ராம் (Outram), காலின் கேம்பல்(Colin Campbell), ஹியூரோஸ் (Hugh Rose) போன்ற தளபதிகளின் சாதனையும், டெல்லிக் குன்று, காஷ்மீர் வாயில் போன்ற நிகழ்ச்சிகளும் லக்நவ்வை விடுவித் ததும் கைப்பற்றியதும் போன்ற நிகழ்ச்சிகளும் இந்தியாவில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் பிரிட்டிஷாரின் கௌரவத்தைக் காப்பாற்றியது. முன்பு, கிரீமியா யுத்தம் பக்குவப்பட்ட ஆங்கி லப் படைகளின் போர்த் திறத்தை விட, படை அமைப்பு இல் லாமையையே ஐரோப்பாவில் தெளிவாகக் காட்டியது.

கலகத் தீப்பொறி மத்திய இந்தியாவில் பரவுவதற்கு முன் அணைக்கப்பட்டுவிட்டது. வங்காளம், மதராஸ், பம்பாய், வட மேற்கு எல்லைப்புறம் ஆகிய பகுதிகள் கலகத்தில் சேராமல் பற் றுறுதி கொண்டிருந்தன. பெரிய சுதேச இராஜ்யங்களான மைசூரும் ஹைதராபாத்தும் அவ்வாறே விலகி நின்றன. பெருங்

கலகத்தின் ஒரு முக்கிய விளைவு என்னவென்றால் பாதுகாப்புக் குட்பட்ட இந்திய அரசர்களின் நாடுகளைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் சேர்த்துக்கொள்வதில் கவர்னர் ஜெனரல் லார்டு டல்ஹௌசி காட்டி வந்த மட்டு மீறிய ஆர்வங்கொண்ட போக்கு தடை செய்யப்பட்டது. பிரிட்டிஷாரின் நன்மையான ஆட்சி முறையைப் பல பகுதிகளிலும் பரப்புகின்ற நோக்கத்தோடு லார்டு டல்ஹௌசி இக்கொள்கையைப் பின்பற்றிவந்தார். கலகத்தின் முக்கிய பிறப்பிடமாகிய அயோத்தியை டல்ஹௌசி சேர்த்துக்கொண்டது மறைமுகமாகக் கலகத்தைத் தூண்டியது. 1857-க்குப் பின்னர் சுதேச இராஜ்யங்கள் பிரிட்டிஷ் இராஜ்யத்தின் இன்றியமையாத தூண்களெனக் கருதப்பட்டன. பிரிட்டன் நேரடியாக ஆட்சி செய்த மாநிலங்களில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த அரசியல் நெருக்கடிகளில் சுதேச இராஜ்யங்கள் பெரிதும் உதவின.

கலகம் சிப்பாய்களின் கிளர்ச்சியேயல்லாமல் பொதுமக்களின் புரட்சியல்ல. இருந்தபோதிலும் இந்தியாவை மேற்கு நாடுகளின் மயமாக்கும் பணி மிக விரைவாக நடந்தது; எனவே, இந்தியப் பொதுமக்களில் பெரும்பான்மையோர் அச்சமும் பொதுவாக ஓர் தெளிவற்ற அதிருப்தியும் கொண்டிருந்தார்கள் என்பதை இக்கிளர்ச்சி காட்டியது. டல்ஹௌசி சீர்திருத்தங்களிலும் முன்னேற்றங்களிலும் கொண்டிருந்த ஆர்வத்தை ரயில்வேக்கள், தந்தி முறை, ஐரோப்பிய முறை தழுவிய திறமையின் தரங்கள், துப்புரவு, பொதுமக்கள் பணி போன்ற விந்தையான புதுப் படைப்புகளில் காணலாம்.

பெருங்கலகம் முடிந்த பின் இந்த ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டன. இந்தியாவும் இப் புதுமைகளுக்குப் பழக்கப்பட்டு விட்டது. நீண்ட கால அமைதியும் வன்மையான ஆட்சி முறையும் தொடர்ந்தன. 1858-க்குப் பின்னர் கிழக்கு இந்தியக் கம்பெனியின் பெயரை மாற்றி நிர்வாகம் நடத்திய பிரிட்டிஷ் அரசாங்கம் இறுதியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. 1877-ல் டிஸ்ரேலியின் ஆலோசனைக் கேற்ப விக்டோரியா அரசியார் இந்தியாவின் பேரரசி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்கள்.

சிந்தப்பட்ட இரத்தத்தின் நினைவும், இனப்பூசல்களும் ஆள்வோரின் மனச்சான்றையும் ஆளப்படுவோரின் உள்ளத்தையும் கற்பனைத் தோற்றம் போல் சுற்றி வட்டமிட்டன. எனினும் பெருங் கலகத்துக்குப் பின் பல ஆண்டுகளாக நல்ல அரசாங்கம்

தடையின்றி நடைபெற்று வந்தது. பஞ்சமும், பிளேக் பிணியும் விஞ்ஞான முறைகளின் மூலம் எதிர்த்து போராடப்பட்டன. இதற்கு முன் நடந்திராத வகையில் செல்வமும் மக்கள் தொகையும் பெருகி வந்தன.

இத்தகைய அரசாங்கம் ஆதரவற்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. எனினும், இவ்வாறு நலம் கொழிக்கும் ஆண்டுகள் அமைதியாக உருண்டோடியதோடு அதிகார வர்க்கத்தின் ஏதேச்சதிகாரமாக மட்டும் விளங்குவோர் அரசாங்கத்திற்குரிய இன்றியமையாத குறைகளால் பீடிக்கப்பட்டனர். இதுவரை ஆற்றப்பட்ட பணியைப் பற்றித் தனிப்பட்ட முறையில் அவர்கள் கருதினர்களேயன்றி, அரசியல் அரங்கில் நடந்து கொண்டிருந்த மாற்றங்களைப் பற்றி அக்கறைப்படவில்லை. தேசிய இயக்கம் தொடங்கி பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பற்றுறுதி கொண்டிருந்த காலத்தில், மேல் நிலையில் இருந்து அவ்வியக்கத்திற்கு ஆதரவு கொடுத்திருந்தால் வருங்காலத்தின் வழி எளிதாக்கப்பட்டிருக்கும். எண்பதாம் தொண்ணூறும் ஆண்டுகளில் இந்திய தேசிய காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்ட ஆதரவை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். ஆனல் சிறிய அளவில் குறை கூறினலும் கூட, அதனை ஆங்கிலேயர்கள் முதலில் அரசக் குற்றமாகக் கருதினர்கள். பின்னர் அது அரசுக்குற்றமாகவே மாறிவிட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் இரு தரப்பாரிடமும் நிற உணர்ச்சி ஆழமாகியது. இந்தியாவிலிருந்த ஆங்கிலச் சமூகம் விரிவடைந்தும். தன்னிறைவு பெற்றுக் குறுகிய கடற்பயணங்களால் தாய் நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டும் விளங்கியது. இதற்கு மாறுகக் கற்றறிந்த இந்தியர்கள் ஆங்கிலேயரும் பிறரும் புறப்பட்டு வந்த கடல்களுக்கும் மலைகளுக்கும் அப்பாலுள்ள உலகத்தைப்பற்றி அதிகம் அறிந்து கொள்ளத் தொடங்கினர்கள். வெள்ளையர் ஆட்சி வரலாறும், விஞ்ஞான ரீதியுமான உண்மையேயன்றி வெள்ளையர்கள் வானத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள் அல்லர் என்பதையும் புரிந்து கொள்ளத் தொடங்கினர்கள். தேசிய உணர்ச்சியும் தாராளக் கொள்கையும் கொண்ட ஐரோப்பாவின் அரசியல் கருத்துகள் அவர்களுக்கு மிகவும் பழக்கப்பட்டவை. அவர்களின் வெளிநாட்டு அதிபர்களுடைய தற்கால முறைகளை எதிர்ந்து ஒரு பழமை விரும்பும் இனக் கிளர்ச்சி அவர்களின் உள்ளங்களில் நடந்து கொண்டிருந்தது. ரஷியா மீது ஜப்பான் கொண்ட வெற்றியானது (1904) வெள்ளையர்கள் ஆதிக்கத்தைப் பற்றி ஆசிய மக்கள் கொண்டிருந்த எண்ணங்களைப் பாதித்தது.

புதிய நூற்றாண்டில் கற்றறிந்த பல இந்தியர்கள் பகைமை உணர்ச்சிகளையும், சில வேளைகளில் அரசு துரோகத்தையும் அரசியல் குற்றங்களையும் வளர்த்தனர். கற்றறிந்தவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகச் செய்துவந்த பிரசாரம் பழமை விரும்பும் நோக்கமுள்ள குடியானவர்களிடமும் பாமர மக்களிடையேயும் ஓரளவு விளைவுகளை ஏற்படுத்தின.

இவ்வித சிரமமான அமைதியின்மையைக் கட்டுப் படுத்தவும் எதிர்க்கவும் மேல் நிலையிலிருந்து சலுகைகள் வழங்கும் காலம் தொடங்கியது. வங்காளப் பிரிவினைப் பிரச்சினையில் புகழ் பெற்ற இராஜப் பிரதிநிதியான லார்டு கர்சான் செய்த அதிகார பூர்வமான முடிவு சில ஆண்டுகளின் பின்னர் பொது மக்களின் வன்மையான எண்ணத்திற்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் ரத்து செய்யப்பட்டது. கல்கத்தாவில் ராஜப் பிரதிநிதியான லார்டு மிண்டோவும், ஒயிட்ஹாலில் இருந்த ஜாண்மார்லி என்பாரும் சேர்ந்து இயற்றிய 1909ஆம் ஆண்டின் இந்திய கவுன்சில் சட்டம் சட்டப் பேரவைகளில் அரசாங்கத்தின் செயல்களைக் குறைகூறவும் அவற்றைப்பற்றி ஆலோசனை வழங்கவும் அதிகாரம் பெற்ற ஓரளவு தேர்தல் அம்சம் சட்டப் பேரவைகளில் புகுத்தப்பட்டது. 1911-ல் ஐந்தாம் ஜார்ஜ் பேரரசராக டெல்லியில் பெரிய தர்பார் நடத்தினர். அது முதல் டெல்லி இந்தியாவின் தலைநகராயிற்று. ஆண்டு கொண்டிருந்த அரசர்களில் இந்தியாவுக்கு வந்த முதல் அரசர் அவரே.

1914 ஆம் ஆண்டின் பெரும்போர் (1914–1918) குடியேற்ற உரிமை நாடுகள் சுய ஆட்சி பெறப் பேருக்கம் அளித்தது. இதனால் இந்தியாவிலும் குடியேற்ற உரிமை நாடுகளுக்கு இணையான சமத்துவம் கோரப்பட்டது. ஐரோப்பாவில் பிரிட்டன் போராடிக் கொண்டு வந்த சுய நிர்ணய உரிமையை இந்தியர்களுக்கு இனியும் மறுக்க முடியாது என்பதை இந்தியர்கள் உணர்ந்தனர். பிரிட்டிஷ் பேரரசில் இணைந்த ஒரு பகுதியாக இந்தியாவுக்குப் படிப்படியாகப் பொறுப்பாட்சி வழங்குவதே தங்களின் கொள்கையென 1917--ல் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. 1919 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களைப்பற்றிய மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை (Montagu-Chelmsford Report) சிபாரிசு செய்த கொள்கைகளை உள்ளடக்கிய இந்திய அரசாங்கச் சட்டம் (1919–39) மேலே குறிப்பிட்ட பிரிட்டன்அறிக்கையின் விளைவாகும். இதன்படி மாநில்ங்களில் சட்டப் பேரரசுக்கு நிர்வாகத் துறை ஓரளவு கட்டுப்பட்டிருக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டது. மத்திய அரசாங்கம் பேரரசு அரசாங்கத்திற்கும்

பாராளுமன்றத்திற்கும் முழுப் பொறுப்புள்ளது. ஏனென்றால் நாட்டின் பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரங்கள் போன்ற துறைகளைப் பெரிதும் எழுதப்படிக்கத் தெரியாத வாக்காளர் களின் பிரதிநிதிகளைக் கொண்ட அனுபவம் இல்லாத சட்டசபை யின் பொறுப்பில் விடுவது அபாயமானது என்று கருதப்பட்டது. இதன் இன்னொரு காரணம் என்னவென்றால் மத்திய அரசாங் கம் பிரிட்டிஷ் இந்தியாவுடன் மட்டுமல்ல இந்திய சுதேச இராஜ் யங்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததாகும். ஒன்றுக்கு மேற் பட்ட மாநிலங்களில் புதிய திட்டம் வெற்றி பெறவில்லை. ஏனென்றால் முழுப் பொறுப்பாட்சியைத் தவிர வேறெதுவும் தேசிய வாதிகளுக்கு மனநிறைவு கொடுக்கவில்லை. நாடெங்கும் எழுந்த வேலை நிறுத்தங்கள், புரட்சி நடவடிக்கைகள், பிரிட்டிஷ் பொருள்களை விலக்குதல், காந்தி நடத்திய சட்டமறுப்பு போன்ற வகைகளில் கிளர்ச்சி ஓங்கியது. மாநிலங்களில் பாதுகாப்பு களுடன் முழுப் பொறுப்பாட்சி அமைக்கலாமென்று 1930-ல் வெளிவந்த சைமன் கமிஷன் அறிக்கை (Simon Commission Report) சிபாரிசு செய்தது. ஆனால் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பொறுப்பாட்சிக் கருத்து மறுக்கப்பட்டது. ஆனால் சுயஆட்சி பெற்று இயங்குவதாக இருந்தால் ஓர் அனைத்து இந்தியக் கூட்டாட்சியில் (All India Federation) சேரத் தயாராக இருப்பதாகச் சில இந்திய சுதேச அரசர்கள் அறிவித்தார்கள். உடனே 1931-ல் தாம் கூட்டாட்சி சட்டசபைக்குப்(Federal Legis-lature) பொறுப்புள்ள ஒரு கூட்டாட்சி நிர்வாகத்துறை கொள் கையை (Federal Executive) ஏற்றுக் கொள்வதாக ராம்சே மக்டோனல்டின் (Ramsay Macdonald) அரசாங்கம் அறிக்கை யிட்டது. இந்திய மக்களுடன் கலந்தாலோசித்த பின்னர், 1935-ல் இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. (Government of India Act) இதன்படி பதினொரு பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும் தாம் விரும்பிச் சேரத் தயாராக இருந்த இந்திய சுதேச இராஜ்யங்களையும் கொண்ட ஓர் அனைத்து இந்தியக் கூட்டாட்சியை நிறுவ வழி செய்யப்பட்டது. கூட்டாட்சி அதிகாரத்திற்குட்பட்ட பாதுகாப்பு வெளிநாட்டுக் கொள்கை போன்ற துறைகளைத் தவிரப் பிறவற்றில் கூட்டாட்சி அரசாங்க மும் மாநில அரசாங்கங்களும் தத்தமது சட்டசபைகளுக்குப் பொறுப்புள்ளவையாகும்.

எனவே 1937 முதல் மாநிலங்களில் சுய ஆட்சி நிலவி வந்தது. 1939ஆம் ஆண்டு செப்டெம்பரில் கிரேட் பிரிட்டனுக்கும் ஜெர்ம னிக்கும் இடையே போர் மூண்டு அதன் விளைவாக எந்தஅரசியல் அமைப்பு மாறுதலும் சிறிது காலத்திற்கு நடைபெற முடியாத

நிலைமை ஏற்பட்டபோது, மத்திய அரசாங்கத்தில் பொறுப்பாட்சியை நிறுவுவதும் அனைத்து இந்தியக் கூட்டாட்சியை ஏற்படுத்தும் முயற்சியும் வெற்றி பெறவில்லை. கூட்டாட்சி இந்தியாவை அமைக்கும் திட்டத்தை எங்கெந்தத் தொகுதிகளின் கூட்டுறவு தேவைப்பட்டதோ அவை யாவும் எதிர்த்தன. இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் நிலைபெற்று விடும் என்று அஞ்சிய சுதேச அரசர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தரத் தயங்கினர்கள். எனவே கூட்டாட்சி அமைக்கத் தேவையான பேர் இசைவு தர மறுத்துவிட்டனர். யுத்தத்தை எப்படியும் வென்றுவிட வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க ஆர்வம் காட்டினர்கள். ஆனல் காங்கிரஸ் கட்சி போர் முடிந்ததும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்குக் குடியேற்ற உரிமை நாட்டுத் தகுதியை (Dominian Status) வழங்க வேண்டுமென்று திட்டவட்டமான வாக்குரிமையைக் கோரினது. ஆனல் சுதேச மன்னர்கள், முஸ்லீம்கள், பிற சிறுபான்மை சமூகத்தினர் ஆகியோரின் இசைவின்றி அத்தகைய வாக்குறுதியைக் கொடுக்க முடியவில்லை. ஏனெனில் மேற்கூறியவர்களின் தனிப்பட்ட நலன்களையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. எனவே எட்டு மாநிலங்களில் ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் அமைச்சர் அவைகளை ராஜிநாமா செய்து விடுமாறு காங்கிரஸ் மகாசபை பணித்தது. இவ்வாறு பொறுப்பாட்சி அரசாங்கம் கலைக்கப்பட்டதால் கவர்னர்கள் அவசரகால ஆட்சி முறையை நிறுவ வேண்டியதாயிற்று. எனவே வகுப்பு வாத வேறுபாடுகள் இந்தியாவின் அரசியல் அமைப்பு முன்னேற்றத்தைத் தடை செய்வதாகவும் இந்து முஸ்லீம் உறவுகளை மேலும் பாதிப்பதாகவும் அச்சுறுத்தின.

எனினும் இறுதியாக 1947–50-ல் இந்தியாவின் இந்துக் குடியரசு எனவும் பாக்கிஸ்தானின் முஸ்லீம் குடியேற்ற உரிமை நாடு எனவும் இந்தியா முழு சுய ஆட்சி பெற்றது. பிரிட்டிஷ் ராஜ் (British Raj) முடிவுற்றது. ஆனல் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையேயுள்ள நட்பின் அடிப்படையில்தான் இந்த மாற்றம் நிகழ்ந்தது.

நமது நாட்டு மக்கள் இந்தியாவை இன்று ஆளவில்லை. ஆனல் இந்தப் பரந்த துணைக் கண்டத்தை நாம் ஒரு காலத்தில் அடக்கி ஆண்டோம் என்ற பெருங் கதையிலும், வன்முறையும், குழப்பமும், போரும் நிலவிய நாட்டிலே பிரிட்டனின் அமைதியை நிலை நாட்டினேம் என்பதிலும், ஒன்றரை நூற்றுண்டுகளாக இந்தியாவை ஆண்டவர்களின் முதல் எண்ணம் ஆளப்பட்டோரின் நலம் என்பதிலும், காலம் கூடி வந்தபோது நமது பணிகளி

ஞல் தயாரிக்கப்பட்டிருந்த இந்தியர்கள் இங்கனம் சுய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதிலும் நியாயமான பெருமை கொள்ள முடியும்.

இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசு—லார்டு டர்ஹாமும், கனடாவும்—கனடிய எல்லைப்புறம்—அமெரிக்க உள்நாட்டுப் போர்—அலபாமா கோரிக்கைகள்—கனடிய கூட்டாட்சி—ஆஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும்—பெரும் வெளியேற்றம்—மாஜுபா, சிசில் ரோட்ஸ்—தென் அமெரிக்கப் போர்—போதாவும் ஸ்மட்சும்: இந்தியா—இந்தியப் பிரச்சினை—கல்வியும் மொழிப் பிரச்சினையும்—சீக்கியப் போர்கள்: இந்தியப் பெருங் கலகம்—பெருங் கலகமும், அதற்குப் பின்னரும்—எதிர்ப்பும், சலுகைகளும்—இந்திய அரசாங்கச் சட்டம்—வகுப்பு வேறுபாடுகள்.

மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. ஏகர்ட்டன் (Egerton)
   Short History of British Colonial Policey.
2. W. A. டன்னிங் (W. A. Dunning)
   The British Empire and the United States.
3. E. P. ஆடம்ஸ் (E. P. Adams)
   Great Britain and the American Civil War (2 Vols.)
4. ஸ்டுவர்ட் ரீட் (Stuart Reid)
   Life of Lord Durham. (2 Vols.)
5. W. H. மோர்லாண்டும், அதுல் சந்திர சாட்டர்ஜியும் (W. H. Moreland and Atul Chandra Chatterjee)
   A Short History of India, 1936.
6. லையால் (Lyall)
   British Dominion in India.
7. சிரோல் (Chirol)
   India (The Modern world Series, Ed. Fisher, 1926.)
8. பேசில் வில்லியம்ஸ் (Basil Williams)
   Cecil Rhodes.

9. ராம்சே மியூர் (Ramsay Muir)
Short History to the British Commonwealth. (Vols. II)

10. தீல் (Theal)
South Africa. (5 Vols.)

11. பெம்பர் ரீப்ஸ் (Pember Reeves)
The Long white cloud. (New Zealand)

12. லூக்காஸ் (Lucas), ஒயட்டில்பி (Wyatt Tilby)
இவர்களைப்பற்றி இங்கிலாந்தின் வரலாறு–II, பக்கம் 384 அடிக்குறிப்பின் மேற்பகுதி காண்க.

இயல் 4

புதிய சீர்திருத்த யுகம், 1868–1901.

புதிய சீர்திருத்த யுகம்—கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவை 1868–1864—டிஸ்ரேலியும் நவீன கன்ஸர்வேடிவ் கொள்கையும்—கிளாட்ஸ்டன், எகிப்து, சுய ஆட்சி இயக்கம்—லார்ட் ஸாலிஸ்பெரியின் அமைச்சரவைகள்—பொன், வைர விழாக்கள்—சமூகச் சீர்திருத்தமும். பேரரசுக் கொள்கையும்.

அமெரிக்க உள்நாட்டுப் போரில் வட ராஜ்யங்கள் வெற்றி பெற்றதும், பால்மர்ஸ்டனின் மரணமும், ஆங்கில அரசியல் உலகத்தில் விரைவாக ஏற்பட விருந்த மாற்றங்களின் காலம் வந்துவிட்டதென்பதைக் காட்டின. மாறுதல்கள் நிகழ்ந்த புதுக்காலத்தின் தலைவர் கிளாட்ஸ்டன் ஆவார். அக்காலத்திய அரசியல் உணர்ச்சியை அதன் நேர்மை, நம்பிக்கை, மனிதப் பண்பில் அது கொண்டிருந்த உறுதி, சட்டத்துறையிலும், நுணுக்கமான நிர்வாகத்திலும், அவ்வுணர்ச்சிகள் கொண்டிருந்த அறிவு மேம்பாடான புலமை ஆகிய அத்தனை இயல்புகளையும் கிளாட்ஸ்டன் பிரதிபலித்தார். இதே இயல்புகள் மேலே குறிப்பிட்ட அரசியல் உணர்ச்சிகளை வெறும் சொற்களால் மட்டும் வீணாகாமல் காப்பாற்றின. பழைய விக்குக் கட்சி, புதிய முற்போக்கு லிபரல் கட்சியாக மாறிக் கொண்டிருந்த மாற்றத்தைக் கிளாட்ஸ்டன் நிறைவு செய்தார். மேலும் 1868 முதல் 1874 வரை அவர் நிறுவிய முதல் சிறந்த அமைச்சரவை கொண்டு வந்த சட்டங்களின்

மூலம் நிறுவன மாற்றங்களில் நீண்டநாள் எதிர்பார்க்கப்பட்டிருந்த பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பால்மர்ஸ்டனின் தலைமை, கட்சியின் நடவடிக்கைகள் விரைவாக ஏற்பட வழி செய்யவில்லை. கட்சியின் முக்கிய பணி வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதாகும். எனவே சீர்திருத்தம் மிக விரைவாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் வன்முறையால் அல்ல. ஏனெனில் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு மிகக் குறைந்த அளவில் தான் காணப்பட்டது.

இதே காலத்தில் கான்ஸர்வேடிவ் கட்சியை நடத்துகின்ற பொறுப்பும், பாராளுமன்றச் சட்டங்களைத் தள்ளிவிடப் பிரபுக்கள் சபை கொண்டிருந்த கட்டுப்பாட்டைப் பயன்படுத்துகின்ற பொறுப்பும். அறிவுமிக்கவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தனிப்பட்ட முறையில் தனக்கே இருவிதத்தில் பொருந்தும் பொருள்பட, 1868–ல் டிஸ்ரேலி, விக்டோரியா அரசியாருக்குக் கீழ் கண்டவாறு எழுதினர்: 'ஒரு பிரதமர் மிக உற்சாகம் மிகுந்தவராக என்றும் இருக்கக் கூடாது.' 'எதிர்க்கட்சித் தலைவரும் உற்சாகத்தின் சிகரமாக விளங்கக் கூடாது' என்று அவர் கூறியிருந்தாலும் ஓரளவு பொருத்தமாகவே இருக்கும். கான்ஸர்வேடிவ் தலைவரான டிஸ்ரேலியின் நம்பிக்கையற்ற, ஆனல் தெளிவான மனப்பாங்கு, 'அவருடைய கட்சிக்குக் கற்றுக்கொடுக்கின்ற' பணிக்குச் சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் நமது நிறுவனங்களை இன்றியமையாத முறையில் ஜனநாயகப் பண்பு பெற்றதாக ஆக்கவும், அப்படி ஆக்குகின்ற செயல் முறையின் போக்கில் பலமுக்கிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவும் பயிற்சி பெற வேண்டியிருந்தது. ஆனல் 1868–74-ல் கொண்டு வரப்பட்ட சட்டத்துறையின் பெரும் சாதனைகள் கிளாட்ஸ்டனின் சிறந்த ஆர்வத்தின் விளைவாக ஏற்பட்டவை.

இவ்வித மாற்றங்கள் நடந்து கொண்டிருந்த காலத்தில் அரசியல் நுண்ணறிவாளர்களுக்கு அடுத்த அணியில் உறுதுணையாக நின்றவர் தத்துவ அறிஞர் ஜான்ஸ்டுவர்ட் மில்(John Stuart Mill) ஆவார். அவருடைய நூல்கள் அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் கற்றறிந்த மக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்றன. அவர் பென்தாமின் (Bentham) பயனீட்டு வாதத்தைக் (Utilitarianism) காலத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்தி, அதனைத் தலையிடாமைக் கொள்கையின் வன்மையான பிடியிலிருந்து விடுவித்தார். நாட்டின் பொதுத் தேர்தல்களில் மட்டுமல்ல, வட்டாரத் தேர்தல்களிலும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பங்கு பெற வேண்டுமென்ற பொருளில் முழு

ஜனநாயகக் கொள்கையை மில் போதித்தார். ஆனால் ஜனநாயக இயந்திரத்திற்குப் பொருத்தமான பணியின் குறைபாடுகளை அவர் அறிவார். நாட்டின் சிறப்பான துறைகள் ஜனநாயகத்தை வழிநடத்தி, அரசியல்வாதிகளுக்கு வேண்டிய விபரங்களை வழங்க வேண்டுமென்பதும் அவருடைய விருப்பமாகும். 'அதிகாரத்தை வட்டாரச் செறிவுள்ளதாக ஆக்கலாம். ஆனால் அறிவு முழுவதும் பயன்பட வேண்டுமென்றால் மையத்தில் குவிக்கப்பட வேண்டும்' என்று அவர் கூறினார். ஒயிட் ஹால் மாளிகையில் இருந்து சிவில் பணிமன்றத்தின் அலுவல்கள் என்னவென்று வரையறுப்பதும், அவர்களுக்கும் டௌனிங் சாலையின் அரசியல்வாதிகளுக்கும்,நாட்டின் வாக்காளப் பெருமக்களுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதும்தான் மில் வகுத்த நல் அரசாங்கக் கொள்கையில் முக்கிய பகுதிகளாகும். காபட் பின்பற்றிய பழைய தீவிர வாதத்திலோ, அல்லது கலப்பற்ற தலையிடாமைக் கொள்கையிலோ இத்தகைய சிறப்பியல்புகளைக் காண முடியாது.

மில் எழுதிய 'தி சப்ஜெக்ஷன் ஆப் விமன்' (The Subjection of Women) என்ற நூலில் (1869) அவர் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தினார். இந்தக் கொள்கைகள் அவருடைய காலத்திலே அரசியல் வாக்குரிமைகளைப் பாதிக்கவில்லையென்றாலும், பெண்களின் தனிப்பட்ட உரிமைகளுக்குத் தரப்பட்ட மதிப்பு உயரவும், அவர்களுக்கு ஒழுங்கான கல்வி அளிக்க வேண்டுமென்ற முக்கியத்துவத்தையும் மக்கள் உணரவும் வழி வகுத்தது. இவையே விக்டோரியா அரசியார் ஆட்சியின் பிற்பகுதியைத் தனிச் சிறப்புடையதாக ஆக்கினது. இன்று நமது சமூகத்தில் பெண்கள் இருக்கும் இடத்தைப் பெற்றுத் தந்தவர்கள் மில்லும், பிளாரன்ஸ் நைட்டிங்கேலும்[1] என்று சொன்னால் அது மிகையாகாது.

'ஆன் லிபர்ட்டி' (On Liberty) என்ற மில்லின் கட்டுரை, எண்ணச் சுதந்திரமும், வாதிடும் உரிமையும் வழங்கப்படவேண்டுமென்பதற்கு ஒரு கோரிக்கையாகும். இந்த உரிமைகள், சட்டத்தினால் இல்லையென்றாலும், சமூக வழக்காறுகளினால் பெரிதும் தடை செய்யப்பட்டிருந்தன. வளர்ந்துகொண்டிருந்த புதிய தலைமுறை இந்த உரிமைக் கோட்பாட்டுடன் இணைந்து வளர்ந்தது; இந்த உரிமை வேட்கை அரசியலோடு மட்டும் நின்றுவிடவில்லை. டார்வினின் வியத்தகு சுடர்தல் அறக் கோட்பாட்டைப்பற்றிய (Evolution) முதல் நம்பிக்கையற்ற சர்ச்சைகள் நடந்துகொண்டிருந்த காலம் அது. விவிலிய நூலின் சில பகுதிகளை அப்படியே

[1] இங்கிலாந்தின் வரலாறு–III, பிரிவு 6, இயல் 2, பக்கம் 62-க்கு மேற்பட்டவை காண்க.

ஒப்புக்கொள்வதற்கும் சில எதிர்ப்புகள் எழுந்தன. ஆரிஜின் ஆப் ஸ்பீஷீஸ் (Origin of Species) என்ற நூலும், மில் எழுதிய லிபர்ட்டியும் (Liberty) ஒரே ஆண்டில் (1859) வெளிவந்தன. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இயற்கை நூல் பாடத்தில் உயர் பட்டப் படிப்பு நிறுவப்பட்டு வந்தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், நியூமென் (Newman). ப்யூஸி (Pusey), கெபில் (Keble) போன்றவர் ஆக்ஸ்போர்டு இயக்கத்தைத் தோற்றுவித்தனர். இந்த இயக்கம், நியூமென் ரோமன் கத்தோலிக்கராக ஆவதற்கு முன்னர், தான் பிறந்த ஆக்ஸ்போர்டை விட்டு வெளியேறி, நாடு எங்கணும், மதச் சபையிலும் உருவாகக்கூடிய சக்திகளைச் சந்தித்து அவற்றோடு இணைந்துகொள்ளவும் புறப்பட்டுவிட்டது (1833–1845). ஃபிரடெரிக் டென்னிஸ்ன் மௌரிசும் (Frederick Denison Maurice) சார்லஸ் கிங்ஸ்லியும் (Charles Kingsley) தோற்றுவித்த 'கிறிஸ்தவ சோஷியலிசம்', (Christion Socialism) ஜனநாயகத்திற்கும், தொழிற் புரட்சி தோற்றுவித்த சமூகப் பிரச்சினைகளுக்கும் பொருத்தமானவகையில்,மதச் சபைக்குப் புத்துயிரும், புனர் அமைப்பும் அளித்து வந்தது. தற்கால மறை நூல் ஜோவெட்(Jowett),ஸ்டான்லி (Stanley),கொலென்ஸோ (Colenso) என்பவர்களால் வளர்க்கப்பட்டு, டார்வினின் வாதங்களாலும், வரலாற்று வழிமுறையாலும், அறிவாலும், முக்கியத்துவம் பெற்றதோடு, சகித்துக்கொள்ளவும் பட்டது. வெளியுலகில் மிக மும்முரமாக நடந்துகொண்டிருந்த போராட்டங்களின் ஒவ்வொரு அம்சத்திற்கும் பதில் கூறும் வகையில், மதச் சபையானது தன்னிடமிருந்தே நிவாரணங்களை வழங்கக்கூடிய அளவில் இருந்தது. பல்வேறான வழிகளில் பெரும் அளவில் அறிவுப் பெருக்கம் ஏற்பட்டிருந்தது. இன்னும் அதிகமாக ஏற்பட்டிருந்தது என்று கூறினும் மிகையன்று. உள்நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் சமயம் பரப்பும் ஊக்கம் புத்துயிர் பெற்றது. நியூஸிலாந்தில் குடியேற்ற காலத்தின் தொடக்கத்தில் பிஷப் செல்வின் (Selwyn) காட்டிய சமயம் பரப்பும் ஆர்வமும், ஜனநாயக உணர்ச்சியும், தாய்நாட்டு மதச் சபையின் பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்தன. இல்லறத்தோரைப் பொறுத்த அளவில் மதச் சபை துறவோரின் நன்மைகளும், தீமைகளும், கவலையற்ற பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்ததைவிட பெரும் அளவில் மாறுபட்டிருந்தன என்பது உண்மை.[1]

[1] இங்கிலாந்தின் வரலாறு-II, பிரிவு 5, இயல் 1, பக்கம் 245-246-க்கு மேற்பகுதி காண்க. முப்பதாம் நாற்பதாம் ஆண்டுகளின் மதச்சபை வரலாற்றிற்கு டீன் சர்ச்சின் (Dean Church) 'The Oxford Movement' என்ற நூலையும், W. L. மாத்திஸன் (W. L. Mathieson) எழுதிய 'English Church Reform' 1815-40 என்ற நூலையும் படிக்கவும்.

மதச் சபையின் வருமானங்களைப் பங்கிடுவதில் நிலவிவந்த ஊழல்களை, முதல் சீர்திருத்தச் சட்டத்தின் பின்னர் சமய ஆணைக் குழுக்களின் மூலம் (Ecclesiastical Commissioners)பிட்டும், விக்குகளும் சீர்படுத்தினார்கள். எனவே 1867-ல் மேலும் விரிவு செய்யப்பட்ட வாக்குரிமையின் விளைவாக மதச் சபையின் மீது செலுத்தப்படும் எந்தத் தாக்குதல்களையும் தாங்கும் அளவில் மதச் சபை புது முறையில் தயார் செய்யப்பட்டது. மதச் சபையின் சில சிறப்புரிமைகளை, சிறப்பாகப் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த சலுகைகளை விட்டுக்கொடுக்க வேண்டியதிருந்தது உண்மையே. ஆனால் 1832ஆம் ஆண்டில் இருந்ததைவிட, நிலைநாட்டப்பட்ட திருச்சபையின் எதிர்க்கும் ஆற்றல் அதிக வன்மையும், நெகிழ் தன்மையும் பெற்று விளங்கியது. 1832ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தை ஆர்வங் கொண்ட பல மதச்சபைப் பெரியார்களும் எதிர்த்தனர். ஏனெனில் புதுச் சட்டம் மதச்சபைகளின் கலைப்பிற்கும், மான்யமிழத்தலுக்கும் அடிகோலும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

அறுபதாம் ஆண்டுகளில் எழுந்த சமூக மாற்றங்களும், அறிவு சார்ந்த இயக்கங்களைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்போனால் சலிப்பு தட்டும். கைத்தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்ற வேலையாட்களுக்கான சிறப்புப் பெற்ற தொழிலாளர் சங்கங்களை நிறுவியதை மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் குறிப்பிடலாம். உழைப்பாளி மக்களை வாணிபப் பழக்க வழக்கங்களிலும், சிக்கனத்திலும், பரஸ்பர நம்பிக்கையிலும், பயிற்சிபெறச் செய்த கூட்டுறவு இயக்கமும், அவர்களைக் கடைக்காரர்களின் சுரண்டல்களிலிருந்து விடுவித்து 'நாட்டில் அவர்கள் நன்கு ஊன்றி நிற்குமாறு செய்தது.

இரண்டாம் சீர்திருத்த மசோதாவின்படி[1] புதிதாக வாக்குரிமை பெற்ற சமூக வகுப்பினர்கள், 1868-ல் நடந்த பொதுத் தேர்தலில், கிளாட்ஸ்டனின் தலைமையில் இயங்கிய கட்சியின் தீவிரவாதிகளின் கைகளைப் பலப்படுத்தி, கிளாட்ஸ்டனின் பொறுப்பில் மிகப் பெரும்பான்மை வாக்குகள் என்ற கருவியை ஒப்படைத்தனர். அவருடைய முதல் அமைச்சரவை தான் (1868–1874) ஆங்கில வரலாற்றிலேயே தெளிவான முறையில் விக்குகள் என்றல்லாமல், லிபரல்கள் என்ற முற்போக்கு வாதிகள் என்றழைக்கப்பட தகுதி பெற்றவர்கள். 1868-ல் கான்ஸர்வேடிவ் கொள்கையும், சோஷியலிசமும் தற்காலிகமாக விலக்கி

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 2, பக்கம் 68-70-ம் மேற்பட்டவையும் காண்க.

வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலைமை நீடித்து நிலைக்கும் தன்மை பெற்றிருக்கவில்லை என்றாலும், ஆறாண்டுகள் பதவி வகித்த காலத்தில் கிளாட்ஸ்டன் அவற்றைப் பயன்படுத்திய முறையினால் நாட்டுக்குத் தேவையான நவீன நிறுவனங்களையும் பணித் துறைகளையும் நிறுவிக்கொள்ள உதவின. இவற்றின் துணையில்லாமல் இங்கிலாந்து, வருங்காலத்திய சமூகப் பேரரசு சார்ந்த பிரச்சினைகளையும் எதிர்ப்பதற்குத் தேவையான நிலைமையில் தயாராகி இருந்திருக்க முடியாது. இந்த ஆண்டுகளில் எல்லாச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. நாட்டிற்குப் பொதுவான தொடக்கக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டது. இராணுவச் சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்டன. சிவில் பணித் துறைகளை யாவரும் பங்கு பெறுமாறு அனுமதிக்கும் திட்டம் நிறைவெய்தியது. வாக்குச் சட்டம் (Ballot Act) நிறைவேற்றப்பட்டது. அயர்லாந்துடன் உடன்பாடு காண்கின்ற பணியின் தொடக்க முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

உருளைக்கிழங்கு பயிர்கள் பொய்த்ததால், 1845–46–ல் அயர்லாந்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், குடியேற்றங்களுக்கும் அயர்லாந்து மக்கள் மொத்தமாகக் குடிபெயர்ந்தார்கள். இதன் விளைவாக அந்நூற்றாண்டின் இறுதியில் மக்கள் நெருக்கமுள்ள அயர்லாந்தின் மக்கள் தொகை, உயர்ந்த பிறப்பு விகிதம் இருந்தபோதிலும், எட்டு மில்லியனிலிருந்து நான்கரை மில்லியன்களாகக் குறைந்துவிட்டது. ஆனால் பஞ்சம் ஏற்பட்டு இருபதாண்டுகள் ஆனபின்னரும், ஆங்கில நிலக் கிழார்களுடன், அயர்லாந்தின் குடியானவர் கொண்டுள்ள உறவுகளில் இருந்த குறைபாடுகளை நீக்க எதுவும் செய்யப்படவில்லை. அயர்லாந்தின் தொன்மையான வழக்கப்படி நிலக்கிழார் மட்டு மீறிய வாடகை விதிக்கவும், கொடுக்காத மான்யதாரரை நிலத்தைவிட்டு வெளியேற்றவும் உரிமை பெற்றிருந்தார். ஆனால் நிலக்கிழார் நிலத்தில் எந்த முதலும் போடமாட்டார். நிலத்தில் எவ்வித அபிவிருத்தியும் செய்வதுமில்லை. சிறு நிலக் குடியானவரே பண்ணையின் வீட்டையும், பிற காரியங்களையும் கவனித்துக்கொள்ள வேண்டியது. இங்கிலாந்தில் நிலவிய ஏற்பாட்டிலிருந்து வேறுபட்ட இந்தத் திட்டம் நிலக்கிழார்களால் தங்களின் நன்மைக்கெனப் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் மான்யதார்களினின்றும் சமயத்தாலும், இனத்தாலும் வேறுபட்டவர்கள். அயர்லாந்தின் நிலத்தை உழுது பயிர் செய்வோர்களிடமிருந்து நிலக்கிழார்களின் கையாட்கள் பெற்றுவந்த வருமானத்தைச் செலவு செய்துகொண்டு அவர்கள் அடுத்த தீவிலே சுகமாகக் காலங் கழித்து வந்தார்கள்.

பஞ்சத்திற்குப் பின் இருபதாண்டுகளாக கெல்டிக் அயர்லாந்து வலுவிழந்து, கிளர்ச்சிகள் செய்யக்கூட் ஊக்கமின்றி இருந்தது. ஆனால் இதனோடு ஒத்துக் காண்கின்றபோது, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், குடியேற்றங்களுக்கும் சென்று குடியேறிய அயர்லாந்து மக்கள் தேடிய செல்வமும், செல்வாக்கும், அவர்கள் இங்கிலாந்திற்கு எதிராகக் கொண்ட வெறுப்புணர்ச்சியும், தாய் நாட்டையும் ஓரளவில் பாதித்தது. அமெரிக்க உள்நாட்டுப்போர் முடிந்தபின்னர் எழுந்த ஃபெனியன் இயக்கம் (Fenian) பிரிவினை நோக்கமும், குற்ற முறையான வழிவகைகளையும் கையாண்டு வந்தது. இத்தகைய இயக்கம் அமைதியாகத் தோன்றிய அயர்லாந்தின் பிரச்சினை புறக்கணிக்கப்பட்டிருந்ததேயன்றி, தீர்வு காணப்படவில்லை என்பதை ஆங்கிலேயர்களுக்கு மிகவும் கசப்பான வழியில் நினைவுறுத்தியது.

அயர்லாந்துடன் உடன்பாடு காணவேண்டுமென்று சிறிது அக்கறையுடன் பொறுப்புணர்ந்த முதல் அரசியல் நுண்ணறிவாளர் கிளாட்ஸ்டன் ஆவார். 1870-ல் அவர் கொண்டுவந்த அயர்லாந்து நிலச் சட்டம் (Irish Land Act) அதிக வெற்றி பெறவில்லையென்றாலும், ஆங்கிலேயர்கள் அயர்லாந்துப் பிரச்சினையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டிய முதல் முயற்சியாகும். இதனைத் தொடர்ந்து பன்னிரு ஆண்டுகளுக்குப் பின்னர், கிளாட்ஸ்டன் நியாயமான வாடகை விதிக்கவும், உறுதியான மான்யப் பாதுகாப்பு அளிக்கவும் சட்டங்களைக் கொண்டுவந்தார் (1881). நிலச் சங்கம் (Land League) தீவிரமாக இருந்த காலத்தில், ஒதுக்குதல் பகிஷ்காரங்களாலும், விவசாயிகளின் குற்றங்களாலும் இன்னும் அழிந்துவிடாமல் இருந்த நிலப் பிரச்சினையானது ஒரு கான்ஸர்வேடிவ் அரசாங்கம் அயர்லாந்தில் இருந்து ஆங்கில நிலக்கிழார்களைத் திருப்பி வரவழைக்கும் ஏற்பாட்டில் முற்றுப்பெற்றது (1903). ஆனால், கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவைக் காலத்தில் (1868-1874) கிளாட்ஸ்டன் நீங்கலாக மிகச் சிலரே, அயர்லாந்து நிலப் பிரச்சினையின் உண்மையான பொருளையும், அது எவ்விதம் ஆங்கில நிலப் பிரச்சினையினின்றும் இன்றியமையாத முறையில் வேறுபட்டது என்பதையும் புரிந்துகொண்டிருந்தார்கள். அயர்லாந்தின் குடியானவன் நிலக்கிழாரோடு செய்துகொள்ளும் 'சுதந்திரமான உடன்பாட்டில்' தலையிடப் பல முற்போக்கு லிபரல்களும், கான்ஸர்வேடிவ்களும் கூட விரும்பவில்லை. இத்தகைய உடன்பாடு அயர்லாந்தில் இருப்பதாக அவர்கள் கற்பனை செய்துகொண்டார்கள்.

இதற்கு மாருக, மில்லின் தத்துவத்தின் பயிற்சி பெற்ற அறிவு சார்ந்த வகுப்பினர், சமயத்தில் சமத்துவம் அளிக்கும் உயர் குறிக்கோளை மனம் விரும்பிக் கொண்டனர். இரண்டாம் சீர்திருத்தச் சட்டத்தினுல் தமது முழுவிடுதலையைப் பெற்றிருந்த இணங்காதார்களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இவர்களின் பொதுத் தலைவரும், புது வழியைச் சேர்ந்த மத மேலார் கட்சி வாதியுமான கிளாட்ஸ்டன், ஆக்ஸ்போர்டின் சமயக் கொள்கைக்கும், அரசியல் முற்போக்குவாதத்திற்கும் தன் மனத்திலேயே ஒரு இணைப்பை ஏற்படுத்திக்கொண்டார். மதச் சபையைப் பற்றியும் அரசாங்கத்தைப் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துக்கள், முப்பதாண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதி மெக்காலே மதிப்புரை வழங்கி இருந்த நூலில் கூறியிருந்த கருத்துக்கள் அல்ல. எனவே சமயத் துறையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் அயர்லாந்துடன் உடன்பாடு காண முடியும் என்ற திட்டம், 1869–ல் நடைபெறுவதற்கு வழி தோன்றியது. அவ்வாறே அதுவும் வெற்றி கண்டது. அயர்லாந்து புரோட்டஸ்டாண்டு மதச்சபையின் கலைப்பும், பகுதி மான்யங்களின் குறைப்பும் கிளர்ட்ஸ்டனின் திறமையினுல் கருணையுடன் நிறைவேற்றப் பட்டது. உற்சாகம் நிறைந்த மதச்சபை வாதி என்ற முறையில் கிளாட்ஸ்டனுக்கு இருந்த செல்வாக்கு மேற்கூறிய உடன்பாட்டின் பேச்சுவார்த்தைகளுக்கு மிகவும் பயன்பட்டது. பிரபுக்கள் சபையினரும், பிஷப்புகளும், முப்பதாண்டுகளுக்கு முன்னர் தமது முன்னேர்கள் கொண்டிருந்த மனப்பான்மையினின்றும் வேறுபட்ட ஒத்துழைப்பு காட்டி, அவர்களால் கூடிய அளவு சிறந்த நிபந்தனைகளைக் கோரி, சட்டம் நிறைவேறும்படி இசைவு தந்தார்கள்.

கிளாட்ஸ்டனின் பரந்த நோக்குள்ள தலைமையும், இணங்காதார்களையும், சமய சமத்துவத்தில் நம்பிக்கை கொண்ட கல்வித் துறைப் பெருமக்களையும் கிளாட்ஸ்டன் தலைமை தாங்கி நடத்திய விதமும், பல்கலைக் கழகங்களையும், கல்வியையும் பொறுத்த தனிச் சிறப்புடைய ஆங்கிலப் பிரச்சினைகளில் மிகவும் முக்கிய பங்கு பெற்றன. பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகங்களைச் சீர்திருத்த வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கையானது, ஐம்பதாம் ஆண்டுகளில் தான் முதல் முதல் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுகாலை கிளாட்ஸ்டனின் திறமையான தலைமையில் முதல் பல்கலைக் கழக ஆணைக் குழு (University Commission) தனது பணியைத் தொடங்கிவிட்டது. ஆனல் அதுபோது மதச்சபையின்

தனியுரிமைகளை அழிக்க முடியவில்லை. இரண்டாம் சீர்திருத்த மசோதாவின் பின்னரும், 1868ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் விளைவாகவும், கல்லூரிகளின் உறுப்பினர் பதவிகளையும், பல்கலைக் கழகப் பதவிகளையும் எந்தச் சமயப் பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளும், சமயச் சார்பு அற்றவர்களும் கூட வகிக்கலாம் என்று ஏற்பட்டது (1871). லண்டன், டர்ஹாம் பல்கலைக் கழகங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலும், இருபதாம் நூற்றாண்டின் முதல் பன்னிரு ஆண்டுகளிலும், இங்கிலாந்து முழுவதிலும், வேல்ஸ் நாட்டிலும் பல கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் எழுந்தன. ஸ்காட்லாந்திலும் ஏற்கெனவே கல்வி நிறுவனங்கள் பல ஏற்பட்டிருந்தன.

பல்கலைக் கழகங்களின் கல்வி ஒரு சிலரின் தனியுரிமையாக இருப்பது அழிக்கப்பட்டவுடன், நடுத்தரக் கல்வி முன்னேற்றமடைந்து பரவத் தொடங்கியது. அந்நூற்றாண்டு முடிவதற்குள் இங்கிலாந்தின் நடுத்தர வகுப்பினர்களுடைய கல்வியின் பின் தங்கிய நிலையைச் சீர்படுத்துவதில் பெரும் ஆர்வம் காட்டப்பட்டது. நடுத்தர வகுப்பார் கல்வி முறையை ஒரு முறை மாத்யூ ஆர்னல்டு (Matthew Arnold) பேச்சாளருக்குரிய மிகையோடு, ஐரோப்பாவிலே மிக இழி நிலையிலுள்ள முறை என்று குறிப்பிட்டார். நடுத்தர வகுப்பு மக்களிடையே கல்வியும், கலாச்சாரமும் பரவியதால், அவர்கள் உடலாண்மை விளையாட்டுக்களில் ஈடுபாடும், அறிவு சார்ந்த துறைகளைத் தவிர மகிழ்ச்சி தரும் பொழுதுபோக்குகளிலும் ஆர்வங் காட்டத் தலைப்பட்டார்கள். ஆண்டுதோறும் எல்லா வகுப்பு மக்களிடமும் ஓய்வும், பொழுதுபோக்குகளும் நாடுகின்ற வழக்கம் அதிகரித்தது. மேலும் சிரமப்பட்டு உழைக்கின்ற மக்களின் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பியூரிட்டானிய வாதம், புது வகையான வாழ்க்கைத் தரங்களுக்கு மேலும் மேலும் வழிவிட்டது. ஆனால் இத்தகைய மாறுதல்கள் யாவற்றையும் பழைய வாழ்க்கை முறைகளைவிடச் சிறந்தவை என்று கூறிவிட முடியாது.

வில்லியம் எட்வர்ட் ஃபாரஸ்டர் (William Edward Forester) கொண்டுவந்த கல்விச் சட்டத்தினால் (1870) தொடக்கக் கல்வியும் தேசிய அடிப்படையில் நிறுவப்பட்டது. பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 'பள்ளிக் குழு' (School Board) வின்கீழ்ப் புதுப் பள்ளிகள் நிறுவப்பட்டன. குறிப்பிட்ட சமயப் பிரிவுகளைச் சாராத பொதுச் சமயக் கல்வி மட்டுமே கற்றுக்கொடுக்க அனுமதி வழங்

கப்பட்டது. இதற்கு மாருக ஏற்கெனவே பள்ளிகள் நிறுவப்பட்டிருந்த இடங்களில் தனி நபர்களால் தாமே விரும்பி நடத்தப்பட்ட பள்ளிகளுக்குப் பெரிதும் அதிகரிக்கப்பட்ட கருவூல மானியங்களை வழங்கியும், அவற்றின் மதச்சபைப் பண்பை அழித்து விடாமலும் காப்பாற்றி வந்தனர். இவ்வாறு மானியங்களை உயர்த்தியது இணங்காதார்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏனெனில் அவர்களுடைய குழந்தைகள் நாட்டுப்புறப் பகுதிகளில் இன்னும் மதச்சபைப் பள்ளிகளுக்கே போக வேண்டியதிருந்தது. ஆனல் இந்த உடன்பாடு காரணமாகப் பிரபுக்கள் சபையில் மானிய மசோதா நிறைவேறியது. இம்மசோதாவினல் முற்போக்குக் கட்சியில் பிளவு ஏற்பட்டதென்ருலும், நாட்டிற்கு நன்மையே விளைந்தது; இதனல் இங்கிலாந்தில் எழுதவும், படிக்கவும் தெரிந்த மக்கள் தொகை பெருகியது. குடிசைகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த குழந்தைகளுக்கு நல்ல பயிற்சியும், ஒழுக்கக் கட்டுப்பாடும் கொடுத்தது. அடுத்த அரை நூற்ருண்டில் நிகழவிருந்த பெரும் கல்வி முன்னேற்றத்தையும் இந்த மசோதா தொடங்கி வைத்தது.

கிளாஸ்டனின் முதல் அமைச்சரவை நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட படைச் சீர்திருத்தத்தையும் தொடங்கி, தீபகற்பப் போர்க் காலத்திலும், கிரிமியப் போரின்போதும் நிறுவப்பட்டிருந்த அமைப்பு முறைகளினின்றும் வேறுபட்ட தற்காலப் படை அமைப்பு முறையை ஏற்படுத்தியது. போர் அமைச்சராக இருந்த கார்ட்வெல் (Cordwell) என்பாரே இத்தகைய சீர்திருத்தங்களைச் செய்தார். இவருக்கு எதிராகப் பழைய படைத் தலைவர்களின் வேரூன்றிய தன்னலங்கள், அரசியரின் ஒன்றுவிட்ட சகோதரரான கேம்ப்ரிட்ஜ் கோமகனரின் (Duke of Cambridge) தலைமையில் அணிவகுத்து நின்றன. ஆனல் பல முக்கிய சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கம் வெற்றி பெற்றது. படைத் துறையில் நிலவிய இரட்டைக் கட்டுப்பாட்டுமுறை அழிக்கப்பட்டது. இதன் மூலம் குதிரைப் படை வீரர்கள் படைத் துறைப் பணிமன்றத்திற்கு அடங்கியிருக்கும்படி செய்யப்பட்டது; அதாவது படைத் தலைவர் படைத்துறைச் செயலாளருக்குக் கீழ்ப்படியும்படி ஏற்பட்டது. சாதாரணத் திறமையுள்ள வீரர்களின் பதவி உயர்வைத் தடுத்துவந்த படை ஆணைகளை வாங்கும் முறையும் அழிக்கப்பட்டது. படைகளில் குறுகிய காலப் பணிக்கு ஆள் திரட்டும் முறை கொண்டு வரப்பட்டது. இதனல் முதல் முதலாக ஒழுங்கான சேமப்படையை நிறுவுகின்ற வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய மாறுதல்களால், நூற்ருண்டின் இறுதி ஆண்டுகளில் போரின் திறமை உயர்வதற்கு வழி ஏற்பட்டது. ஸர் கார்னட் வூல்ஸிலி (Sir Garnet Wolseley) என்பவரால் சிறப்பு

பெற்ற இத்திறமைகளை ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் நிகழ்ந்த பல போர்களின் காலத்தில் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இரண்டாம் போயர் யுத்தத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் இன்னும் பல மாறுதல்களைச் செய்யுமாறு தூண்டின. இதன் விளைவாக 1914-ல் சிறந்தவொரு அவசரகாலப் படையும், பிரதேசப் படையும் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டன.

படையில் ஆணைகளை வாங்கும் வழக்கத்தை நீக்க உதவிய அதே கருத்துக்கள்தான், பொதுத்தேர்வுகள் மூலம் சிவில் பணித் துறை அலுவல்களைப் போட்டிக்கு விடும்படியும் தூண்டின. 1870-ல் கிளாஸ்டன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இந்த மாற்றத்தை நிறைவு செய்தன.[1]

ஆறாண்டுச் சாதனைகளின் பின்னர் கிளாஸ்டனின் முதல் அமைச்சரவை தன் பணியை நிறைவேற்றிவிட்டது; இந்த அமைச்சர்களை 'வெடித்து ஆறிக்கிடக்கும் எரிமலைகளுடன்' ஒப்பிட்டு டிஸ்ரேலி பேசினார். ஏனெனில் இந்த எரிமலைகளின் குழம்பு வெளிப்பட்டு ஓடுவதை டிஸ்ரேலியும் தடுக்கவில்லை. அவர்களின் கொள்கைகள் செயலாக்கப்படுவதைப் பிரபுக்கள் சபையும் அனுமதித்தது. அவர்கள் செய்யவேண்டுமென்று நாடு எதிர் பார்த்திருந்த சாதனைகள் நல்ல முறையில் செய்யப்பட்டுவிட்டன; எனவே 1874-ல் நடந்த பொதுத் தேர்தலில் கான்சர்வேடிவ் களின் எதிர்ப்பு கிளம்பியது இயல்பானதே.

இவ்வாறு தம் எழுபதாம் வயதில் டிஸ்ரேலி பிரதமராக உண்மையான அதிகாரம் முழுவதையும் கைப்பற்றினார் (1874-1880). அவருடைய அமைச்சரவையின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளிலும். டிஸ்ரேலி கொண்டிருந்த கருத்துகளின் முத்திரையைக் காணலாம்.

உள்நாட்டைப் பொறுத்த வரையிலும் புதிய கான்ஸர்வேடிவ் கொள்கைக்கும், சமூக சீர்திருத்தங்களுக்கும், உழைப்பாளி மக்களுடன் உடன்பாடு காண்பதற்கும் உள்ள தொடர்புகளை வெளிக் காட்ட வேண்டுமென்று டிஸ்ரேலி விரும்பினார். தன் உள்துறை அமைச்சரான ரிச்சர்டு கிராஸ் (Richard Cross) என்பாரின் துணைகொண்டு, 1875-ல் டிஸ்ரேலி கொண்டு வந்த பொதுச் சுகாதாரச் சட்டத்தின் மூலமும் (Public Health Act) 'ஊழியர்

[1] இந்திய, ஆங்கில சிவில் பணியாளராக இருந்த சர் சார்லஸ் ட்ரெவெல்யன் (Sir Charles Trevelyan) என்பார் மேற்கூறிய இருவித இயக்கங்களையும் தொடங்குவதில் பேரூக்கம் காட்டினார்.

குடியியல்பு மசோதா' (Artisans' Dwelling Act) வின் மூலமும், சேரிகளையும் துப்புரவு அற்ற நிலைமைகளையும் சீர்திருத்தத் தொடங்கினர். இத்தகைய நடவடிக்கைகளும், பெரும் அளவில் அதிகரித்து வந்த தல அதிகாரிகளுடன் ஒத்துழைக்கும் நோக்கத்துடன் 1871-ல் கிளாஸ்டன் நிறுவியிருந்த தல ஆட்சிக் குழுவின் (Local Government Board) இடைவிடாத பணிகளாலும் சில முக்கியமான கழுவாய்கள் ஏற்பட்டன. ஆனால் முறையற்ற கட்டட வேலைகளும், தரங்குறைந்த நகர அமைப்புத் திட்டங்களும் கடந்த நூற்றாண்டுகளில் சரியான முறையில் தொடங்கப்படாததால், அவற்றைப் பொறுத்த அளவில் பெரும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

கட்டடங்கள் அழகில்லாமலும், ஒரே மாதிரியாகவும் கட்டப்படும் முறை மட்டு மீறி வளர்ந்துகொண்டுவந்ததைத் தடைசெய்வதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. தொழிற்புரட்சிக்கு முந்திய யுகத்தில் காணப்பட்ட அழகும், பலதிறப்பட்ட கட்டட வகைகளும் இடைவிடாமல் பாழாக்கப்பட்டன. நாட்டின் வளமும், முற்போக்கும் வளர வளர, இந்த அழகுக் கொலையும் இடைவிடாத விரைவுடன் நிகழ்ந்தது. பொறிகளைப் படைக்கலமாகக் கொண்டுவிட்ட மனிதன், தன் பணி எதுவாக இருந்த போதிலும், அழகை அழிப்பதைத் தவிர்க்க முடியவில்லை.[1]

வேலை நிறுத்த காலங்களில், தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய இடைவிடாத சிக்கலின் உச்ச நிலையில் டிஸ்ரேலி ஒரு முடிவு செய்ய முடிந்தது. 1867-ல் கொடுக்கப்பட்ட ஒரு நீதிமன்றத் தீர்ப்பு, 1824–25[2] ஆம் ஆண்டுச் சட்டப்படி தொழிற்சங்கங்கள் அனுபவித்து வந்த சட்ட பூர்வமான உரிமைகளை மறுத்தது. வாணிகத்தைப் பாதிக்கக் கூடிய அளவில் தொழிலாளர்கள் ஒன்றுபடுவது சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. கிளாஸ்டன் தமது 1871ஆம் ஆண்டுத் தொழிற்சங்கச் சட்டத்தின் மூலம் இந்தக் குறையைத் தீர்த்தார். ஆனால் அதே ஆண்டில் அவர் கொண்டு வந்த குற்றச் சட்டத் திருத்தச் சட்டம் (Criminal Law Amendment Act) வேலை நிறுத்த காலங்

[1] 'பத்தொன்பதாம் நூற்றாண்டு அழகினைத் தாக்கவில்லை. ஆனால் அதைக் காலின் அடியில் போட்டு மிதித்தது. இதன் விளைவாக நமது தற்கால ஜனநாயகம் வலுவிழந்து பிறக்குப்படி ஆயிற்று. வேதனைப்பட்டு வளர்ந்து வெண்கலக் காலம் முதல் நாகரிக மனிதனின் முக்கிய இயல்புகளில் ஒன்றான அழகு உணர்ச்சியைப் பெற வேண்டியதாயிற்று. இதுவும் தொழிற் புரட்சியால் தற்காலிகமாக அழிக்கப்பட்டது' என்று ஒருவர் அழகாகக் குறிப்பிட்டார். (Times Literary Supplement, ஏப்ரல் 25, 1924.)

[2] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 2, பக்கம் 17, மேற்பகுதி காண்க.

களில் மறியல் செய்வது போன்ற நடவடிக்கைகளைச் சட்ட விரோதமானவை என்று முடிவு செய்தது. எனவே கிளாஸ்டன் மீது கோபங்கொண்ட தொழிற்சங்க வாதிகள் 1874ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளாமலோ, அல்லது டிஸ்ரேலியை ஆதரித்தோ தமது எதிர்ப்பைக் காட்டினார்கள். ஆனால் இவர்களே 1868 ஆம் ஆண்டுத் தேர்தலில் கிளாஸ்டனை ஆதரித்திருந்தார்கள். கான்ஸர்வேடிவ் கட்சித் தலைமை அமைச்சராகிய டிஸ்ரேலி, 1875-ல் கிளாஸ்டனின் குற்றச் சட்டத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்தார். இதன் விளைவாக வேலை நிறுத்த காலத்தில் நிகழக் கூடிய வன்முறைச் செயல்களும், அச்சுறுத்துதல் நடவடிக்கைகளும், பொதுக் குற்றவியல் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டுமென விடப்பட்டன.

வெளி நாட்டுக் கொளகையைப் பொறுத்த வரையிலும், டிஸ்ரேலி, தான் நடத்திய கட்சிக்கும், பிரிட்டனின் தேசிய நலன்களுக்கும் உள்ள தொடர்பை வியத்தகு முறையில் உறுதிப்படுத்தினார். வாட்டர்லூ போருக்குப்பின்னர் இத்தகைய உறவு குறிப்பிடத் தக்க வகையில் விளங்கவில்லை. வியன்னா ஒப்பந்தங்களுக்குப் பின்னர், டோரிக் கட்சியோ, விக்குக் கட்சியோ, மேற்கூறிய ஐரோப்பிய உடன்படிக்கைகளை ஏற்படுத்த சிறந்த முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், சில வேளைகளில், பால்மர்ஸ்டனையும், அவரைப் பின்பற்றியவர்களையும் விட அதிக அமைதிநாடுவோர்களாக இருந்தனர். ஏனென்றால் விக்குகளும், தீவிரவாதக் கட்சியினரும், 1815 ஆம் ஆண்டுத் திட்டத்திற்குக் குறைந்த மதிப்பும், அதனைச் சிதைக்க விரும்பிய கட்சிகளிடமும் நாடுகளின் மட்டிலும் அதிகப் பரிவும் கொண்டிருந்தார்கள். மேலும் காலனிகளின் நலன்களிலும் கான்ஸர்வேடிவ்கள், டர்ஹாமைப் பற்றிப் பெருமை கொள்ளும் அவர்கள் எதிரிகள் காட்டியதைவிட அதிக அக்கறை காட்டவில்லை. 'இந்த இழிவான குடியேற்றங்கள் நமது கழுத்துகளில் கட்டித் தொங்கவிடப்பட்ட இயந்திரக் கற்கள்' என்று 1852-ல் டிஸ்ரேலியே குறிப்பிட்டார். ஆனால் டிஸ்ரேலியின் முதுமைக் காலத்தில், புதிய நிலைமைகள் உண்டாக்கியிருந்த பேரார்வமானது, புதிதாக வாக்குரிமை வழங்கப்பட்டிருந்த ஜனநாயகத்திலும், பேரரசிலும். எழுச்சிமிக்க வெளிநாட்டுக் கொள்கையிலும் பெருமை கொள்ளச் செய்தன. ஆனால் குடியேற்ற நாடுகளின் நலன்களில் 'காட்டப்பட்ட ஆர்வம் இன்னும் முதிராத நிலையிலேதான் இருந்தது. அடுத்த தலைமுறையில் தான் ஜோசப்சேம்பர்லேய்னின் தலைமையில், இந்த ஆர்வம் வளர்ந்தது. டிஸ்ரேலியின் நடவடிக்கைகளின் முக்கிய அரங்கம் அண்மைக் கிழக்கு நாடுகளாகும் (Near East).

அவர் சூயஸ் கால்வாயின் (Suez Canal) பங்குகளை இங்கிலாந்திற்காக வாங்கிய போது எகிப்துடன் தொடங்கப் பெற்ற உறவுகள், அவர் மரண மடைந்தபோது பெரும் அளவில் வளர்ந்து விட்டன. 1876 முதல் 1878 வரை டிஸ்ரேலியும் கிளாஸ்டனும் சினங்கொண்டும் மகத்தான முறையிலும் சண்டை போட்டுக் கொண்டதால் பால்கன் போர்களையும், படுகொலைகளையும் மற்றய விவரங்களைப் பற்றி நாட்டு மக்களின் உணர்ச்சிகள் தூண்டி விடப்பட்டன. இந்த அறிவு சார்ந்த இருபெரு மக்களும் இல்லாவிட்டால் மேற்கூறிய பூசல்கள் இங்கிலாந்திற்குச் சம்பந்த மில்லாத காக்கைக் குருவிப் போராட்டமாகவே இருந்திருக்கும்.

இப்போது லார்ட் பீக்கன்ஃபீல்டு (Lord Beaconsfield) ஆகிவிட்ட டிஸ்ரேலி ரஷ்யாவின் செல்வாக்கிற்குத் தடையாக ஐரோப்பாவில் துருக்கியர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் வன்மையான ஆதரவாக இருக்கும்படி செய்தார்; ஆனால் இவருக்கு எதிராக கிளாஸ்டன் துருக்கியின் 'பல்கேரியக் கொடுமைகளைக்' காட்டிப் பிரசாரம் செய்து, கிழக்கு நாடுகளின் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவ இனங்களுக்குப் பிரிட்டிஷ் பொதுமக்களில் பாதிப் பேர் முக்கியமான ஆதரவு கொடுக்கும்படியாகச் செய்துவந்தார். இது பிளவுபட்டுக்கிடந்த நமது நாட்டிற்குப் பெரும் ஆபத்துகளைத் தரக்கூடிய சிக்கலான நிலைமையாகும். நல்லகாலமாக பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே செய்யப்பட்ட பெர்லின் உடன்படிக்கையின் (Treaty of Berlin-1878) விளைவாக இச்சிக்கல் தீர்க்கப்பட்டது. இதுவே டிஸ்ரேலி 'கண்ணியத்துடன் கொண்டுவந்த அமைதியாகும்'. உண்மையில் 'அவர் இங்கிலாந்தை ஐரோப்பிய அவைகளில் முக்கியமானதாக ஆக்கி, பிற நாட்டவர்கள் இங்கிலாந்தின் விருப்பங்களுக்கு மதிப்புத் தருமாறு செய்தார். ஆனால் இன்னும் ஒரு தலைமுறைக் காலத்திற்குத் துருக்கியர்கள் ஆட்சிக்குப் பணிந்திருக்கும்படி விடுதலை பெற்ற மாசிடோனியர்களை மீட்டது, இங்கிலாந்தின் விருப்பத்திற்கு ஏற்றபடி செய்யப்படடதா என்ற கேள்விக்கு எளிதில் பதில் கூற முடியாது. புதிதாக உருவாக்கப்பட்ட பல்கேரியா நாட்டுடன் மாசிடோனியாவை இணைத்துவிடக் கூடாதென்று டிஸ்ரேலி முடிவு செய்திருந்ததால்—ஒருவேளை அம்முடிவு சரியாகவும் இருக்கலாம்—நல்ல அரசாங்கத்தை நிறுவ வேண்டும் என்ற உறுதியுடன் மாஸிடோனியாவை ஒரு கிறிஸ்தவ கவர்னர் ஆட்சியின் கீழ் அமைப்பதை டிஸ்ரேலி, பெர்லின் உடன்படிக்கையில் வலியுறுத்தவில்லை என்று, பால்கன் நாடுகளைப்பற்றி நன்கறிந்த பலர் வருந்துகிறார்கள். ஆனால் இத்தகைய ஓர் ஏற்பாடு பால்கன் அரங்கில் இருபதாம் நூற்றாண்டில் இன உணர்ச்சிகளின்

வெறியை உச்ச நிலைக்குத் தூண்டிவிட்டிருக்கும் என்பதை நாம் ஓரளவு உணர முடியும்.

1880ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் டிஸ்ரேலியின் அமைச்சரவையை முடிவு பெறச் செய்தது. அடுத்த ஆண்டில், ஓய்வு பெற்றிருந்த டிஸ்ரேலியும் இறந்தார். உள்நாட்டில் மாறுதலடைந்திருந்த நிலைமைகளை ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக் கொள்வதன் மூலம், கான்ஸர்வேடிவ் கட்சிக்குப் புதிய ஜனநாயக உலகத்தில் சீரிய அமைப்பைக் கொடுத்திருந்தார். மேல் வகுப்பு மக்கள் தங்கள் சலுகைகளை இழந்து விட்டதற்காக ஆத்திரங்கொண்டு வீடுகளிலே அரசியல் துறைவு பூண்டுவிடாமல், வெளியில் இறங்கி, நாட்டு உணர்ச்சியுடனும், பேரரசின் நலன்களை மனத்தில் கொண்டும் பொதுமக்களின் ஆதரவைப் பெற வேண்டுமென்றும் கூறினர். அடுத்த பத்தாண்டுகளில் ஆப்பிரிக்காவிலும், எகிப்திலும் கிளாஸ்டன் செய்த தவறுகளும், அவர் கொண்டுவந்த சுயஆட்சி யோசனைகளும், இத்தகைய பிரசாரத்திற்குப் பயன்படக்கூடிய பொருள்களாகும். நாடனைத்திற்கும் பொதுவான நல்ன்களின் ஒருமைப்பாட்டின் அடிப்படையில், கீழ் நிலைவகுப்பு மக்களின் ஆதரவை மேல் வகுப்பார் பெற வேண்டுமென்ற டிஸ்ரேலியின் கொள்கை, அவர் மரணத்திற்குப் பின்னர், அவருடைய நினைவாக அமைக்கப்பட்ட 'பிரிம் ரோஸ் சங்கத்திலும்' (Primrose League) நாடெங்கும் நிறுவப்பட்ட கான்சஸ்ர்வேடிவ் சபைகளிலும், சங்கங்களிலும் உருப்பெற்றது. எண்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் 'டோரி ஜனநாயகம்' என்ற கருத்து லார்ட் ரேண்டோல்ப் சர்ச்சில் (Lord Randolph Churchill) என்பாரின் குறுகிய காலத் திடீர் எழுச்சியினால் பெரிதும் தூண்டப்பட்டது.

அதே நேரத்தில் 'காக்கஸ்' (Caucus) என்று பட்டப்பெயர் பெற்ற வட்டாரச் சங்கங்களின் தேசியத் தாராளவாதிகளின் கூட்டணியைத் (National Liberal Federation) தீவிரவாதிகள் கட்சியின் தலைவரான ஜோசப் சேம்பர்லேய்னின் ஊக்கத்தால் எதிர்க் கட்சியினர் அமைத்துக்கொண்டிருந்தார்கள். பர்மிங்ஹாமின் தல அரசின் மீது சேம்பர்லேய்னுக்கு உள்ள தனிப்பட்ட செல்வாக்குதான் அவருடைய அரசியல் பலத்தின் அடிப்படையாகும். இரு கட்சிகளின் தேர்தல் பிரசார முறைகளிலும், அரசியல் திட்டங்களிலும், ஜனநாயக முறையான வேண்டுகோள்களும், விரிவானதும், பொறி இயங்குவதுபோல் முறையான அமைப்புகளும் புகுத்தப்பட்டன. புது முறையான செல்வாக்குகளும், மறைமுகமான ஊழல்களும் பழைய முறைகளுக்குப்

பதிலாக உருவாகிக்கொண்டிருந்தன. புது முறை உயர் குறிக்கோள்களும், பொதுப் பணியில் பற்றுக்களும் எழுந்தன. கட்சிப் பிரசார முறைகளும், கட்சி அமைப்பின் முழுமையும், தேர்தல்களிலும், அரசியலிலும் பொதுமக்களின் ஆதரவு இல்லாத காரணத்தால் பாராளுமன்ற அரசாங்கம் கிரேட் பிரிட்டனில் வீழ்ச்சியுருதவாறு பாதுகாத்தன. நாட்டைப் பிளவுபடுத்தக் கூடிய கொள்கைகள் இருந்ததும், சமூக வகுப்புகளின் போட்டி நலன்களும், சுயாட்சி இயக்கம் போன்ற பிரச்சினைகளும், இங்கிலாந்தில் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்த இரு கட்சி முறையானது, வெறும் பதவிப் போட்டியை மட்டும் பிரதிபலிக்கும் உயிரற்ற இயந்திரமாக மாருதபடி தடுத்து வந்தன.[1]

கிளாஸ்டனின் இரண்டாவது அமைச்சரவை (1880–1885), முதல் அமைச்சரவையைப் போன்று வெற்றி பெறவில்லை. 1868ல் இருந்ததுபோல், 1880–ல் லிபரல் முற்போக்குக் கட்சியினரிடம் சொந்தமான வரையறுக்கப்பட்ட அரசியல் தத்துவமோ, அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியல் திட்டமோ இருக்கவில்லை. டிஸ்ரேலியின் 'குறுகிய நாட்டுப்பற்றுக்கு' எதிராகக் கிளம்பிய எதிர்ப்பும், எவ்விதத் தெளிவான சமூகச் சீர்திருத்தத் திட்டங்களாகவும் உருவாக்கப்படாத தெளிவற்ற ஜனநாயக ஆர்வங்களும் இந்த அமைச்சரவையைப் பதவியில் அமர்த்தின. ஆனால் உடனடியாக அயர்லாந்திலும், எகிப்திலும், தென் ஆப்பிரிக்காவிலும் எழுந்த பல தவிர்க்க முடியாத நெருக்கடிகளை இந்த அமைச்சரவை எதிர்க்க வேண்டியிருந்தது. இப்பிரச்சினைகளைப் பற்றி அநேக ஆங்கிலேயர்களைப் போலவே லிபரல் கட்சியினரும் அதிகம் தெரிந்து கொள்ளவுமில்லை; அக்கரைப்படவுமில்லை. கிளாஸ்டன் அயர்லாந்தைப்பற்றி அறிந்திருந்தது மட்டுமின்றி, அக்கறைப்படவும் செய்தார். அவருடைய 1881ஆம் ஆண்டின் நிலச்சட்டம் குடியானவர்களுக்கு நியாயமான குடி வாரமும், மானியப் பாதுகாப்பும் அளித்தது. இச்சட்டத்தைக் குறைபாடுகளை நீக்கும் உண்மையான நிவாரணமாகக் கருதலாம். ஆனால் இது நிலப் பிரச்சினையைத் தீர்த்துவிடவில்லை. மேலும் சுய ஆட்சிக்காக எழுப்பப்பட்ட அரசியல் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட வன்மையான நிலக் கிளர்ச்சி ஐக்கியத்தையும் இதனால் முறியடிக்க முடியவில்லை. பார்னெல்லின் (Parnell) புது 'முட்டுக்கட்டை போடும்' கொள்கை இப்பிரச்சினை பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையின் கவனத்தில் படுமாறு செய்தது.

[1] இக்காலத்தில் பிரிட்டிஷ் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களை ஆஸ்ட்ரோ கோர்ஸ்க்கி (Ostrogorski) எழுதிய 'Democracy and the Organization of Political parties, Vol. I என்ற நூலில் வன்மையாகவும், உணர்ச்சியற்ற முறையிலும் ஆராயப்பட்டிருப்பதைக் காண்க.

கவுண்டித்தொகுதிகளுக்கும் வீட்டுக்காரர்களின் வாக்குரிமையை வழங்கிய மூன்ரும் சீர்திருத்த மசோதாவை (Third Reform Bill) நிறைவேற்றியதுதான் (1884) அமைச்சரவையின் முக்கிய சாதனையாகும். 'விவசாயத் தொழிலாளியும், சுரங்கத் தொழிலாளியும் இறுதியாக வாக்குரிமை பெற்றனர். அதுவரையும் அவர்களின் வாழ்க்கை வசதிகளைப் பற்றி அக்கறைப்படுவார் இல்லை. 'விவசாயத் தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கங்களை (Agricultural Labourer's Trade Unions) நிறுவுவதற்கு ஜோசப் ஆர்ச் (Joseph Arch) என்பார் செய்த முயற்சி இதற்கு முந்திய பத்தாண்டுகளில் அரசியல் செல்வாக்கு இல்லாத காரணத்தால் வெற்றி பெறவில்லை. செல்வவளம் பெருகிய காலத்திலும் கூட விவசாயத் தொழிலாளிகள் துன்புறுத்தப்பட்டனர். விவசாய மந்தம் ஏற்பட்ட காலங்களிலோ அவன் நிலைமை இன்னும் இரங்கத்தக்கதாக இருந்தது. இதன் காரணம் எழுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான உணவுப்பொருள்களாகும்.[1] 1884ல் விவசாயி பெற்ற வாக்குரிமை பிற பொருளாதாரச் சமூகச் சூழ்நிலைகளுடன் இணைந்து விவசாயிகளின் நிலையை உயர்த்த மெதுவான, ஆனல் தொடர்பான அபிவிருத்தியுகத்தைத் தொடங்கியது. ஆனல் கிராமங்களிலிருந்து மக்கள் கூட்டங் கூட்டமாக நகரங்களுக்குக் குடிபெயர்ந்து, கிராமங்கள் இரங்கத்தக்க நிலையில் மக்கள் தொகை குறைந்தபின் தான் இத்தகைய நிவாரணம் ஏற்பட்டது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் நாட்டுப்புற இங்கிலாந்தின் சமூக வரலாற்றைப் பலவழிகளில் பலகேடுகளின் கதை என்று சொல்லலாம்.

கிராமியத் தொழிலாளிக்குப் பாராளுமன்ற வாக்குரிமை வழங்கப்பட்டதால், நாட்டுப்புற மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தல சுய ஆட்சி நிறுவப்படுவதற்கு வழி ஏற்பட்டது. இதுவரை இத்தகைய தல ஆட்சிகள் தந்தை வழிமுறைப்படி நியமிக்கப்பட்ட அமைதிக் காவலர்களால் ஆளப்பட்டு வந்தனர். அக்காவலாளர்களே நீதியும் வழங்கினர். 1888ல் கான்ஸர்வேடிவ் அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுண்டி சபைகளை நிறுவியது; 1894–ல் ஏற்பட்ட நகர நாட்டுப்புற மாவட்டக் குழுக்களும் (Urban and Rural District Councils) ஆளுகை வட்டக் குழுக்களும், (Parish Councils) நாட்டுப்புற ஜனநாயக அமைப்பை

1 இங்கிலாந்தின் வரலாறு III, பிரிவு 6, இயல் 2, காண்க. 1881 முதல் 1921 வரை விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் விகிதம் பன்னிரண்டு விழுக்காட்டிலிருந்து ஏழு விழுக்காடாகக் குறைந்தது.

நிறைவு பெறச்செய்தன. நீதி வழங்கும் அதிகாரமும் மதுக்கடைகளுக்கு அமைதி வழங்கும் உரிமையும் இன்னும் அமைதிக் காவலர்களின் பொறுப்பிலேயே இருந்தன. ஆனால் அவர்களுடைய பெரிய நிர்வாக அதிகாரங்கள் யாவும் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளுக்கு மாற்றப்பட்டன.

கிளாஸ்டன் அமைச்சரவை ஆட்சியின் முதல் மாதங்களில் தென் ஆப்பிரிக்கப் பிரச்சினையைப் புறக்கணித்ததால் அதன் விளைவாக மஜுபா நிகழ்ச்சி [1] நடக்கவேண்டியதாயிற்று. எகிப்திய பிரச்சினைக்கு மிகவும் சிறப்பான முறையில் தீர்வு காணத் தொடங்கினர். எகிப்தில் துருக்கிய சுதேச அரசாங்கம் தோல்வியுற்றது. இங்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பல நிதிபற்றிய நலன்களும் தனிப்பட்ட நலன்களும் இருந்தன. இதன் விளைவாக டெல்-எல்-கெபீர் (Tel-el-Kebir) என்ற இடத்தில் அரேபியத் துருப்புகளைப் பிரிட்டிஷ் படைகளில் வூல்ஸெலி (Wolseley) யின் தலைமையில் தோற்கடித்தன (1882). இந் நிலையில் ஆங்கிலச் செல்வாக்கைவிடப் பிரெஞ்சுச் செல்வாக்குதான் இதுவரையிலும் எகிப்தில் அதிகமாக இருந்தபோதிலும், இந்த நெருக்கடியில் தலையிட பிரான்ஸ் மறுத்துவிட்டது. எகிப்த்தில் பிரிட்டனின் ஆதிக்கம் ஏற்பட்டதால், எகிப்திய குடியானவனின் வாழ்க்கை நலம் முன்னேறத் தொடங்கியது. நைல் பள்ளத்தாக்கு, லார்ட் குரோமர் (Lord Cromer) என்ற ஸர் இவலின் பாரிங் (Sir Evelyn Baring) என்பார் கேதிவ் (Khedive) அரசாங்கத்திற்குத் தினந்தோறும் கொடுத்து வந்த சர்வவல்லமையுள்ள ஆலோசனைகளினால் வளம் பெற்று ஓங்கியது, எகிப்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கைப்பற்றிப் பிரெஞ்சுக்காரர். பொருமைப்பட்டார்கள். 1904-ல் லார்ட் லான்ஸ்டௌன்(Lord Lonsdowne)பிரான்ஸுக்கும் எகிப்திற்கும் இடையே கண்ட உடன்பாடும், பிற ஏற்பாடுகளும் செய்யப்படும்வரை, பல வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்படவேண்டியதாயிற்று.

எகிப்திய பிரச்சினையோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. சூடானிய (Sudan) நெருக்கடியாகும். இதைப் பொறுத்தவரையில் தான் கிளாஸ்டன் வருந்தவேண்டிய நிலை ஏற்பட்டது. நைல் ஆற்றின் கீழ்ப்பகுதிகளில் தொன்மையான நாகரிகம் இன்னும் விளங்கி வந்தது. ஆனால் மேல்பகுதிகளில் சூடானியக் குலங்களின் காட்டுமிராண்டித்தனம் மலிந்திருந்தது. இதே காலத்தில் இப்பகுதிகள் மாதியும் (Mahdi) அவருடைய வழித்தோன்றல்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3, பக்கம் 88-க்கு மேற்பட்டவை காண்க.

களும், ஆப்பிரிக்காவின் உள்ளே அடிமைகளைச் சேகரிக்கும் இடமாகவும் எகிப்திற்கு இடைவிடாத தொல்லையாகவும் இருந்தன. எகிப்தின் நேர்மையான ஆட்சியாளர் எவரும், அகில ஆப்பிரிக்காவின் நலத்தில் ஆர்வங்கொண்ட எந்த நாடும், தொல்லைதரும் சூடானின் சிக்கலைத் தீர்க்க விரும்பி இருக்கவேண்டும். ஆனால் இதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. முதன் முதலில் எகிப்தின் ஒழுங்கை நிலை நாட்டி, அதன் நிதியையும், இராணுவ மூல வளங்களையும் உருவாக்கவேண்டியிருந்தது.

ஆனால் சூடானிலிருந்து எகிப்தியப்படைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதில்தான் கிளாஸ்டனின் அரசாங்கம் பல தவறுகளைச் செய்தது. தற்கால உணர்ச்சி வெறியூட்டும் பத்திரிகைத் தொழிலின் தந்தை யெனப்படும் வில்லியம் ஸ்டெட் (William Stead) என்பவரால் தூண்டப்பட்டு, படைகளைப் பின் வாங்கும் பணியைச் சார்லஸ் கார்டன் (Charles Gordan) என்பவரின் பொறுப்பில், அமைச்சரவை ஒப்படைத்தது. நூதனமான மனிதரும் எடுத்த கருமம் முடிக்கவல்ல வீரருமான கார்டன்படைகளைத் திரும்பி அழைக்கும் பொறுப்பைத் தவிர வேறு எவ்விதப் பணிக்கும் நன்கு தகுதி பெற்றவர். சூடானிலிருந்து படைகளை வெற்றிகரமாக வெளியேற்றுவதற்குப் பதிலாகக் கார்ட்டும் (Khartoum) என்ற இடத்தில் மாதியின் படைகளால் முற்றுகையிடப்பட்டு அடைபட்டுக்கிடந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை விடுவிக்க உதவிப்படையை அனுப்ப முடியாமல் போய் விட்டது. இதன் விளைவாக கார்டன் அழிந்தார் (ஜனவரி 1885). அவருடன் தாய் நாட்டில் கிளாஸ்டன் கொண்டிருந்த செல்வாக்கும் அழிந்தது. ஆப்பிரிக்காவைப் பொறுத்த வரையில் இந்தத் தோல்வி அவ்வளவு முக்கியமானதல்ல. அக்காலத்தில் சூடானில் இருந்த படைகள் எந்த விதத்திலும் வெளியேறி இருக்கும். குரோமர் எகிப்தில் தன் பணியை ஆற்றிய பின்னர்தான், லார்ட் ஸாலிஸ்பெரியின் அரசாங்கம் 1898ல் கிச்னரின் தலைமையில் பிரிட்டிஷ், எகிப்தியப் படைகளின் உதவியோடு சூடானை வெல்ல முடிந்தது.

1885ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் கார்டன், கார்டோம் போன்றூர் காரணமாக பரோக்களில் லிபரல் கட்சிக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டது. புதிதாக வாக்குரிமை பெற்ற விவசாயத் தொழிலாளி தனக்கு வாக்குரிமை பெற்றுத் தந்த கட்சிக்கே தன் வாக்குகளை வழங்கினன். இதனல் இரங்கத்தக்க தன் நிலைமை உண்மையில் ஓரளவாவது மாறலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. எனவே நாட்டை ஆளக்கூடிய அளவிற்கு லார்ட்

ஸாலிஸ் பெரிக்கு முழு கான்ஸர்வேடிவ் கட்சி பெரும்பான்மை வாக்குகள் பெறவில்லை. வெஸ்ட்மினிஸ்டரில் அதிகாரச் சமநிலை ஆங்கிலோ–சாக்ஸானிய மரபைச் சேர்ந்தவரென்றாலும், பிரிட்டிஷ் லிபரல் கட்சியினரையும், டோரிகளையும், இரக்கமற்ற, அசட்டை செய்யும் பகைமையுடன் கருதிய ஒரு விந்தையான தலைவரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டதே இதன் குறிப்பிடத்தக்க ஒரு விளைவாகும். சார்லஸ் ஸ்டூவர் பார்னெல் (Charles Stwart Parnell) என்பார், அயர்லாந்திலிருந்து வந்த சுய ஆட்சிக் கட்சியின் மீது தன் சொந்த ஆதிக்கத்தின் இரும்புத் தன்மையான ஒழுக்கக் கட்டுப்பாட்டை நிறுவி இருந்தார். புதிய பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இக்கட்சியைச் சேர்ந்த எண்பத்து ஐந்து உறுப்பினர்கள் இருந்தார்கள். இதுமுதல் 1801ஆம் ஆண்டின் ஐக்கியத்தை நிலை நாட்டியது வரையிலும், பிரிட்டிஷ் அரசியலில், அயர்லாந்தின் விவகாரங்கள் முக்கிய பங்கு பெறும். அந்நூற்றாண்டின் தொடக்கத்திலும், இடைக்காலத்திலும், அயர்லாந்தின் பிரதிநிதிகள் இரு பெரும் பிரிட்டிஷ் கட்சிகளுடன் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் இத்தகைய நிலைமை இருந்ததில்லை. எனவே அரசியலை முற்காலத்தைப்போல நடத்திக்கொண்டு போக முடியாது. ஒன்றில் இரு பெரும் பிரிட்டிஷ் கட்சிகள் பார்னெலுக்கு எதிராக ஒன்றுபட வேண்டும். அல்லது அவற்றில் ஒன்று பார்னெலுடன் உடன்பாடு கண்டாக வேண்டும். கிளாஸ்டனுக்கும் பார்னெலுக்கும் உடன்பாடு ஏற்பட்டதால், கிளாஸ்டன் சுய ஆட்சி மசோதாவைக் கொண்டு வந்தார் (Home Rule Bill-1886).

இதற்குப் பின் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைக் கொண்டு நோக்குகின்ற போது, நமது தலைமுறையைச் சேர்ந்த பலர், கிளாஸ்டன் செய்த முடிவைப் போன்றதொரு உறுதியை சிறப்பான, தெளிவான முடிவு எனக் கருதக்கூடும். மேலும் அயர்லாந்துப் பிரச்சினையை 1921-ல் பல வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் முடிவு செய்ததுபோலன்றி, கிளாஸ்டன் காலத்திலேயே அமைதியான முறையில் தீர்த்திருக்கலாமே என்றும் விரும்பலாம். ஆனால் கிளாஸ்டனின் நடவடிக்கைகள் காரணமாக அயர்லாந்தின் இணக்கம் தடைபட்டதா அல்லது முன்னேறியதா என்று சொல்லுவது கடினமாகும். இதுபோன்றதொரு முக்கிய பிரச்சினையும் கிளாஸ்டனின் திடீர் அரசியல் தடுமாற்றத்தின் விரைவை பிரிட்டிஷ் வாக்காளப் பெருக்களை மலைக்கவும், கோபங் கொள்ளவும் செய்தது. சுய ஆட்சிப் பிரச்சினையின் காரணமாக லிபரல் கட்சியில் பிளவு உண்டாகி, இன்னும் இருபதாண்டுகளில் கட்சி மிகவும் வலிமிழந்தது. கான்ஸர்வேடிவ் கட்சியோ அயர்

லாந்தின் 'ஐக்கிய வாதக் கொள்கையுடன்' (Unionist doctrine) இணைந்துவிட்டது. யாவற்றிற்கும் மேலாக, புரோட்டஸ்டாண்டு அல்ஸ்டரை, புதிய அயர்லாந்தின் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டுமென்ற பார்னெலின் கோரிக்கையைக் கிளாஸ்டன் ஒப்புக்கொண்டது அரசியல் விவேகத்தின் பெருந் தவறாகும். ஆனால் இனச் சிக்கல்களும், அரசியல் பிரச்சினைகளும் இதனை எதிர்த்து நின்றன.

1885ஆம் ஆண்டுத் தேர்தலில் கான்ஸர்வேடிவ் கட்சி ஓரளவு வெற்றியுடன் அயர்லாந்து மக்களின் வாக்குகளைப் பெற்றனர். ஆனால் கிளாஸ்டனுக்கும் பார்னெலுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு கான்ஸர்வேடிவ்கள் பிரிட்டனில் தேசிய உணர்ச்சியின் ஆதரவைக் கோரினார்கள். காட்டும் காட்டிய வழியில்தான் சுய ஆட்சி கைக்கொள்ளப்பட்டது. நூற்றாண்டின் இறுதியில் மேலோங்கி நின்ற பேரரசு உணர்ச்சி, அயர்லாந்திற்குச் சுய ஆட்சி வழங்குவதை புதிய பேரரசுக் கொள்கையின் ஒரு பகுதியாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் கடல் கடந்த சுய ஆட்சிக் குடியேற்ற உரிமை நாடுகளில் அயர்லாந்தின் சுய ஆட்சி இயக்கத்திற்கு நல்ல ஆதரவு இருந்தது. 1887-ல் டைம்ஸ் (The Times) பத்திரிகையில் வெளியான பார்னெலின் பொய்க் கடிதங்களைப் போன்ற இடை நிகழ்ச்சிகள் காட்டியது போல, அயர்லாந்து சுய ஆட்சிப் பிரச்சினை இங்கிலாந்தின் தூண்டிவிட்ட உணர்ச்சி வெறி, கட்சிகளுக்குள் நல்லிணக்கத்தின் அடிப்படையில் விவேகமான தலைமையும் அரசியல் நுண்ணறிவும் ஏற்படுவதைத் தடை செய்தது. எனினும் வேறெதுவும் இச்சூழ்நிலையில் தகுந்த பயனளித்திருக்காது.

1886ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் கிளாஸ்டனுக்கும் சுய ஆட்சி இயக்கத்திற்கும் எதிராகக் கிளம்பிய எதிர்ப்பு மிகவும் வன்மையாக இருந்தது. அதன் விளைவாக கிளாஸ்டனைப் பின்பற்றிய லிபரல்களும், அயர்லாந்தியரும் சேர்ந்து, தனியான கான்ஸர்வேடிவ் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதைத் தடுத்தது. இதனைத் தொடர்ந்து ஜோசப் சேம்பர்லேய்ன் போன்ற லிபரல் ஐக்கிய வாதிகளுடன் கூட்டு சேர்ந்து லார்ட் ஸாலிஸ்பெரி தலைமையில் வன்மையான ஒரு கான்ஸர்வேடிவ் அரசாங்கம் நிறுவப்பட்டது. சேம்பர்லேய்ன் புதிய பேரரசுக் கொள்கைக்குப் பெரும் ஆதரவு தந்தார். நூற்றாண்டின் இறுதியில் போயர் யுத்தம் ஏற்படும் வரையில் இந்த முறையில்தான் நாடு ஆளப்பட்டது. 1892 முதல் 1895 வரை மட்டும் மூன்றாண்டுகள் லிபரல் கட்சியினர் பதவியில் இருந்தனர். பின்னர் கிளாஸ்

டன் தலைமையில் லிபரல்களும், அயர்லாந்தியரும் முப்பத்தினன்கு வாக்குகள் பெரும்பான்மையில் சுய ஆட்சி மசோதாவைப் பொது மக்கள் சபையில் நிறைவேற்றினர்கள். ஆனல் பிரபுக்கள் சபையில் மசோதா தள்ளப்பட்டது. 1895ஆம் ஆண்டின் தேர்தலும் இந்த நடவடிக்கை சரிதான் என்பதற்குச் சான்று பகர்ந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், தற்கால அரசியலில் மேல் சபையின் பொறுப்பு என்ன என்பதைப் பற்றிய புதியதொரு கருத்தைக் கான்ஸர்வேடிவ் கட்சித் தலைவர்கள் உணர்ந்தார்கள். கவனமான அரசியல் மாற்றங்களைச் செய்த பீலும், டிஸ்ரேலியும் நடைமுறையில் பின்பற்றிய கொள்கைகளைவிட, இப்புதிய திருப்பம் சற்றுப் பேராசையுள்ளதாகத் தோன்றியது. இதன் விளைவாக அடுத்த நூற்றுண்டில் பெரியதொரு ஜனநாயக மாற்றம் ஏற்பட்டபோது, இரு சபைகளுக்குள்ளும் உண்டான போட்டியினல் கடுமையான அரசியலமைப்பு நெருக்கடி விளைந்தது. இத்தகைய சிக்கல்கள் 1832ஆம் ஆண்டு முதல் நமது அரசியலில் இல்லாதிருந்ததைத் தெளிவாகக் காணலாம்.

இன்னும் சில ஆண்டுகளுக்கு 1895–ல் சுய ஆட்சிப் பிரச்சினையின் தோல்வி அசைக்க முடியாத உறுதி பெற்றது. மேலும் அயர்லாந்தின் விவகாரங்களில் ஒரு செயலற்ற நிலை ஏற்பட்டது. அயர்லாந்தை வன்முறையில் ஆள வேண்டுமென்று முன்னர் விரும்பிய கான்ஸர்வேடிவ் அமைச்சரவை, 'அன்பு காட்டிச் சுய ஆட்சியை அழிக்கும்' கொள்கையைக் கடைப்பிடித்தனர். அவர்கள் தலசுயஆட்சியை அபிவிருத்தி செய்தனர். ஆங்கில நிலக்கிழார்களை வாங்கியதன் மூலம் கிராம்வெல் காலத்தில் நிலவிய முறையைப் பொறுத்த அளவிலாவது அயர்லாந்தின் நிலப் பிரச்சினை முடிவுற்றது. ஆனல் சுய ஆட்சி பற்றிய அரசியல் கோரிக்கையும், அல்லது அதைவிட அதிகமான கோரிக்கைகளும் குறையாமல் கேட்கப்பட்டு வந்தன. இருபதாம் நூற்றுண்டில் சுயஆட்சி பற்றிய நாட்டு மக்களின் கோரிக்கை, அயர்லாந்துக் கெல்டுகளின் மனத்தில் மிக ஆழமாகப் பதிந்துவிட்டதனல், அது பார்னெல்லின் வீழ்ச்சிக்கும், மரணத்திற்கும் பின்னும் (1890–91) நிலப் பிரச்சினை பெற்ற குறைகள் நீக்கப்பட்ட பின்னரும் பிழைத்திருந்தது. இந்தப் பெருமகனும், பிரச்சினையும்தான் பிரிட்டிஷ் பேரரசின் அரசியலில் வன்மையான முறையில் தொல்லைகளை உண்டு பண்ண கெல்டுகளுக்கு முதல்முதல் பலத்தை அளித்தவை.

கிளாஸ்டன் ஓய்வு பெற்றுத் தமது எண்பத்து ஒன்பதாம் வயதில் இறந்தார் (1898). 'மாண்புறு முதியவரான' (Grand Old Man) கிளாஸ்டன் அயர்லாந்தின் சுயஆட்சிக்காக எடுத்துக் கொண்ட எழுச்சியூட்டும் முயற்சிகள் அவரது வாழ்வின் வியக்

கத்தக்க பெருஞ் சாதனைகளாக இருந்தாலும், வெற்றியைப் பொறுத்த அளவில் குறிப்பிடத்தக்கவை அல்ல. லிபரல் கட்சியும், பேரரசுடன் முழுவதும் சம்பந்தப்பட்ட அரசியலும், கிளாஸ்டன் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் இயல்பான முறையில் வளர்ச்சி பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவற்றை அவர் காலத் தலைமுறையிடம் விட்டுவிட அவர் தவறிவிட்டார். கிளாஸ்டனின் பெருஞ் சாதனைகளின் முன்னர் அவரது நண்பர்களும் எதிரிகளும் வலுவிழந்து நின்றனர். அவர்கள் தாமே விரும்பித் தேடியிராத சூழ்நிலைகளை அவர்கள் வலுவந்தமாகப் பற்றிக்கொள்ளும் நிலைமையும் ஏற்பட்டது. ஆனால் அவருடைய நீண்ட வாழ்வை முழுவதும் கவனத்தில் கொண்டு காண்கின்றபோது, அவர் பலர் செய்ததைவிட, அதிகமான அளவில் பிரிட்டிஷ் அரசின் முறையையும், பிரிட்டிஷ் அரசியல்வாதிகளின் வழக்கங்களையும், தற்கால ஜனநாயக நிலைமைகளுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைத்துப் பயன்படுத்தினர் என்று பலர் முடிவு செய்யக்கூடும். அதே நேரத்தில் பழங்காலத்திய சிறந்த தரங்களையும் அவர் முற்றிலும் கைவிட்டு விடவில்லை. அவரது முதல் அமைச்சரவை நிறைவேற்றிய சட்டங்கள் நமது நிறுவனங்களைத் தற்கால மயமாக்கச் சிறந்த முறையில் உதவின. இரண்டாம் மூன்றும் சீர்திருத்த மசோதாக்கள், பால்மர்ஸ்டனின் மரணத்திற்குப் பின்னர் நாட்டை அவர் வழி நடத்திய சிறப்பான தலைமையின் விளைவுகளாகும். பாராளுமன்ற அரசாங்க முறையின் புதிய ஜனநாயகப் பண்பைக் கிளாஸ்டன் பொதுமக்களின் உணர்ச்சி வெறிகளையும், தன்னலத்தையும் தூண்டாமல், அவர்களின் பகுத்தறியும் ஆற்றலையும், நேர்மைப் பண்பையும் ஈடுபடுத்திப் பேரார்வம் உள்ளதாக ஆக்கினர் என்று கூறினல் மிகையன்று. பிரச்சினைகளை அவர் ஆய்ந்த முறை பல குறைபாடுகள் உடையதாக இருக்கலாம். மக்களின் அறநெறி சார்ந்த உணர்ச்சிகளை மிக எளிதாகவும், அடிக்கடியும் அவர் தூண்டிவிட்டிருக்கலாம். ஆனால் பொதுப் பிரச்சினைகளின் முக்கியமான இயல்புகளைப் பொறுத்த வரையில் அவற்றைப் பொதுமக்களின் மன்றத்தில் கொண்டு நிறுத்தி முடிவு கண்ட வழக்கம், மொத்தமாக ஆராய்கின்றபோது, நமது பொது வாழ்வில் மாறுதல்கள் பல நிகழ்ந்துகொண்டிருந்த சிறப்பான ஒரு கட்டத்தில் நிகழ்ந்த பயனுள்ள பெரும் எடுத்துக்காட்டு ஆகும்.

லார்ட் ஸாலிஸ்பெரியின் கான்ஸர்வேடிவ் அமைச்சரவைகளும், லிபரல் ஐக்கிய வாதிகளும் சேர்ந்து கிரேட் பிரிட்டனை ஆண்ட காலம் (1886–1892. 1895–1902) இங்கிலாந்தின் வாணிப வளம் பெருகி இருந்த காலமாகும். மேலும், அது இரண்டாம்

போயர் யுத்தம்[1] வரையிலும், நாகரிகமுள்ள மக்களுடன் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தங்கள் வரையிலும் நீடித்தது. 'கிரேட் பிரிட்டன் சிறந்த முறையில் தனித்து வாழ்கின்றது' என்ற அடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுடன் நல்லுறவுகள் கைகொள்ளப்பட்டன. நமது காலத்திலே உலகத்தை அழிக்கக்கூடிய அளவில் நிகழ்ந்த பெரும் போருக்குத் தயாராகும் முறையில் பிற வல்லரசுகள் இரு பெரும் போர் முகாம்களாகப் பிளவுபட்டு, அமைதியற்ற முறையில் படைப்பலத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தன. ஜெர்மனியும், ஆஸ்திரியாவும், இத்தாலியுடன் சேர்ந்து நிறுவிய முக்கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக (Triple Alliance), பிரான்ஸும், ரஷ்யாவும் இணைந்து நின்ற 'இரட்டை ஒப்பந்தம்' (Dual Alliance) விளங்கியது. கிரேட் பிரிட்டன் இந்த இரு வல்லரசுக் கோஷ்டிகளிலும் சேராமல் விலகி நின்றது. ஆனால் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் நமது பழைய குடியேற்ற நாட்டு எதிரி என்ற முறையில் பிரான்ஸ் கொண்டிருந்த பகைமை உணர்ச்சி காரணமாகவும், ஆப்கானிஸ்தானத்திலும், இந்தியாவிலும் ரஷ்யா கொண்டிருந்த ஆக்கிரமிப்பு எண்ணங்களின் இடைவிடாத அச்சம் காரணமாகவும், பொதுவாக லார்ட் ஸாலிஸ்பெரியை ஜெர்மானிய வல்லரசுகளுடன் நட்பு கொள்ளத் தூண்டின. ஆனால் பாராளுமன்ற முறையையும், பொதுமக்களின் உரிமைகளையும் அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டிருந்த ஓர் அரசாங்கம், பிஸ்மார்க் (Bismarck) உருவாக்கிய பெரும் இராணுவப் பணித்துறை ஆட்சியுடன் தொடர்பு கொள்கின்றபோது ஓர் அமைதியற்ற நிலை உண்டாவது இயற்கையே. ஜெர்மன் நாட்டின் கதியை நிர்ணயிக்கும் புதுத் தலைவர்கள், பிரிட்டனின் அரசியல் நிறுவனங்களுக்கு உள்ள செல்வாக்கில் இயற்கையான நம்பிக்கையின்மை கொண்டிருந்தார்கள். ஆனால் கேய்ஸர் வில்லியம் (Kaiser William) பிரிட்டிஷ் கடற்படையைக் கண்டு வியந்து அதற்குப் போட்டியாகக் கடற்படையை நிறுவத் தொடங்கியது வரை, பிரிட்டிஷ் கொள்கையின் புதிய அமைப்பில் இந்த அவநம்பிக்கை உணர்ச்சி காணப்படவில்லை. கேய்ஸரின் கடற்படைத் திட்டம் ஆபத்தான ஒரு முயற்சி என்பதை அடுத்த நூற்றாண்டில்தான் காண முடிந்தது. லார்ட் ஸாலிஸ்பெரியின் மேற்பார்வையில் ஆப்பிரிக்கக் கண்டத்தைப் பெரும் வல்லரசுகள் தமக்குள்ளே அமைதியான முறையில் பங்கிட்டுக்கொண்டார்கள். நவீனப் போக்குவரவு முறைகளின் துணை கொண்டும், வெப்ப மண்டல மருத்துவம் பற்றிய தற்கால அறிவு வளர்ச்சியின் உதவியினால்,

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3, பக்கம் 90-ம் மேற்பட்டவையும் காண்க.

இருண்ட கண்டத்தின் உள் பகுதிகளை ஐரோப்பியர்கள் மிகவும் விரைவாகத் தம் நலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

தாய்நாட்டு அரசியலைப் பொறுத்த அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி இருபதாண்டுகளும் லிபரல் அல்லது கான்ஸர்வேடிவ் அமைச்சரவைகளின்கீழ் விக்டோரியா அரசியாரின் ஆட்சியில் சமூக, ஆட்சிமுறையின் வளர்ச்சிக் காலமாக விளங்கின. இம்முன்னேற்றம் குறிப்பாக 'நகராட்சி சோஷியலிசம்' என்ற துறையில் சிறப்பாகக் காணக் கிடந்தது[1]. பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து குளிக்கும் வசதிகள், பொருள் காட்சிசாலைகள், பொது நூலகங்கள், பூங்காக்கள், தோட்டங்கள் பொதுவெளிகள், குடியிருப்பு இடம் ஒதுக்குதல்கள், தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள், போன்ற வசதிகள் யாவும் நிறுவப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. டிராம் வண்டிகள், நீராவி வழங்குதல், மின்சாரம், நீர்வசதி போன்றவை பல இடங்களில் நகராட்சியின் கண்காணிப்பின்கீழ் வந்தன. இக்காலம் மக்கள் தாமே விரும்பி முன்வந்து பொதுப்பணிகளை ஆற்றும் பொற்காலமாகும். டாய்ன்பி ஹால் (Toynbee Hall) போன்ற குடியிருப்புக்களை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். சேரிகளின் சுற்றுப்புற அமைப்பின் இரங்கத்தக்க விளைவுகளைப்பற்றிச் சகல வகுப்பு மக்களிடையேயும் பொதுவான விழிப்பு ஏற்பட்டிருந்தது. இவை யாவும் இன்றும் உலகத்தின் செல்வ மிக்க நாடெனக் கருதப் பட்டுவந்த இங்கிலாந்தில் காணப்பட்டன. கானன் பார்னெட் (Canon Barnett) என்பாரின் விஞ்ஞான முறையாக வழி நடத்தப்பட்ட கிறிஸ்தவ எழுச்சியும், லண்டன் நகர வாழ்க்கையின் உண்மை நிலைமைகளைப்பற்றி சார்லஸ் பூத் (Charles Booth) என்பாரும் அவரது துணைவர்களும் நடத்திய புள்ளியியல் ஆராய்ச்சிகளும், அவருடைய நியாயமான முதுமைக்கால ஓய்வூதியக் கோரிக்கையும் (Old Age Pensions), ஈடேற்ற சேனை (Salvation Army) யின் மூலம் வில்லியம் பூத் (William Booth) ஆற்றிவந்த உய்வுப் பணியின் சமூக அம்சமும், அதே முறையில் நடத்தப் பெற்ற மதச்சபைப் பணிகளும், புது லண்டனின் நகரப்பற்றும், பாட்டர்சி (Battersea) வாசியான ஜான் பேர்ன்ஸ் (John Burns) தோற்றுவித்த செயல்களும், லண்டன் கவுண்டி கவுன்சிலின்

[1] 1888-ல் கான்ஸர்வேடிவ் அமைச்சரான ரிட்ச்சி என்பார் கவுண்டி அலுவச் சட்டத்தை நிறைவேற்றினர். இவை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் மூலம் கவுண்டி ஆட்சியை ஏற்படுத்தியது மன்றி, அமலில் இருந்த நகர ஜனநாயகத்தின் இயந்திரத்தைப் பெரும் நகர்களைக் கவுண்டி, பரோக்களாக மாற்றியதின் மூலம் விரிவு செய்தன. மேலும் பழைய நகர வட்டாரத்தைத்தவிர, லண்டனை ஆள்வதற்கு லண்டன் கவுண்டி அவையும் நிறுவப்பட்டது.

தொடக்க காலத்தின் முற்போக்குக் கட்சி (Progressive party) யின் நடவடிக்கைகளும், லிபரல், கான்ஸர்வேடிவ் அரசாங்கங்களின் மூலம் சோஷலிசத்தைத் தவணை முறைகளில் புகுத்திவிட ஸிட்னி வெப்ஸ் (Sidney Webbs) செய்த ஆராய்ச்சிகளும், சூழ்ச்சிகளும், ஹென்றி ஜார்ஜ் (Henry George) எழுதிய 'புரோகிரஸ் அண்டு பாவர்ட்டி' (வளமும் வறுமையும்) (Progress and Poverty) என்ற நூலின் வாயிலாகச் சோஷலிச சமதர்மத்தை வன்முறையில் வெளியிட செய்த முயற்சிகளும், இதே துறையில் ஹின்ட்மானின் (Hyndman) சமூக ஜனநாயக சம்மேளனம் (Social Democratic Fedaration) செய்த செயல்களும், 1889ல் துறைமுகத்தின் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தின் வழியாகப் புகழ்பெற்ற தொழில் சங்கத்தின் நடவடிக்கைகள் மிகத் தொழில் திறமை வாய்ந்த தொழிலாளர்கள் முதல் ஈனக் கூலி பெற்று வந்தவர்களும், தொழிற் பயிற்சி பெருத தொழிலாளர்கள் வரை விரிவு செய்யப்பட்டதும், ஆகிய இவை யாவும், இவற்றைப் போன்ற பல இயக்கங்களும், சக்திகளும், 'சமூகப் பிரச்சினை முடிவுற்றுவிடவில்லை,ஆனல் இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது' என்பதைக் காட்டின. மேலும் அடுத்த நூற்ருண்டில் சமூகப் பிரச்சினை அரசியல் வாழ்வின் பிற அமிசங்களை விழுங்கிவிடவும் கூடும் என்று நம்பப்பட்டது.

இதற்கிடையில், அரசியல் வாதிகளும், சமூக சீர்திருத்தக்காரர்களும் தன்னுணர்வுடன் செய்து வந்த சேவைகள் ஒருபுறமிருக்க, தொடர்ந்தும், என்றும் குறையாத விரைவுடனும் முன்னேறிவந்த தொழிற்புரட்சி சமூகப் பழக்க வழக்கங்களை ஆண்டு தோறும் அமைதியான முறையில் மாற்றிக்கொண்டு வந்தது. சமூக நிலைகளிலும், கொள்கைகளிலும் இருந்த காலத்திற்கு ஒவ்வாத வேறுபாடுகளை அழித்து, சமூகப் பிரிவுகளின் வரிசையையும், கிராமிய நகர வாழ்க்கையின் பழைய நினைவுகளையும் அடிப்படையாகக் கொண்ட உயர் குறிக்கோள்களையுடைய பைபிள் படிக்கும் மக்களை, நமக்கு இன்று தெரிந்த நகர் வாழ் மக்களாகவும் தொழிற் புரட்சி மாற்றிவிட்டது. புதிய அரை குறைப் படிப்புக் கொண்ட சகல வகையான ஜனநாயகப் பண்பினை வளர்க்கும் வகையில் ஹாம்ஸ் வொர்த் (Harmsworth) என்பார் வெளியிட்ட 'டெய்லி மெயில்' (Daily Mail) என்ற நாளிதழ் இத்துறையில் குறிப்பிடத்தக்கதொரு நற்குறியாக விளங்கியது. விக்டோரியா அரசியார் காலத்தில் நடுத்தர வகுப்பார்களுக்கு மன நிறைவு கொடுப்பதற்காக வெளிவந்த கம்பீரமான அரசியல் வெளியீடுகளைவிட, டெய்லி மெயிலின் பாணி வேறுபட்டிருந்தது.

இறுதியாக 1901-ல் மூன்றும் ஜார்ஜ் அரசரின் ஆட்சியைவிட அதிகம் நீடித்தும், அதனைவிடச் சிறப்பில் குறைவில்லாதுமான ஒரு பெரு மாறுதல் காலத்தின் மிக முக்கியமான கட்டத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த பேரரசியார் மறைந்துவிட்டார்கள். அரசியார் ஆட்சி மிக நீண்ட காலத்திற்கு நீடித்திருந்ததால் அவருடைய குடிகளின் மனத்திலே 'முடியரசு' என்பதே பெண்மைப் பண்புகளைப் பெற்று விளங்கியது. அவருடைய நீண்ட ஆட்சி முழுவதிலும், அவருடைய திருமண வாழ்வின் முன்னும், பின்னும், விக்குகளையோ, கான்ஸர்வேடிவ்களையோ சிறப்பாகத் தெரிந்துகொண்டு ஆண்டபோதெல்லாம், தான் ஆதரவு காட்டிய, அல்லது தனக்கு விருப்பமில்லாத கொள்கையுடைய அமைச்சர்களோடு உறவு கொள்ளும்போதும், விக்டோரியா அரசியார் தம் சொந்த வன்மையான அரசியல் அமைப்பு நடைமுறையை உறுதி தவருத கொள்கையுடன் கடைப்பிடித்தார்கள். அரசாங்கத் துறையில் என்னதான் நடக்கிறதென்பதை எப்போதும் தனக்குத் தெரிவிக்கும்படி அரசியார் வலியுறுத்தி வந்தார்கள்; அவர்களின் பரந்த நினைவாற்றலில் பதிந்து கிடந்த பழைய அனுபவங்களுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கம்; எதுவும் அவர்களின் விருப்பத்திற்கு முரணுக இருந்தால், எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். அதையும் மீறி அமைச்சர் இன்னும் பிடிவாதமாக இருந்தால், அரசியார் விட்டுக்கொடுத்து விடுவார்கள். ஆனால் எல்லா அமைச்சர்களும் குறிப்பாகப் பதவி நியமனங்களையும், அரசியல் ஆவணங்களின் சொற்றொடர் அமைப்புக்களையும் பொறுத்தவரையில் தாம் முதலில் எடுத்த தீர்மானங்களில் உறுதியாக நிற்கவில்லை. இரண்டு தலைமுறைகளுக்கு மேலாக அரசியார் இந்த முறையைப் பின்பற்றியதால், அரசியலமைப்பில் முடியரசின் நிலை என்ன என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டது. இதன் விளைவாக இருபதாம் நூற்றுண்டில் வேறு பல நிறுவனங்களைத் தாக்கிய அரசியல் புயலில் முடியரசு மட்டும தலை தூக்கி நிற்க முடிந்தது. விக்டோரியா அரசியாரின் பின்னேடிகளும் கட்சிச் சார்பினின்று முற்றிலும் விலகி நின்றதால் புதுக் காலத்தின் அரசியலமைப்பிற்கு உட்பட்ட முடியரசு வெற்றிகரமாக இயங்குவதற்கு வழிவகுத்தனர்.

அதே நேரத்தில் பேரரசின் பாராளுமன்றங்களின் கூட்டாட்சித் திட்டம் வெற்றி பெருததால், பேரரசின் முழு அமைப்பிற்கும் தனியொரு அதிகார முறையான இணைப்பாக முடியரசு விளங்கியது. இங்கும் அரசியார் சிறப்புற்றுத் திகழ்ந்தார்கள். அவர்களின் இறுதிக் காலத்தில் இந்தியாவின் பேரரசியாகவும், உரிமை பெற்ற நாடுகளின் பெரும் பொதுநல அரசின் தலைவி

யாகவும், தம் புதுப் பொறுப்பை சிறந்த முறையில் ஏற்று, பெருமளவில் அனுபவித்தார்கள். அவர்கள் கொண்டாடிய இரு பெரும் நிறைவு விழாக்களின் (1887, 1897) பேரரசுக்குரிய ஆடம்பரத்தை, மேற்கூறிய தலைமை உலகிற்கு அறிவித்து உள்ளங்களிலே பதியச் செய்தது.

விக்டோரியாவிடம் அரசிக்குரிய பண்புகளும், கண்ணியமும் விளங்கின. ஆனால் அவை சிறப்பான எளிய வாழ்வும், உணர்ச்சி மிக்க இயல்பும் கொண்ட ஓர் உள்ளத்தினால் மென்மையாக்கப்பட்டு, பெரும் புகழும் பெற்றன. தான் ஒரு பெரிய அரசியார் என்பதைத் தவிர, விக்டோரியாவைப் பொறுத்தவரையில், அவர்களுக்கும் அவர்களின் ஆண் குடிகளுக்கும் வாழ்க்கையின் அடக்கமான நிலையில் பெரும் வேறுபாடுகளைக் காண முடியாது. விக்டோரியா என்றும் உயர்குடியாளர் என்று தன்னைக் கருதிக் கொள்ளவில்லை; உயர்குடி மக்களின் வாழ்வும், மகிழ்ச்சிப் பொழுதுபோக்குகளும், அவர்களைச் சார்ந்து இருந்தவர்களும், பின்பற்றியவர்களும் விக்டோரியாவுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அவர்கள் உயர்குடிக்கு மேற்பட்டவர்கள். அதற்குள் அடங்கிக் கிடந்தவர்கள் அல்லர். அவர்களின் இயல்பை மற்றொரு கோணத்திலிருந்து கண்டால், விக்டோரியா ஓர் எளிய மனைவியும், விதவையுமாவார்கள். எந்தக் குடிசையிலும் அவர்கள் உயர்வு தாழ்வின்றிப் பழகும் பண்புடையவர்கள். இதுபோலவே அக்காலத்தின் அறிவாற்றல், கலைப் பண்பின் நீரோட்டங்கள் அரசியாரிடம் காணப்பட்டன. ஆனால் இத்துறைகளில் ஆல்பர்ட் இளவரசர் அரசியாரின் ஆசானாகத் திகழ்ந்தார். சாமானியப் பொதுமக்கள் அரசியாரின் வாழ்விலும், தாழ்விலும் அவர்களை நன்கு புரிந்துகொண்டார்கள். உயர்குடி மாண்பு கொண்டு, அறிவாற்றல் மிகுந்தும் அரசியாருக்கும் தமக்கும் இடையே நின்ற பெருமக்களைக் கூட அவர்கள் அவ்வளவு தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை.

அரசியல் சார்பு கொண்டும் தனிப்பட்ட முறையிலும் செயல்பட்ட இக்காரணங்களினால், ஜனநாயகத்தின் வருகை, பொதுவாக எதிர்பார்க்கப்பட்டதற்கு முரணான வகையில், அரசர் பதவியின்மேல் பொதுமக்கள் கொண்ட அன்பு, புதுப்பிக்கப்பட்டதோடு இயைபு கொண்டு விளங்கியது. இங்கிலையில் நேரடியான அரசியல் அதிகாரத்தைப் பெற உரிமை கொண்டாடுவதற்குத் தற்சமயம் அவசியமில்லாதிருந்தது.

இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

கிளாட்ஸ்டனும் லிபரல்களும்—மில்: டார்வின்: ஆக்ஸ்போர்டு இயக்கம்—மதச்சபை சீர்திருத்தம்: மீண்டும் அயர்லாந்து—அயர்லாந்தில் நிலப் பிரச்சினைகளும், சமயப் பிரச்சினைகளும்—பல்கலைக் கழகங்களும், கல்வியும்—கிளாட்ஸ்டனின் சீர்திருத்தங்கள்—டிஸ்ரேலியின் உள்நாட்டுக் கொள்கை—பால்கன் பிரச்சினை—கட்சிகளின் ஜனநாயக வழி முறை—மூன்ருவது சீர்திருத்த மசோதா: நாட்டுப்புறத்தில் மாற்றங்கள்—எகிப்தும் சூடானும்—பார்னலும், சுயஆட்சிக் கொள்கையும்—கிளாட்ஸ்டனின் தோல்வியும், மரணமும்—ஷாலிஸ்பரியின் வெளிநாட்டுக் கொள்கை—சமூக சீர்திருத்தம்: மாறும் உலகம்—விக்டோரியா அரசியாரின் குண நலன்கள்.

மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. விக்டோரியா அரசியாரின் கடிதங்கள் (Queen Victoria's Letters).
2. மோர்லே (Morley)
   Gladstone (2 Vols.)
3. பக்கிள்ஸ் (Buckle)
   Disraeli (6 Vols.)
4. வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill)
   Lord Randolph Churchill (2 Vols.).
5. ஜான்பேய்லி (John Bailey)
   Some Political Ideas and Persons (on Queen Victoria and Disreli).
6. ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill)
   Autobiography.
7. பிரான்சிஸ் டார்வின் (Francis Darwin)
   Charles Darwin
8. லிட்டன் ஸ்டிராச்சி (Lytton Strachey)
   Queen Victoria.
9. ரெட்லிக்கும் ஹிர்ஸ்ட்டும் (Redlich and Hirst)
   Local Government in England (2 Vols.).
10. லேடி குவின்டோலன் (Lady Gwendolen)
    Cecll, Lord Salisbrury.

11. திருமதி. டுக்டேல் (Mrs. Dugdale)
Balfour.

12. பார்ரி ஓ பிரின் (Barry O Berien)
Parnell.

13. ஸ்டீபன் குவைன் (Stephen Gwynn)
History of Ireland.

14. வெப் (Webb)
History of Trade Unionism.

15. பாட்டிரிக் வெப் (Beatrice Webb)
My Apprenticeship.

16. வேர் கார்னிஷ் (Warre Cornish)
The English Church in the Nineteenth Century (2 Vols.)

17. ஹெர்பர்ட் பால் (Herbert Paul)
History of Modern England (5 Vols).

18. ஜே. ஏ. ஸ்பென்டர் (J. A. Spender)
A Short History of Our Times.

19. ஆர். ஸி. கே. என்ஸர் (R. C. K. Ensor)
England 1870–1914 (Oxford Hist. of Eng.) 1936.

பத்தொன்பதாம் நூற்ருண்டு முழுமைக்கும் இ. ஹால்வீ (E. Halevy) எழுதிய 'History of the English People' என்பதும், கிளப்ஹாம் (Clapham) எழுதிய 'Economic History of Modern Britain' என்பதும் காண்க.

இயல் 5

பால்ஃபோரின் அமைச்சரவை, 1902-5

பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவும், தென் ஆப்பிரிக்கப் போரும், விக்டோரியா அரசியார், லார்ட் ஸாலிஸ்பெரியின் மரணமும் ஏறத்தாழ ஒரே காலத்தில் நிகழ்ந்ததால், அவை யாவும் ஒரு யுகத்தை முடிப்பனவாகத் தோன்றின. விக்டோரியா அரசியாரின் காலம் தாய்நாட்டில் என்றும் குறையாது முன்னேறிய வளமும், படிப்படியான, தங்குதடையற்ற அமைதியான

முறையில் பழைய சமூகத்தினின்று புதிய சமூகத்திற்கு மாற்றமும், பிரிட்டனின் வெளிநாட்டு உறவுகளில் நிலவிய அமைதியும் பாதுகாப்பும் சிறந்து விளங்கிய காலமாகும்.

புதிய நூற்றுண்டின் முதல் இருபதாண்டுகள் தற்காலத்தின் மிகப்பெரும் கேடான போரில் உலகத்தை ஈடுபடுத்தியது. இப்பேராபத்து நிகழ்வதற்கு முன்னர், நாடுகளுக்குள்ளும், இனங்களுக்கும், சமூகங்களுக்குள்ளும் இடையேயுள்ள உறவுகளில் வன்மையானதும் பகைமையானதுமான போக்கு ஏற்பட்டது. இயற்கையின் ஆற்றல்களுக்கு மேலாக மனிதன் கொண்ட வெற்றி அவனது அறநெறி வளர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் விட அதிக முன்னேற்றம் கண்டது. ஒரே தலைமுறைக்குள் மோட்டார் வண்டிகளும், கம்பியில்லாத் தந்தியும் வானத்தையும், கடலுக்குக் கீழ் உள்ள உலகத்தையும் வெற்றி கொண்டு திகழ்ந்தது. இத்தகைய புதுமைகளோடு, பழைய சக்திகளான நீராவியையும், மின்சாரத்தையும் மிகப்பெரும் அளவில் பயன்படுத்தியதால் பொருளாதார, சமூக, பன்னுட்டு உறவுகள் பலப்படுவதற்கு முன்னர் பலமாற்றங்கள் ஏற்பட்டன. நமது தீவின் பழைய முறையான வாழ்க்கைப் பழக்க வழக்கங்களையும், சிந்தனைகளையும் விரைவும், பொறியமைப்பும் பாழ்படுத்திவிட்டன. நாட்டுப்புறத்து இயற்கைக் காட்சிகளும் அவற்றிற்கு அடிமைப்படத் தொடங்கின. உலகமெங்கும் நாடுகளும், இனங்களும் அமைதியை நாடும்படி அதிவிரைவாக இணைக்கப்பட்டன; நாடுகளின் பேராசைகளை நிறைவு செய்து கொள்ள வெற்றியின் புது ஆயுதங்களையும், தன்னலம் பெருக்கும் வழிகளையும் பெற்றன. ஆனல் இவையாவும் பரஸ்பர அழிவின் வழிவகைகளாகிவிட்டன.

எதிர்க்கட்சியான லிபரல் கட்சியில் பிளவை உண்டாக்கிய தென் ஆப்பிரிக்கப் போர்[1] 1900-ஆம் ஆண்டில் போருக்குப் பின் நடந்த தேர்தலில் கான்ஸர்வேடிவ்களுக்கு உறுதியான பெரும்பான்மையைத் தந்தது. இதன் மூலம் இருபதாம் நூற்ருண்டின் அரசியல் பணி தொடங்கியது. இக்காலத்திய இரு பெரும் அமைச்சர்கள் ஸாலிஸ்பெரியின் மருமகனும், தலைமை அமைச்சர் பதவிக்கு அவருடைய வாரிசுமாகிய ஆர்தர் பால்ஃபோரும் ஜோசர் சேம்பர் லேய்னும் ஆவர். சேம்பர்லேய்ன் குடியேற்றத் துறைச் செயலாளராக இருந்தபோது பிரிட்டிஷ்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3, பக்கம் 91-க்கு மேற்பட்டவை காண்க.

பேரரசின் தன்னுணர்வைத் தூண்டி விடுவதற்குப் பெரிதும் உழைத்தவராவார்.

சிறந்த சிவில்பணியாளராகிய ஸர் ராபர்ட் மொரான்ட் (Sir Robert Morant) என்பாரின் அறிவாற்றல் தூண்டிவிட்ட 1902ஆம் ஆண்டில் பால்ஃபோர் சட்டம் (Balfour's Act) 1870–ல் தொடங்கப்பட்ட தேசியக்கல்வித் திட்டத்தின் மற்றொரு வெற்றியாகும்; இதன்படி தொடக்கக் கல்விப்பொறுப்பு மட்டுமல்ல, உயர்தரப் படிப்பும் கவுண்டி அவைகளிடமும், கவுண்டி பரோக்களிடமும் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாருக உயர்தரக் கல்விக்கு முதல் முறையாக ஒழுங்கான நிதியுதவி வழங்கப்பெற்று, நாட்டுக்குப் பொதுவான திட்டத்துடன் இணைக்கப்பட்டது. புதிய வட்டார அதிகாரியான அவையின் கல்விக் குழுவானது, பரப்பளவில் சிறிய பகுதிகளில் அதிகாரம் செலுத்திய பழையபள்ளிக் கழகங்களைவிட (School Board) விரிவான கல்வித்திட்டங்களை வகுக்க முடிந்தது.

இந்தச் சீர்திருத்தத்தின் விளைவாக உயர்தரப்பள்ளிகளின் தொகை அதிகரித்தது. மேலும் குறைந்த பண வசதியுடைய சிறந்த மாணவர்கள் பல்கலைக் கழகக் கல்வி பெறுமாறு உதவும்படி 'ஏணிபோன்ற' கல்விப் பண உதவி முறையும் நிறுவப்பட்டது. எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த திறமைபடைத்த மக்களை ஆக்ஸ் போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் சேர அனுமதித்ததன் மூலம் முன்னேற்றமான உயர்தரக் கல்வி மேற்கூறிய பல்கலைக் கழகங்களின் அறிவுத்திறத்தையும், அலுவல்களையும் தரமுயர்ந்ததாகச் செய்தது. லண்டன், டர்ஹாம், மான்செஸ்டர் பல்கலைக் கழகங்களைத்தவிர, இக்காலத்தில் லிவர்பூல், லீட்ஸ், ஷெப்பீல்டு, பர்மிங்ஹாம், பிரிஸ்டல், ரீடிங் போன்ற இடங்களிலும் புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. முந்திய நூற்ருண்டில் நிறுவப்பட்டிருந்த மூன்று பல்கலைக் கழகங்களும் நமது காலத்தில் முழுப்பக்குவம் அடைந்தன.

ஆனல் ஆங்கிலக் கல்விமுறையின் சமய சம்பந்தமான, பிரிவினைச்சார்ந்த அம்சங்களைப்பற்றிய வன்மையான சர்ச்சைகள் இன்றி அம்முறையில் புதிய மாற்றங்களைக்கொண்டு வரமுடியவில்லை; பால்ஃபோரின் சட்டப்படி மதச்சபை பள்ளிக்கூடங்களும், பகுதி தாமே விரும்பிக் கொடுக்கப்பட்ட பொதுமக்களின் கொடைகளாலும் நடத்தப்பட்டுவந்த ரோமன் கத்தோலிக்கப் பள்ளிக் கூடங்களும் புதிய கவுண்டிக்கல்வி அதிகாரத் துறையின் கீழ் (County Education Authority) கொண்டுவரப்பட்டன.

இதற்குப் பதிலாக இப்பள்ளிகளுக்குப் பொது வரிப்பணத்திலிருந்து போதிய மானியத் தொகைகள் வழங்கப்படும். ஆனால் இணங்காதார்களும் பிறரும் சமயப் பிரிவுகள் நடத்திய பள்ளிக்கூடங்களுக்குப் பொதுப் பணத்திலிருந்து உதவி வழங்குவதை எதிர்த்தார்கள். ஏனெனில் பெரும்பான்மையான மதச் சபைப் பள்ளிக்கூடங்கள் நாட்டுப் புறங்களில் நிறுவப்பட்டிருந்ததால், இணங்காதார் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு வேறு கல்வி வசதிகள் பெற வழி இருக்கவில்லை. இந்தத் தகராற்றைப் பயன் படுத்திக்கொண்டு, லிபரல் கட்சியினர் மீண்டும் ஒன்றுபட்டு, புத்துயிர் பெற முடிந்தது. இதே கட்சி தென் ஆப்பிரிக்கப் போர் நடந்து கொண்டிருக்கும் போது, 'சிறிய இங்கிலாந்தியர்' (Little Englanders) என்றும் பேரரசு வாதிகள் (Imperialists) என்றும் பிளவுபட்டுக் கிடந்தது.

தத்துவ முறையாகப் பற்றற்ற நிலையில் இருந்த பால்ஃபோர் எடுத்தது முடிக்கும் இயல்பினராகையால், அவருடைய பொது மக்கள் ஆதரவற்ற மசோதாவை நிறைவேற்றிவிட்டார் (1902). பிற்காலத்தில் லிபரல் அரசாங்கங்கள் பால்ஃபோரின் திட்டத்தைப் பெரும் அளவில் மாற்றிவிடாமல் பிரபுக்கள் சபையினர் தடுத்து வந்தனர். யுத்தத்திற்குப் பின்னர் பால்ஃபோரின் கல்வித்திட்டத்தின் செயல்முறைக்கு எதிராகக் கிளம்பிய கூக்குரல்கள் அடங்கிவிட்டன. ஒரு கோணத்திலிருந்து நோக்குகின்ற போது, கவுண்டி கல்வி அதிகாரத் துறை செலுத்திய கட்டுப்பாடு, லிபரல் கட்சியினர் எதிர்பார்த்ததைவிட அதிக உறுதி பெற்று விளங்கியது[1]. மேலும் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகச் சமயச் சார்பான சர்ச்சைகளில் பொதுமக்கள் கொண்டிருந்த மனப்பான்மை மிக விரைவாக மாறி வந்தது. எந்தச் சமயப்பிரிவிற்கும் உரிய வழிபாடுகளை மக்கள் அதிகம் அதிகமாகக் கைவிட்டுக் கொண்டிருந்த நிலையில், மதச்சபை வாதிகளுக்கும், இணங்காதார்களுக்கும் இடையே நிலவிய பகைமை குறைந்து வந்தது. மதப்பற்றற்ற நிலை வளர்ந்து வந்ததால், கிறிஸ்தவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்புகொண்டு பழகத்தொடங்கினர்கள். பழங்காலத்தில் இருந்ததைப் போலன்றி, மதச்சபையைச் சேர்ந்த குருமார்களுக்கு எதிரான உணர்ச்சிகளும் குறைந்து வந்தன. ஏனெனில் குருமார்களும் தாம் வாழ்ந்து வந்த சமூகத்

[1] பலத்த எதிர்ப்பின் விளைவாக. பள்ளி மேலாளர்களின் அதிகாரத்தின் கீழ் மதச்சபைப் பள்ளிக்கூடங்களில் சமயக்கல்வி போதிக்கும் பொறுப்பை ஒப்படைக்க வழிசெய்து சிறிய மாறுதலுடன் 1902ஆம் ஆண்டின் மசோதா நிறைவேற்றப்பட்டது. இதனால் வட்டாரத்தின் மத குருவிற்குச் சமயக் கல்வியைப் பொருந்த அளவில் இருந்த தனி உரிமை அழிக்கப்பட்டது.

தினை ஆள்வோரோகத் தம்மைக் கருதிக் கொள்ளும் நிலையில் இல்லை. இனி இணங்காதார்களின் பகைமை யுணர்ச்சிகள் மத குருக்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. குருமார்களே தமது சமயஞ் சார்ந்த கோரிக்கை களுக்கும், சமூக உரிமைகளுக்கும் அதிகஅளவில் அசட்டைகாட்டி வந்த புதுக் காலத்தின் சூழ்நிலைகளை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். நாடகாசிரியர் த்ரோலோபின் (Trollope) பெரிய சமயகுரு கிரான்ட்லி (Archedeacon Grantly) அக்காலத் தைக் கெட்டுப்போன காலமாகக் கருதலாம். ஆனல் சமயமானது தன் அதிகாரத்தை இழந்துவிட்டபோதிலும், சில வகைகளில் செல்வாக்கு பெற்றது என்பது ஓரளவு உண்மையாகும். ஆலயங் களுக்கும், சிறிய கோவில்களுக்கும், ஞாயிறு சமயக்கல்வி வகுப்பு களுக்கும் செல்வோரின் தொகை குறைந்து வந்தது. 1870 ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்திற்கு முன் இருந்ததைவிட பைபிள் படிக் கின்ற வழக்கமும் குறைந்தது; ஆனல் கம்பியில்லாத் தந்தியின் (Wireless)உதவியால்பல இல்லங்களின்சமயபோதனைநடப்பதற்கு வழிஏற்பட்டது. இத்தகைய புதுநிலைமையைச் சரிவர ஆராய்வது சற்று கடினமாகும். மதக்குருக்களுக்கு எதிரான வெறுப்புணர்ச் சியின் வெறி குறைந்திருந்தாலும், விக்டோரியா ஆட்சியின் பிற் காலத்தில் நிலவியதைவிட அதிக அளவில் மக்களிடம் சமயத் தைப் பொறுத்த வரையில் அசட்டைத்தனம் காணப்பட்டது.

இவ்வாறு நாட்டின் ஆர்வமானது புதிய வழிகளில் திரும்பிய தன் விளைவுகளை அரசியலிலும் காண முடிந்தது. இரண்டாம் சார்லஸ் காலம் முதல் விக்டோரியா அரசியார் காலம்வரை மதச் சபையினருக்கும், இணங்காதார்களுக்கும் இடையே எழுந்த பூசல்களின் அரசியல் இயல்புதான் விக்கு டோரி, லிபரல் கான் ஸர்வேடிவ் பிளவுகளின் அடிப்படையாகும். நமது காலத்திலுங் கூட தொழிற் சார்பும், சமூகப் பிரச்சினைகளின் அடிப்படையில் மட்டும் கட்சிகளைத் திருத்தி அமைத்தார்கள். இனி சமயத்திற் கும் கட்சிகளுக்கும் எவ்வித உறவும் இருக்கவில்லை. இதன் காரணத்தினல்தான் யுத்தம் முடிந்த பின்னர் லிபரல் கட்சி மறையவும், அதற்குப் பதில் தொழிற்கட்சி (Labour Party) உரு வாகவும் வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சமயப்பற்றிற்குப்பதில் வகுப்பு உணர்ச்சி மேலோங்கியது. பால்ஃபோரின் கல்விமசோ தாவின் விளைவாக ஏற்பட்ட பரபரப்புதான்; சமயத்தின் அடிப் படையில் நிகழ்ந்த இறுதிக் கட்சிப் போராட்டமாகும்.

பால்ஃபோர் அமைச்சரவையின் மற்ருெரு சிறந்த சீர்திருத் தம்1903ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அயர்லாந்து ‘நிலம் வாங்கும் சட்டம்’ (Land Purchase Act). இதன்படி பிரிட்டிஷ் அர

சாங்கத்திடமிருந்து மிக எளிதான நிபந்தனைகளின்பேரில் ஏராள மான கடன் உதவிபெறும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதனால் அயர்லாந்தின் பெரும்பான்மையான நிலங்களின் உரிமை புரோட்டஸ்டாண்டு நிலக்கிழார்களிடமிருந்து சுதேசக் குடி யானவர்களிடம் சென்றது. இந்த அமைதியான புரட்சி பால்ஃ போர் எதிர்பார்த்தது போல, அயர்லாந்தியரின் சுய ஆட்சிக் கோரிக்கைக்குப் புத்துயிர் அளிப்பதோடு, அல்லது அவர்களின் தேசிய ஆர்வங்களைத் தடை செய்யவில்லை. ஆனால் இதன் விளை வாக அயர்லாந்துப் பிரச்சினையின் மிகச்சிக்கலான ஒரு நெருக் கடிக்குத் தீர்வு காணப்பட்டது. இந்தத் தடை மட்டும் நீக்கப்படா மல் இருந்திருந்தால், இப்போது நாம் ஏற்படுத்திய திட்டமோ அல்லது அறவே வேறு எந்த ஒப்பந்தமோ ஏற்பட வழி இருந் திருக்காது.

இங்கிலேயில் ஐக்கியம் விரும்பிய கான்ஸர்வேடிவ் கொள்கை யின் (Unionist Conservatism) நலிவு, அதன் அழிவை விரைவு படுத்தவோ அல்லது தடுக்கவோ திட்டமிடப்பட்ட ஒரு பெருந் தொல்லைக்கு உள்ளாகியது. கிளாஸ்டன் சுய ஆட்சியை ஆதரிக் கத் தொடங்கிய காலத்திற்குப் பின்னர் இணையற்ற ஊக்கத்துடன் ஜோசப் சேம்பர்லேய்ன் காப்பியல் முறை (Protection) யைப் போதித்தார். இத்திட்டத்திற்கு சுங்கவரி சீர்திருத்தம் (Tariff Reform) என்ற புதுப் பெயர் கொடுக்கப்பபட்டது. இத்தகைய துணிச்சலான நடவடிக்கை எடுக்கும்படி சேம்பர்லேய்னைத் தூண் டிய நோக்கம், குடியேற்ற உரிமை நாடுகளுக்குப் பேரரசு வரிச் சலுகை வழங்கும் திட்டத்தின்மூலம் (Imperial Preference) தாய் நாட்டுடன் இணைப்ப தாகும். இத்தகைய இணைப்பு இல்லாத காரணத்தால், பேரரசு உறவுகள் இத்தனை நாளும் தளர்ந்து போய் விட்டதாக அவர் நம்பினர். இதில் இருந்த முக்கிய இடர்ப்பாடு என்னவென்ருல் குடியேற்ற உரிமை நாடுகளின் பொருட்களைப் பொறுத்த அளவில் விதிவிலக்குப் பெற்றிருந்த உணவுப் பொருள் வரியை விலக்காமல் கனடாவிற்கும், ஆஸ்திர லேசியாவிற்கும், கிரேட் பிரிட்டன் பயனுள்ள வரிச்சலுகைகள் வழங்க முடியாது என்பதே. இங்கிலாந்தின் பொதுமக்கள் பழைய தானியச் சட்டங்களைப் பற்றிய பொறுப்புள்ள தெளி வற்ற நினைவுகளில் பரம்பரையாக மனத்தில் கொண்டிருந்தார் கள். நரை தாடியுள்ள முதியோர் 'நாற்பதாம் ஆண்டுகளின் பஞ்சத்தில்' எப்படி தமது பெற்ரேர்கள் படைத்த உணவில் வரி விதிப்புப் பெற்ற ரொட்டிகூட கிடைக்காது என்ற சோகக் கதைகளைக் கூறினர்கள்.

எனவே பேரரசு வரிச்சலுகை வழங்குதல் தீமை நிறைந்தவொரு தேர்தல் கூச்சலாகும். மேலும் தென் ஆப்பிரிக்க யுத்தத்தின் பின்னர் சிறிது காலம் இங்கிலாந்தின் பேரரசு போதிய அளவில் விரிவடைந்திருந்தது; ஆகவே சேம்பர்லேய்னின் 'சலுகைச் சுங்கத் திட்டம்' (Preferential Tariff) தீவிலே அடைந்து கிடந்த ஆங்கில நாட்டு மக்கள் கான்ஸர்வேடிவ்களின் உதவியினல், பிரிட்டிஷ் பொருட்களுக்குக் காப்பு வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமென உருவாக்கினர்கள். இதன் விளைவாக ஊக்கம் பிறந்தது. அநேக பிரிட்டிஷ் தொழில் உற்பத்தியாளர்கள் தமது செல்வங்களை முதலீடு செய்யத் துணிந்தார்கள். ஆனல் இவர்களின் ஊக்கம் ஐயப்படத்தகுந்த அளவில் இருந்தது. குறிப்பாகக் கூலி வேலை செய்யும் தொழிலாளி தன் குடும்பச் செலவுகளைக் கருதுகின்றபோது, இத்திட்டத்தில் ஐயங்கொண்டான்; சமூகத்தில் எல்லாப் பிரிவுகளிடையேயும் தடையில்லா வாணிபக் கொள்கை ஆதரவு பெற்றிருந்தது; ஐம்பதாண்டுகளாக எதிர்ப்பில்லாத அதிகாரமும், வழக்கும் தடையில்லா வாணிபத்திற்குத் துணை நின்றன. கான்ஸர்வேடிவ் கட்சியின் வழக்கமான ஆதாரங்களான விவேகப் போக்கும், மரபொழுக்கங்களும் லிபரல் கட்சியின் பொருளாதாரக் கொள்கையை ஆதரித்தன. மேலும் தடையில்லா வாணிபத் திட்டத்தின் கீழ் பிரிட்டன் கண்ட செல்வ வளம் உறுதி பெற்று நின்றது. சேம்பர்லேய்ன் தன் ஆயுள் நாளில் பிரிட்டனின் மூலத் தொழில்கள் இன்னும் குலையாத உறுதியுடன் வளர்ந்து வந்ததைக் கண்டு செயலற்றுப் போனர். அவைகள் அழிந்துவிடும் என அவர் முன்னறிவிக்க முடியும். ஆனல் அழிவோ உடனே ஏற்படுவதாக இல்லை.

விவசாயமே, புதிய நூற்றுண்டின் முதல் ஆண்டுகளில் மிகவும் பாதுகாக்கப்படவேண்டிய பெரும் நலம் என்பது உண்மையாகும். காப்டன் (Cabden) பீல் காலங்களில் எதிர்பார்த்திராத அளவு உணவுப் பொருள்கள், 1875ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவிலிருந்தும், உலகின் பல பாகங்களிலிருந்தும் கிரேட் பிரிட்டனுக்குப் பெருவாரியாக வந்திறங்கிய வண்ணமாக இருந்தன. ஐரோப்பாவிலிருந்து தடையின்றி இறக்குமதியான உணவுப் பண்டங்களின் காரணமாக, விலைகள் ஒரேயடியாகச் சரிந்து விடாமல் சீராக்கப்பட்டிருந்தன. ஆனல் பிரேரி, பாம்பாஸ் (Pampas) புல்வெளிகள் பிரிட்டனுக்கு உணவளிக்கும் பண்ணைகளாக முன்னேறிவிட்டதால், இங்கிலாந்தில் இலாபமாக உணவு உற்பத்தி செய்வது முடியாத காரியமாகிவிட்டது. இங்கிலாந்தின் விவசாய ஊழியர்கள் சரியான கூலி இல்லாததாலும், வளம்

பெருகி இருந்த காலத்திலும் வீட்டு வசதிகள் இல்லாத காரணத்தாலும், தங்களின் நிலங்களைக் கைவிட்டுவிட்டு, திடுக்கிடச் செய்யும் அளவிற்கு நகரங்களில் சென்று குடியேறிக் கொண்டிருந்தனர். உலகத்தின் எந்த நாட்டிலும் இல்லாத அளவில், கிரேட் பிரிட்டன் முற்றிலும் நகர மயமாகிக்கொண்டு வந்தது. நிறைவு பெற்று விட்டால் இழப்பீடு செய்ய முடியாத இந்தப் பேராபத்தைத் தடுக்க என்னதான் செய்வது? பிரிட்டனின் விவசாயத்தைப் பாதுகாப்புச் செய்வது என்ற யோசனையைக் கூறுவதற்கு பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் அஞ்சினர்கள். ஆனல் குடியேற்றங்களின் சலுகைச் சுங்கத் திட்டத்தின் (Colonial Preference) ஆதரவில் ஏதாவது ஒரு வகை நிவாரணம் கொடுக்க முடியும். இதுவரை பிரிட்டனின் வளத்திற்குக் காரணமாக இருந்த தடையில்லா வாணிபத் திட்டம் விவசாயத்தைப்பற்றி அக்கறைப்படவில்லை. வெளி நாடுகளிலும், நமது குடியேற்ற உரிமை நாடுகளும் பிரிட்டனின் உற்பத்திப் பண்டங்களுக்குப் பதிலாகக் கொடுக்கக்கூடிய செலாவணி உணவுப் பண்டங்களே. மலிவான தானியமும், மாமிசமும் கூலிக்கு உழைக்கும் மக்களுக்குப் பெரும் மதிப்புடைய பொருள்களாகும். ஐரோப்பாக் கண்டத்தில் நிலவியது போன்று, இங்கிலாந்தில் ஜனநாயகப் பண்ணை உரிமை (Peasant-proprietorship) இல்லாத காரணத்தால், விவசாயக் காப்பியல் முறையைப் பிரசாரம் செய்வது சிறிது கடினமாகத் தோன்றியது. குடியானவனல் நீண்ட நாள் துன்புறுத்தப்பட்டு வந்த பண்ணையாட்கள், விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டுமா என்பதைப்பற்றிய அறிவே இல்லாமல் இருந்தனர். அடுத்த நகரத்திற்கோ, அல்லது சுரங்கத் தொழில் மாவட்டத்திற்கோ அவன் இடம் பெயர்ந்து, அதிகக் கூலியும் மலிவான உணவும் பெற்றுக்கொள்ள முடியும். விரும்பத்தகாத பழைய தானியச் சட்டங்களின் நினைவும், விலையுயர்ந்த உணவுப் பொருள்கள் வந்துவிடுமோ என்ற அச்சமும், 'சிறு ரொட்டி' கோரி மக்கள் எழுப்பிய கூச்சலும், ஆகிய யாவற்றையும் சேம்பர்லேய்னின் எதிரிகள் வன்மையானதும், மக்கள் ஆதரவைப் பெற்ற எதிர் வாதங்களாகவும் பயன்படுத்தினர்கள். எனவே, முதல் உலகப் போர் கட்சி மரபுகளையும், பழைய பொருளாதாரக் கொள்கைகளையும் நிலைகுலையச் செய்த பின்னரும், பிரிட்டனின் விவசாயத்தைக் கைநெகிழ்வது எத்தகைய கேடு என்பதை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தெளிவாகக் காட்டிய பின்னரும்தான், உதவித் தொகைகள் மூலமாகவும், இறக்குமதிக் கட்டுப்பாட்டினலும், நாட்டில் உணவு உற்பத்தியைப் பேணுவதற்கு வழி வகுக்கப்பட்டது. மேலும் குடியானவனுக்குக் குறுமக் கூலி (Minimum Wage) கொடுப்பதற்குச் சட்டம் நிறைவேற்றி, நாட்டுப்புற வாழ்க்கை

முழுவதும் அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டது. இங்கிலாந்தின் வாழ்க்கை முழுவதும் நகர் வாழ்வாகவும் அல்லது நகர்ப் புறத்தைச் சேர்ந்த வாழ்க்கையாகவும் மாறி, அங்குள்ள வயல்கள் யாவும் பயிரிடப்படாமல் காடுகளாகும்படி விடப்பட்டால் மிகப் பயங்கரமான கேடு விளையும். எனவே முற்றிலும் பொருளாதார நோக்கங்களைவிட நாட்டின் பாதுகாப்பையும், மனிதத் தன்மையையும், சமூகக் காரணங்களையும் மனத்திற் கொண்டாவது இந்த நிலை ஏற்படாதவாறு தடுக்க வேண்டியது அவசியமாகும்.

சேம்பர்லேய்னின் பிரசாரத்தினல் தனக்குள்ளே பிளவுபட்டுக் கிடந்த ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையில் பால்ஃபோர், 1902–5ஆம் ஆண்டுகளில் நிலவிய நிலைமையை மீண்டும் ஏற்படுத்த முயலுவது மிகக் கடினமானதாகத் தோன்றியது. ஸாலிஸ்பெரியின் அமைச்சரவைகளில் இருந்த அனுபவமிக்க தலைவர்களில் பாதிப்பேரும், கட்சியின் இளம் அறிஞர்களான ஹியூ (Hugh), ராபர்ட் செஸில், வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) போன்றோரும், தடையில்லா வாணிபத்தை வன்மையாக ஆதரித்தார்கள். எனினும் சுங்க வரிச் சீர்திருத்த ஆதரவாளர்கள் கான்ஸர்வேடிவ் கட்சித் தீவிரவாதிகளில் பெரும்பான்மையோரைப் பால்ஃபோரின் திக்கற்ற நிலையிலும் மனமாற்றம் செய்தனர். பால்ஃபோரின் நுட்பமானதும், ஐயமுற்றதுமான அறிவாற்றல் முழுக் காப்பியல் கொள்கைக்கும், முழுத் தடையற்ற வாணிபக் கொள்கைக்கும் இடைப்பட்ட நடுவழிக் கொள்கையை ஆதரித்தது; இத்தகைய சந்தர்ப்பவாதப் பற்றற்ற தன்மை தற்கால ஆங்கிலேயர்களுக்கு மிகப் பழக்கமான மனப்பான்மையாகும். ஆனல் 1902ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இதனை நேர்மையற்ற, நகைப்பிற்குரிய சூழ்ச்சியாகக் கருதினர்கள். ஆனல் பால்ஃபோர் பொதுமக்கள் எண்ணத்தின் மட்டில் வன்மையாக அசட்டை காட்டினர். மேலும் நடுவழிக் கொள்கையில் அவர் கொண்டிருந்த அசையாத நம்பிக்கை, அக்காலத்தில் இரு கட்சியினருக்கும் இடையே கோபத்தை மூட்டினலும், பால்ஃபோரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவியது. கூடிய வரையில் கான்ஸர்வேடிவ் கட்சியை இணைத்து வைப்பதே அந்த நோக்கமாகும். இறுதியில் அவரும் சேம்பர்லேய்னைப் பின்பற்ற வேண்டியதுதான். ஏனெனில் கட்சியில் பெரும்பான்மையினர் அவர் வழி சென்றுகொண்டிருந்தனர். ஆனல் பால்ஃபோர் அவசரப்பட்டுச் சேம்பர்லேய்னின் வழியில் அதிக தூரம் சென்றுவிடக் கூடியவரல்லர். அவர் சில காலம் பதவியில் நீடித்து, உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் சில திட்டங்களை நிறைவேற்றி, சுங்க வரிப் பிரச்சினைக்குச் சம்பந்தமில்லாத ஏற்பாடு

களைச் செய்வதில் முனைய முடியும். காப்பியல்வாதிகளும், தடையற்ற வாணிப ஆதரவாளர்களும் கோபங் கொண்டிருந்ததைப் பற்றி அவர் அஞ்சவில்லை. புயலின் நடுவே, அமைதியின் உருவமாக அமர்ந்திருந்தார். பால்ஃபோரின் கட்சியானது சிதைவுற்று, பல ஆண்டுகளாக அவரது அரசாங்கம் மதிப்பு இழந்து இருந்தபோதிலும், அவர் 1905ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பதவியில் நீடித்தார். எனவே பொதுத் தேர்தலில் இந்தப் பிரச்சினையை எதிர்க்க நீண்ட நாளாக மறுத்து வந்ததானது, உண்மையில் சிக்கல் முற்றியபோது, நிலைமையை மட்டு மீறிய தாக்கிவிட்டது.

புதிய திட்டத்தில் உழைப்பாளி மக்களின் நலன்கள் இருக்கின்றன என்பதை அவர்களுக்குக் காட்டுவதில் சேம்பர்லேய்ன் தவறிவிட்டார். அவர் நடத்திவந்த பெரும் போராட்டம், பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றி ஆங்கிலேயர்கள் ஆழ்ந்து சிந்திக்கும்படி தூண்டியது. ஆனால் அவர்களில் பலர் காப்பியல் முறைக்குப் பதிலாக சோஷலிசத்தைப்பற்றி எண்ணத் தொடங்கிவிட்டனர். உறவு உணர்ச்சிகள் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது பொதுவான வழக்கம்; 'சுங்க வரிச் சீர்திருத்தத்தினால் எல்லாருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்' என்பது பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டும் எப்போதும் அவமதிக்கப்படவில்லை. ஆனால் சேம்பர்லேய்னின் ஆதரவாளர்கள் பல காலம் பதவியில் இருந்தபோதிலும் உழைப்பாளி மக்களின் நலன் கருதிப் பல சட்டங்களை இயற்றாத காரணத்தால் மக்கள் இத்திட்டத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை; எனவே வேலையில்லாத் திண்டாட்டத்தை சுங்கவரிச் சீர்திருத்தத்தின் மூலம் தீர்த்து விடுவதில் அவர்கள் காட்டிய புதிய ஆர்வம் ஐயத்திற்கு இடம் அளித்தது.

மேலும் இதே காலத்தில் தொழிலாளர்கள் தாங்களும் தனிப்பட்ட வகுப்பு உணர்ச்சி கொண்டிருந்தார்கள். எனவே அரசியலைப் பொறுத்தவரையில் அவர்களில் தனித்து இயங்க உறுதி கொண்டார்கள். இங்கிலையில்தான் தொழிற்கட்சியின் எண்ணிக்கைப் பலமும் வன்மையாக வளர்ந்தது. அந்நூற்றாண்டின் முடிவில் பொதுமக்கள் சபையில் தொழிற்கட்சிப் பிரமுகர்கள் இருவரே இருந்தனர்; இவர்களில் ஒருவர் விக்டோரியா அரசி காலத்து முக்கியஸ்தர்களில் குறிப்பிடத்தக்கவரும், மான் வேட்டைத் தொப்பி அணிந்தவருமான கீர் ஹார்டி (Keir Hordic) என்பவராவார். 1900ஆம் ஆண்டு வரையில் கூட உழைப்பாளி மக்கள் அதிகம் இருந்த தேர்தல் தொகுதிகள், சுரங்கத் தொழில் மாவட்டங்களிலும், தொழிற் கட்சிக்கு வாக்களிக்காமல், லிபரல்

கட்சியினரையோ, அல்லது கான்ஸர்வேடிவ்களையோ ஆதரித்தார்கள்.

இப்பொழுதுதான் 1901-ல் டாஃப் வேல் (Taff Vale) தீர்மானம் என்ற பேரிடி விழுந்தது. இந்த நிகழ்ச்சியைத்தான் நமது அரசியல் வரலாற்றின் பெரும் பகுதியின் தொடக்கமாகக் கருதலாம். இதற்கு முந்திய பாராளுமன்றங்கள் செய்திருந்த பணிகள் அத்தனையையும் நீதிபதிகள் சிதைத்துவிட்டனர். 1871ஆம் ஆண்டு கிளாஸ்டனின் தொழிற்சங்கச் சட்டம் (Trede Union Act) ஏற்பட்டது முதல், ஒரு தலைமுறையாகத் தொழிற்சங்கங்கள் அனுபவித்து வந்த உரிமைகள் அனைத்தையும். நீதிபதிகள் தமது சட்டமுறையான தீர்மானத்தினால் பாழாக்கிவிட்டனர். டாஃப்வேல் வழக்கு, பிரபுக்கள் சபையின் இறுதி உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்குவிடப்பட்டது. தொழிற்சங்கமானது ஒரு கூட்டமைப்புக்குழு அல்லவென்றாலும்,அதன் அதிகாரிகளின் செயல்களால் உண்டாக்கப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படும் இழப்புகளுக்கு, கூட்டமைப்புக் குழு என்ற முறையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படலாம் என்று பிரபுக்கள் சபையின் சட்டப் பிரபுக்கள் முடிவு செய்தனர்; தொழிற்சங்கங்களின் கீழாட்களின் குற்றமுறையான செயல்களுக்கு மட்டுமல்ல, சட்டத்திற்குப் புறம்பானவை அல்லவென்றாலும் பிறருக்கு நஷ்டம் விளைவிக்கக்கூடிய செயல்களுக்காகவும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாமென்றும், தீர்மானித்தனர். இவ்வாறு 1871ஆம் ஆண்டுச் சட்டம்[1] 1901-ல் பிரபுக்கள் சபையின் சட்டப் பிரபுக்களால் புது முறையில் பொருள் கொள்ளப்பட்டதால், தொழிற்சங்க நடவடிக்கையின் அடிப்படையே தகர்க்கப்பட்டது. எனவே டாஃப்வேல் தீர்ப்பின்படி, தொழிற்சங்கங்கள் கூலி உயர்வு கோரியோ அல்லது கூலியைக் குறைப்பதைத் தடுக்கவோ, வேலை நிறுத்த நடவடிக்கைகளை எடுக்கத் துணிவு கொள்ளவில்லை. ஏனெனில் அவ்வாறு ஏற்பட்டால் அவைகள் தமது நிதிகள் யாவற்றையும், இழப்பீடு கொடுப்பதற்காக இழந்துவிடும் நிலைமை ஏற்படும். எனவே 1901 முதல் 1906 வரை நாட்டில் நிலவிய புது நிலைமைகளைப் பணி முதல்வர்கள் தமது நலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டது இயல்பே.

கடந்த முப்பதாண்டுகளாகத் தொழிற் சங்கச் சட்டத்தின் பொறுப்பு எந்த அளவில் இருக்கின்றதாக மக்கள் எண்ணி இருந்தனரோ, அந்த நிலையை உடனே கான்ஸர்வேடிவ் அரசாங்கம் சட்டமியற்றி இருந்தால், அவர்கள் கான்ஸர்வேடிவ் கட்சியின்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 4, காண்க.

நலன்களைப் பொறுத்தவரையில் விவேகமாக நடந்துகொண்ட தாகக் கருதலாம். இதையொத்த ஒரு சந்தர்ப்பத்தில், டிஸ்ரேலி எடுத்துக்கொண்ட நடவடிக்கையைக் கொண்டு முடிவு செய்கின்ற போது, அவர் மேற்கூறிய முறையில்தான் நடந்துகொண்டிருப் பார் என்று உறுதியாகக் கூற முடியும். முன்னால் லிபரல், கான் ஸர்வேடிவ் கட்சிகளுக்கிடையில் பிளவுபட்டுக் கிடந்த பெரும் தொழில் அதிபர்கள், சுயஆட்சி இயக்கம் தோன்றிய காலந் தொட்டு மேலும் பிரிந்து, அவர்களில் பெரும்பாலும் அனைவரும் கான்ஸர்வேடிவ் கட்சியில் சேர்ந்துவிட்டனர். தொழிற்சங்கப் பிரச்சினைக்கு ஆதரவு காட்டி, அதன் மூலம் தொழிலாளர்களின் கூட்டுறவைப் பெறுகின்ற நிலையில் லிபரல் கட்சி பலம் பெற் றிருந்தது. ஆனால் கான்ஸர்வேடிவ் கட்சியோ இந்நிலையில் இல்லை. அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர், அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு, ஓர் அரசர் ஆணைக் குழுவை நியமித்து, பால்ஃபோரின் அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தள்ளிப் போட்டது.

இறுதியாக 1905ஆம் ஆண்டு டிசம்பரில் பால்ஃபோர் பதவி துறந்தார். கட்சியின் எல்லாப் பிரிவுகளையும் இணைத்து, சர் ஹென்றி கேம்பெல் பானெர்மேன் (Sir Henry Campbell Banner-man) ஒரு லிபரல் அரசாங்கத்தை நிறுவினார். இதில் வழக்கத் திற்கு மாறாக ஆற்றல் மிக்க முதியோர்களும், இளைஞர்களும் கலந்து காணப்பட்டனர். 1906ஆம் ஆண்டு ஜனவரியில் புதிய அமைச்சரவை தேர்தலில் போட்டியிட்டது. தொழிற் கட்சியின் சார்பில் பல சுயேச்சை வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். மேலும் தொழிற் சங்கங்களுக்குச் சட்ட முறையான நடவடிக்கை களிலிருந்து முழு விதி விலக்கும் பெற்றுத் தரும் வாக்குறுதியின் பேரில், தொழிற் கட்சியினர் பிற தொகுதிகளில் தமது வாக்கு களை லிபரல் கட்சி வேட்பாளர்களுக்கு வழங்கினார்கள்.

பொதுத் தேர்தலின் முடிவுகள் நிலநடுக்கத்தைப் போன்று பேரிடியாக வந்தன. பெரும் சீர்திருத்த மசோதாவிற்குப் பின்னர் நடந்த முதல் தேர்தலில் பழைய டோரிக்கட்சி அழிந்ததுமுதல், மேற்கூறிய முடிவுகளுக்கு நிகரான ஒரு நிலைமை என்றும் ஏற் படவில்லை. டோரிக் கட்சியின் அழிவோ முற்றிலும் புதிய தேர் தல் முறையின் விளைவாக ஏற்பட்டது. 1906-ல் லிபரல் கட்சிக்குக் கிடைத்த மொத்த இடங்கள் 273; புதிய பாராளுமன்றத்தில் லிபரல் கட்சியினர் 397 இடங்களைப் பெற்றனர்; ஐரிஷ் தேசியக் கட்சியினர் 83; கடந்த பாராளுமன்றத்தில் ஆட்சி செலுத்திய ஒற்றுமை வாதிகளின் (Unionists) பலம் 157 இடங்களாகக்

குறைந்துவிட்டது. இவை யாவற்றையும்விடக் குறிப்பிடத்தக்க தென்ன வென்றால், எண்ணிக்கையில் குறைந்த தென்றாலும், திறமை மிக்க தொழிற்கட்சியானது, திடீரெனத் தோன்றிய தாகும்.

யாவரையும் மலைக்கச்செய்த இந்தத் தலைகீழ் மாற்றத்தின் குறிப்பிடத்தக்க முக்கியம் என்னவெனில், நவீன பெரும் வாக்காளப் பெருமக்கள் பொது உணர்ச்சி கொள்ளத்தக்க போக்கு உடையவர்களாக இருந்ததாகும். இத்தகைய உணர்ச்சி பெரும் நகரங்களில் தோன்றி, பழைய காலத்தைவிடக் குறைந்த அளவில் கட்சி மரபுகளால் பிணைக்கப்பட்டிருந்தது. இத்தகைய தேர்தல்கள் பல பின்னரும் நடைபெற்றன. மேலும் 1906-ஆம் ஆண்டின் பிரச்சினைகள் அனைத்தும் தோற்றுப்போன அரசாங்கத்திற்குப் பாதகமாகவே இருந்தன. இவற்றில் கல்விச்சட்டம், காப்பியல் முறைக் கொள்கை, டாஃப்வேல் முடிவு, பெரும் பேரரசும் போரின் இரங்கத்தக்க விளைவாக, சீன ஒப்பந்தத்தொழிலாளர்களைத் தென் ஆப்பிரிக்கப் பொன் சுரங்கங்களில் புகுத்தியது முதலியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஆனால் இவை யாவற்றையும்விட அதிக அடிப்படையான மற்றொரு காரியத்தையும் கவனிக்க வேண்டும். அயர்லாந்திலோ, தென் ஆப்பிரிக்காவிலோ, அல்லது வேறு எங்கும் பேரரசுக் கொள்கையை விரும்புவதைவிட, உள்நாட்டில் சமதர்ம சீர்திருத்தத்தை ஆதரிக்கும் புதியதொரு தலைமுறை தோன்றி இருந்தது.

இறுதியில் எந்தக் கட்சியோ அல்லது கொள்கையோ பயனடைந்தாலும், பழைய முறையான பேரரசுக் கொள்கையும், கான்ஸர்வேடிவ் ஒற்றுமை வாதமும் இனிமேல் அதிகாரத்தைப் பெற முடியாது. காப்பியல் முறைக்கு நல்ல எதிர்காலம் இருந்தது. ஆனால் முதல் யுத்தத்தின் பின்னர் பதவி வகித்த கான்ஸர்வேடிவ் கொள்கை தொழிற்கட்சி அரசாங்கங்களுக்கு மாற்று அரசாங்கமாகப் பல முறைகள் தெரிந்துகொள்ளப்பட்டாலும், அயர்லாந்து, எகிப்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியாப்பிரச்சினைகளில் விரிநோக்கும், தொழிலாளர் வகுப்பினருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பொறுத்த வரையில் அறைகுறை சோஷலிச மனப்பான்மையும் கொண்டு விளங்கியது. இதற்கிடையில் பெரும் போர் தொடங்கும் வரையிலும், லிபரல் கட்சியினர் இறுதியாகப் பதவி வகித்தனர். தொழிற்கட்சியினருக்கும் அவர்களுக்கும் நெருங்கிய, ஆனால் அமைதியற்ற உறவு இருந்தது. எனினும் சமூக நலச் சீர்திருத்தங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஆழமான முத்திரையைப் பொறித்துச் சென்றனர்.

1905-ல் பால்ஃபோர் பதவி விலகுவதற்கு முன்னர் ஆற்றிய இறுதிப் பெருந் தொண்டு என்னவெனில் பேரரசுப் பாதுகாப்புக் குழுவை (Committee of Imperial Defence) நிறுவியதாகும். போர் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கண்டு திட்டம் வகுக்கும் ஒரு வழியாக இக்குழுவை ஆஸ்க்குவித்தின் (Ajquith) அரசாங்கம் அபிவிருத்தி செய்தது. ஆலோசனை கூறுவதே இக்குழுவின் முக்கிய அலுவலாகும்; அமைச்சரவைக்கு ஆலோசனைகளும், விபரங்களும் வழங்கும். அதன் தீர்மானங்களைப் பாராளுமன்றமோ அல்லது அரசுத் துறைகளோதான் செயலாக்க முடியும். இக்குழு நிர்வாகப் பொறுப்பற்றதால், அதன் அமைப்பு நெகிழ் தன்மையுடையதாக இருந்தது. பிரதமர் தாம் பொருத்தமுடையவர்களாகக் கருதுவோரைக் குழுவினுக்கு அழைப்பார். பொதுவாகப் போர் அமைச்சர், கடற்படைத் துறைத் தலைவர், வெளிநாட்டு அமைச்சர், இங்கிலாந்தில் இருக்கக்கூடிய குடியேற்ற உரிமை நாட்டுப் பிரதமர்களில் எவரும், ஒவ்வொரு கூட்டத்திலும், விவாதிக்கப்படும் பிரச்சினைகளுக்குப் பதில் கூறக்கூடிய தொழில் நுணுக்க ஆலோசகர்கள் யாவரும் அதன் உறுப்பினர்கள். இக்குழுவிற்குத் தனியான ஒரு செயலாளரும் உண்டு. இவர் நிரந்தரமானவராகையால் இடைவிடாமல் மாறும் தன்மையுடைய ஒரு குழுவில் செயலாளரின் முக்கியத்துவம் பெரிதாகும். பேரரசுப் பாதுகாப்புக் குழுவின் செயலாளராக 1912ஆம் ஆண்டுக்குப் பின்னரும், 1916ஆம் ஆண்டின் பின்னர் அமைச்சரவையின் செயலாளராகவும் பணியாற்றிய சர் மௌரிஸ் ஹேன்கி (Sir Maurice Hankey) வளரும் நமது நிறுவனங்களில் அவரது முத்திரையை விட்டுச் சென்றுள்ளார்.[1]

பேரரசுப் பாதுகாப்புக் குழுவின் முக்கியத்துவம் இரு வகைப்படும். இதனால் தரைப்படை, கடற்படை, வானப் படை, உள்நாட்டு முனை போன்ற பிரச்சினைகளைத் தனிப்பட்ட முறையில் அவற்றிற்குள்ள பரஸ்பர உறவுகளுடன் பொருத்தி ஆராயவும், ஏற்படக்கூடிய போரின் பொதுக் கொள்கையின் பகுதிகள் என்ற முறையில் நோக்கவும் முடிந்தது. இரண்டாவதாகக்

[1] 1916-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பின்னர்தான் அமைச்சரவையின் கூட்டங்களில் பங்கு பெறக்கூடிய ஒரு செயலாளர் இருப்பதைக் காண்கிறோம். இது தவிர ஒரு பணிமன்றமும், ஒழுங்கான நிகழ்ச்சிநிரல் திட்டங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. போர் நெருக்கடியின் காரணமாகப் பெரிய அமைச்சரவைக்குப் பதில் சிறிய குழுவாகிய 'போர் அமைச்சரவை' இயங்கியபோதுதான் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தன. 1919ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் வழக்கமான பெரிய அமைச்சரவை மீட்கப்பட்டபோது பணிமன்றம் கலைக்கப்படாமல் நீடிக்கப்பட்டது.

குடியேற்ற உரிமை நாடுகளின் பொறுப்புள்ள அரசியல் நுண்ணறிவாளர்கள், தாய்நாட்டு அரசாங்கத்தின் தலைவர்களை இரகசியமான பேச்சு வார்த்தைகளில் சந்தித்துப் பேரரசு முழுவதையும் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுக்கவும் வழி ஏற்பட்டது.

இவ்வியலில் கூறப்பட்ட கருத்துக்கள்

பால்ஃபோரின் அமைச்சரவை — பால்ஃபோரின் கல்வி மசோதா—அரசியலும், சமயமும்—சேம்பர்லேய்னும், சுங்க வரிச் சீர்திருத்தமும்—விவசாயத்தின் அழிவு—டாஃப்வேலும், தொழில் கட்சியும்—ஜனவரி 1906 தேர்தல்—பேரரசுப் பாதுகாப்புக் குழு.

இயல் 6

இறுதி லிபரல் அரசாங்கம், 1905 டிசம்பர் முதல் 1915 மே வரை.

கடைசி முறையாக ஒரு லிபரல் அரசாங்கம் கிரேட் பிரிட்டனைப் பத்தாண்டுகளாக ஆட்சி செய்தது. அதன் தலைவர்கள் சிறப்பான ஆளுமையும் ஆற்றலும் கொண்ட பெருமக்களாவர். அவர்களில் அமைதியான பேச்சு கொண்ட சட்ட நூல் தத்துவ அறிஞரான ஹால்டேன் (Haldane) போர் வீரர்களின் நம்பிக்கையைப் பெற்றுப் படைச் சீர்திருத்தம் செய்தார்; கடந்த நூற்றாண்டின் தீவிர அறிவியக்கத்தின் அனுபவம் முதிர்ந்த ஜான் மார்லி (John Morley) என்பவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் இந்தியாவில் தேசியத் தன்னுணர்ச்சி என்ற புதியபிரச்சினைக்குத் தீர்வு காண அனுப்பப்பட்டார், எட்வர்டு கிரே (Edward Grey) என்பார் வெளிநாட்டுத் துறையின் பொறுப்பில் வன்மையும் துயர் நிறைந்த கம்பீரமும் கொண்டு விளங்கினர்; தன் அரசைத் தேடிக்கொண்டிருந்தார் இளைஞரான வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill). லார்ட் லாயிட் ஜார்ஜ் (Lord Lloyd George) மீது காலமும் பெரும் நிகழ்ச்சிகளும் பலதிறப்பட்ட பொறுப்புக்களைச் சுமத்தின. இவைகள் ஒன்றுக்கொன்று முரணானவை யென்றாலும் அனைத்தும் உண்மையானவை. மேலும் ஹெர்பர்ட் சாமுவேல் (Herbert Samuel), வால்டர் ரூன்சிமேன் (Walter Runchiman), ரெஜினல்ட் மக்கினா (Reginald Mckenna) போன்ற ஆட்சித்

துறைத் தலைவர்களும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் சிறந்திருந்தார்கள். பழைய ஆங்கிலப் பரம்பரையிலிருந்து உருவாக்கப்பட்ட ஜான் பார்ன்ஸ் (John Burns) என்பவர் முதல் முறையாக அமைச்சரவையில் தொழிலாளர் வகுப்பு மக்களின் பிரதிநிதியாக இடம் பெற்றார். பத்தாண்டுகளாக இப் பெருமக்கள் அனைவரும் வியத்தகு முறையில் இணைந்து நின்றார்கள். அடுத்தடுத்து ஆண்ட இரு பிரதமர்கள் இவர்களுடைய பணியை நன்கறிவார்கள். அமைதியான போக்கும் அறிவு நுட்பமும் கொண்ட ஸ்காட்லாந்தியரான கேம்பல்-பானெர்மேன் (Campbell-Bannerman) மக்களின் உள்ளங்களை உற்று நோக்கி இணைந்து, செயலாக்கக்கூடிய சகாக்களை உருவாக்கினார்; பொதுமக்கள் சபையில் புதிதாக அமர்ந்திருந்த அமைதியற்ற லிபரல் உறுப்பினர்கள் கூட்டத்தின் நம்பிக்கையையும் பெற்றார். மில்நரின் (Milner) கொள்கையை மாற்றிக் காலந் தாழ்த்தாமல் பொறுப்பாட்சி வழங்குவதன் மூலம் தென் ஆப்பிரிக்காவுடன் சமரசம் செய்தார்.[1] தமது பணிகள் யாவற்றையும் நிறைவேற்றிவிட்டு பானர்மேன் 1918-ல் இறந்தார். யார்க்ஷையர் வாசியான ஆஸ்க்குவித் (Asquith) அடுத்த பிரதமராகப் பதவியேற்றார். இவர் உண்மையும் வன்மையும் நிறைந்தவர். சட்ட நுணுக்கத்தில் திறமையும் அறிவும் கொண்டு மாறுபட்ட கருத்துக்களில் இருந்து நல்ல தீர்ப்புக்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை அரசியலில் கையாண்டார். முரண்படும் சகாக்களைத் தம் வழிக்குக் கொண்டு வரும் அரிய திறமை இவரிடம் விளங்கியது.

இதுவரை நடந்திராத வகையில் பெருமளவில் சமூக சீர்திருத்தத் திட்டங்களைப் புகுத்தியது இந்தக் கடைசி லிபரல் கட்சி அமைச்சரவையின் பெரும் சாதனையாகும். பங்குத் தொகை வழங்காத அடிப்படையில் முதியோர் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டதால் (1908) ஏழைகள் விடுதிகளிலிருந்து மக்கள் வெளியேறினர். வயோதிகருக்கு இன்பமும், அவர்களின் மக்களுக்கு வயோதிகப் பெற்றோரைப் பேணுகின்ற பொறுப்பின் ஒரு சிறு நிவாரணமும் இதனால் கொடுக்கப்பட்டன. ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் வரிப்பளு செல்வர்கள்பால் மாற்றப்பட்டது. வேலையாள் இழப்பீடு (Workmen's Compensation), சுரங்கத் தொழிலாளர் எட்டு மணி நேர வேலை, குழந்தைகளின் மருத்துவ சோதனை, குழந்தைகள் மசோதா (Children's Bill), நகரத் திட்ட சட்டம், கடின உழைப்பு தொழில் சட்டம் (Sweated Industries Act), வேலையின்மை, சுகா

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 3, பக்கம் 91 காண்க.

தார உறுதி ஈட்டுத் (Health Insurance) திட்டங்கள், நாட்டுப்புற மாவட்டங்களுக்கான சிறு நிலச் சட்டம் (Small Holdings Act) போன்றவை சட்ட நூலில் இடம் பெற்ற பெரியதோர் திட்டத்தின் பகுதிகளாகும். நகராட்சி மன்றங்களால் நிறுவப்பட்டு, கண்காணிப்புக் குழுக்கள் (Care Committees), விளையாட்டு நிலையங்கள், சாரணர் இயக்கம் (Boy Scouts), முதியோர் கல்வி (Adult Education), இன்னும் பிற அரசியலுக்குப் புறம்பான நடவடிக்கைகள் இடைவிடாமல் முன்னேறிக்கொண்டிருந்த மருத்துவவியலும் நடைமுறை போன்ற பணிகளால் விரிவும் செய்யப்பட்ட மேற்கூறிய திட்டங்கள் யாவும் இந்த நூற்றுண்டில் போர் நடந்தும் கூடக் குழந்தைகளின் சுகாதாரத்தையும் மகிழ்ச்சியையும் அதிகரிக்கச் செய்துள்ளன. மரண விகிதத்தைக் குறைத்துப் பல ஆண்டுகள் சராசரி மனித வாழ்வை நீட்டியுள்ளன. மேலும் தேசிய வருமானத்தையும் இன்ப வாழ்வுக்கான வாய்ப்புக்களையும் சமமான முறையில் பங்கிடவும் தொடங்கியுள்ளன.

தற்கால ஜனநாயகத்தின் கீழ் தல அரசாங்கத்தின் அலுவல்கள் பெருமளவில் விரிவடைந்துள்ளன. இப்பொழுது அவை பொதுச் சச்சரவுகளை நீக்குவதோடு நின்றுவிடாமல் துப்புரவு வசதிகளை வழங்குதல், வீதிகளுக்கு விளக்குப் போடுதல் போன்ற பணிகளை மட்டும் செய்யாமலும், தனிக்குடிமகனின் தனிப்பட்ட நன்மைக்காகச் செயலாற்றியும் வருகின்றது. ஏழைக் குடிமகன் தான் வாழவேண்டிய வீட்டைப் பெறுவதற்கு ஒயிட்ஹாலின் அரசாங்க அதிகாரிகளால் கட்டுப்படுத்தவும் உதவி வழங்கவும் படும் தல அரசாங்கத்தை எதிர்பார்க்கத் தொடங்கியிருக்கிருன். பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழக உதவிச் சலுகைகள் வரை தம் குழந்தைகளின் இலவசக் கல்விக்கும், மருத்துவமனைகளுக்கும், தொத்துநோய் மருத்துவ விடுதிகளுக்கும், இலவச நூல் நிலையங்களிலிருந்து புத்தகங்களுக்கும், குளிக்கும் வசதிகளுக்கும், நீச்சுக் குளங்களுக்கும், கிரிக்கெட் அரங்கங்களுக்கும், திறந்த வெளியில் ஞாயிறு உலா, பசும்புல் தரைகளுக்கும், அவன் குடும்பத்தை வேலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் எடுத்துச்செல்ல டிராம், பஸ் வசதிகளுக்கும், வாழ்வை இன்ப மயமாக்கும் இன்னும் பல நலன்களுக்கும் தல அரசாங்கத்தையே நம்பியிருக்கிருன்.

1894 சர் வில்லியம் ஹார்கோர்ட்டு (Sir William Harcourt) கூறியது போல, 'இப்போது நாம் யாவரும் சோஷலிஸ்ட்டுகளே.' இதற்கு என்ன பெயரிட்டு நாம் அழைத்தாலும் ஏழை மக்களுக்கு அரசாங்கம் வாழ்க்கை வசதிகளை அளிக்கின்ற இத்திட்டமானது தற்கால ஆங்கில வாழ்க்கையின் சிறந்ததொரு அம்சமாகும்.

இதன் முக்கிய கருவி தேர்ந்தெடுக்கப்பட்ட தல ஆட்சிக் குழுக் களாகும். இவை அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட பல பாராளு மன்றச் சட்டங்களினால் அதிகாரம் பெற்றவை. தலவரிகளுக்கு உதவியாகக் கருவூலக் கொடைகளின் மூலம் நிதி உதவியும் பெற்று வருகின்றன. இவற்றின் தரம் தாழ்ந்துவிடாமல் அர சாங்க மேற்பார்வையாளர் கவனித்து வருகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் தொடங்கிய இத் திட்டம் என்றுமில்லாத அளவு இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்து வந்திருக்கிறது. 1925ஆம் ஆண்டின் வரி விதிக்கும் மதிப்பீடு சட் டத்திலும் (Rating and Valuation Act) 1928ஆம் ஆண்டின் தல அரசாங்கச் சட்டத்திலும் மத்திய அரசு தல அரசாங்கத்தை மேலும் மேலும் கட்டுப்படுத்துவதைக் காண்கிறோம். ஒயிட் ஹாலின் தல ஆட்சித் துறையும் அமைச்சரும் நாட்டுக்குப் பொது வான முறையில் தல அதிகாரிகளின் செயல்களைக் கட்டுப்படுத்து வதில் அதிக நாட்டம் கொள்ளுகின்றனர். இத்தகைய தேசிய அமைப்புக்களைத் தல அதிகாரிகளின்மேல் பாராளுமன்றச் சட் டங்களினால் மட்டுமன்றி, தற்காலப் பாராளுமன்றச் சட்டங்கள் ஆட்சித் துறைச் சட்டங்களின் மூலமும்,அமைச்சரவை குறிப்பிட்ட துறையில் ஏற்படுத்தும் விரிவான விதிகளின் மூலமும் அமுலாக் கப்படுகின்றன. இதற்கு 'வழங்கப்பட்ட சட்ட அதிகாரம்' எனப் பெயர். ஏனெனில் பாராளுமன்றம் சட்டத்தினால் கல்விப் போக்குவரவு பொதுச் சுகாதாரம் போன்ற துறைகளின் அமைச்சர்களுக்கு தலஅதிகாரிகளுக்கான துணை விதிகளை ஏற் படுத்திக்கொள்ள அதிகாரம் வழங்குகிறது. இவை பாராளு மன்றச் சட்டத்தைப்போன்று அமுலாக்கப்படுகின்றன.

ஏழைக் குடிகளின் நலன்களுக்கான தேசியக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் தலஅதிகாரிகள் மத்திய அரசாங்கத்தின் கீழாட்களாக ஆகிக்கொண்டு வருகின்றனர். உதவிக் கொடை களுக்குத் தேவையான தலவரிகளையும், தேசிய வரிகளையும் கொடுப்பதன் மூலம் செல்வர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற னர். இத்திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலஅதிகாரிகள் பழங்காலத்தைவிட அதிக அதிகாரமும் குறைந்த சுதந்திரமும் பெற்றிருக்கின்றனர். அவர்கள் பாராளுமன்றச் சட்டத்தினாலும் மந்திரியின் ஆணையினாலும் விதிக்கப்படுகின்ற எண்ணிறந்த கடமைகளை மறுக்க முடியாது. பாராளுமன்றத்தையோ அமைச் சரையோ அல்லது ஒயிட்ஹாலின்[1] எந்தத் துறையையுமோ

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, தோற்றுவாய் காண்க.

கேட்காமல் 'ஸ்பீன்ஹாம்லாந்து திட்டத்தை'ப் போன்று கூலிக்கு உதவியாக வரி வழங்கும் ஒரு தேசியத் திட்டத்தை 1795-ல் தல நீதிபதிகளான அமைதிக் காவலர்கள் நிறைவேற்றிய காலம் மலை யேறிவிட்டது.

வருங்காலத்தில் அரசாங்கம் கான்சர்வேடிவ் ஆகவோ, தேசியக் கட்சியாகவோ அல்லது தொழில் கட்சியாகவோ அழைக்கப்பட்டாலும் அதில் பாதியாவது சோஷலிசம் மயமாக இருக்கவேண்டும். கடைசி லிபரல் அரசாங்கம் (1906-15) இந்த உண்மையை ஒப்புக்கொண்டு புதிய சமூகப் பொருளாதார நிலைமைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சட்ட முறையான நிர்வாகத் திறமைகளைக் காட்டியது.

மொத்தத்தில் நடுத்தர மக்களின் கட்சியாக இருப்பதைக் கைவிட்டுவிட்ட லிபரல்கள், உழைப்பாளி மக்கள் அவர்களின் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வரையில்தான் நிலை பெற முடிந்தது. புதுப் பாராளுமன்றத்தின் முதல் நாட்களிலே லிபரல்கள் தொழில் கட்சியின் எண்ணத்தைச் சார்ந்திருக்கின் றனர் என்பது வியத்தகு முறையில் தெளிவாகிறது. பொதுத் தேர்தல்களின் விளைவாக டாஃப்வேல் முடிவு மாற்றியமைக்கப் படவேண்டும். ஆனால் எந்த நிபந்தனைகளின் பேரில்?

1906-ல் லிபரல் அரசாங்கம் பால்ஃபோர்[1] நியமித்த குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு மசோதாவைக் கொண்டு வந்தது. இக்குழுவில் சிட்னி வெப்பும் (Sidney Webb) பிறரும் இடம் பெற்றிருந்தார்கள். இந்தக் குழுவினர்களின் ஆலோசனைப்படி இந்த மசோதா தொழிற்சங்கங்களை நீதி மன் றத்திற்கு இழுக்கலாம் என்று கூறியது. ஆனால் அவற்றின் தெளி வான உத்தரவின்பேரில் செய்யப்படும் சட்ட விரோதமான நட வடிக்கைகளுக்கும் அல்லது அவற்றின் ஆணைகளின் கீழ் யாரா வது ஒருவர் செய்கின்ற செயல்களுக்கும் மட்டுமே வழக்குத் தொடர முடியும். உடனே தொழிற்சங்கங்கள் தங்கள் நீதிகளைத் தொட விடுவதில்லையென உரிமை கோரிக் கிளர்ச்சி செய்தன; நீதி பதிகளின் நட்புறவற்ற வாதத் திறமையின் பல அனுபவங்கள் தொழிலாளர்கள் நீதிமன்றங்களின் மேல் ஆழமான அதிருப்தி கொள்ளும்படிசெய்தன. இவை பெரும்பாலும் தொழில் சங்கங் களின் உரிமைகள் பற்றிய வழக்குகளாலும் 1825ஆம் ஆண்டு 1871 ஆம் ஆண்டுச் சட்டங்களின்படி வழங்கப்பட்ட இந்த உரிமைகளைப்

[1] இங்கிலாந்தின் வரலாறு-III, பிரிவு 6, இயல் 5, காண்க.

பல ஆண்டுகள் பாதுகாப்பாக அனுபவித்தபின், சட்டத் தீர்ப்புகளின் மூலம் பறித்தார்கள். ஆகவே இந்நிலைமை மீண்டும் ஏற்படலாம். பொதுமக்கள் சபையின் தொழில்கட்சி உறுப்பினர்களும் பெரும் பான்மையான லிபரல் கட்சி உறுப்பினர்களும் தேர்தலில் தொழில் சங்கங்களின் நிதிகளைச் சட்ட நடவடிக்கைகள் பறிக்க விடுவதில்லையென வாக்குறுதி அளித்திருந்ததால் அரசாங்க மசோதா போதாது என அறிவித்தார்கள். கேம்ப்பெல்-பானெர்மேன் சரண் அடைந்து சட்ட மீறும் செயல்களிலிருந்து தொழில் சங்கங்களைப் பாதுகாக்கின்ற உரிமைக் கோரிக்கையை ஒப்புக்கொண்டார். ஆனால் தொழில் சங்கங்களின் தனிப்பட்ட உறுப்பினர்கள் சட்டத்தை மீறினால் தண்டனைக்குள்ளாவார்கள். இம்மசோதா இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது. ஏனெனில் பொதுமக்கள் சபையில் இது மூன்றும் முறை வாசிக்கப் பட்டபோது அதனை எதிர்த்து பால்ஃபோர் பிளவு ஏற்படுத்த விரும்பவில்லை. இந்தக் குறிப்பைப் பிரபுக்கள் சபையினரும் கண்டு கொண்டு பயந்தனர்; புது அரசாங்கத்தின் கல்விச் சட்டமும் அனுமதிச் சீட்டுச் சட்டமும் (Licensing Bill) தள்ளிவிடப்பட்ட போது தொழிற்சங்கச் சட்டம் மட்டும் நிறைவேறியது.

இவ்வாறு 1906ஆம் ஆண்டில் முற்போக்கு அல்லது இடதுசாரி அரசியலில் தொழில் கட்சிதான் மிக வன்மையான அம்சம் என்பது தெளிவாயிற்று. இது பழைய லிபரல் நலன்களையும், இணங்காதார் கொள்கையையும், மது வெறி ஒழிப்பையும் (Temperance) விட வன்மை பெற்றிருந்தது. பிரபுக்கள் சபையினருக்குத் தொழில் கட்சியினரை எதிர்க்கத் துணிவில்லை. கான்சர் வேடிவ்களும், லிபரல்களில் பலரும் இருபதாம் நூற்றாண்டின் இணைந்த தொழில் சங்கங்களைப்போன்ற வன்மையான தொகுதிகளுக்குச் சட்டப் பாதுகாப்பளிப்பது ஆபத்தான உரிமையாகும் என்று கருதினர்; சுரங்கத் தொழிலாளரும் ரெயில்வே ஊழியரும் போக்குவரவுப் பணியாளர்களும் வட்டார அடிப்படைக்குப் பதிலாகத் தேசிய அடிப்படையில் அமைக்கப்பட்டனர். இவை ஒவ்வொன்றும் 'அரசாங்கத்துள் அரசாங்கமாக' இருக்க முயன்று வந்தன. இப்போது அவை பெருமளவில் சட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்குப் பெற்றிருந்தன.

அதே நேரத்தில் குறிப்பிடத்தக்க லிபரல் கட்சித் திட்டங்களான கல்வி மசோதா, அனுமதிச் சீட்டு மசோதா போன்றவற்றைத் தள்ளிவிடத் தூண்டியதன் மூலம்கான்சர்வேடிவ் தலைவர்கள் பிரபுக்கள் சபையை மீண்டும் அரசியல் முன்னணிக்குக் கொண்டு வந்தனர். இந்நிலையில்தான் டிஸ்ரேலியின் விவேகம் அவர்களைக்

காப்பாற்றிவிட்டிருந்தது. அவருடைய அறிவுத் திறமையான தலைமையின்கீழ் பிரபுக்கள் சபை 1868 முதல் 1874 வரை கிளாட்ஸ்டனின் பெரும் திட்டங்கள் யாவற்றையும் சட்ட நூலில் சேர்த்துக் கொள்ள அனுமதித்தனர். இதில் அயர்லாந்து மதச் சபையின் கலைப்பும் அடங்கியிருந்தது. இதன் விளைவாக அடுத்த பொதுத் தேர்தலில் கான்சர்வேடிவ்கள் வெற்றி பெற்றனர். எண்பதாம் ஆண்டுகளில் பிரபுக்கள்சபையினர் பொதுமக்கள் சபைக்கு இணையான அதிகாரத்தோடு ஒரு பிரிவினைக் குழுவாக இயங்கும் இயல்பான உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொண்டனர். ஆனால் 1893-ல் கிளாட்ஸ்டனின் சுயஆட்சி மசோதாவைத் (Home Rule Bill) தள்ளி விடுகின்ற துணிகரமான போக்கைப் பின்பற்றியதால் செல்வாக்கு பெற்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் பெற்ற முழு வெற்றி அடுத்த பொதுத் தேர்தலின் முடிவினால் உறுதி செய்யப்பட்டது. எனவே ஜனநாயகப் பண்புள்ள இருபதாம் நூற்றாண்டிலும் பிரபுக்கள் சபையினர் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற வன்மையான அரசாங்கத்திற்கு எதிராக இதே தந்திரத்தைக் கையாளுவார்கள் என்று சேம்பர்லேய்ன், பால்ஃபோர், லார்டு லாண்ட்ஸ்டவுன் ஆகியோர் தப்புக் கணக்குப் போட்டனர்.

டிஸ்ரேலி கொடுத்த எச்சரிக்கையைச் சாத்வீகமான முறையில் அவர்கள் கைவிட்டது அடிப்படையில் தவறானதாகும்; 1906 முதல் 1908ஆம் ஆண்டு வரை அவர்களுடைய தந்திரங்கள் சிறப்பானதாக இருந்ததோடு வெற்றியும் பெற்றன. அவர்கள் உழைப்பாளி வகுப்புக்கள் அதிக ஆர்வம் காட்டிய திட்டங்களை நிறைவேற்றினர். ஆனால் லிபரல் கட்சி ஆதரவாளர்கள் குறிப்பாக அக்கறை காட்டிய திட்டங்களை நிறைவேற்ற மறுத்ததன் மூலம் அரசாங்கத்தை இழிவுபடுத்தினர். லிபரல்கள் வெற்றிகரமாகப் பதவியேற்ற இரண்டாண்டுகளுக்குள் சக்தி இழந்தவர்களாகக் காணப்பட்டனர். இடைத் தேர்தல்களில் அரசாங்கம் படுதோல்வியுற்றது. கான்சர்வேடிவ்களுக்கு எதிர்ப்பு கிளம்பிக் கொண்டிருந்தது. சிறிது பொறுமையுடன் இருந்திருந்தால் நன்மை விளைந்திருக்கும். ஆனால் பிரபுக்கள் பொறுமை இழந்தனர். கட்சித் தலைவர்களின் தூண்டுதலின்பேரில், தற்கால அரசியல் தந்திரத்தின் மகத்தான தவறைச் செய்ய முற்பட்டனர். அதாவது லாயிட் ஜார்ஜின் 1909ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தைத் தள்ளிவிட்டனர்.

நிதி விஷயங்களைப் பொறுத்தவரையில் மேல் சபையின் அரசியலமைப்பு அலுவலைப் பற்றிய இப்புதிய விளக்கத்தின்படி,

பிரபுக்கள் சபை தான் விரும்பியபோதெல்லாம் ஒரு பொதுத் தேர்தலை புகுத்த உரிமை கோருகிறது என்று பொருள்படும்; ஏனெனில் வரிகளை விதிக்க சக்தியற்ற ஓர் அரசாங்கம் பதவி நீங்க வேண்டும். அல்லது கலைக்கப்படவேண்டும். வருங்காலத்தில் பிரபுக்கள் சபை விரும்பாத பாராளுமன்றங்களை அவர்களின் விருப்பப்படி கலைத்துவிடலாம். வரவு செலவுத் திட்டத்தைத் தள்ளிவிட்டதும் அரசியல் அமைப்பின் வழக்கத்திற்கு முரணானதாகும். கான்சர்வேடிவ்கள் யாவற்றிற்கும் மேலாய், தம்மை அரசியல் அமைப்பின் காவலர்களாகக் கருதவேண்டும். டிஸ்ரேலியோ, லார்டு சாலிஸ்பெரியோ குறிப்பிட்ட ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தைத் தள்ளிவிடப் பிரபுக்களை அழைக்கும் ஒரு முறையைப்பற்றிக் கனவிலும் கருதியிருக்கமாட்டார்கள். வழிவழியாக வரும் ஒரு சபை, உயர்குடி ஆட்சி நிலவிய பதினெட்டாம் நூற்றாண்டில் கூடத் தான் அனுபவித்திராத அதிகாரங்களைக் கோருவதற்கு இருபதாம் நூற்றாண்டு உரிய காலமாகாது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர்கள் தான் பின்பற்றிய ஆபத்தான வழியைப்பற்றி ஏழாம் எட்வர்டு அரசர் கொடுத்த எச்சரிக்கை அனைத்தும் வீணாயின.[1]

ஆனால் புதிய நூற்றாண்டில் வன்முறை உணர்ச்சியும் அமைதியின்மையும் மக்கள் மனங்களில் நிறைந்திருந்தன. இதற்கு வெறி கொண்ட வாக்குரிமை கோருவோரும் தொழில் சங்கங்களும் அயர்லாந்துக் கட்சிகளும் அயல் நாட்டு இராணுவத் தலைவரும் அடிமையாகினர். சுங்க வரிச் சீர்திருத்த இயக்கம் (Tariff Refoum) இடைவிடாத உணர்ச்சிப் பெருக்கும், சினமும் பொங்குகின்ற ஒரு சூழ்நிலையில் நடத்தப்பட்டது; புதிய முறையான செய்தித்தாள்கள் உணர்ச்சிகளை வளர்த்தே வாழ்ந்தன; லாயிட் ஜார்ஜின் மக்களைத் தூண்டிவிடும் குரல் அரசாங்கஅமைச்சர்கள் முழக்கிய பேச்சுக்களில் இன்னும் ஒலித்தன; பிரபுக்களையும் வன்முறை நோய் பீடித்தது.

[1] பிரபுக்கள் சபையினர் ஒரு பழைய மசோதாவில் திருத்தங்கள் கொண்டுவரலாமேயன்றி அதனைத் தள்ளிவிடமுடியாதென இரண்டாம் சார்லஸ் அரசர் ஆட்சியில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ஓராண்டில் எல்லா வழிகளையும் ஒரே வரவு செலவு மசோதாவில் அடக்குகின்ற வழக்கமிருந்ததால் பிரபுக்கள் ஒரு வரவு செலவுத் திட்டத்தையும் தள்ளியதில்லை. அவர்கள் 1860-ல் கிளாட்ஸ்டனின் காகித வரி மசோதா (Paper Duty Bill) ரத்து ஆகிய தனிப்பண மசோதாவைத் தள்ளினர். ஆனால் அடுத்த ஆண்டில் அவர் அதனை வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்ததால் அதை நிறைவேற்றினர். பட்ஜெட்டின் புதிய நிலவரியின் மதிப்பீட்டு விதிகள் ஒரு நிதி மசோதாவிற்குப் பொருந்தாதவையென 1909-ல் பிரபுக்கள் கூறினர். ஆனால் அவர்களின் சபையில் எதிர்ப்பின்றி வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் மாமூலான உரிமையைக் கோரமுடியாது.

லாயிட் ஜார்ஜின் வரவு-செலவுத் திட்டம் மேல்வகுப்பு மக்களின் ஆதரவைப் பெறவில்லை (1909). ஏனெனில் அது முறையற்ற வகையில் கொண்டுவந்த புதிய நிலவரிகள் நடைமுறைக்கு ஏற்றவை அல்ல என்பது அனுபவத்தில் நிரூபிக்கப்பட்டது; மேலும் செல்வர்கள் மேல் நேர்முக வரி விதிப்பில் மிதமான அதிகரிப்பும் செய்தது. இன்று இருப்பதைவிட (1937) கால் பங்கு படிமுறையான வருமான வரியும், அதற்கு இணையான இறப்புவரியும், வயோதிகர் ஓய்வூதியம் அளிக்கவும் கடற்படையில் மிகத்தேவையான முன்னேற்றங்களைச் செய்வதற்கும் அவசியமாகயிருந்திருக்கும். எதிர்க்கட்சியினர் மட்டும் காத்திருந்தால் அவர்கள் அடுத்த தேர்தலை வென்று நிலத்தீர்வைகளை ரத்து செய்திருக்கமுடியும். ஆனால் அவர்களோ வரவு செலவுத் திட்டத்தைத் தள்ளிவிடும்படி பிரபுக்களை வற்புறுத்தினார்கள். லாயிட் ஜார்ஜும், இதைத்தான் பெரிதும் விரும்பினார். அவர் இந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டார். லைம் ஹவுசிலும் (Limehouse) பிற இடங்களிலும் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வாதத்தை விரிவு படுத்தி ஜனநாயக வெறியைத் தூண்டிவிட்டன. 'ஆளவேண்டியது பிரபுக்களா பொது மக்களா?' என்பது லிபரல்களுக்கு ஒரு மகத்தான தேர்தல் பிரச்சினையாகிவிட்டது.தாம் வரவு செலவுத் திட்டத்தை மக்களின் கவனத்திற்கு விட்டிருப்பதாகக்கூறி, பிரபுக்கள் தம் நிலைமையை விளக்கினர். மேலும் நில மதிப்பீட்டு விதிகள் வரவு செலவுத் திட்டத்திற்குப் பொருத்தமற்றவை என்பதும் அவகளுடைய வாதமாகும்; ஆனால் அவர்கள் தம்மைப்பாதுகாத்துக்கொள்ளவே விரும்பினர்; எனவே, எதிர்க்கட்சியினர் பிரபுக்களைத் தாக்குகின்ற வாய்ப்பை இழந்துவிட்டனர்.

இதற்கிடையில் ஆஸ்க்குவித்தும் அவருடைய பிற சகாக்களும் மிதவாதிகளின் ஆதரவை அமைதியான முறையில் தேடினர். மிதவாதிகள் கான்சர்வேடிவ்களுடன் உறவுகொள்ளும் பழைய நிலைமைக்கு மீண்டும் திரும்பினர். ஆனால் பிரபுக்கள் அரசியலமைப்பு வழக்கங்களைப் புறக்கணித்ததைக் கண்டு இவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதே நேரத்தில் லிபரல் அமைச்சர்கள் பிரபுக்களின் வெட்டதிகாரத்தைக் கட்டுப்படுத்த, தொழில் கட்சியினரையும் அயர்லாந்து சக்திகளையும் ஒரு கூட்டு முயற்சியில் இணைத்துக்கொண்டிருந்தனர். வரவு,செலவுத்திட்டத் தேர்தலின் மற்றொரு பிரச்சினை சுங்க வரிச் சீர்திருத்தமாகும்; தடையில்லா வாணிப அரசாங்கத்திற்குத் தேவையான உயர்ந்த நேர்முக வரி விதிப்புக்குப் பதில் பணந்திரட்டும் முறையாகக் கான்சர்வேடிவ்கள் இந்தச் சீர்திருத்தத்தை வற்புறுத்தினார்கள்.

இந்தப் பிரச்சினைகள் யாவும் வரவு செலவுத் திட்டம் தள்ளப்பட்டதாலும் பாராளுமன்ற மசோதாவின் மீதும் நடந்து கொண்டிருந்த போராட்டத்தின் காரணமாக முதிர்ந்துவிட்டன; புதுத்திட்டத்தின்படி பிரபுக்கள் சபையினர் பணமசோதாக்களைத் திருத்துவதையோ தள்ளுவதையோ தடுக்கவும் அவர்கள் பிற மசோதாக்களின்மேல் கொள்ளும் முழு வெட்டதிகாரத்தை இரண்டாண்டுகள் நிறுத்திவைக்கும் அதிகாரமாக மாற்றவும் யோசனை கூறப்பட்டது. இதில் நாட்டு மக்கள் இருமுறை கலந்தாலோசிக்கப்பட்டனர். ஒரு முறை எட்வர்டு அரசர் காலத்திலும், மறு முறை அவர் இறந்தபின் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் காலத்திலுமாகும். இதன் விளைவாக இந்த இரு தேர்தல்களிலும் லிபரல்கள் தொழில் கட்சியினர் அயர்லாந்தியர் சேர்ந்த கூட்டு முன்னணி நூற்றிருபது வாக்கு பெரும்பான்மையில் பெற்றது.[1] எனவே லிபரல் கட்சி இப்பிரபுக்கள் சபையின் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய போதிலும் தன் சொந்தக் கூட்டாளிகளின் இரக்கத்தை நம்பியிருக்கவேண்டியிருந்தது. இரண்டாவது தேர்தலுக்குப் பின் ஐந்தாம் ஜார்ஜ் முதல் தேர்தலின் முடிவை உறுதிப்படுத்தினர். ஆஸ்குவித் யோசனையின் பேரில் நான்காவது வில்லியம் முதல் சீர்திருத்த மசோதாவை நிறைவேற்ற கிரேயின் ஆணையின் பேரில் செய்ததுபோன்று (1911) முழுவதும் புதுப்பிரபுக்களை நியமித்து விடும். பயமுறுத்துதல் வழியைப் பின்பற்றிப் பிரபுக்கள் சபை பாராளுமன்ற மசோதாவை நிறைவேற்றச் செய்தார். மீண்டும் முடியரசின் தனி உரிமை அதிகாரங்களே ஜனநாயகத்தின் கருவியாக ஆகிற்று. இந்த உண்மை தொழிலாளர்களைக் குடியரசுக் கொள்கையினின்றும் மேலும் விலகிப்போகச் செய்தது.

ஆனால் 1911 ஆம் ஆண்டு 1832ஐப் போல மிகக்கேடான தொல்லையின் முடிவன்று. ஏனெனில் 1832ஐ விட இப்போது நாட்டின் எண்ணம் அதிக சமமாகப் பங்கிடப்பட்டுக் கிடந்தது. அக்காலத்தில் பிரபுக்களுக்குப் போராட்டத்தை நடத்த தங்

[1] 1910 ஜனவரியிலும் டிசம்பரிலும் நடந்த தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏழாம் எட்வர்டின் மரணத்தைத் தொடர்ந்து, ஓர் இரகசிய மாநாடு நடந்துகொண்டிருந்தது. இதில் இரு க்ட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு பிரபுக்கள் சபைப் பிரச்சினையையும் பிறவற்றையும் உடன்பாட்டினுல் தீர்க்க முயன்றுவந்தனர். பல மாதங்கள் வாதம் நடந்தபின் மாநாடு தோற்றது. இரு சபைகளுக்குமிடையே மோதலைத் தடுக்க ஏழாம் எட்வர்டும். ஐந்தாம் ஜார்ஜும் சிறந்த முயற்சிகள் எடுத்தனர்; இப்படிப்பட்ட பல சந்தர்ப்பங்களில் 1868லும் 1884லும் நடந்ததுபோல் விக்டோரியா அரசி பெரும் வெற்றி கண்டார்கள். ஆனுல் 1906 முதல் 14 வரை நிலவிய அரசியல் சூழ்நிலை அரசனின் மத்தியஸ்தத்துக்குப் பொருந்தி வரவில்லை.

களின் சொந்த அரசியலமைப்பு அதிகாரங்களைத் தவிரவேறொன்றும் கிடையாது. சுய ஆட்சிப் பிரச்சினை மீண்டும் நல்லெண்ணத்தோடு எழுப்பப்பட்டது. ஏனெனில் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் பிரபுக்கள் அதனை நிறைவேற்றுவதைத் தாமதிக்கலாமே யன்றி தோற்கடிக்க முடியாது. வேல்ஸ் நாட்டின் இணங்காதாரும் பாராளுமன்றத்தில் அந்நாட்டு உறுப்பினர்களில் பெரும்பான்மையோரும் நீண்ட நாளாகக் கோரி வந்த வேல்ஸ் மதச்சபைக் கலைப்புப் பிரச்சினை இப்போது நடைமுறை சாத்தியமாகிவிட்டது. இதனால் மக்களின் சினம் என்ற நெருப்பிலே நெய் ஊற்றப்பட்டது.

கிரேட் பிரிட்டன் கட்சிகளின் வெறுக்கத்தக்க அம்சமான பழைய அரசியலமைப்பு மதப்பிரிவுகளும் புதிய சமூகப் பொருளாதாரப் பகைமைகளும் இணைந்த ஒரு கலப்பானது மிகப் பழையனவும், வன்மையான பகை உணர்ச்சிகளும் ஆகிய அயர்லாந்தின் இன சமய உணர்ச்சிகளில் உச்ச கட்டமும் சமகாலத்தில் தோன்றியது அவப்பேருகும். இக்காலத்திய நாட்டுநடப்பு வன்முறையும் சினமுமாகும். இவ்வாறு குழப்பம் மிகுந்த காலத்தின் அரசியல் நிகழ்ச்சிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த, பெண்டிர் வாக்குரிமையின் பெண் ஆதரவாளர்கூடத் தங்களின் கொள்கையை விளம்பரப்படுத்த உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் நாசம் செய்யும் வன்முறையில் இறங்கினார்கள். இதன் விளைவாக அவர்கள் கொள்கையும் தோற்றது. தங்கள் கொள்கையை வற்புறுத்த வன்முறையைக் கையாண்ட பெண்கள் நேர்வுரிமைக்காக வலிய முறைகளை வற்புறுத்தும் ஸப்ரஜிட்ஸ் (Suffragettes) என்று அழைக்கப்பட்டனர். தொழிலாளர் தொல்லைகள் அதிகரித்தன. வேலை நிறுத்தங்களும் அடிக்கடி நிகழ்ந்தன. போருக்குமுன்னர் இறுதி யாண்டுகளில் சுரங்கங்களிலும் ரயில்வேக்களிலும் பரந்த தேசியத் தொழிலமைப்புகளுக்கும் தொழிலாளருக்குமிடையே தனிப்பட்ட போராட்டங்கள் வாழ்வின் புதிய அம்சமாகும். இடைக்காலத்தைப்போலவே பெரிய கூட்டுக் கழகங்கள் அமைப்பில்லாத சமூகங்களைவிட அதிக வன்மை பெற்றுவிடுவதாக அச்சுறுத்திக்கொண்டிருந்தன.

ஆனால் புயலிலும் அஞ்சாத லாயிட் ஜார்ஜ் இத்தகைய கொந்தளிப்பை அடக்க விரும்பினார். இத்தகைய குமுறல்களின் மத்தியில் இவையாவற்றையும் தன் பொறுப்பாகக் கொண்டு 1912-ல் சிக்கல் மிகுந்ததும் மக்களாதரவு பெருத உடல் நலக் காப்புறுதிச் சட்டத்தை (Health Insurance Act) நிறைவேற்றினார். இதன்படி தொழிலாளர் மக்கள் பிணிகளிலிருந்து காப்புறுதி பெற பங்குத்

தொகை வழங்க வேண்டியிருந்தது. அதுமுதல் இத்திட்டம் உழைப்பாளி மக்களுக்குப் பெருங் கொடையாகவும், மருத்துவர்களின் நண்பனாகவும் விளங்கி வருகிறது. மருத்துவர்கள் முதலில் அரசியல் தப்பெண்ணத்தின் காரணமாக இத்திட்டத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் சமூக சீர்திருத்தங்களாகிய 1902ஆம் ஆண்டின் பால்ஃபோரின் கல்விச் சட்டமும், 1912ஆம் ஆண்டின் லாயிட் ஜார்ஜ் காப்புறுதிச் சட்டமும் மக்கள் ஆதரவில்லாமல் அவற்றை நிறைவேற்றிய அரசாங்கங்களைப் புண்படுத்தின. இவ்விரு திட்டங்களும் சிறந்த பொதுநலத் தொண்டரான சர் ராபர்ட் மொராண்ட் (Sir Robert Morant) என்பாரின் பணியாலும், அறிவாலும், அவற்றைப் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றிய இரு அமைச்சர்களின் பிடிவாதத்தாலும் சாத்தியமாகின. பால்ஃபோரும் லாயிட் ஜார்ஜும் அரசியலிலும் பண்பிலும் மரபிலும் அறிவிலும் பரஸ்பர எதிரிகளாக இருந்தாலும், புயலை எதிர்த்து நிற்க விரும்பினர்கள். 1912-ல் அவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்தது நம்ப முடியாததொன்றாகும். ஆனால் மேகங்களின் ஊடே இன்னும் விந்தையான பல நிகழ்ச்சிகள் உருவாகிக்கொண்டிருந்தன.

சட்ட நூலில் சுய ஆட்சி இடம்பெறுவதற்குப் பாராளுமன்றச் சட்டம் வழி வகுத்தது; முற்றிலும் தள்ளிவிடுவதற்குப் பதிலாகப் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்படும் திட்டங்களை அவர்கள் இப்போது இரண்டாண்டுகளுக்கு நிறுத்தி வைப்பதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாது. இங்கிலையில் பிரிட்டனின் இரு கட்சிகளும் இணைந்து, அயர்லாந்தின் சமூகங்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு நேர்மையான ஒப்பந்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அல்ஸ்டரின் புரோட்டஸ்டாண்டு பகுதி நீங்கலாகச் சுய ஆட்சி விளங்குவதே இந்த முடிவாகும். ஆனால் பாராளுமன்றச் சட்டப் போராட்டத்தின் பின்னர் பக்குவப்படாத மனநிலை இருந்ததால், யாருக்கும் நல்லெண்ணம் உதிக்கவில்லை. ஒரு பேரரசுப் பிரச்சினையாக நேர்மையான முடிவுக்காகப் போராடி வந்த அயர்லாந்தை ஒரு தலைமுறை அளவாகப் பிரிட்டிஷ் கட்சி நலன்களும் வெறிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வந்தன. இப்போது போனர் லா (Bonar Law) என்பாரின் தலைமையில் இயங்கிய கான்சர்வேடிவ் கட்சி தன் முன்னோடியான பால்ஃபோரைவிட இப்பிரச்சினையில் அதிக வைராக்கியமாக இருந்தது. சர் எட்வர்ட் கேர்சன் (Sir Edward Carson) என்பாரின் சிறந்த தலைமையில் அல்ஸ்டர் எதிப்பிற்காகப் படை தயாரித்துக்கொள்ளும்படி பகிரங்கமாகத் தூண்டப்பட்டது. லிபரல் அரசாங்கம் தங்களைப் பொறுத்தவரையில் அல்ஸ்டரின் ஆறு

புரோட்டஸ்டாண்டு கவுண்டிகளும், சுயஆட்சி ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்க வேண்டும். இவ்வாறு நடக்குமென்றுதான் ஆஸ்குவித் கருதினர். ஆனல் அவர் அதனை அத்தனை தெளிவாகக் கூறவில்லை. ஏனெனில் அவர் பொதுமக்கள் சபையில் நம்பியிருந்த ரெட்மான்ட்டின் (Redmond) வாக்குகளை இழக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையில் இரு தரப்பிலும் பிரிட்டனின் அரசியல் வெல்திறம் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி அமையவில்லை. எனவே இதில் சம்மந்தப்பட்ட யாவரையும் ஊழ்வினை தாக்கியது. அல்ஸ்டரின் பல கவுண்டிகள் சுயஆட்சியிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படும் முறையிலும் அளவிலும் இங்கிலாந்தின் இரு கட்சிகளுக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடு குறைந்து வந்தது என்பது உண்மை. அப்படியிருந்தும் இறுதி உடன்பாடு ஏற்படவில்லை. இதற்கிடையில் அயர்லாந்தில் உருவாகிய உணர்ச்சி வெறிகள் வன்மை பெற்றுவிட்டன. ஃபெயின் அரசியலமைப்பு தேசிய வாதத்தை வளர்த்து வந்தார். ஆரஞ்சு உண்ர்ச்சிகளும் மேலோங்கி நிற்கவே இரு தரப்பினரும் சட்ட விரோதமாகப் படை தரித்துக்கொண்டனர். உள்நாட்டுப் போர் மூண்டுவிடும் போல் இருந்தது. திடீரென 1914 ஆகஸ்டில் ஒரு பெரும் போரும் இதைவிடப் பயங்கரமான ஆபத்தும் ஒரே வாரத்தில் லிபரல்களையும் கான்சர்வேடிவ்களையும் தொழிலாளிகளையும் முதலாளிகளையும் ஆடவரையும் வாக்குரிமையில்லாத மாதரையும் இணைத்தது. மேலும் சில மாதங்கள் பொங்கி நின்ற வன்மையான உணர்ச்சிப் பெருக்கில் அயர்லாந்தும் இங்கிலாந்தும் ஆரஞ்சும் கிரீனும் ஒன்றுபட்டன.

இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

இறுதி லிபரல் அரசாங்கம்—நகராட்சி சோஷலிசம்—லிபரல்களும் தொழில் கட்சியும்—பிரபுக்கள் சபைக் கொள்கை—பிரபுக்கள் வரவு செலவுத் திட்டத்தைத் தள்ளிவிடுதல்—பாராளுமன்றச் சட்டம்—லாயிட் ஜார்ஜின் காப்புறுதிச் சட்டம்—அயர்லாந்துச் சிக்கல்.

இயல் 7

தனித்து நிற்கும் நிலையின் முடிவு

தனித்து நிற்கும் நிலையின் முடிவு—லான்ஸ்டௌன் னும் (Landsdowne) கிரேயும்—பிரான்ஸுடனும், ருஷ்யா வுடனும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் — ஹால் டேனின் படைச் சீர்திருத்தங்கள்—ஐரோப்பா போரை நோக்கிச் செல்கின்றது. 1914.

கானிங்காலம் முதல் ஸாலிஸ்பெரிகாலம் வரை, கிரேட் பிரிட்டனின் 'மகத்தான தனித்த நிலை', நாட்டின் நலன்களுக்கு மிகவும் உதவின. இதன் மூலம் அடுத்தடுத்து நிகழவேண்டிய ஐரோப்பியப் போர்கள் பல தவிர்க்கப்பட்டன. கிரிமியா யுத்தம் மட்டுமே இதன் ஒரு விதிவிலக்காகும். அதையும் பிரிட்டன் தானே விரும்பித்தேடிக் கொண்டதோடு, அதன் விளைவுகளையும் எளிதாக மேற்கொண்டது. அக்காலத்திய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் நிலையிலும், போர்க்கருவிகள் கண்டிருந்த முன் னேற்றத்திலும், இங்கிலாந்தின் கடற்படையே போதுமான, நிச்சயமான பாதுகாப்பாக விளங்கியது. டிரெபால்கார் யுத்தம் நடந்து நூறுண்டுகளின் பின்னரும்,எந்தச்சக்தியும் போட்டியான கடற்படையை நிறுவ முன் வரவில்லை. பிரிட்டனின் உதவியின் றியே, ஐரோப்பாவின் சக்தி-சமநிலையானது போதுமான அளவு சமன் செய்யப்பட்டது. மேலும் ரைன் ஆற்றுக் கழிமுகத்தின் சிறுநாடுகளின் சுதந்திரமும், வன்மையான முறையில் அச்சுறுத் தப் படவில்லை. 1870ஆம் ஆண்டின் பிராங்கோ—பிரெஷ்ய யுத் தத்தின்போது (Franco-Prussion War) கிளாட்ஸ்டன், 1839ஆம் ஆண்டு உடன்படிக்கைகளின் கொள்கைகளையும், நிபந்தனைகளை யும் பின்பற்றி, பிரான்ஸோ. ஜெர்மனியோ, பெல்ஜியத்தின் நடுநிலையைக் கலைக்க முயன்றால், பிரிட்டன் போர் தொடுக்கும் என அறிவித்தார். இந்த நிலையில் இவ்வித எச்சரிக்கை யொன் றே போதுமானதாக இருந்தது. பிரான்ஸுடன் குடியேற்ற நாட்டுச் சிக்கல்கள் பல இருந்த போதிலும், ரஷ்யாவைப் பொறுத்த வரையில் ஆசியநாடுகள் சம்பந்தமான தொல்லைகள் இருந்தாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் எண்பதாம், தொண் ணூறும் ஆண்டுகளில், ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளுடன் செய்து கொண்டிருந்த முக்கூட்டு ஒப்பந்தத்துடன் (Triple Alliance) இங்கிலாந்தின் வாழ்வையும் தாழ்வையும் இணைக்க, ஸாலிஸ்பெரி எந்த அவசியத்தையும் காணவில்லை. இங்கிலாந்து தானே தனித்து நின்று இயங்கியது.

ஈடு இணையற்ற கடலாற்றல் நாட்டின் சிறந்த பாதுகாப்பாக விளங்கியது. ஆனால் சேம்பர்லேயினைப் போன்ற ஒரு சிலர் கல்வரம் கொள்ளத் தொடங்கினார்கள்.

புதிய நூற்றாண்டு தொடங்கியதும், தென் ஆப்பிரிக்கப் போரின் காரணமாக ஏற்பட்ட பொறாமையினாலும், பகையுணர்ச்சிகளினாலும்,'மகத்தான தனிமைக் காலம்' நம் முடிவிற்கு வந்தது. இப்புதுவழியின் முதல் அடிகளை பால்ஃபோர் அமைச்சரவையில் வெளிநாட்டு அமைச்சராக இருந்த லார்ட் லான்ட்ஸ்டௌன் என்பார் எடுத்துவைத்தார். அவர்கள் எண்ணியபடி அனைத்துலகிலும் உள்ள தரைப்படை, கடற்படைகளின் எண்ணிக்கையும், அளவும், எங்கும் பரவி இருக்கும் தன்மையும், இங்கிலாந்து வரையறுக்கப்பட்ட சில நட்புறவு நாடுகளைத் தேடிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைஉணர்த்தின. அமெரிக்காவுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இங்கிலாந்து பெரிதும் விரும்பி இருக்கும். ஆனால் அமெரிக்காவின் பரம்பரைக் கொள்கையான தனித்தியங்கும் நிலை இந்த உறவு ஏற்படாதவாறு தடுத்துவிட்டது. எனவே ஜப்பானுடன் உறவு கொள்ளப்பட்டது (1902). பசிபிக்பெருங் கடற்கரையில் ரஷ்யாவின் முன்னேற்றத்தைச் சமன் செய்வதும், பிரான்ஸும் ஜெர்மனியும் ரயாஷ்யாவும் சீனாவைப் பங்கு போட்டுக்கொள்வதைத் தடுப்பதும் இக் கூட்டுறவின் தொடக்க கால நோக்கங்களாகும். சீனப் பங்கீட்டைத் தடைசெய்வதில் அமெரிக்காவும் நம்மைப் போன்று ஆர்வங்காட்டினாலும், அதனைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஜப்பானுடன் செய்துகொண்ட நட்புறவினால், பசிபிக் கடலில் மிகப் பெரிய அளவில் கடல் தளம் அமைக்கவேண்டிய பொறுப்பும் தவிர்க்கப்பட்டது. பிரிட்டன் செய்துகொண்ட நட்புறவினால் எல்லா ஐரோப்பிய நாடுகளுடன் எதிர்த்த முதல் ஐரோப்பியரல்லாத ஒருபெரும் வல்லரசின் வளர்ச்சியைத் தடுக்கக் கூடிய எதிர்ப்புமுன்னணியை நிறுவமுடிந்தது போரில் ரஷ்யாமீது ஜப்பான் பெற்ற வெற்றியானது (1904) இந்தியாவிலும், அனைத்துலகிலும் பெரிய விளைவுகளை உண்டாக்கியது. பத்தாண்டுகளின் பின்னர். ஜப்பான் நம்முடன் செய்துகொண்ட உடன்படிக்கையினின்று புரண்டுவிடாமல், முதல் உலகப் போரின்போது தூரக் கிழக்கு நாடுகளுக்குச் சொந்தமான கரைகளையும், கடல்களையும் ஜெர்மனியிடமிருந்து பாதுகாத்தது. மேலும் மத்தியதரைக் கடல் பகுதியில் ஜப்பான் நமக்குமிக வன்மையான உதவியும் தந்தது.

ஜப்பானிய உடன்படிக்கையைவிட முக்கியமானது, அதே காலத்தில் பிரான்ஸுடனும், ஜெர்மனியுடனும் முறையே நமது

உறவுகள் வளர்ச்சியடைந்ததாகும். ஐரோப்பாவின் சக்தி-சம நிலை மேலும் கவலைக்கிடமாக இருந்தது. என்றும் பெருகிக் கொண்டு வந்த மக்கள் தொகை, செல்வவளம், பயிற்சிபெற்ற அறிவுப்பக்குவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இணையற்று வளர்ந்து வந்த ஜெர்மனியின் படைபலத்தின் காரணமாக ஜெர்மனி ஐரோப்பாவின் அதிக ஆதிக்கம் பெற்றுக் கொண்டு வந்தது; மேலும் தனது மிகவன்மையாக தரைப்படை இங்கிலாந்திற்குப் போட்டியாக ஒரு கடற்படையையும் நிறுவியது. பிரிட்டனைப் பொறுத்த வரையில் கடலாற்றல் நாடு பிழைத்து நிற்பதற்கே ஆதாரமாக இருந்தது. ஆனால் ஜெர்மனிக்கு இவ்வித அவசியம் ஏற்படவில்லை. இத்தகைய கடலாதிக்கப் போட்டி தான் ஐரோப்பிய வல்லரசுகளைப் பொறுத்த வரையில் இங்கிலாந்தின் போக்கையே மாற்றியது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதி இருபதாண்டுகளில் பிரான்ஸுடனும், ரஷ்யாவுடனும் போர் எழுகின்ற பேரபாயம் இங்கிலாந்தை இடைவிடாமல் எதிர்நோக்கி இருந்தது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் நமது நலன்களுக்கும், மேற்கூறிய இரு நாடுகளின் நலன்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலே இத்தகைய போரபாயத்தின் காரணமாகும். புதிய நூற்றுண்டின் தொடக்கத்தில், இத்தகைய ஒரு போரின் அபாயங்கள், வன்மை பெற்ற ஜெர்மனியும் எதிரிகளுக்கு உதவுமானல், எளிதாகத் தள்ளிவிடக்கூடிய ஆபத்து அல்ல என்பதை உணர்ந்தனர். ஜெர்மனியும் பிரிட்டனுடன் நட்புறவு கொள்ளத் தயாராக இருந்திருக்குமானல், உலக அமைதியை அது இருந்த அதே நிலையிலே காப்பாற்றவும் மனதாக இருந்திருக்குமானல், ஜெர்மனியுடன் கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்க முடியும். ஆனல் இது போன்ற தற்காலிக ஆலோசனைகளை சேம்பர்லேய்னும், பிறரும் கொடுத்தபோது, ஜெர்மனி அவற்றைத் தள்ளிவிட்டது; மேலும் பிரிட்டன் நம்பால் கொண்டிருந்த அதிகமான வெறுப்பும், அதன் கடலாதிக்கப் போட்டியும் வெளிப்படையாக விளங்கின. எனவே ஒப்பந்தத்தின் மூலம் பிரெஞ்சுக் குடியரசிற்கும், ரஷ்ய ஸார்மன்னருக்கும் எதிராகப் போர் மூளக்கூடிய வகையில் இருக்கக்கூடிய குறிப்பிடத்தக்க காரணங்களை விலக்கிக் கொள்வதைத் தவிர மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை.

1904-ல் லார்ட் லான்ஸ்டௌன் எகிப்திலும், மொராக்கோவிலும் (Morocco), நியூ பவுண்ட்லாந்திலும் பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் இடையே இருந்த முக்கிய வேறுபாடுகளை ஒரு நல்லிணக்க ஒப்பந்தத்தின் (Treaty of Agreement) மூலம் முடிவு

செய்துகொண்டார். இதன் மூலம் அவர் மனமார்ந்த நேச உடன் படிக்கை(Entente cordiale) உருவாவதற்கு வழி வகுத்தார். இங்கிலாந்தைப் பொறுத்தவரையிலும் இது நட்புறவு இல்லை என்னினும், இது ஜெர்மனிக்கு எதிராகப் பகையுணர்ச்சியைத் தூண்டவில்லை. ஜெர்மனி விரும்பித் தெரிந்துகொண்டாலன்றி இரு நாடுகளுக்கும் இடையே பகை வளர்வதற்கும் இடமில்லை. பிரான்ஸுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே புதிய நட்புறவு வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குத் தனது விடுமுறை நாட்களில் ஏழாம் எட்வர்ட் அரசர் பிரான்ஸில் கழித்ததினல் அவர் பெற்ற மக்கள் ஆதரவு மிகவும் உதவியாக இருந்தது. ஆனல் அவரது அமைச்சர்கள் பின்பற்ற வேண்டிய கொள்கையைத் தெரிந்துகொள்வதில் அரசரின் பங்கு ஒன்றுமில்லை.

1905ஆம் ஆண்டு டிசம்பரில் சர் எட்வர்ட் கிரே, லான்ஸ்டௌனுக்குப் பின்னர் வெளிநாட்டு அமைச்சராகப் பதவி ஏற்ருர். இது ஐரோப்பாவில் பெரிய நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்த காலமாகும். பொதுத் தேர்தலில் மூழ்கிக்கிடந்த ஆங்கில மக்கள் இதனைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. மொராக்கோ பிரச்சினையில் ஜெர்மனி பிரான்ஸை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இந்த நெருக்கடியில் தூதாண்மை ரீதியில் இங்கிலாந்து பிரான்ஸிற்கு ஆதரவு தர வேண்டுமென்று,முந்தின ஆண்டில் லான்ஸ்டௌனும், பிரான்ஸும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக எகிப்தில் நமது நிலையை பிரான்ஸ் ஒப்புக்கொள்ளவேண்டும் என விதிக்கப்பட்டது. பிரதமர் கேம்ப்பெல் - பானர்மேனின் உடன்பாட்டுடன் கிரே இந்த வாக்குறுதியை நிறைவேற்றியதோடு, மொரக்கோப் பிரச்சினையில் பிரான்ஸுக்கு ஆதரவும் தந்தார். ஆஸ்திரியா–ஹங்கேரி (Austria-Hungary) நீங்கலாகப் பிற ஐரோப்பிய நாடுகளும் 1906–ல் நடந்த அல்ஜிஸிராஸ் மாநாட்டில் (Algeciras Conference) இதே கொள்கையைப் பின்பற்றின அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சார்பில் குடியரசுத் தலைவர் தியோடர் ரூஸ்வெல்ட்டு (Theodore Roosevelt) இதனை ஆதரித்தார். ஜெர்மனியும் பின் வாங்கிற்று.

மொரக்கோப் பிரச்சினை இத்துடன் முடிந்துவிடவில்லை. 1904–ல் ஆங்கிலோ பிரெஞ்சுச் சிக்கல்களை லான்ஸ்டௌன் முடித்துக்கொண்டதை ஜெர்மனி விரும்பவில்லை. மேலும் இங்கிலாந்தை பிரான்ஸ் நம்பி இருக்க முடியாது என்பதையும் ஜெர்மன் பிரான்ஸிற்குக் காட்ட விரும்பியது. ஆனல் பிரான்ஸ் இங்கிலாந்தை நம்பலாம் என்பதைக் கிரே காட்டினர். நேச உடன்பாட்டிற்கு

இது ஒரு சோதனையாகும். லிபரல் கட்சியினரில் பெரும் பகுதியினர் விரும்பியதுபோல், 1905 டிசம்பரில் லிபரல் கட்சி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியதானது பிரிட்டன் தனது பழைய தனித்து வாழும் நிலைக்குத் திரும்புகிறதென்று பொருள்படுமானால், இதனை பிரான்ஸ் எதிர்த்திருக்க முடியாது. ஒன்று பிரான்ஸ் யுத்தத்தில் சேர்ந்திருக்கும் அல்லது ஜெர்மனியின் கீழாளாக மாறி இருக்கும். இந்நிலையில் ரஷ்யா, ஜப்பானுக்கு எதிராக நடத்திய போரில் படுதோல்வியுற்று நின்றது. மேலும் உள்நாட்டுக் கிளர்ச்சிக்கு நாடு மிகவும் பக்குவப்பட்டு விளங்கியது. முதலில் ரஷ்யாவையும், பின்னர் பிரான்ஸையும் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவர ஜெர்மனி விரும்பியது. அப்போதுதான் பிரிட்டன் ஜெர்மனியின் கருணையை நம்பியிருக்க முடியும். நெல்ஸன் காலத்தைப்போல ஒன்றுபட்ட ஐரோப்பாவை எதிர்க்கக்கூடிய நிலையில் பிரிட்டன் இல்லை; இங்கிலாந்தின் தீவுக்குரிய பாதுகாப்பை நீர்மூழ்கிகளும், ஆகாய விமானங்களும், அதிகத் தொலைவில் தாக்கிச் சுடும் துப்பாக்கிகளும் தகர்த்துவந்தன. எனினும் ஜெர்மனியின் தலைமையில் ஐரோப்பா இவ்வாறு ஒன்றுபடுவது உண்மையாக ஆபத்து என்பதில் ஐயமில்லை. 1905ஆம் ஆண்டு ஜூலையில், கெய்ஸரும் (Kaiser), ஸார் மன்னரும் பால்டிக் தீவுகளில் உள்ள ஜோர்க்கோவில் (Bjorko) ஸாரின் படகில் சந்தித்தனர். இதன்பின்னர் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி ஜெர்மனியும் ரஷ்யாவும் ஒன்று சேர்ந்துகொண்டன. இங்கிலாந்திற்கு வெளிப்படையான எதிர்ப்பான இந்த உடன்பாடு டில்சிட்டைப் (Tilsit) போன்று அபாயகரமானது.

ஜோர்க்கோ ஒப்பந்தம் காற்றில் விடப்பட்டதென்றாலும் அதன் கொள்கை எந்த நேரத்திலும் புதுப்பிக்கப்படலாம். பிரிட்டன் பிரான்ஸை ஆதரிப்பதாகக் கொடுத்திருந்த வாக்குறுதியானது பயனற்றுப் போகுமானால், பிரான்ஸும் ஜெர்மனியை ஆதரிக்கின்ற நிலை ஏற்பட முடியும். ஆனால் மொராக்கோ பிரச்சினையில் கிரே எடுத்துக்கொண்ட நடவடிக்கையானது இத்தகையவொரு நிலை ஏற்படாதவாறு தடுத்தது. அல்ஜிராஸ் மாநாட்டின் பின்னர் (1906) பிரான்ஸும், ரஷ்யாவும் பிரிட்டனின் நட்புறவு பயன் உள்ளது என்பதை உணர்ந்தனர்.

எனினும் லான்ஸ் டௌன் வாக்குறுதி அளித்திருந்த தூதாண்மை ஆதரவை, போர் ஏற்படுகின்ற காலத்தில் இராணுவ உதவி தரும் ஆதரவாக மாற்றுவதற்கு கிரே இங்கிலாந்தை அடகு வைக்க முடியாது. யுத்தத்தை ஆதரிக்கின்ற காரணம் எழுகின்ற வரையிலும், ஆங்கிலமக்களை அடகுவைத்துவிடமுடியாது. 1906

முதல் 1914 வரையிலும் நேச உடன்பாட்டை ஒரு நட்புறவாக மாற்றிக்கொள்ள கிரே அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இத் தகையஒரு திண்ணமானகட்டுப்பாட்டிற்குக் கிரேயின்சகாக்களும் கட்சியும், நாட்டுமக்களும் இசைவு தந்திருந்தால், அடுத்த யுத்தத் தில் பங்கு பெறுவதாகக் கொடுக்கக் கூடிய எந்த வாக்குறுதியும் பிரான்ஸும், ரஷ்யாவும் இணக்கமற்ற கொள்கைகளைக் கடைப் பிடிக்க மேலும் தூண்டுவதோடு, இங்கிலாந்தையும் தற்காப்பற்ற ஒரு போரில் ஈடுபடுத்திவிடும். ஆனல் மேற்கூறிய வாக்குறுதி திண்ணமாக இருக்கவில்லை. பிரான்ஸ் தாக்கப்பட்டால், படைக்கலங்கள் வழங்கி, இங்கிலாந்து பிரான்ஸுக்கு ஆதரவு தரும் என்ற பெரும் சாத்தியக்கூற்றை ஜெர்மனி புரிந்து கொள் ளச் செய்வது ஒன்று மட்டுமே, கிரே செய்ய விரும்பக் கூடியதும் செய்ய அதிகாரம் பெற்றிருந்ததுமான காரியமாகும். இதனையே அவரும் செய்தார்.

ஆனல், 1906 ஜனவரியில் பிரிட்டிஷ், பிரான்ஸ் படை அதி காரிகள் இராணுவப் பேச்சு வார்த்தைகள் நடத்த கிரே அநுமதி கொடுக்கும் அளவுக்கு,மொராக்கோ பிரச்சினையை ஒட்டியபோர் அபாயம் நெருங்கிவிட்டது. பிரிட்டன் தலையிடும் என்ன அவசர நிலையை எதிர்பார்த்த பின்னும்கூட, ஒருவித யுத்ததிட்டமு மின்றித் தயாராக இல்லாமல் இருப்பது அறிவீனமாகும். ஏனெனில் பிரிட்டனே தன் படையுடன் நடுங்கிக்கொண்டிருக்கும் போது, ஜெர்மானியர்கள் இன்னும் ஒரு திங்களில் பாரிஸினுள் நுழைந்து விடவும் கூடும். 1914 ஆகஸ்ட் மாதத்திய நிகழ்ச்சிகள் காட்டியபடி, 1906 'ஜனவரியில் நடந்த இராணுவப் பேச்சு வார்த் தைகள் எவ்வளவு அவசியம் என்பதைத் தெளிவாகக் காட்டின. காம்ப்பெல்-பானர்மென் இவற்றைப்பற்றித் தமது அமைச்ச ரவைக்கு உடனே தெரிவித்திருக்க வேண்டியது அவசியமாகும், ஆனல் அவரும், கிரேயும் இப்பேச்சு வார்த்தைகளை முற்றிலும் தமது துறைபற்றிய பிரச்சினையாக மட்டுமே கருதி மறைத்துவிட்ட னர். இத்தகைய கருத்தில் அவர்கள் தவறு செய்து விட்டனர்; அவர்கள் அமைச்சரவைக்கு இவற்றை நிச்சயமாக வெளியிட் டிருக்க வேண்டும். ஆனல் சில வாரங்களில் மூண்டு, பிரான்ஸ் நாட்டையே அழிக்கக்கூடிய ஒரு போருக்காக எவ்விதத் திட்டமு மின்றி இருந்தது இதைவிடப் பெரிய மன்னிக்க முடியாத குற்ற மாகும். இங்கிலாந்து உடனே உதவிக்கு வருவதற்கு எந்தத் தயாரிப்பும் செய்யாவிட்டால் மேற்கூறிய 'அழிவு ஏற்படும் என்பது உறுதி.

1906 ல் பிரான்ஸுடன் நடத்தப்பெற்ற இராணுவப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் தான், அடுத்த ஆண்டுகளில் ஹால்டேனின் சிறந்த இராணுவச் சீர்திருத்தக்கள் செய்யப்பட்டன. இங்கிலாந்து பங்கு பெறவேண்டு மென்று முடிவு செய்யக் கூடிய போர் நிகழுமானல், பிரான்ஸிற்கு ஒரு அவசரப்படையை (Expeditionary Force) உடனடியாக அனுப்பவேண்டுமென இராணுவப் பேச்சு வார்த்தைகள் ஒரு விரிவான திட்டத்தை வகுத்தன. இவ்வாறு 150,000 பல திறப்படை தாங்கிய வீரர்களைக் கொண்டு ஒரு அவசரப்படையை உருவாக்குவதுதான் 1906 முதல் 1912 வரை ஹால்டேன் கொண்டு வந்த படைச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகும். இப்படையானது மிகவும் குறுகிய கால அறிவிப்பிலும், ஏற்கெனவே பிரஞ்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தித் தீர்மானிக்கப்பட்டுள்ள வழிகளின் மூலம் பிரான்ஸுக்குள் நுழையத் தயாராக இருக்கவேண்டும். இந்த முறையில் தயார் செய்ததன் காரணமாகத்தான் 1914-ல் ஜெர்மானியர் தாக்குதலில் இருந்து பாரிஸை நமது படைகள் தக்ககாலத்தில் காப்பாற்ற முடிந்தது.

பழங்காலத் தொண்டர் படையையும், சிறு நிலக்கிழார் படையையும் வன்மையான போர்ப் படைகளாக மாற்றி, ஹால்டேன் பிரதேசப் படையை (Territorial Force) அமைத்தார். வெளிநாட்டுப் போர்ப்பணியில் ஈடுபட்டிருந்த கிச்னர், பழைய தொண்டர் படையின் பக்குவப்படாத தன்மை என்பது பழங்காலப் பண்பு என்பதை உணர்ந்ததோடு, 1907ல் போர்ப்பணி மன்றத்திற்கு அழைக்கப்பட்டபோது, பிரதேசப்படை அமைப்பைப் பயன் படுத்தவும் மறுத்துவிட்டார். ஆனல் அப்படையினது பயிற்சி கொடுத்திருந்த வீரர்களைமட்டும் பயன்படுத்தினர்.

அதே ஆண்டில் படை அதிகாரிகளின் பயிற்சிப்படையும், இராணுவத்திட்டங்களை வகுக்க ஒரு பொது அதிகாரிகள் குழுவும் நிறுவப்பட்டன. எனவே இறுதியாகப் படையைப் பொறுத்தவரையில் அதிகார பூர்வமான அறிவுபெற்று விளங்கியது.

ரஷ்யாவுடன் சச்சரவிற்கு அடிப்படையாக இருந்த குறிப்பிட்ட காரணங்களை நீக்குவதற்காக 1907–ல் கிரே ஆங்கில ரஷ்ய உடன்பாடு ஒன்றைச் செய்தார். மூன்ருண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸுக்கு எதிரான தகராறுகளைத்தீர்த்துக்கொள்ள லான்ஸ்டௌன் இத்தகைய ஒப்பந்தம் செய்திருந்தார். ஜெர்மனியின் படையும் கடலாற்றலும் ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டுவந்த நிலையில், ரஷ்யாவுடனும் போரிடுவதென்ருல் அது முற்றிய

மடமையாகும். ஏனெனில் பாரஸீகப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலன்றி, அதன் அடிப்படையில் ரஷ்யாவுடன் போர் மூளக்கூடும். வடக்குப்பாரஸீகம் ஏற்கெனவே ரஷ்யர்களின்பிடியில் இருந்தது. அவர்கள் மேலும் பாரஸீகக் குடா வரையிலும், ஆப்கானிஸ்தான் எல்லை வரையிலும் முன்னேறிச்செல்ல விரும்பினார்கள். இங்கிலாந்திற்கும் பாரஸீகக் குடாவில் பழமையான, சிறந்த நலன்கள் இருந்தன. மேலும் ஆப்கானிஸ்தானத்தின் பாதுகாப்பு இந்தியாவின் பாதுகாப்பிற்கு மிகத்தேவையெனக் கருதப்பட்டது. பாரஸீகர்களும் ரஷ்யாவிற்கு எதிராகத் தனிமையில் தங்களைத் தற்காத்துக்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். நாம் ஒன்றில் அகில பாரஸீகத்தையும், பாரஸீகக்குடாவையும் ரஷ்யர்களிடம் விட்டுவிடவேண்டும். அல்லது பாரஸீக சுதந்திரத்தின் சார்பில் போரிட்டு ஆகவேண்டும். அல்லது ரஷ்யாவின் ஆதிக்க எல்லையையும், இங்கிலாந்தின் எல்லையையும நிர்ணயிக்கக்கூடிய ஓர் உடன்பாட்டினைச் செய்யவேண்டும். இவற்றில் பின்னர்க் கூறப்பட்ட வழியைத்தான் கிரே தெரிந்து (.காண்டனர். அவரை காம்பெல் - பானர்மேனும், இந்தியக் காரியதரிசி (Indian Secretary) யாக இருந்த மார்லியும் (Morley) மனப்பூர்வமாக ஆதரித்தார்கள். ஆனால் இங்கிலாந்தும் ரஷ்யாவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை, பாரஸீகத்தின் நலன்களைப் புறக்கணித்து, ரஷ்ய வல்லாட்சியுடன் நட்புறவு கொள்ளும் திட்டம் எனக் கூறி, லிபரல் கட்சியில் பாதித் தீவிரவாதிகளும், தொழிற்கட்சியினரும் எதிர்த்தார்கள். இவ்வாறு எண்ணங்கொண்ட பொதுமக்களின் பிரிவினர், படைப்பலத்தை அதிகரிப்பதை விரும்பவில்லை. எனினும் பாரஸீகத்தைப் பாதுகாக்கப் போர் தொடுக்க இவர்கள் விரும்பியதால், ரஷ்யாவுடன் போர் மூளக்கூடிய வாய்ப்பு இருந்தது. இந்நிலையில் ஜெர்மனியும், ஜெர்மன் கடற்படையும் நமக்கு உதவும்.

கிரே செய்துகொண்ட ஆங்கில-ரஷ்ய ஒப்பந்தம் ஒன்று மட்டுமே நமது பாதுகாப்பிற்குப் பொருத்தமான ஒரே வழியாகும். எனினும் அவ்வழி மோசமான சிறந்த வழி என்பதிலும் ஐயமில்லை. இதனால் ஜோர்க்கோ ஒப்பந்தம் போன்ற ஒரு ரஷ்ய-ஜெர்மன் உடன்பாடு தடைசெய்யப்பட்டது. இத்தகைய நிலை இங்கிலாந்தைத் திகைக்க வைத்திருக்கும். ஆனால் இதன் மூலம் தம்மைச் சுற்றிலும் பிறநாடுகள் கூட்டுறவுகள் செய்து நாட்டைச் சூழ்ந்துகொள்ள முயற்சி செய்கின்றனர் என்ற எண்ணம் ஜெர்மனிக்கு உண்டாகியது.

ஜெர்மனியைக் கூட்டு ஒப்பந்தங்களால் சுற்றி வளைத்துக் கொள்ள கிரேட் பிரிட்டன் வேண்டுமென்றே முயல்கின்றது என்ற குற்றச் சாட்டை, ஜெர்மானியர் பலமுறை சுமத்திக் கொண்டிருந்தாலும், அதில் சிறிதளவுகூட உண்மை இல்லை. உறவுகளில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தோடு, கிரே ஜெர்மனிக்கு ஆப்ரிக்காவிலும், ஆசியாவிலும் பல இடங்களைக் கொடுத்துவிட்டார். இவை யாவும் பாக்தாத்து ரயில் வழி ஒப்பந்தத்தாலும், (Bagdad Railway agreement), போர்த்துக்கல் குடியேற்றங்களை விற்கின்றபோது ஜெர்மனி அவற்றைவாங்கக்கூடாது என்ற ஒப்பந்தத்தின் மூலமும்கொடுக்கப்பட்டன. எனவே ஜெர்மனி கூறியபடி, மேற்கூறியவை சுற்றி வளைத்துக்கொள்ளும் சூழ்ச்சியல்ல. மேலும் பால்கன் சிக்கல்களில், சொந்த நலன்களில் பற்றில்லாத நடுவர்போல கிரே செய்துள்ள தொண்டுகளில், அவர் ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக ஒரு சோவியத் முகாமையோ, அல்லது பால்கன் கூட்டுறவையோ ஏற்படுத்துவதைத் தடை செய்துவந்தார்; ஆனால் கான்ஸ்டான்டிநோபிலில் (Constantinople), ஜெர்மனி பெற்று வந்த வன்மையான செல்வாக்கை எதிர்க்க கிரே மறுத்து விட்டார்.

எனவே, அரசியலைப் பொறுத்த வரையில் ஜெர்மனியைச் சுற்றி வளைத்துக்கொள்வது என்ற பிரச்சினையே இல்லை. ஆனால் இராணுவரீதியாகநோக்குகின்றபோது,ஜெர்மனியின்குறிப்பிட்ட மைய நிலை காரணமாக, போர்க்காலத்தில் ஜெர்மனிக்கு மிகச் சிறந்த, இறுதியான பல அநுகூலங்கள் இருந்தன. ஆகவே அது காலை இருந்தவாறு சுற்றி வளைத்துக்கொள்வதென்பது ஜெர்மனி தானே செய்து கொண்ட தொன்றாகும். அல்ஸேய்ஸ்-லொரேய்ன் (Alsace - Lorraine) பிரச்சினையில் பிரான்ஸைப் பகைத்துக் கொண்டும், பால்கனில் ஆஸ்திரியா—ஹங்கேரியின் ஸ்லாவ் கொள்கையின் (Slav) எதிர்ப்பிற்கு ஆதரவு தந்து ரஷ்யாவைப் பகைத்துக்கொண்டும்,இங்கிலாந்திற்கு எதிராகக் கடற் படையை உருவாக்கிக் கொண்டும், ஜெர்மனி தன்னைச் சுற்றித் தானே தடைகளை எழுப்பிக் கொண்டது. ஐரோப்பாவின் மையத்தில் ஜெர்மனி ஒரு ஆஸ்திரிய-ஹங்கேரிக் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டது. ஜெர்மனியின் அண்டை நாடுகள் ஒன்றில் அதற்கு அடங்கிய கீழாட்களாகவோ, அல்லது தமது பாதுகாப்பிற்காக ஒன்றுபட்டு நிற்பதையோ தவிர வேறு வழியில்லாத வகையில், ஜெர்மனியின் புதுக் கூட்டுறவு வன்மைபெற்றும் அமைதியற்றும், விளங்கியது. பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஸ்லாவ்களுக்கும் இடையே டியூட்டன் இனத்தவராகிய ஜெர்மானியர்கள் இருக்க

வேண்டுமென அமைந்த தற்செயல் நிகழ்ச்சியின் காரணமாக, மேற்கூறிய வட்டத்தின் மைய நிலையை ஜெர்மானியர் பெறும்படி புவியியலின் அமைப்பு வழிவகுத்தது. இதனால் அவர்களின் படைபலம் இன்னும் வன்மைபெற்று விளங்கியது. இத்தகைய மைய நிலை காரணமாக ஜெர்மானியர் எம்மருங்கிலும் அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள். இதன்மூலம் தங்கள் வெல்திற நோக்கங்களையும் அவர்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் தம்மை எதிரிகள் எப்பக்கமும் வளைத்துக் கொள்கிறார்கள் என்று அவர்கள் குறைப்பட்டுக் கொண்டனர். போதாத காலத்தில் பிஸ்மார்க் (Bismarck) ஆஸ்திரியா - ஹங்கேரியுடன் கூட்டுறவு செய்துகொண்டதன் மூலம், விரைவில் பிரான்ஸ்-ரஷ்ய நட்புறவும் ஏற்படுமாறு ஒரு கொள்கையை உருவாக்கினார். இவ்வாறு ஜெர்மனி கூட்டுறவுகள் என்றபெருங்கேடானதிட்டத்தைத் தொடங்கியது. இனிமேல் இருபெரும் ஐரோப்பிய வல்லரசுகளுக்குள் ஏற்படுகின்ற எந்த யுத்தமும் வட்டாரப் போராக ஆவது தடை செய்யப்பட்டது. இறுதியில் உலகத்தில் பாதி நாடுகள் பால்கன் பிரச்சினையின் காரணமாக யுத்தத்தில் ஈடுபடுவதற்கு இத்திட்டம் காரணமாக இருந்தது.

1914-ல் இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் இடையே போர் மூள்வதற்கு இடங்கொடுக்கக் கூடிய குறிப்பிட்ட காரணங்கள் யாவற்றையும் கிரே நீக்கிவிட்டார். ஆனால் மட்டுமீறி வளர்ந்து விட்ட ஜெர்மன் வல்லாட்சியை நீக்குவதற்கு கிரே பிரபுவோ அல்லது வேறு எவருமோ முடியாது. ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டால் இந்த ஜெர்மன் வல்லரசு பிரான்ஸ்,பெல்ஜியம் போன்ற நாடுகளின் சுதந்திரத்தை அழித்துவிட்டு, பெர்லினின் ஆதிக்கத்தில் ஒன்றுபட்ட ஒரு ஐரோப்பாக் கண்டத்தின் துணைகொண்டு, பிரிட்டனை எதிர்க்கவும் முடியும். 1906 முதல் 1914 வரை ஆண்டுகள் உருண்டோடியபோது, நமது கடலாற்றலுக்கு எதிராக வளர்ந்து வந்த ஜெர்மன் கடற் படையின் வன்மையும், ஐரோப்பாக் கண்டத்தில்இடைவிடாத போரினால் அடுத்தடுத்து நிகழ்ந்து கொண்டு வந்த அழிவுகளும், இங்கிலீஷ் மக்கள் உண்மையான நிலையைக் கண்டு உறக்கம் தெளிந்து விழித்தெழுவதற்கு ஓரளவு காரணங்களாகும். ஆனால் பிரான்ஸுடனும், ரஷ்யாவுடனும் இங்கிலாந்து செய்துகொண்டிருந்த நேச உடன்பாட்டை ஒரு முக்கூட்டுறவாக மாற்றிக் கொள்வதற்கு மட்டும் நாடு எந்த நிலையிலும் துணிவு கொள்ளவில்லை. ஜெர்மனியையும், அதன் கடற் படையையும் கண்டு அஞ்சாதவர்கள் இல்லை, ஆனால் நிலைமை முற்றி, எதிர்க்கின்ற சந்தர்ப்பம் எழுகின்ற வரையிலும், ஜெர்மனியை அடக்க எத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொள்ள

வேண்டும் என்பதைப் பற்றி முன்னதாகவே முடிவு செய்து கொள்ள இங்கிலாந்து விரும்பவில்லை.

அனைத்துலகையும் தாக்கக்கூடிய போரைத் தோற்றுவிக்கும் சூழ்நிலையையுடைய இரு இக்கட்டான இடங்கள் இருந்தன. அவை பால்கன் நாடுகளும், மொரோக்காவும் ஆகும். 1906ஆம் ஆண்டில் ஏற்பட்ட அல்ஜிஸிராஸ் ஒப்பந்தத்திலிருந்து, 1911-ல் இரண்டாவது மொராக்க சிக்கல் எழுந்தது. இந்த நெருக்கடிக்கு 'அகதிர்' (Agadir) சிக்கல் எனப் பெயராகும். ஏனெனில் இப் பெயருடைய துறைமுகத்திற்குத்தான் ஜெர்மனி போர்க் கப்பலை அனுப்பியது. பல வாரங்கள் நீடித்த போரபாயங்களுக்குப் பின்னர் இந்தச் சிக்கல் ஓர் உடன்பாட்டின் மூலம் தீர்க்கப் பட்டது. இக்காலம் முழுவதும் பிரிட்டன் மீண்டும் பிரான்ஸையே ஆதரித்தது; வேறொரு பகுதியில் ஜெர்மனிக்குக் குடியேற்றப் பகுதிகளை விட்டுக் கொடுத்து, பிரான்ஸ் தான் மொராக்கோ நாட்டின்மீது கோரிய உரிமைகளைப் பெற்றுக் கொண்டது.

மொராக்கப் பிரச்சினைக்கு அகதிர் ஒப்பந்தத்தின் மூலம் உடன்பாடு காணப்பட்டதால், பிரான்ஸிற்கும் ஜெர்மனிக்கும் இடையே சிக்கல் எழுவதற்கான நேரடி மூலகாரணம் நீக்கப் பட்டது. ஆனால் அவர்களின் நேசநாடுகள் மீண்டும் விலகிக் கொண்டு, அவர்களைப் போரில் ஈடுபடுத்தவும் முடியும். ஏனெனில் பால்கன் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலே இருந்தது. மேலும் ஆஸ்திரிய–ஹங்கேரிப் பேரரசின் தலைவிதியே பால்கன் பிரச்சினையின் முடிவைப் பொறுத்துத்தான் இருந்தது; இப் பேரரசின் ஆட்சி பாஸ்னியாவில் (Bosnia) யூகாஸ்லாவியர்கள் மேல் புகுத்தப்பட்டது. எனவே செர்பியாவில் (Serbia) இருந்த சுதந்திர யூகாஸ்லாவியர்கள் தமது ஆதரவின்கீழ் தம் தேசிய வாதிகளை ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு, ஹாப்ஸ்பெர்க்கு களின் (Hapsburgs) பேரரசு சிதைந்து போவதை விரும்பினார்கள். எனவே வியன்னாவிற்கும் (Vienna) பெல்கிரேட்டிற்கும் (Belgrade) இடையே பகை வன்மையாக வளர்ந்து வந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது நேசநாடாகிய ஆஸ்திரியா-ஹங்கேரியை ஆதரிப்பது தன் கடமை என்று ஜெர்மனி எண்ணியது. இதுபோன்று பால்கனில் ஸ்லாவியர்களின் நலன்களைப் பாதுகாப்பது தன் கடமை என ரஷ்யாவும் கருதியது.

இப்பகுதியில் அடுக்கடுக்காக ஏற்பட்ட நெருக்கடிகள் ஒவ்வொன்றும், உலகப்போரையே மூட்டிவிடும்போல் இருந்தது. ஸெர்பியா, பல்கேரியா, கிரீஸ் போன்ற நாடுகளின் படைகள்

த்ரேஸ் (Thrace), மாஸிடோனியா நாடுகளிலிருந்து துருக்கியர்களை விரட்டிவிடுவார்கள் என்பது நெடுநாளாக விரும்பப்பட்டு, எதிர்பார்க்கப்பட்டு வந்ததொரு நிகழ்ச்சியாகும். ஆனால் இது ஆஸ்திரியா–ஹங்கேரிக்கும் அதன் தெற்கிலுள்ள அண்டை நாடுகளுக்கும் இடையில் கெடுபிடியை அதிகரித்தது. ஏனெனில் துருக்கியர்களுக்கு மேலாக ஸெர்பியா கொண்ட வெற்றியின் பின்னர், மதிப்புயர்ந்த படைபலம் கொண்ட நாடாக எழுந்தது. இன்னும் ஆஸ்திரிய ஆட்சியின் கீழ் இருந்த சகல யூகாஸ்லாவியர்களையும் விடுவிக்க வேண்டுமென்று, ஸெர்பியாவின் பேராவல்கள் யாவும் வடக்கு நோக்கி விரிந்து சென்றன. ஆஸ்திரியா–ஹங்கேரிப் பேரரசின் அச்சுறுத்தப்பட்ட பகுதிகளை விட்டு விடாமல் பாதுகாக்க வேண்டியதிருந்ததால், அதன் அரசர்கள் செர்பியர்களை அழிக்கவேண்டியது தமது கடமையெனக் கருதினர்கள். கிரே மத்தியஸ்தம் வகிப்பதில் தன் பணியைச் செவ்வனே ஆற்றியதால், 1913–ல் இந்தப் பிரச்னையின் காரணமாகப் போர் மூள்வது தடுக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜெர்மனி அமைதியாகத் தொண்டாற்றியது. ஆனால் அடுத்த ஆண்டிலோ இதன் விளைவு வேறு விதமாக இருந்தது.

1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் ஆஸ்திரியாவின் பெருங்கோமகனுரான ஃபிரான்சிஸ் பெர்டினண்டு என்பாரை (Francis Ferdinand) சாராஜிவோ (Sarajevo) என்ற இடத்தில் கொடூரமான முறையில் கொலை செய்தது பாஸ்னியாவின் யூகோஸ்லோவியர்களை விடுவிக்க ஸெர்பியாவில் நடத்தப்பட்ட கிளர்ச்சியுடன் தொடர்பு கொண்டிருந்தது. இந்தக் கிளர்ச்சியை முடித்துக்கொள்ள வியன்னு உறுதிமொழி கோரும் என்பது மிக அவசியமாயிற்று. ஆஸ்திரியா - ஹங்கேரிக் கொள்கைகளுக்குப் பொறுப்புள்ள அரசியல் நுண்ணறிவாளர்கள், இத்தகைய ஒரு உறுதிமொழியைப் பெற்றுக் கொள்வதாக முடிவு செய்திருந்தது மட்டுமின்றி, சாராஜிவோ கொலையைப்பயன்படுத்திக் கொண்டு, ஸெர்பியாவைப் போரின் மூலம் அழித்து விடுவதென்றும் தீர்மானித்தனர். இதில் ரஷ்யா தலையிடுவதைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் ஜெர்மனி, ரஷ்யாவை இதில் கலந்து கொள்ளக்கூடாது என அவர்கள் நம்பினர்கள். எனவே இந்தச் சிக்கலில் ஜெர்மனி மிக வன்மையான அக்கறை காட்டத் தலைப்பட்டது. ஜெர்மனியின் நேச நாடான ரஷ்யாவுடன் கலந்தாலோசிக்கும் உரிமையை ஜெர்மனியின் தலைவர்கள் வற்புறுத்திக் கேட்டிருக்க வேண்டும். ஆனால் கெய்சரும், அவருடைய சான்ஸலருமாகிய பெத்மான் ஹோல்வெக்(Bethmann-Hollweg) என்பாரும், உண்மையில் போரை விரும்பவில்லை என்றாலும், ஜூலைத் திங்கள்

5ஆம் நாளில், தான் விரும்பிய எச்சரிக்கையைப் பெல்கிரேட்டிற்கு அனுப்புமாறு வியன்னாவிற்குத் தொகை குறிப்பிடாத வெறும் செக் அனுப்பவது போன்று வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

எனவே ஜூலை 23ஆம் நாள் இறுதி எச்சரிக்கை வந்தபோது அதனைக் கண்டு கெய்ஸரும், அகில உலகமுமே திடுக்கிட்டனர். இவ்வாறு ஒரு சுதந்திர நாட்டிலிருந்து என்றும் இத்தனை கோரிக்கைகள் எழுந்ததில்லை. எனினும் இக்கோரிக்கைகளில் பத்திற்கு ஒன்பதை செர்பியா ஒப்புக்கொண்டது. எஞ்சியிருந்த வேறுபாடுகளை ஒரு ஐரோப்பிய மாநாடு எளிதாக நீக்கியிருக்க முடியும். இத்தகைய ஒரு சமரசத்தை உடனடியாகச் செய்யுமாறு கிரே ஜெர்மனியை வற்புறுத்தினர். ஆனால் தன் நேசநாட்டின் இறுதி எச்சரிக்கையை ஒப்புக்கொள்ளவில்லை யென்றாலும், கெய்ஸர் எவ்வித மாநாடும் நடப்பதை மறுத்துவிட்டார். மேலும் குறிப்பிட்ட விவகாரம் ஆஸ்திரியா–ஹங்கேரியையும் ஸெர்பியாவையும் சேர்ந்த தனிப்பட்டபிரச்சினை என்றும்,அதில்ரஷ்யாவோ பிற நாடுகளோ தலையிட வேண்டிய அவசியம் இல்லையென்றும் அறிவித்தார். இந்தச் சொற்கள் போர் அறைகூவலாகத் தோன்றின. ஏனெனில் ரஷ்யாவின் முழுக் கொள்கையும், ஸெர்பியாவின் சுதந்திரத்தை அழிக்கும்படி அனுமதித்தால், பயனற்றுப் போகும். ரஷ்யாவும் யுத்தத் தயாரிப்பைப் படிப்படியாகத் தொடங்கியது.இங்கிலையில் இராணுவவீரர்களின் பிடியில் சிக்கிக் கிடந்த ஜெர்மனி, யுத்த நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்திக்கொண்டிருந்து. ரஷ்யாவிற்கும் அதன் நேசநாடான பிரான்ஸிற்கும் போர் எச்சரிக்கைகளை அனுப்பிக் கொண்டிருந்தது. ஆகஸ்ட் திங்களின் தொடக்கத்தில் ஜெர்மனியின் படைகள் கிழக்கு முகமாக ரஷ்யாவை நோக்கி அல்ல, ஆனால் மேற்கு முகமாக பிரான்ஸையே நோக்கி, குற்றமறியாத பெல்ஜியம் நாட்டின் வழியாகப் புறப்பட்டுச் சென்றன.

இவ்வாருக இச்சண்டை, கீழ்நாடுகளின் பிரச்சினைகளின் காரணமாக மூண்டு, பிரிட்டனுடன் சம்பந்தப்பட்டதில்லை யென்ருலும், இதனால் தொடக்க காலத்திலேயே, பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளின் சுதந்திரத்திற்கு அழிவு ஏற்பட்டது ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்பட்ட நாடுகளாக வன்றி மீறியவகையில் தலைதூக்காத வண்ணம் இந்த நாடுகளைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டது. மத்திய வல்லரசுகள் வெற்றி பெற்றிருந்தால், நெப்போலியனின் பேரரசைவிட, நிரந்தரமாக நிலைத்து நின்று ஆளக்கூடிய ஒரு பேரரசிற்கு ஐரோப்பா அடிபணிய

வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். தமது ஆட்சியாளர்களின் பேராசைகளுக்குப் பணிந்து தொண்டு புரியும் ஜெர்மனி மக்களின் குண நலன்கள், இத்தகைய முறையில் ஐரோப்பாவிற்கு ஏற்படக்கூடிய ஆபத்தைப் பன்மடங்குப் பெரிதாக்கின.

ஸர். எட்வர்ட் கிரே போரைத் தடுப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்தார். இவ்வாறுகப் பிரிட்டனுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் உலக மக்களின் பெரும்பகுதியினரின் சிறப்பாக அமெரிக்காவின் ஆதரவு கிடைக்குமாறு வழி செய்தார். ஆனுல் இந்த முயற்சிகள் தோற்றபோது, ஆங்கிலக் கால்வாயின் துறைமுகங்களையும் நெதர்லாந்தையும், அனைத்து ஐரோப்பாவையும், ஏற்கெனவே இங்கிலாந்திற்குக் கடலாதிக்கப் போட்டி நாடாக இருந்த ஒருவல்லரசிற்கு அடிமையாகவிடக்கூடாதெனத் தற்காப்பு உணர்ச்சிகள் உந்தின. பெல்ஜியத்தின் நடுநிலையை அழித்ததும், பெல்ஜியத்தின் எதிர்ப்பை அடக்குவதில் ஜெர்மனி நடந்துகொண்ட முறையும், அடுத்தடுத்து நிகழ்ந்த உணர்ச்சிப் பெருக்கின் மூலம், விருப்பமின்றி இருந்த பிரிட்டிஷ் பொதுமக்களுக்குப்பயங்கரமான உண்மைகளையும் காலத்தின் தேவை என்ன என்பதையும் தெளிவாக உணர்த்தின. இந்நிலையில் பிரிட்டன் அமைதி ஒன்றையே காண ஏங்கித் துடித்துக்கொண்டிருந்தது.

ஆகஸ்ட் திங்களின் தொடக்கத்தில் பெல்ஜியப்படையெடுப்பு ஏற்படுகின்ற வரையிலும், ஐரோப்பியப் போரில் பிரிட்டன் ஈடுபடுவதைப் பற்றிக் கருத்து வேறுபாடு நிலவியது. ஜூலைத் திங்களின் இறுதியில் குறிப்பாக லண்டன் நகரிலும் வடக்கு இங்கிலாந்திலும், லிபரல் தொழிற் கட்சிகளிடையேயும், நடுநிலைமை வகிக்கின்ற எண்ணம் மிக வன்மையாகக் காணபபட்டது. லாயிட் ஜார்ஜின் (Lloyd George) தலைமையில் இயங்கிய அமைச்சரவையில் பாதிப்பேர் நடுநிலைமை வகித்தார்கள். எனவே பின்னேக்கிச் சிந்திக்கின்றவர்கள் கூறுவது போல், இங்கிலாந்து போரில் இறங்கி விடுமென்று இதற்கு முன்னதாக ஜெர்மனியை கிரே அச்சுறுத்தி இருக்க முடியாது. ஜூலையில் அகாலமாக இங்கிலாந்தைப் போரில் ஈடுபடுத்த முயலும் எந்த முயற்சியும் பிரிட்டிஷ் அமைச்சரவையைக் கலைத்திருக்கும். இதன் விளைவாக மிக ஆபத்தமான நிலையில் நாடும் பிளவுபட்டிருக்கும். இத்தகைய ஒரு பேராபாயம் ஏற்பட்டு விட்டதென்றேசொல்லலாம். ஆனுல் இந்நிலையில் நாட்டு மக்களையும், தன் அமைச்சரவை சகாக்களையும் பிணைத்து நின்ற ஆஸ்குவித் இதனைத் தடுத்தார். பீதியும், குழப்பமும் நாட்டைக் கலக்கிக் கொண்டிருந்த அந்த வாரத்தில் சூடேறியிருந்த மக்கள் பொதுஎண்ணம் எதிர்த்திக்கு

களில் வெடித்து சிதறியிருக்க முடியும். பெல்ஜியத்தைத் தாக்கியதால் தேசிய உணர்ச்சிகள் பிளவுபடுகின்ற அபாயம் தவிர்க்கபட்டது. எனவே ஆகஸ்ட் திங்கள் நான்காம் நாள், பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் பாதுகாப்பதற்காக பிரிட்டன் கொடுத்திருந்த உடன்படிக்கைகளைக் காக்கும்பொருட்டு, இங்கிலாந்து ஒன்றுபட்ட நாடாகப் போருக்குச் சென்றது. நாம் ஒன்றிப் போரிட வேண்டும், அல்லது மாளவேண்டும் என முடிவு செய்ததற்கு பெல்ஜியம் மட்டும் காரணமாகாது. ஆனால் சரியான நேரத்தில் ஒன்றுபட்ட மக்களாக நாம் திரண்டு தாக்குவதற்கு பெல்ஜிய பிரச்சினை தான் காரணம். நாம் சரியான காலத்தில் தலையிட்டு பாரீஸ் நகரும், ஆங்கிலக் கால்வாய்த் துறைமுகங்களும் ஜெர்மனி வல்லாட்சியின் வசம் சிக்கிவிடாதபடி தடுக்க முடிந்தது.

இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

தனித்து வாழ்தலின் முடிவு—பிரான்ஸுடன் கூட்டுஒப்பந்தம்—கிரேயின் கொள்கை—ஹால்டேனின் இராணுவச் சீர்திருத்தங்கள்—ஜெர்மனியும் ஐரோப்பாவும்—வியன்னாவும் பால்கன் நாடுகளும்—போர் மூளுதல் 1914—பெஜியம், ஆகஸ்டு 1914.

இயல் 8

முதல் உலகப் போர், 1914–1918

போரின் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய சிறு குறிப்புகள், அதன் பொதுவான இயல்புகளின் விளக்கத்திற்கு ஒரு பீடிகையாகும்:

நீண்ட நாள் திட்டமிட்டபடி ஜெர்மன் போர்த் தலைவர்களின் குறிக்கோள் நடுநிலைமை நாடான பெல்ஜியத்தின் வழியாகப் பாரீஸ்மீது முக்கியமான தாக்குதல் செய்வதும், ஒரே அடியில் பிரெஞ்சு எதிர்ப்பை முறியடிப்பதும் பின்வாங்கிச் சென்று மெதுவாகத் திரட்டப்பட்டுக் கொண்டிருந்த ரஷ்யப் படைகளை எதிர்ப்பதுமாகும். இந்தத் திட்டங்கள் யாவும் வெற்றி பெற்று விடும் போல் இருந்தன. பிரெஞ்சுப் போர்த்தளபதிகளான ஜாப்ரேயும் (Joffre) ஃபாக்கும் (Foch) வடக்கிலிருந்து வந்த தாக்குதலை எதிர்க்கத் தயார்செய்யாமல், லோரேய்ன் (Lorraine) பகுதியில் வன்மை

யான முதல் தாக்குதலைச் செய்தனர். இது இரத்தக் களரியான முறையில் முறியடிக்கப்பட்டது. இதற்கிடையில் ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தைத் தரைமட்டமாக்கின (ஆகஸ்டு 1914). எதிர்ப்புகளைத் திட்டமிடப்பட்ட பயங்கர முறைகளில் தண்டித்து. எதிரிகளையும், நடுநிலைமை வகித்தவர்களையும் அச்சுறுத்தினுர்கள். இதன்மூலம் நவீனப் போரின் இரக்கமற்ற கொடூரப் பண்பைப்பறை சாற்றினுர்கள். பெல்ஜியத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்ட பிரிட்டன் ஒருமுகமான நாடாகக் கிளம்பிப் போரில் ஈடுபட்டது. மேலும் பெல்ஜியத்திற்குப் பரிவு காட்டும் முறையில் அமெரிக்காவும் பண் எழுப்பியது.

பிரான்ஸின் போர்த்திட்டங்களைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாத பிரிட்டிஷ் இராணுவத் தலைவர்கள். ஜெர்மனியின் நோக்கங்களைப் பற்றி, தமது நேசநாடுகளைவிடச் சரியான நோக்குக் கொண்டிருந்தார்கள். ஹால்டேன் தயாரித்த ‘அவசரக்காலப் படை’, நூருயிரம் போர்வீரர்களைக் கொண்டதாகும். இவர்கள் ஒருகணத்தையும் வீணுக்காமலும், ஒரு வீரனையும் பலி கொடுக்காமலும் பெல்ஜியத்திலிருந்து முன்னேக்கி வந்துகொண்டிருந்த முக்கிய ஜெர்மன் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கத் தயாராகி நின்றனர். எதிரிகளின் பிரம்மாண்டமான எண்ணிக்கை பிரிட்டிஷ்காரர்களைத் திகைப்படையச் செய்ததென்ருலும் காலந்தாழ்த்தியாவது மான்ஸ் (Mons) லெகேட்டு Le Cateau) போன்ற இடங்களில் எடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளினுல், புதிய போரில் நமது பேராண்மையின் மதிப்பு நிலைநாட்டப்பட்டது.[1] இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் படைகள் மான்ஸிலிருந்து பின்வாங்கினுர்கள். பிரெஞ்சுப் படைகளும் நீண்ட முனை முழுவதையும் தாக்குவதில் ஈடுபட்டனர். ஜெர்னியர் இன்னும் ஒரு வாரத்தில் பாரிஸுக்குள் நுழைவதில் உறுதிகொண்டிருந்தனர். எல்லாம் முடிந்ததுபோல் தோன்றியது. ஆனுல் இயற்கைக் காரணங்களின் விளைவாக ‘மார்ன் அற்புதம்’ நிகழ்ந்தது.

ஜேப்ரேயும் ஃபாக்கும். யுத்தத்தின் முதல் மாதத்தில் பிரான்ஸிற்கு பெரும் இழப்பு ஏற்படக் கூடிய தவறைச் செய்த

[1] ‘இழிவான சிறிய பிரிட்டிஷ் படை’ என்ற சொற்ருடரைப்பொதுவாகக் கெய்சர் கூறியதைக் கொண்டாலும், அவர் அதனை என்றும் சொல்லவில்லைஎன மறுத்தார். ஆனுல் 1914ஆம்ஆண்டுஆகஸ்டு மாதத்தில் நிறுவப்பட்ட அவசரக்காலப் படையான ‘மான்ஸ போர்க்கள வீரர்கள், தம்மைப்பற்றிய இழிவிற்கு இலக்கானவர்கள்’ என்று வேடிக்கையாகக் கூப்பிட்டுக்கொள்ள விரும்பினுர்கள், இந்தப் பெயரின் மூலமே நாட்டு மக்களும் அவர்களை நினைவு கூர்ந்து கொள்வார்கள். A. E. ஹவுஸ்மான் எழுதிய “Epitaph on an Army of Mercenaries” என்பதும் இதனையே குறிக்கின்றது.

பின்னர், பல இக்கட்டுகளின் இடையே தவித்துக்கொண்டிருந் தார்கள். ஆனால் எதிர்த் தாக்குதலின் மூலம் நிலைமை புத்துயிர் பெற்றது. பலதரப்பட்ட வேகத்துடன் முன்னேறிக் கொண்டி ருந்த பல ஜெர்மன் துருப்புக்களிடையே போதிய போக்குவரவு வசதிகள் இல்லாதிருந்த குறையை இவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். படையெடுத்து வந்த ஜெர்மனியரைப் பிரிட் டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் மார்ன் (Marne) போர்க்களத்தில் முறியடித்தார்கள். இதனால் ஜெர்மன் படைகள் பாரிஸின் சுற் றுப் புறத்திலிருந்து கண்டிப்பாகப் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது (செப்டம்பர், 1914). ஆனால் அவர்கள் எதிரியின் நாட்டில் மறைந்திருந்தனர். பெல்ஜியமும், பிரான்ஸின் பெரும் பகுதியும் இன்னும் அவர்கள் கையில் இருந்தன. பிரான்ஸின் நிலக்கரியில் எண்பது விழுக்காடும், அதன் இரும்புக் கனிகள் முழுவதும் ஜெர்மனியிடம் சிக்கின. ஆனால் ஆங்கிலக் கால்வாயின் துறைமுகங்களை ஜெர்மனி இன்னும் கைப்பற்றவில்லை. இதனால் பிரான்ஸில் நேசநாடுகள் இங்கிலாந்துடனும், அதன் யுத்த தள வாடங்களுடனும் நேரடித் தொடர்புகொள்ள முடிந்தது. இன் னும் நான்காண்டுகளுக்கு இதேநிலைமைதான் நீடித்தது. ‘அகழிப் போரும்’ (Trench warfare) தொடங்கிவிட்டது. ஆங்கிலக் கால் வாய் முதல், ஸ்விட்ஸர்லாந்தின் எல்லைவரையிலும் நின்ற எதிர்ப்பு முன்னணிகள் பலமுறைதிகைப்படைந்தும், வெகுவாய்ச் சோர்வடைந்தும், அங்கும் இங்கும் திணறிக் கொண்டிருந்தாலும் 1918ஆம் ஆண்டு இலையுதிர் பருவம் வரை அவைகள் முற்றிலும் முறியடிக்கப்படவில்லை. ஆனால் மேற்கு முனையில் இதே மரணப் பிடியை விடாமல் காக்க ஏற்பட்ட தாக்குதல்களிலும், எதிர்த் தாக்குதல்களிலும் கோடிக்கணக்கான உயிர்களும், கடந்த நூற் றுண்டு முழுவதிலும் ஐரோப்பிய முன்னேற்றத்தினால் உருவாகி இருந்த அத்தனைச் செல்வச் சிறப்பும் தியாகம் செய்யப்பட்டன.

இவ்வாறு மேற்கு முனையில் நின்ற மரணப் பிடியைக் கிழக்கு முனையில் நடவடிக்கைகள் எடுப்பதினால் விடுவிக்க முடியாதா? போர் தொடங்கிய முதல் வாரங்களில் ரஷ்யக் கும்பல்கள் கிழக் குப் பிரெஷ்யாவைத் தாக்கியிருந்தன. இதனால் மேற்கிலிருந்து இரண்டு ஜெர்மன் படைப் பிரிவுகளை வாபஸ் பெற்றுக்கொண்ட தின் மூலம் மார்ன் போரின் வெற்றி எளிதாக ஏற்பட முடிந்தது. ஆனால் இந்த உதவிகள் வருவதற்கு முன்னரே, டேனன் பெர்க் (Tannenberg) போர் நிகழ்ந்து முடிந்தது (ஆகஸ்டு 30, 1914). பிரெஷ்யாவைத் தாக்கியவர்கள் தோற்கடிக்கப்பட்டு, மூன்று இலட்சம் பேர் உயிரிழந்தார்கள். இது முதல் ஜெர்மானிய யுத் தங்களின் இருவீரர்களான ஹின்டன்ஃபெர்க்கும் (Hindenburg)

அவரது இரராணுவத்தலைவரான லுடன்டார்ஃப்பும் (Ludendorff) இப்படுகொலையை நிறைவேற்றினார்கள்.

டேனன் பெர்க் போருக்குப் பின்னர், ரஷ்யப் படைகளுக்கும் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரிப் படைகளுக்கும் இடையே நடந்து வந்த யுத்தம், மிகவும் பிரம்மாண்டமான முறையில் தொடர்ந்து நடத்தப்பெற்றது. மேற்குப் பகுதியைவிட, கிழக்கில் அகழிப்போர் குறைவான அளவில்தான் நிகழ்ந்தது. மிக விரிவான நிலப்பரப்புகளையும் கடந்து, மூன்றாண்டுகளாக இந்தப் போராட்டம் முன்னும் பின்னும் முடிவின்றி ஊசலாடிக் கொண்டிருந்தது. இதன் முக்கிய அரங்கம் தண்டனிட்டு விழுந்துகிடந்த போலந்து நாடாகும்.[1] சில வேளைகளில் ரஷ்யர்கள் வெற்றிபெற்றார்கள். ஆனால் ஆயுதங்களும், தளவாடங்களும் இல்லாத குறையினால் அவர்கள் பெரும் தொல்லைப்பட்டனர். ரஷ்ய நாட்டின் தொன்மையான நாகரிகமும் ஸார் அரசாங்கத்தின் திறமையின்மையும் ஊழல்களும் நாட்டை அழுத்த ரஷ்யா தனது இறுதி அழிவை நோக்கித் தள்ளாடிக்கொண்டு சென்றது. பிரிட்டிஷார் மட்டும் ரஷ்யாவுக்குள் ஒரு நேரடியான வழியைக் கைப்பற்றி இருந்திருந்தால், ரஷ்யாவின் ஆயுதப் பற்றுக்குறையை நல்ல முறையில் ஈடு செய்திருக்க முடியும். ஆனால் பால்டிக் கடல் வழி மூடப்பட்டது. மேலும் டார்டனலஸ் (Dardanelles) வழியாகக் கருங்கடலுக்குச்செல்லும் வழியைக்காணச் செய்யப்பட்ட முயற்சியும் வெற்றி பெறவில்லை.

1915-ல் டார்டனலஸையும் கான்ஸ்டான்டி நோபிலையும் தாக்குகின்ற வாய்ப்பானது எதிரிகளை முற்றிலும் களைப்படையும்படி விட்டு விட்டு அவர்களைத் தோற்கடிக்கின்ற வழியையல்லாமல் வேறு வழியில் வெற்றி பெறுவதற்குப் பிரிட்டனுக்கு இருந்த ஒரே வாய்ப்பாகும். இந்த மிக முக்கியமான கட்டத்தில் வெற்றி கிடைத்திருக்குமானால் யுத்தத்தின் காலமும் ஈராண்டுகள் குறைந்திருக்கும். மத்தியக் கூட்டுறவு நாடுகளோடு துருக்கியும் சேர்ந்து கொண்டது (அக்டோபர், 1914). இதனால் இங்கிலாந்தின் பொறுப்புகள் பன்மடங்கு உயர்ந்தன. ஏனெனில் பாலஸ்தீனின் போர் நடவடிக்கைகளின் மூலம் எகிப்தையும் சூயஸ்கால்வாயையும், மசபெட்டோமியாவிலிருந்து எடுக்கும் நடவடிக்கைகளால் பாரசீகக் குடாவையும், அதன் எண்ணெய்க்

[1] உலகப் போரின் விளைவாகப் போலந்து 1919ஆம் ஆண்டில் சுதந்திர நாடாக மீண்டும் உயிர்பெற்றது. ஏனெனில் அதனை எதிர்த்து நின்று போராடிய ஜெர்மன் ரஷ்யக் கொடுங்கோலர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர்.

கிணறுகளையும் துருக்கியிடமிருந்து பாதுகாக்கவேண்டியிருந்தது. மேலும் துருக்கி போரில் இறங்கியதைக் காரணமாகக் கொண்டு செர்பியாவைத் தன் பழைய குறைகளுக்காகப் பல்கேரியா பழிவாங்குகிற முறையில் தாக்குவதற்கு இதனைப் பயன்படுத்திக் கொண்டது. பல்கேரியாவும் எதிரியின் பக்கம் சேர்ந்து கொள்ளுமானால் ஆஸ்திரியா, ஹங்கேரியின் வன்மையான படைகளிடமிருந்து செர்பியாவைப் பாதுகாப்பதென்பதுமுடியாதகாரியமாகிவிடும். ஆனால் எதிரியின் பக்கம் பல்கேரியா சேர்ந்து கொள்வதற்குமுன்னர் இங்கிலாந்து டார்டனலஸ்ஸைஊடறுத்து, கான்ஸ்டான்டி நோபிலைக் கைப்பற்றிக் கொண்டால் பல்கேரியா நிச்சயமாக நமதுகட்சியில் சேர்ந்துவிடும் என்பதுஉறுதி. எனவே ஆஸ்திரியா ஹங்கேரிக்கு எதிராகப் பால்கன் நாடுகள் முழுவதையும் திரட்ட முடியும். இக்காரணங்களுக்காக, டார்டனலஸ்ஸைத் தாக்குகின்ற முயற்சி செய்யப்பட்டது. இம்முயற்சி தோற்கவே பல்கேரியாவும் மத்தியக் கூட்டுறவு நாடுகளைச் சேர்த்துக் கொண்டது. செர்பியா கைப்பற்றப்பட்டது (நவம்பர், 1915). இன்னும் மூன்றாண்டுகளுக்கு பிரெஞ்சு - ஆங்கிலப் படைகள், மாஸிடோனியத் துறைமுகமான சலோனிக்காவை (Salonika) எதிரியின் பலம் வீழ்ச்சியைத் தொடங்குகின்றபோது எதிர்த்து முன்னேற ஒரு தளமாகக் கொள்வதல்லாமல் வேறு வழிகாண முடியவில்லை. [1]

1915–ம் ஆண்டு மே திங்களில் இத்தாலி நேசநாடுகளின் சார்பில் போரில் ஈடுபட்டது. ஆல்ப்ஸ் மலைகளின் அடிவாரத்தில் மேற்கு முனையில் நடந்துகொண்டிருந்த அகழிப்போரை யொத்த ஒரு யுத்தம் தொடங்கியது. இதில் ஆஸ்திரியப் படைகளின் பெரும் பகுதியினர் ஈடுபட்டிருந்த காரணத்தால் பால்கன் பகுதியில் ஏற்பட்ட தோல்வியின் மிகப் பயங்கரமான விளைவுகள் தவிர்க்கப்பட்டன. 1918 வரை ஆஸ்திரியா- ஹங்கேரி பிழைத்து நின்றது. ஆனால் இத்தாலியின் செல்வாக்கு காரணமாக மேற்கு முனையில் ஜெர்மனிக்குத் துணைபுரிய முடியாமல் போனது. மேலும் பால்கனிலும், துருக்கியிலும் பெற்ற நன்மைகளையும் மேலும் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

[1] 1916-ல் அல்லது1917-ல் சலோனிக்காவிலிருந்து செய்திருக்கக்கூடிய தாக்குதல் ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசை வீழ்த்தியிருக்கும் என்று சிலர் கொள்ளுகின்ற கருத்தானது, ஒரு முக்கிய சாத்தியத்தை மறந்துவிடுகிறது. அதாவது உட்புற அணிகளைக் கட்டுப்படுத்திய ஜெர்மனி, இங்கிலாந்தையும் பிரான்ஸையும்விட அதிவிரைவாகப் பால்கன் நாடுகளுக்குத் தளவாடங்களை அனுப்ப முடியும் என்பதே. ஆனால் 1915-ல் டார்டனலஸ்ஸைத் தாக்கியபோது, ஜெர்மனி பகைவர்கள் நாட்டின் வழியாகவும் நடுநிலைமை வகித்த பிரதேசங்களைக் கடந்தும் படைகளை அனுப்ப முடியவில்லை.

யுத்தத்தின் தொடக்க கால நெருக்கடிகளை ஆஸ்குவித் தலைமையில் பிரிட்டிஷ் அமைச்சரவை வெகு திறமையாகச் சமாளித்தது. பொருளாதார நிலைகுலைவு தடுக்கப்பட்டது. உள்நாட்டுக் கூட்டு முன்னணியாக நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நின்றனர். கடற்படையும் தன் தொடக்கப் பணியைச் செவ்வனே புரிந்து விட்டது. அவசரகாலப் படையும் பிரான்ஸில் பத்திரமாகவும் குறித்த காலத்திலும் கொண்டு இறக்கப்பட்டது. ஆலோசனைகளில் ஒருமைப்பாடு இல்லாத காரணத்தால் டார்டனலஸ் மட்டுமே தோல்வி கண்டது. இதன் விளைவாகச் செய்யப்பட்ட முதிராத, முழு ஆதரவு இல்லாத முயற்சிகள் எதிரிக்கு எச்சரிக்கைகளாகப் பயன்பட்டன. இதற்குப் போர் வீரர்கள், கடற்படை வீரர்கள், அரசியல் வல்லுநர்கள் யாவரும் பொறுப்புடையவர்களாவர்; இந்த நிகழ்ச்சியின் வீரர் என்ற பெருமைக்குத் தகுதி உடையோர் யாரும் இல்லாவிட்டால், யாரையும் முற்றிலும் குறை கூறுதலும் முறையன்று.

டார்டனலஸ் தோல்வி ஒரு புறமிருக்க, பிற கடற்போர்கள் நல்லமுறையில் நடத்தப்பட்டன. அவசர காலப்படை மேற்கூறியது போல் காலதாமதமின்றியும், பாதுகாப்பாகவும் பிரான்ஸை அடைந்தது; அகில உலகின் கடல்களிலும் எதிரியின் போர்க் கப்பல்கள் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டன. 1914 டிசம்பர்த் திங்களில் கடற்படைத்தலைவர் ஸடர்டி (Sturdee) ஸ்பீ (Spee) என்பார் தலைமையில் இயங்கிய ஜெர்மன் கப்பல்களை ஃபாக்லாந்து தீவுகளுக்கு (Falkland Islands) அப்பால் மூழ்கடித்தார். ஸ்கேப்பா ஃப்லோ (Scape Flow) என்ற இடத்தில் ஜெல்லிக்கோவின் (Jellicoe) தலைமையில் நடத்தப்பட்ட பெருங் கடற்படைக்கு (Grand Fleet) தலைமைப் பணி மன்றம் நிறுவப்பட்டது. இந்த ஏற்பாடு தற்கால முறைப்படி காண்கின்ற போதும், நீர் மூழ்கித் தாக்குதல்களுக்குச் சிறந்த இடமாக விளங்கியது. இது முதல் நான்காண்டுகள் வட ஜெர்மன் கடற்கரையில் எதிரியின் பெருங்கடற்படையின் துறைமுகங்களில் கப்பல்நடமாட்டங்களைக் கவனித்துக் கொள்ள முடிந்தது; இதே முறையில்தான் துலோன் (Toulon) துறைமுகத்தை நெல்ஸன் கவனித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் தற்கால நிலைமைகளின் காரணமாக நெல்ஸன் காலத்தில் இருந்ததைவிட அதிக தூரத்தில் ரோந்து காண முடிந்தது. ஒரே ஒரு முறைதான் ஜெர்மன் கடற்படை வன்மையாக வெளிப்பட்டு வந்தது; ஜட்லாந்து போரும் (Jutland) மூண்டது. இரு தரப்பிலும் பெரும் சேதம் விளைவித்த இந்தத் தாக்குதலின் விளைவாக ஜெர்மன் கடற்படை தப்பியோடிவிட்டது. (மே,

1916). ஆனல் அது மறுமுறை கடல் தாக்குதல் செய்யத் துணிய வில்லை.

1916-ல் மீண்டும் படுகொலைகள் பல நடந்தாலும், மேற்கு முனையில் பெரும் மாறுதல் ஒன்றும் நிகழவில்லை. பிரான்ஸின் அரணை வெர்டுனே (Verdun) ஊடறுத்துப் போரை முடித்துவிட லாமென்று பட்டத்து இளவரசர் செய்த பெரிய முயற்சி, பல மாதங்கள் நடந்த பயனற்ற தாக்குதல்களின் பின்னரும் வெற்றி பெறவில்லை. புதிதாகத் திரட்டப்பட்ட பிரிட்டிஷ் படைகளின் துணைகொண்டு, ஸோம் (Somme) நதியில் செய்யப்பட்ட பெரும் அளவு தாக்குதலும், உருப்படியான பயன் எதுவும் பெறவில்லை

ஜட்லண்ட் போருக்குப் பின்னர் ஜெர்மானியர் நீர்மூழ்கிப் போரில் ஈடுபட்டனர். இது சிறந்த வெற்றி பெற்றதனல் 1917 ஏப்ரல் திங்களில் இங்கிலாந்து பட்டினி அனுபவிக்கும் அபாய மும், அதனல் நேச நாடுகள் தோல்வி அடையக் கூடிய பேரபாய மும் இருப்பதாகத் தோன்றியது. ஆனல் அதற்குப் பிந்திய மாதங்களில் இங்கிலாந்தின் வணிகக் கப்பல் துறையின் வீரத் தின் காரணமாக நாடு காப்பாற்றப்பட்டது. மேலும் நீர் மூழ்கி களைக் கண்டுபிடிக்கக் கூடிய புதியதொரு விஞ்ஞானக் கருவி யைக் கண்டுபிடித்ததும், பாதுகாப்புடன் செல்லும் கடற்படை யும், அமெரிக்கக் கப்பல் போக்குவரத்தைப் பாதிக்கின்ற அள வில் ஜெர்மன் நீர்மூழ்கிகள் தொல்லை கொடுத்ததன் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் இறங்கியதும், நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட வேறுசில காரணங்களாகும் (ஏப்ரல், 1917). இதைத் தவிர ஜெர்மன் மக்களின் வன்மையான எதிர்ப்பு பிரிட் டனின் முற்றுகை காரணமாகத் தளர்ந்து கொண்டு வந்தது.

ரஷிய அரசாங்கத்தின் திறமையின்மையின் விளைவாக அடுத் தடுத்து ஏற்பட்ட தோல்விகளின் எதிரொலியென போல்ஷிவிக் புரட்சி (Bolshevik Revolution) ஏற்பட்டபோது, போரிலிருந்து ரஷியா 1917 விலகி கொள்ளாமல் இருந்தாலுங்கூட, ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டிருக்கும் என்பது சாத்தியமானதே. போரிலி ருந்து ரஷ்யா விடுதலை பெற்றுக் கொண்டதற்கும், 1918 கோடை காலத்தில், ஐரோப்பாவிற்குள் அமெரிக்கப் படைகள் வருவதற் கும் இடைப்பட்ட காலம் நேசநாடுகளுக்கு மிக ஆபத்தானதொன் ருகும். 1917 ஆம் ஆண்டு ஏப்ரலில் செம்னின் தெ டேம்ஸ் (Chemin des Dames) என்ற இடத்தில் பிரான்ஸ் நடத்திய தாக் குதல் பெருந் தோல்வியில் முடிவுற்றது. இதைத் தொடர்ந்து கலகமும், புரட்சியும் ஏற்படும் நிலைமையும் இருந்தது. ஹேய்க் (Haig), வைப்ரஸ் (Ypres)ஸை வன்மையுடன் தாக்கியதால்

பிரான்ஸ் ஓரளவு விடுவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பாஸ்கன்டேல் (Passchendaele) போர் இலையுதிர் காலம் முழுவதிலும் மழையிலும், சேற்றிலும் சகதியிலும் தொடர்ந்து நடைபெற்றது. பயங்கரமான பல தோல்விகளின் பின்னர், முன்னேற்றம் எதுவும் பெரும் அளவில் ஏற்படவில்லை. எகிப்திலிருந்து ஆலன்பி (Allenby) தலைமையில் முன்னேறிச் சென்ற பிரிட்டிஷ் படை துருக்கியிடமிருந்து ஜெருசலேமைக் (Jerusalem) கைப்பற்றியதால், சோகமும், ஆபத்தும் மலிந்து விளங்கிய 1917ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் காலத்தில் மகிழ்ச்சி பெற்று விளங்கியது. அடுத்த ஆண்டில் ஆலன்பி பாலஸ்தீனத்தை முழுவதும்வென்று, டாமாஸ்கஸினுள் (Damascus) புகுந்து, துருக்கியின் படைபலத்தைச் சிதறடித்தார், இப்போர்களின் போதுதான் அரேபியாவின் லாரன்ஸ் (Lawrance of Arabia) அரேபிய ஒழுங்கற்ற படைகளை நடத்திச் செல்வதில் பெரும் புகழ் பெற்றார்.

1918-ல் தற்போது அமெரிக்காவில் திரட்டப்பெற்றுப் பயிற்சி பெற்று வந்த படைகள் பிரான்ஸில் வந்திறங்கும். ஜெர்மனி மட்டும் சிறிது விவேகத்துடன் நடந்து கொண்டிருந்தால், இப்படைகள் வந்திறங்குவதற்கு முன்னர், ஓரளவு சகித்துக் கொள்ளக் கூடிய ஒரு சமாதானத்தை ஏற்படுத்தி இருக்கலாம். ஆனால் ஜெர்மனியின் படை வீரர்கள் தாம் பெற்ற இழப்புகளைச் சிந்திக்காமல், உலகத்தை வெல்வது அல்லது வீழ்வது என்ற ஒரே திட்டத்தில் ஊன்றி நின்றனர். அமெரிக்கப் படைத்திறத்தின் வல்லமையைப் பழித்துப் பேசிய லுடன்டார்ஃப்பின் கையில் ஐரோப்பாவின் தலையெழுத்தே நின்றது. அவர் அவ்வாண்டின் வசந்த காலத்தில் பெரும் அளவில் பிரான்ஸைத் தாக்கி, அதனை வென்று விடலாமென்றும் கனவு கண்டு கொண்டிருந்தார். போரை விட்டு ரஷ்யா விலகிக் கொண்டதன் காரணமாக ஜெர்மனி தற்காலிகமாகவாகிலும் மேற்கில் எண்ணிக்கைப் பலம் கொண்டு விளங்கியதால் தான் அழிவை நோக்கிச் செல்லத் துணிவு கொண்டது. தாக்குதல் செய்வதில் ஹேய்க் கொண்டிருந்த சார்பினை, லாயிட் ஜார்ஜ் (Lloyd George) சரிவர நம்பாததன் காரணமாக விளைந்த முறைகேடான நடவடிக்கைகளால், பிரான்ஸில் பிரிட்டனின் படைகள் வலுவிழந்து விடப்பட்டன. இதனால் 1918-ல் பிரான்ஸ் திடீரெனத் தாக்கப்பட்ட போது சிக்கல்கள் விளைந்தன. மிகச் சாதகமான காலநிலை ஜெர்மனியின் இறுதி முயற்சிக்கு மிகத் துணையாக இருந்தது. இதனால் 1914 செப்டெம்பரில் ஏற்பட்டதுபோன்று இங்கிலாந்தும், பிரான்ஸும் பின்வாங்க வேண்டியதாயிற்று. எனவே பாரிஸும், ஆங்கிலக் கால்வாயின் துறைமுகங்களும் உடனடியாக ஆபத்தில் இருந்

தன. ஆனால் பிரிட்டன், பிரான்ஸுப் படைகளிடம் விளங்கிய எதிர்க்கும் உணர்ச்சி சிதைந்து விடவில்லை. மேலும் போரைத் தொடர்வதற்கு ஆவல் கொண்ட இளம் அமெரிக்கப் படை வீரர்கள் இடைவிடாமல் வந்து குவிந்து கொண்டிருந்ததால், அக் கோடையில் சிறிது புத்துணர்வு ஏற்பட்டது. ஆனால் ஐரோப்பாவின் அனுபவமிக்கப் படைத் தலைவர்களைப் பொறுத்த வரையில் போர் பயங்கரமான பளுவாகத் தோன்றியது. திடீரென நிலைமை மாறியது. ஃபாக்கைப் பெரும்படைத்தலைவராக ஆக்கியதைத் தொடர்ந்து நேச நாட்டுப் படைகளுக்குள் இறுதியாக அதிக ஒத்துழைப்பு ஏற்படுத்த முடிந்தது.

ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வந்த எதிர்த் தாக்குதலின் பெருமை, ஹேய்க் செய்த முடிவினையும், பிரிட்டிஷ் படையின் திறமையையும் சேர்ந்ததாகும். 1919–க்குள் அல்லது 1920-க்குள் போர் முடிந்துவிடுமென பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. இறுதி வரையிலும் எதிர்த்தாக்குதலின்மேல் ஹேய்க் கொண்டிருந்த விருப்பத்தை லாயிட் ஜார்ஜ் நம்பவில்லை. ஆனால் இந்த முறைத் தாக்குதல் எவ்விதத்திலும் வெற்றி பெற்றது. எனவே ஆங்கிலேயர்கள் போரில் இறுதி வெற்றியை ஒரே ஒரு போர்க்களத்தில் பெறுவார்கள் என்ற முதுமொழி முற்றிலும் உண்மையானதன்று. ஆனால் 1918 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நவம்பர் வரையிலும் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு நோக்குகின்ற போது இதில் உண்மை போன்றதொரு தோற்றம் இருப்பதாகத் தெரிகிறது, அவ்வாண்டு வசந்த காலத்தில் லுடன்டார்ஃப் செய்த தாக்குதலினால் ஜெர்மனி முற்றிலும் களைத்து விட்டது. இங்கிலாந்தின் கடல் முற்றுகை காரணமாக அழிந்து கிடந்த நாட்டின் ஆன்மீக உலகச் சக்திகளை மேலும் எதிர்ப்பைத் தொடரும்படி அவர் பயன்படுத்தினார். இத்தாலிய, துருக்கிய பால்கன் முனைகளிலும் எதிரி தோற்கடிக்கப்பட்டு செயலற்று நின்றான். துருக்கியும், பல்கேரியாவும் வெல்லப்பட்டன. தொடர்ந்து நடந்த பல புரட்சிகளின் காரணமாக ஆஸ்திரியா, ஹங்கேரி தன் இனவழிக் கூறுகளாகக் கலைந்து விட்டது. லுடன்டார்ப்பின் இரும்பு மனங் கூடத் தளர்ந்துவிடவே, சமரசம் தேடத் தொடங்கினார், கேய்ஸர் ஹலாந்துக்குத் தப்பியோட, ஜெர்மன் புரட்சியும், நவம்பர் 11ஆம் நாளின் சமாதான நிர்ப்பந்தமும் தொடர்ந்தன.

முதல் உலகப் போருக்கும், நெப்போலியப் போர்களின்கால நிலைமைகளுக்கும், வழிமுறைகளுக்கும் இடையேயுள்ள சில ஒற்று

மைகளைக் குறிப்பிடுவது இந்நூலுக்குப் பொருத்தமான ஒரு முடிவாகும்.

முதல் முதலில் புவியியலில் நிலைமையில் வேறுபாடுகள் இருந்தன. தன் வடமேற்குக் கோணத்தை தளமாகக் கொண்டு ஐரோப்பாவை வெல்லவேண்டுமென ஜேக்கோபிய, நெப்போலிய பிரான்ஸ் முயன்றது; இதே முறையைத்தான் ஜெர்மன் வல்லரசுகளும் பின்பற்றின. அவர்கள் வன்மையும், வெல்திற முக்கியத்துவமும் வாய்ந்த மையத்திலிருந்து செயல்பட்டதால், எதிர்த்துத் தாக்கிய ரஷ்யர்கள், பால்கன், இத்தாலியர், பிரான்ஸ், ஆங்கிலம் பேசும் பிரிட்டனுக்கும் எதிராக உள்ளே புகுந்து தாக்க முடிந்தது. கீழ்த் திசையில் பிரிட்டன் தன் நேச நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு, சிறப்பாக ரஷ்யாவுடன் இருந்த தொடர்புகள் எதிரியினல் எளிதாகத் தாக்கப்படக்கூடிய, சூழ்நிலை இருந்தது. மேலும் எதிரி போரில் வெற்றி பெற்ருல், ஐரோப்பாவையும், மேற்கு ஆசியாவையும் நிரந்தரமான ஆதிக்கத்தில் வைத்திருப்பது, நெப்போலியனின் வழிமரபினர்களை விட, மத்திய வல்லரசுகளுக்கு அதிக எளிதாக இருந்திருக்கும். லீப்ஸிக் போர் வெற்றியாக முடிந்திருந்தாலும், நெப்போலியன் ஜெர்மானியரை என்றும் அடிமைப்படுத்தி வைத்திருக்க மாட்டார்.

இவ்விரு போராட்டங்களின் படைச் சூழ்ச்சித் திறன்களையும் தந்திரங்களையும் பொறுத்தவரையிலும், பிரிட்டன் நேசநாடுகளின் பலத்திற்கு வேண்டிய பொருளுதவியையும். கடலாற்றலையும் வழங்கிருந்தது. இதனல் எதிரியைக் கடலின் மூலம் தாக்கி முற்றுகையிட முடிந்தது. ஆனல் பின்னர் நிகழ்ந்த போரில் இங்கிலாந்து இன்னெரு பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தது. அதாவது நாம் மக்களை வழங்கிக் கொண்டிருந்தோம். கோடிக் கணக்கான நமது வீரர்களைக் கொண்ட படைகள் அனுப்பப் பட்டு, நான்காண்டுக்காலத்தில் போரில் இறந்தவர்களின்தொகை ஒரு மில்லியனகவும், புண்பட்டவர்களின் தொகை இரண்டு மில்லியன்களாகவும் உயர்ந்தது. 1793 முதல் 1875 வரை நடந்த பிரெஞ்சுப் போர்களில்நமது இராணுவ முயற்சிகள் முக்கியமானவைகளாக இருந்தன வென்ருலும், இத்தனை அளவு பெரிதாக இருக்கவில்லை. ஆண்டுதோறும் நாம் இழந்து வந்த மக்களின் சராசரித் தொகை ஐந்து ஆயிரம் வீரர்களுக்கு மேல் போகவில்லை. ஆனல் ஜெர்மனிக்கு எதிரான போரில் நமது ஆண்டு இழப்பு சராசரி இருநூற்று ஐம்பது ஆயிரமாக இருந்தது. பிந்தியகாலங்களில்தான் அதிகப்படியான இராணுவ முயற்சிகளை

நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. மத்திய வல்லரசுகளின் அதிகவன்மையான ஆற்றலும், அவர்களின் புவியியல் அமைப்பும் இதற்கு ஓரளவு காரணங்களாகும். அனைத்து ஐரோப்பாவையும் கைப்பற்றிக் கொள்ள நெப்போலியனை அனுமதித்ததுபோன்று, ஜெர்மானியர்களையும் விட்டிருந்தால், அவர்களை வெளியேற்றுவது என்பது இனி முடியாது தொன்றும்.

ஆனால் இராணுவத்திலும், கடற்படைத்துறைப் படைக்கலங்களிலும், சூழ்ச்சித் திறன்களிலும் ஏற்பட்டிருந்த மாறுதல்கள், நிலப்போரில் நாம் முற்றிலும் பங்கு பெற வேண்டிய அவசியத்தைத் தூண்டின. மேற்கூறிய போர் முறை மாறுதல்கள் நமது தீவின் பாதுகாப்பை ஆட்டங்காணச் செய்தன. பொலோனில் (Boulogne) தட்டையான அடித்தளம் கொண்ட படகுகளைக் கொண்டு, நேப்போலியன் நம்மை அச்சுறுத்தியது போன்று, இன்னும் ஆங்கிலக்கால்வாயின் துறைமுகங்களின் உரிமையாளர் நீண்ட தூரம் பாயும் துப்பாக்கிகளையும், நீர்மூழ்கிகளையும், ஆகாய விமானங்களையும் கொண்டு நம்மை அச்சுறுத்த முடியும். எனவே பிரிட்டனின் மக்களைப் போர் வீரர்களாக யுத்தத்தின் முக்கியமான நடவடிக்கைகளில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். தற்கால லீப்சிக்கும், வாட்டர்லூவும் தொடர்பான போர்களாகும். இவை நூற்றுக்கணக்கான மைல் தூரமுள்ள ஒரே வரிசையில் நான்காண்டுகளாக இரவு பகல் நடந்தன. தற்கால் நிதிக்கடன் முறை வசதிகளும், மக்களை நெடுந்தூரங்களுக்கு அனுப்பக்கூடிய போக்குவரவும், உணவும், போர்த் தளவாடங்களும் போரில் எதிர்நாடுகள் முக்கிய முனைகள் ஒவ்வொன்றிலும், ஆண்டுதோறும் அகழிகளில் பல்லாயிரக்கணக்கான வீரர்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளும்படி உதவின.

மேற்கூறிய இருபோர்களுக்கும் இடையே காணப்பட்ட முக்கிய வேறுபாடு, படைக்கலங்களிலும், படையின் சூழ்ச்சித் திறத்திலும் இருந்தது; நெப்போலியப் போர்கள் ப்ரௌன்-பெஸ் (Brown-Bess) துப்பாக்கிகளிலும், பிரிட்டிஷ் அணிகள் நெருங்கி நின்று போர் புரியும் முறைகளிலும், பிரெஞ்சு அணிகளிலும் தொடங்கி, இந்த முறைகளிலேதான் முடிவும் கண்டன. இங்கிலாந்தின் தொழில்களில் பயன்படுத்த, புதியன கண்டுபிடிக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஆனால் போர் முறைகளில் புதியன புனைவதைப் பற்றி எந்த நாடும் அக்கறைப் படவில்லை. வெலிங்டனின் படைக்கலங்களும், சூழ்ச்சித் திறன்களும் மால்பரோ பயன்படுத்திய அதே முறைகளினின்றும் வேறு படவில்லை. நெல்ஸனின் கப்பல்களும் பிளேக்

கின் கப்பல்களும் ஒன்றேதான். தற்கால ஆட்சி முறைகளுக்கும், அமைப்பிற்கும், போருக்கும் உள்ள தொடர்புகளை நெப்போலியன் உணர்ந்தார். ஆனால் தற்கால விஞ்ஞானத்தின் இராணுவ சாத்தியங்களைப்பற்றி அவர் ஒன்றும் கண்டுணரவில்லை. ஆனால் பிற்காலத்தில் 1914-ல் மிக நவீனத் தொழில் நுணுக்கமுள்ள போர்க் கருவிகளும், ஜெர்மனியைப் பொறுத்தவரையில் முழுத்தேசிய அமைப்பும், கொண்டு தொடங்கிய போர் முறைகள் யாவும் நான்காண்டுக் காலத்தில் பல முறைகள் புரட்சிகரமான முறைகளில் மாற்றங்கள் கண்டன. அகழிப் போர்களுக்குப் பதில். முன்னேறித் தாக்குகின்ற முறை புகுத்தப் பட்டது. இதைத் தவிர ஆகாயத்திலும், நீர் மூழ்கிகளைக் கொண்டு தாக்குதலும் பெரும் அளவில் முன்னேற்றங்கண்டன. மேலும் ஜெர்மானியர்கள் கண்டுபிடித்த வாயுப் போரும், பிரிட்டனின் டாங்கிப் போரும், நெப்போலியன் காலத்திய மதிநுட்பமற்ற, விஞ்ஞான முறை தழுவாத போர் முறைகளுக்கு இணையற்ற முறையில் விளங்கின. போருக்காக விஞ்ஞானம் முற்றிலும் பயன்படுத்தப் பெற்றது. சிவில் மக்கள் அனைவரும் போர்ப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நமது முன்னோர்கள் நெல்ஸனின் பாதுகாப்பின் கீழ்ப் போர்க்காலத்தில் அச்சமின்றி வாழ்ந்தனர்; இக்காலத்தில் ஸ்காட்டின் நாடகங்களும், நவீனங்களும், வேட்ஸ்வொர்த்தின் கவிதைகளும், கான்ஸ்டேபிள் (Constable) டெர்னர் (Turner) போன்றோர் தீட்டிய ஓவியங்களும் மகிழ்ச்சி பொங்கும் இக்காலத்தில் படைக்கப்பட்டவையே. ஆனால் இப்போது ஆங்கில நாட்டின் பொதுமக்கள் நான்காண்டுகளுக்குத் தமது முழு ஊக்கத்தையும், அறிவையும் போரில் கொன்று குவிக்கவும், கொல்லப்படுதலுமாகிய பணிக்கு அர்ப்பணம் செய்வதில் மன மகிழ்ச்சி கொண்டார்கள்.

பிட், காஸில்ரி காலத்தில் பிரான்ஸையும், அதன் நேசநாடுகளையும் பயன்படுத்தி நமது குடியேற்றப் பேரரசு விரிவு செய்யப் பட்டது. இதேபோன்று நூறாண்டுகளின் பின்னர் ஜெர்மனியின் உதவியால் மீண்டும் பிரிட்டன் அவ்வாறே செய்தது. ஆனால் முன்னாள் போர்களின் குடியேற்றங்கள் எவ்வித பங்கும் பெறவில்லை. ஏனெனில் பிட்டின் காலத்தில் முதல் பிரிட்டிஷ் பேரரசை இங்கிலாந்து இழந்து நின்றது. இரண்டாவது பேரரசு இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது. நூறாண்டுகளுக்குப் பின்னர் பேரரசு முற்றிலும் முதிர்ந்துவிட்டது. பேரரசைப் போரில் பங்கு கொள்ளும்படி பணிக்கின்ற அதிகாரம் பெற்ற பேரரசு கூட்டாட்சி போன்ற இயந்திரங்கள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து,

ஆங்கிலோ டச்சு தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் தாமே தனிப்பட்ட முறையில் விரும்பி முன்வந்து இந்த நீண்ட போராட்டத்தில் முழுப்பங்கு பெற்றன. இவைகள் தமக்குள்ளே ஒன்றரை மில்லியன் வீரர்களைக்கொண்ட கடல் கடந்த நாடுகளின் சிறு படைகளைத் திரட்டினார்கள். போர் முடிந்ததும் இந்தக் குடியேற்ற உரிமை நாடுகள் யாவும் தமது தேசித்தைத் தாய் நாடு ஒப்புக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தின. சர்வ தேச சங்கத்தில் தனித்தனியே பிரதிநிதித்துவம் பெறவேண்டுமென அவைகள் உரிமை கொண்டாடின. மேலும் அவை தாமே போரில் வென்ற ஜெர்மன் குடியேற்றங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கோரின. இறுதியாக 1931ல் இயற்றப்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் சட்டம் (Stuatute of Westminster) நீண்டகாலமாக நிறுவப்பட்டிருந்த வழக்கமான, குடியேற்ற உரிமை நாடுகளின் சொந்த விருப்பத்தின்மேல்தான் கிரேட் பிரிட்டனின் பாராளுமன்றம் அவற்றிற்குச்சட்டம் இயற்ற முடியும் என்பதற்கு சட்டமுறையான அனுமதி வழங்கியது. வாரிசு உரிமையைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் ஒவ்வொரு குடியேற்ற உரிமைநாட்டின் அனுமதியின்பேரில்தான் மாற்றப்பட வேண்டும். மேலும் குடியேற்ற உரிமை நாடுகளின் பதவி நியமனங்களையும் பிறவற்றையும்பற்றிய விவகாரங்களில் அந்நாட்டு அரசியல் நுண்ணறிவாளர்கள் மட்டும் கொடுக்கும் ஆலோசனைகளைத்தான் அரசர் எடுத்துக்கொள்ள வேண்டும். போருக்குப் பிந்திய உலகத்தில் பாராளுமன்றமல்ல, ஆனால் அரசர்தான் பேரரசை இணைப்பவர். இந்த இணைப்பை அடையாளத் தோரணையிலும், சட்டத்திலும், அரச விசுவாசத்திலும் காணலாம்.

இந்திய சுதேசஅரசர்களின் அவைகளிலும் இராணுவத்திலும் பிட்டின் காலத்திலும், போனபார்ட்டின் காலத்திலும் மலிந்திருந்த பிரான்ஸின் செல்வாக்கிற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் இறுதிக் கட்டம் இந்தியாவில் நிறைவேறிக் கொண்டிருந்தது. ஆனால் 1914-1915 வரை இந்தியா பெரும் படைத் தொகுதிகளை அனுப்பிக் கொண்டிருந்தது. இவை ஐரோப்பியப் போராட்டத்தில் பங்கு பெறுவதில் பேரூக்கம் கொண்டிருந்தன. ஆனால் இந்தியாவிலும் எகிப்திலும் அயர்லாந்திலும் போரின் நீடிப்பும் அபாயகரமான பண்பும், அமைதியின்மையும், அரசியல் வெறுப்புணர்ச்சிகளும் எழுவதற்குக் காரணமாயின. போரின் தொடக்கக் காலத்தில் இத்தகைய அறிகுறிகள் காணப்படவில்லை.

அயர்லாந்தில் மட்டும் பிரிட்டன் கொண்டிருந்த எண்ணம் போர்க்காலத்தில் நட்புறவு கொண்டு விளங்கியது. இத்தகைய உணர்ச்சி1795–1800ஆம்ஆண்டுகளில் நிலவிய மனப்பான்மையை விட வேறுபட்டு விளங்கியது. அதே நேரத்தில் இதனை நல்ல முறையில் பயன்படுத்தவில்லை. அயர்லாந்தின் தேசியவாதிகள் கடல் கடந்த நாடுகளில் போர்ச்சேவகம் செய்வதற்குத் தயாராக இருந்த முதல் விருப்பத்தை கிச்னர் பரிவுடன் பயன்படுத்திக் கொள்ளாததால், 1914ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஒரு பொன்னுன வாய்ப்பு கைநழுவிப் போயிற்று. 1916-ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையின்போது டப்ளினில் நடந்த சீன்பெயின் (Siun Feicn) கிளர்ச்சியின் பின்னர் இவ்வியக்கத்தின் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். இதன் விளைவாகக் கொல்லப்பட்ட தலைவர்கள் அயர்லாந்து மக்களின் உயிர்த்தியாகிகளெனக் கொண்டாடப்பட்டனர். மேலும் அயர்லாந்தின் ரெட்மான்டின் சுயாட்சிக் கொள்கை(Redmond's Home Rule Policy) சீன்பெயினின் குடியரசுக் கோரிக்கையாக மாறிவிட்டது. போர் முடிவுற்றபோது இத்தயை எண்ணமாற்றம் முழுமை அடைந்தது. இதனைத் தொடர்ந்து இழிவான குருதிசிந்தப்பட்ட கோர நிகழ்ச்சுகளுக்குப்பின்னர்1921ஆம் ஆண்டு ஒப்பந்தம்உருவாயிற்று. இதன் மூலம் அயர்லாந்து சுதந்திர நாடு குடியேற்ற உரிமை நாடாக நிறுவப்பட்டது. அல்ஸ்டரின் ஆறு புரோட்டஸ்டாண்டு கவுண்டிகளும் இதற்குச் சில மாதங்களின் முன்னர் தங்களுக்கே சொந்தமான ஒருவித சுய ஆட்சித் திட்டத்தைப் பெற்றன. அத்துடன் அவைகள் வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவமும் பெற்றுர்கள்.

போர் முடிவுற்றதும் எகிப்து சுதந்திர நாடாக மாறியது. ஆனல் இன்னும் கிரேட் பிரிட்டனுடன் நட்புறவு கொண்டிருந்தது. இந்தியாவிலும் பொறுப்பாட்சிக்கு வழிவகுக்கப்பட்டது. 1918-க்குப் பின்னர் பேரரசை கான்சர்வேடிவ் அரசியல் நுண்ணறிவாளர்கள் ஆண்டனரென்றுலும், அவர்களின் பேரரசுக் கொள்கை விரி நோக்கு உடையதாக இருந்தது. பழைய காலத்து ஆங்கிலோ–சாக்ஸானிய ஏகாதிபத்திய முறைகள் பண்டை நாள் முறைகள் என்பது போர்க்காலத்தில் தெளிவாயிற்று. தென் ஆப்பிரிக்கா காப்பாற்றப்பட்டது. அண்டையிலிருந்த ஜெர்மன் பகுதிகள் போத்தா (Botha) ஸ்மட்ஸ் (Smuts) தலைமையில் குடியேற்ற உரிமை நாட்டுப் படைகளால் சிதறடிக்கபபட்டன. இவை யாவும் பன்னிரு ஆண்டுகளின் முன்னர் போரில் நமது எதிரிகளாக இருந்தவைகளாகும்.

போர்க்காலத்தில் பிரிட்டனுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இருந்த உறவுகள், நெப்போலியன் காலத்தில் இருந்தது போலவே ஓரளவு பொதுவான நிலைமைகளுக்குக் கட்டுப்பட்டிருந்தன. ஆனால் விவேகமான மேலாண்மையினாலும், முன்னேற்றமான உணர்ச்சிகளினாலும் அவை எதிர்மாறான போக்கை அடைந்தன. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் முற்றுகையிடும் முக்கிய நாடு என்ற முறையில் இங்கிலாந்தின் நலன்களுக்கும் ஐரோப்பியச் சந்தைகளுக்கும் வழக்கம்போல இங்கிலாந்தின் பண்டங்களை அனுப்ப விருப்பங்கொண்ட நடுநிலைமைக் கொள்கையுடைய வணிக நாடான அமெரிக்காவின் நலன்களுக்கும் அவ்சியம் மோதல் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் போர் தொடுப்பது அலட்சியமானதொன்று என்ற வகையில் பெர்ஸிவல் (Perceval) அமைச்சரவை நடந்து கொண்டு, மெதுவாகப் போர் அபாயத்தை நோக்கி இழுத்துக் கொண்டு செல்லப்பட்டது போலன்றி, சர் எட்வர்ட் கிரேயின் அமைச்சரவை இத்தகைய தவறு எதுவும் செய்து விடவில்லை. கிரே, பருத்தியும் பிற மதிப்புயர்ந்த பொருட்களும் எதிரிகளுக்கும் கிடைக்குமாறு வழியைத் திறந்துவிட்டு, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைக் கூட விட்டுக்கொடுத்தார். இதனால் இங்கிலாந்திற்கு எதிராக அமெரிக்காவின் கருத்து காலத்திற்கு முன்னதாகக் குமுறி வெடித்து விடாதவாறு தடை செய்யப்பட்டது. பிற காரியங்களை ஜெர்மானியர்கள் செய்து முடித்தார்கள். பிரிட்டனின் முற்றுகைத் தந்திரங்களின் காரணமாக, அமெரிக்காவின் நேச நாடுகளுக்குச் சார்பான உணர்ச்சிகளும், அமெரிக்காவின் மக்கள் மேலும், கப்பல்கள் மேலும் ஜெர்மனியின் நீர்மூழ்கிகள் செய்த தாக்குதல்களும் வளர்வதற்குக் காலம் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் நடு நிலைமை வகித்த பெருநாடான அமெரிக்காவின் நட்புறவு இப்போரில் நமக்குக் கிடைத்தது.

முற்றுகை முறைகளைப் பொறுத்த வரையிலும் நெப்போலியன் காலத்தைவிட இப்போது பெரும் வேறுபாடுகள் இருந்தன. எதிரியின் முக்கியக் கடற் படையின் மீது நாம் செய்த முற்றுகை நெடுந் தூரத்தில் நடத்தப் பெற்றதென்றாலும், நெல்ஸன் காலத்தில் ப்ரெஸ்ட் (Brest) துலோன் போன்ற இடங்களில் செய்யப்பட்ட முற்றுகைகளைப் போன்று ஓரளவு வன்மையுடையதாக இருந்தது என்பது உண்மையாகும். இதனால் படை எடுக்கக் கூடிய எல்லாவித வாய்ப்புகளும், எதிரியின் பெருங்கப்பல்களைச் செயலற்று நிற்கச் செய்யக் கூடிய முயற்சிகளும் தடுக்கப்பட்டன. ஆனால் நெப்போலியனின் தனிக்கப்பல்களும், விரை போர்க்கப்பல்களும், நெல்சனையும் மீறி பிரிட்டனின் வாணி

பத்தை எதிர்த்துச் சிறு போர்களில் ஈடுபட்டாலும், அவற்றை ஜெர்மனியின் நீர் மூழ்கிகளுடன் ஒப்பிட முடியாது. இவற்றில் போரின் பிற்பகுதியில் பிரிட்டனைப் பட்டினி போட்டுச் சரணடையச் செய்யக்கூடிய அபாயம் கூட இருந்தது. புதிய அபாயத்தை எதிர்த்துப் போராட புதிய முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு, முற்றிலும் நவீன மயமான விஞ்ஞானத் திறமையுடன் நிறைவேற்றப்பட்டன. மேலும் இந்த முயற்சியில் அரசரின் கடற்படையும், வணிகக் கப்பல் படையும் இன்னும் கைவிட்டு விடாத இரகசியமான பழந் திறமையும், கடல் வீரமும் விளங்கின.

நெப்போலியன் காலத்தைப் போன்று இங்கிலாந்தில்உணவு தன் நிறைவு இல்லை. எனவே இங்கிலாந்தின் உயிரையே காப்பாற்றுவதற்குக் கடலாதிக்கம் மிகத் தேவைப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளின்போது, தெளிவாகக் காணப்பட்டது போன்று, மத்தியவல்லரசுகளும் காலவரையறையின்றித் தமது உணவைத் தாமே தேடிக் கொள்ளவும் முடியாது. பிரிட்டனின் முற்றுகைப் பிடி இறுக்கப்பட்டபோது, குறிப்பாக அமெரிக்கா போரில் இறங்கிய பின்னர் இப்பிடியானது தூதாண்மைத் துறையிலும், கடற்படைத் துறையிலும் மேலும் இறுகியபோது, ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் உடனடியாகப் பட்டினி அனுபவித்தார்கள்; தொழிற் புரட்சி தொடங்கிய காலம் முதல், ஐரோப்பிய நாடுகள் தாம் எவ்வளவு நாகரிகமும், புதுக்காலப் பண்பும் பெற்று விளங்கினவோ, அதற்கு ஏற்ற விதத்தில் தன் நிறைவு பெற்று விளங்குவதையும் கைவிட்டு வந்தன. தற்காலத்தின் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்வைப் பிணைத்து வந்த பொருளாதார முறை, நிறைந்த அனைத்துலகப் பண்பு பெற்றும், மிகுந்த மென்மையும் பெற்று விட்டதனல், விஞ்ஞானப் போர் முறையின் அழிவுகளினின்றும் அவை நீண்ட நாள் வாழ முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் நான்காண்டுகள் ஓரளவு நிலைபெற்றுர்கள். அதற்குள் நூறுண்டுகளாகக் குவிக்கப்பட்ட பொருளும், நாகரிகமும் முற்றிலும் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பயங்கரமான நான்காண்டு காலம் முடிந்ததும் ஐரோப்பா அழிவுற்றது. இந்த அழிவு ஆன்மிகத்துறையிலும், லௌகீகத்துறையிலும் மீளமுடியாத வகையில் நிகழ்ந்தது. இத்தகைய போர் இனியும் நிகழும் என்ற அச்சத்தை நீக்குவதைத் தவிர வேறெதுவும், உரிமையும், உயர் நாகரிக வாழ்வின் நெகிழ்தன்மையும் மீண்டும் நிலைபெற உதவி இருக்க முடியாது. ஆனல் இன்னெரு போர் மூண்டது.

உழைப்பாளி மக்களின் நிலைமையைப் பொறுத்த வரையி லும், பிரிட்டிஷ் மக்கள் ஒருவரோடொருவர் கொண்டிருந்த உறவுகளைக் கவனிக்கின்றபோதும் நெப்போலியப் போர்களுக் கும் ஜெர்மன் போருக்கும் இடையில் குறிப்பிடத்தக்க ஒரு வேற்று மையைக் காணமுடிகிறது. பிட்டும் காஸில்ரீயும் பொதுமக்கள் சபை யின் மூலமும் அதன் துணைகொண்டும் அரசியலமைப்பு நுண்ணறி வாளர்கள் என்ற முறையில் பிரன்ஸுடன் போராடினார்கள் ஆனால் நாட்டிற்குப் பெருந்துன்பம் ஏற்படுகின்ற காலை, ஜேக்கோபியர் களை அடக்குவதும், பாராளு மன்றச் சீர்திருத்தக்காரர்கள் வாயை அடைப்பதையும் தவிர, நாட்டு மக்களுக்கு வேறு கவனிப் பும், உதவிகளும் தேவைப்படும் என்பதை அவர்களும், அவர் களின் சகாக்களில் எவரும் ஏனோ உணரவில்லை. மேலும் போரை வெல்லுகின்றதைப் பொறுத்தவரையிலும் கூட இந்த எண்ணம் தவறு என்பது நிரூபிக்கப்படவில்லை. ஆனால் 1914–18 ல் உள் நாட்டின் அபாயங்களை முற்றிலும் வேறுபட்ட முறைகளினால் தீர்க்கவேண்டியிருந்தது. 1918ஆம் ஆண்டுத் தொடக்க காலத்தில் போர் இன்னும் கொடுமையாக நடந்து கொண்டிருந்தபோது, பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் நான்காவது சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் பெரும் அளவு முதி யோர் ஆடவர் வாக்குரிமையும் (Manhood Suffrage) புதிதாக வளர்ந்து வந்த கொள்கையான பெண்டிர் வாக்குரிமையின் (Woman's Suffrage) பெரும் பகுதியும் வழங்கப் பெற்றன. பெண்டிர் வாக்குரிமை கோரியவர்கள் இழிவான நடவடிக்கை களில் ஈடுபடுவதை விட்டு விட்டதும், தொழிற்சாலைகளிலும், பிற விடங்களிலும் பெண்கள் செய்து வந்த மகத்தான பணி களும், இதுவரை பெண்டிர் வாக்குரிமையை எதிர்த்தவர்கள் அதனை ஆதரிக்குமாறு தூண்டின. அரசாங்கத்திற்கும், பொது மக்கள் சபைக்கும் இடையேயுள்ள உறவுகளைப் பொறுத்தவரை யில் சர்வாதிகார இயல்பு தற்போது பிட்டின் காலத்தைவிட அதிக அளவில் காணப்பட்டது. ஆனால் 1914-18ல் பதவி வகித்த இங்கிலாந்தின் அமைச்சரவையின் உறுப்பினர்கள், எப்போதும் நல்லிணக்கமாகவே பொதுமக்களிடம் உதவிநாட வேண்டி யிருந்தது. ஏனெனில் வெடி மருந்து உற்பத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவோ, அல்லது வேலையில் தாமதமோ காட்டினால், இனி 'நீதிபதிகளும், சிறு நிலக்கிழார்களும்' அவர்கள் வேலை செய்யத் தூண்டும்படி எதுவும் செய்ய முடியாது என்பது உறுதி. சமூகத்தின் கடை நிலையில் இருந்தவர்கள் வாக்குரிமை யும், ஓரளவு கல்வியறிவு சார்ந்த ஜனநாயகப் பண்பும் பெற்று விட்டதால், லூடைட்டுகள் (Luddites) காலத்தில் அடக்கு முறை சாதித்ததை, இப்போது நல்வார்த்தை கூறித்

தூண்டுதல் மட்டுமே செய்ய முடியும். ஜேக்கோபிய பிரான்ஸுடன் இங்கிலாந்து நடத்திக் கொண்டிருந்த போராட்டத்தில் தொழிற்சங்கங்களை அடக்குவதற்குத் தொழிலாளர் கூட்டத் தடைச் சட்டங்கள் சிறப்பாகப் பயன்பட்டன; அனால் ஜெர்மனியோடு நடத்தப்பட்ட போரில், இதுவரை நடந்திராத வகையில் கூலிகளை உயர்த்தியதும், தொழிற் கட்சித் தலைவர்களைக் கூட்டு மந்திரி சபையில் சேருமாறு தூண்டியதும் முக்கிய வழிவகைகளாகும். நூற்றுண்டுகளின் முன்னர் நிகழ்ந்தது போன்று, போர்க்கால இன்னல்கள், கூலி ஊதியம் பெறும் தொழிலாளியைத் தமது வன்மையுடன் தாக்கவில்லை. போராகிய பொது அபாயம் நீடித்த வரையில் நாட்டிலும் போர்க்களத்திலும் எல்லாவித பிரிட்டிஷ் மக்களிடையே நிலவிய சகோதர உணர்ச்சி, நெப்போலியன் காலத்தைவிட அதிக ஆழமாகவும், பரந்தும் காணப்பட்டது என்பது மிகையன்று.

1915-ல் கான்ஸ்டாண்டிநோபில் கைப்பற்றப் பெற்றதென்ருல், மத்திய வல்லரசுக்களுக்கு எதிராக பால்கன் நாடுகள் யாவற்றையும் திரட்டுவதன் மூலமும், ரஷ்யாவிற்குப் பண்டங்கள் வழங்குவதற்குத் தடையற்ற ஒரு வழியைத் திறப்பதனுலும். இரண்டு ஆண்டுகளில் வெற்றி பெற்றிருக்கக்கூடியது சாத்தியமே. ஆனல் கிச்னரும், அமைச்சரவையும், டார்டனலஸ்ஸின் மீது விட்டு விட்டு செய்யப்பட்ட தரைப் படை, கடற் படைத் தாக்குதல்களைக் குறித்த காலத்தில் நிகழ்த்தவும் அவற்றிற்கு ஆதரவு தரவும் தவறிவிட்டனர். இதனுல் போர்க்காலத்தைக் குறைத்துக் கொள்ளுகின்ற வாய்ப்பு கைவிடப்பட்டது. இதன் விளைவாக, மேற்கு முனையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர் இழந்து, பிரிட்டனின் முற்றுகையினுல் ஆஸ்திரியா-ஹங்கேரி மக்கள் படிப்படியாகப் பசி அனுபவித்து, யாவரும் களைப்படைந்த பின்னர்தான் ஒருவித முடிவு எடுக்கப்பட்டது. 1917-ல் போல்ஷிவிக் புரட்சியின் காரணமாக ரஷ்யா நேசநாடுகளைவிட்டு விலகியபோது, சரியான காலத்தில் அதன் இடத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெற்றன. ஜெர்மானிய நீர்மூழ்கிகள் அமெரிக்கக் கப்பல்களை மூழ்கடித்து வந்த கொடுமையை மேலும் பொறுக்க முடியாத நிலையில்தான் அமெரிக்கா போரில் இறங்கியது.

போர் தொடங்கிய இரண்டாவது ஆண்டில் லிபரல்களையும், கன்ஸர்வேடிவ்களையும் கொண்ட ஒரு கூட்டு அமைச்சரவை ஆஸ்குவித்தின் தலைமையில் உருவாகியிருந்தது1915-ல் டார்டனலஸ்ஸில் ஏற்பட்ட தோல்வியின் இறுதியான, உடனடியான விளைவுதான்

1916 டிசம்பரில் ஆஸ்குவித்தின் அமைச்சரவை கவிழ்ந்ததாகும். அவருடன் அமைதி ஏற்படுகின்ற காலத்தில் பெரிதும் பயன் பட்டிருக்கக் கூடிய 'விரிநோக்கும் மறைந்து விட்டது. ஆனால் யுத்தத்தின்பின் விளைவுகளை இவ்வித உணர்ச்சிகள் தாங்கிஇருக்க வும் முடியாது. போர்க்காலப் பிரதமருக்குத் தேவையான பல பண்புகள் ஆஸ்குவித்திடம் காணப்பட்டன. சிறந்த இராணுவ ஆலோசகர் ஒருவர் அவருக்கு மிகவும் தேவையாக இருந்தார். அவருக்குப் போர் அமைச்சராக வாய்த்தவரிடம் எல்லாத் திறமைகளும் காணப்படவில்லை. இவர்தான் கார்த்தூமின் கிச்னர் ஆவார். போராட்டத்தின் கால நீடிப்பையும், கனகனத்தையும் காட்டி, நாட்டைத் தட்டி எழுப்பினர் கிச்னர். போரின் தொடக்க காலத்தில் 'கிச்னரின் படைகள்' என்று தாமே விரும்பிப் பதிவு செய்யும் தொண்டர்களைத் திரட்டினர். இங்கிலையில் நாடு கட்டாய இராணுவ சேவைக்கு உடன்பட இன்னும் மறுத்து நின்றது. கிச்னர் உண்மையில் மிகவும் சிறந்த பெரியார். பொது மக்களின் சிந்தனை ஆற்றலின்மீது அவருக்கு அளவு கடந்த செல்வாக்கு இருந்தது. ஆனல் தற்கால விஞ்ஞான முறைகளை யொட்டிய ஓர் உலக யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான நிகழ்வுத் தன்மையுடைய மனம் அவரிடம் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கிலாந்தின் பொதுமக்கள் கண்டுணர்ந்த அளவிற்காவது, நாட்டைக் காப்பாற்ற எழுந்தவர் லாயிட் ஜார்ஜ் ஆவார். போர்ப் படைக்கல அமைச்சராக (Minister of Munitions) அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், போர்ப்பணித் துறையின் தொடக்கக் காலத்தில் நிகழ்ந்த தவறுகளுக்கு ஈடு செய்தது. அவரது கற்பனை ஆற்றல் எப்போதும் வளம்பெற்று இருந்தது. அவரது ஊக்கம் யாவரையும் ஆட்கொண்டது. அடுத்தடுத்து நிகழ்ந்த போர் நெருக்கடிகளில் அவர் காட்டிய வீர உணர்ச்சிகள், நாட்டு மக்களுக்கு ஆஸ்குவித்தின் பற்றற்ற நிலை காட்டிய சினமூட்டும் அமைதியைவிட அதிக நம்பிக்கை யூட்டியது. லாயிட் ஜார்ஜ் வெற்றிக்காக ஆற்றிய தொண்டுகளைப் பற்றி என்றும் வேறுபட்ட எண்ணங்கள் நிலவும். ஆனல் அவருடைய வீரமும், செயல்களும், நாட்டுக்கு நம்பிக்கையும், போரின் இறுதி இரு ஆண்டுகளில் தலைவர்களுக்கு ஊக்கமும் அளிக்க உதவின.

முடிவுரை

போரின் விளைவுகள்

ஃபோக்கின் போர்த் தந்திரத்தின் விளைவாகவும், ஹேய்க்கின் தாக்குதலுக்குப் பணிந்தும் இறுதியாக ஜெர்மன் முன்னணி சரணடைந்தபோதும், 1918 நவம்பர்த் திங்களில் எதிர்பாராத வகையில் வெற்றி கிடைத்தபோதும், இங்கிலாந்தும், பிரான்ஸும் போரின் பயங்கரமான மனநிலையிலிருந்து ஒரே கணத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான விவேகமும், முன்நோக்கும், தாராளமும் கொள்ளும் விதத்தில் தம் மனத்தைத் திருப்பும் படியான நிலை ஏற்பட்டது. பிரான்ஸ் அறிவுடைமையுடன் சிந்திப்பதற்கு நீண்டநாளாயிற்று. ஆனால் ஓரிரண்டு ஆண்டுகளில் இங்கிலாந்தும் தனது நற்பண்பை மீண்டும் பெற்றாலும், தன் நல்லெண்ணத்தைப் பெறுவதற்குச் சிறிது நாளாயிற்று. முதல் ஆறு மாதங்களில் சமாதானம்செய்யவேண்டியதிருந்ததும்அவப்பேறேயாகும். ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் இன்னும் போர்வெறி கொந்தளித்துக்கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் மேலோங்கி நின்ற வெறி யுணர்ச்சிகளை எதிர்த்துப் போராடுவதில் தன் பிரமாண்டமான செல்வாக்கை வீணாக்கி, தனக்கிருந்த பெருமதிப்பை கெடுத்துக்கொள்ளக் கூடியவர் லாயிட்ஜார்ஜ் அல்லர். இவ்வுணர்ச்சிகள் அவருடைய எளிதில் ஏற்கும் தன்மையுள்ள, மாறக்கூடிய மனத்தை மட்டு மீறிய அளவில் பாதித்தன. மேலும் ஆஸ்குவித்திற்குப் பதிலாக லாயிட் ஜார்ஜ் பிரதமராகப் பதவி ஏற்பதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் அவருக்கும், லிபரல் கட்சியில் பெரும்பகுதியினருக்கும் இடையே போரின் இறுதி இரண்டாண்டுகளில் ஒரு பிளவை ஏற்படுத்திவிட்டன; போர் நிறுத்தக் காலத்தில் லாயிட் ஜார்ஜ் பொதுமக்கள் ஆதரவு பெற்றிருந்த சில பத்திரிகைகளின் உரிமையாளர்களுடன் அவர் அரசியல் உறவு கொண்டிருந்தார். இப்பத்திரிகைகள் ஜெர்மனியின் போர்க் குற்றங்களுக்குப் பழிவாங்க வேண்டுமென வன்மையாகக் குரலெழுப்பின; எனவே 1918ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் சமாதானத்தின்போது மிதவாதத்தை ஆதரிக்கக்கூடிய ஆஸ்குவித்தின் ஆதரவாளர்களை லாயிட் ஜார்ஜ் வேண்டுமென்றே தடை செய்து தேர்தலில் முற்றிலும் முறியடித்தார். லிபரல் கட்சியில் பிளவு ஏற்பட்டு அழிந்தது. அதுமுதல் அக்கட்சி தன் பழைய முக்கியத்துவத்தை மீண்டும் பெறவில்லை.

ஏனெனில் பிந்திய தேர்தல்களில் தொழிற்கட்சி படிப்படியாக அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

இவ்வாறு போர் நிறுத்தத்திற்கும், வேர்ஸேய்ல்ஸ் சமாதானத்திற்கும் இடைப்பட்ட சூழ்நிலைகளில் நடத்தப்பெற்ற இந்தப் பொதுத்தேர்தலில், ஜெர்மனியின் போரின் செலவுகளைத் தாங்கும்படி கட்டாயப்படுத்த உறுதிபூண்ட ஒரு பொதுமக்கள் சபை தேர்ந்தெடுக்கப்பட்டது. லாயிட் ஜார்ஜைப் பெரும்பான்மையினர் ஆதரித்தனர். அவரும் பெரும்பான்மையினரை ஆதரித்தார். இவ்வாறு பொது மக்களின் அமோக ஆதரவாகிய இயந்திரக்கல்லை கழுத்தில் கட்டிக்கொண்டு, லாயிட் ஜார்ஜ் உலகத்திற்குச் சமாதானம் வழங்கும் பணியில் கிளெமென்ஸோவிற்கும் (Clemenceau) வில்ஸனுக்கும் (Wilson) உதவி புரியுமாறு வெர்ஸேய்ல்ஸ்ற்குப் புறப்பட்டார்(ஜனவரி-ஜூன் 1919).போரில் அதிக துன்பத்திற்கு ஆளான பிரான்ஸ் இங்கிலாந்தைவிட அதிகம் பழிவாங்கவேண்டுமென துடித்துக்கொண்டிருந்தது. நல்லெண்ணம் படைத்த வில்ஸனே ஐரோப்பாவின் உண்மை நிலைகளையும் அமெரிக்காவின் எண்ணங்களையும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

பிரான்ஸ், ரைன் ஆற்றின் ஜெர்மன் பகுதியான இடது கரையை நிரந்தரமாகக் கைப்பற்றிக் கொள்ளாமல் வில்ஸனும், லாயிட் ஜார்ஜும் தடுத்துவிட்டனர். அமெரிக்காவும் இங்கிலாந்தும் பிரான்ஸ் எல்லைகளைத் தாக்காமல் இருக்கின்ற ஓர் உறுதிமொழியைத் தந்துதான் வில்ஸனும் லாயிட் ஜார்ஜும் இதனைப் பெற்றனர். இந்த வாக்குறுதிக்கு அனுமதி தருவதற்குத்தான் அமெரிக்கா மறுத்தது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தும் சில காலத்திற்கு இக்கடமையை நிறைவேற்றுவதற்கு மறுத்து வந்தது. இதனால் சில ஆண்டுகளுக்கு ஜெர்மனியைப் பொறுத்த வரையில்பிரான்ஸின் கொள்கைகளை இங்கிலாந்து கட்டுப்படுத்த முடியவில்லை. அதே நேரத்தில் ஜெர்மனி தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கு இவை தூண்டுதலாகவுமிருந்தன.

மொத்தத்தில் ஐரோப்பிய எல்லைகளை நிர்ணயிக்கின்ற பணி வேர்சேய்ஸ்ஸில் நல்ல முறையில்தான் நிறைவேற்றப்பட்டது. தேசியத்தின் அடிப்படையில் அமைந்த பல சிறு நாடுகள் புதிய ஐரோப்பாவில்இருந்தன. ஆஸ்திரியா-ஹங்கேரியின் வழித்தோன்றல்களாக, அமைக்கப்பட்ட புது நாடுகள் அவற்றின் சொந்த மக்கள் தொகைகளின் செயல்களினால் நிறுவப்பட்டவையே.

இவை யாவும் போரின் இறுதிக் கட்டத்தின் விளைவுகளாகும். வேர்சேஸ்ஸில் அரசியல் நுண்ணறிவாளர்கள் கூட இம்மாற்றங்களை உறுதிப்படுத்துவதற்கு முன்னரே இவைகள் நிகழ்ந்து விட்டன. எனவே ஆப்ஸ் பர்க்குகளின் (Haps burgs) பேரரசைச் சிதைத்தது சமாதானத் திட்டமல்ல. ஆனால் போரே ஆகும். 1920ல் ரஷ்யாவுடன் தொடுக்கப்பட்ட ஒரு போரின் விளைவாக, இங்கிலாந்து ஒப்புக்கொண்டு உத்திரவாதம் செய்திருந்த 'கர்ஸான்' எல்லைக்கு (Curezon Liene) அப்பால் போலந்து வல்லந்த முறையில்தான் கிழக்கு எல்லையை விரிவாக்கிக் கொண்டது.

வெற்றி பெற்ற நேச நாடுகள் ஜெர்மனியை நடத்திய விதம் இரண்டு விதங்களில் தவறாகும். முதலில் ஜெர்மனியின் போர்த் தலைவர் இரகசியத்தில் மீண்டும் படை தரிப்பதைத் தடுக்க வன்மையான சோதனைமுறை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. அதே நேரத்தில் புதிய ஜெர்மன் குடியினரை ஜெர்மானிய மக்களின் மத்தியில் செல்வாக்குப் பெறச் செய்வதற்கான எந்த ஏற்பாடுகளும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதனை அமைதியான ஒரு ஜனநாயகமாக வாழச்செய்வதே பிரான்ஸும்,இங்கிலாந்தும் கொண்டிருக்க வேண்டிய முதல் நோக்கமாகும். ஆனால் ஜெர்மனியின் இன்னல்களின் மேல் விதிக்கப்பட்ட கடுமையான நிபந்தனைகளினால் ஜெர்மனி இழிவு செய்யப்பட்டது. இந்த இன்னல்களுக்குக் கழுவாய் கோரி ஜெர்மனி தன் வெற்றி வீரர்களுக்கு முன் மன்றாடும் உரிமை கூட மறுக்கப்பட்டது. ஆஸ்திரியாவுடன் அமைதியான முறையில் இணைவதற்கும் தடை விதித்தார்கள். சர்வதேச சங்கத்தில் ஜெர்மனிக்கு இடமில்லை. நஷ்ட ஈடுகளை நிர்ணயிக்கின்றபோதும் ஜெர்மனி எவ்வளவு விநோதமான முறையில் நடத்தப்பட்டதென்றால், ஜெர்மனியிடமிருந்து கடன் பெற வேண்டியவர்களுக்குப் பயன்படாதவகையில் ஜெர்மனிக்கு சினமூட்டினார்கள்.

இந்த நேரத்தில் சர்வதேச சங்கமும் நிறுவப்பட்டுச் சமாதான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. ஆனால் சங்கத்தின் உண்மையான நோக்கங்களுக்குப் பெரும் வல்லரசு நாடுகளில் இங்கிலாந்து மட்டுமே ஆதரவு கொடுத்தது; மேலும் நஷ்ட ஈடுகளைப் பொறுத்த வரையில் ஜெர்மனியின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இங்கிலாந்து முயன்றது. இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைத் தூண்டிவிட்ட 1918ஆம் ஆண்டு டிசம்பரின் அலைப் பொதுத்தேர்தல் கால மனநிலை, ஆங்கில மக்களின் மன்னிக்கும் உள்ளங்களிலே சீக்கிரம் மறைந்து ஒழிந்தது. ஆங்கிலேயர்கள் படைக்கலங்களைத் துறந்து

போர் நினைவுகளைத் தள்ளிவிட்டனர். தவிரவும் போரினிலும் அமைதியினிலும் இயல்பாக விளையக்கூடிய விளைவுகளைத் தவிர்ப்பதற்கு ஊனமான சர்வதேச சங்கத்தின் வல்லமையின் மேல் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

அமெரிக்கா தன் வழியே ஒதுங்கிவிட்டது. சர்வ தேச சங்கத்தின் கொள்கைகளுக்கு ஐரோப்பாவைப் பிணையாக்குவதில் கருவியாக இருந்த அமெரிக்கா, கடைசி நேரத்தில் அதில் சேருவதற்கு மறுத்துவிட்டது. மேலும் அமைதியைக் காக்கக்கூடிய எவ்வித நடைமுறை வழியிலும் தான் ஒத்துழைப்பதினின்றும் விலகிக்கொண்டது. இது ஒரு வினை வட்டம் போன்று சுழன்று கொண்டு வந்தது. அமெரிக்கா விலகிக் கொண்டதால் ஐரோப்பாவின் குழப்பம் மேலும் அதிகரித்தது. அமெரிக்கா அதில் தலையிட விரும்பாத அளவுக்கு ஐரோப்பாவின் குழப்பம் மோசமாகிவிட்டது.

அமெரிக்கா இழப்பீட்டுக்குழு (Reparations Commsssion) விலிருந்தும் விலகிக் கொண்டது. இதில் அமெரிக்கா ஒத்துழைத்திருந்தால் இங்கிலாந்து பிரான்ஸைக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். எனவே 1923-ல் ஜெர்மனியின் ரூர் (Ruhr) பள்ளத்தாக்கை வன்முறையால் பிரான்ஸ் ஆக்கிரமித்ததற்கு ஓர் அரைகுறைச் சட்டச்சாக்கு கண்டு பிடிக்க முடிந்தது. இதனை இங்கிலாந்து வீணில் எதிர்த்தது. இதன் விளைவுதான் ஹிட்லரின் (Hitler) ஜெர்மனியாகும். பாஸிஸ (Fascist) நாஸிஸ (Nasi) முறை ஆட்சிகள் ஏற்படுவதற்குப் பிற முக்கிய காரணம், ஒரே நேரத்தில் பொதுவுடைமைக்கு (Communisum) எதிராக எழுந்த எதிர்ப்புகளும் அதனைப் பின்பற்றியதுமாகும். இந்தப் பொதுவுடைமைக் கொள்கைக்கு ரஷ்யாவில் வெற்றி பெற்ற போல்ஷிவிக் புரட்சி, ஐரோப்பா முழுவதிலும் பெரும் தூண்டுதலும் ஊக்கமும் அளித்தது. ஐரோப்பாவின் பெரும் பகுதியில் விடுதலையையும் ஜனநாயகத்தையும், பாராளுமன்றங்களையும் அழித்ததே போரின் விளைவாகும். முற்றிலும் படுகொலைகளையும் சித்திரவதையையும் அடிப்படையாகக் கொண்ட நாஸி ஆட்சி முறை தற்கால ஐரோப்பா அனுபவத்தில் கண்டிருந்த எவ்வித அரசாங்கத்தையும் விடக் கட்டு மீறிய அளவு மோசமானதாயிருந்ததால் 1940 வரையிலும் அதன் உண்மை நிலையையும் குழப்பங்களையும் இங்கிலாந்து புரிந்துகொள்ளவில்லை. அப்போதுதான் நாஸி அரசாங்கம் தனது பயங்கர நடவடிக்கைகளை ஐரோப்பா முழுவதிலும் விரிவாக்கிக் கொண்டிருந்தது.

சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்த ஆண்டுகளில் ஆங்கிலக் கொள்கைகளில் நல்லெண்ணம் இருந்த போதினும் முன்நோக்கோ உறுதியோ காணப்படவில்லை. தொடக்கக் காலத்திலின் ஜெர்மனியின் மனக் குறைகளை நீக்கு வது சாத்தியமாகத் தோன்றியபோது, அத்துறையில் வன்மை யான முறையில் எதுவும் செய்யப்படவில்லை. மேலும் எழும்பிக் கொண்டிருந்த ஜெர்மன் புயல் கட்டுக் கடங்காததாக ஆகும் வரையிலும் அதனை எதிர்க்க எவ்வித ஆயத்தமும் செய்யப்பட வில்லை.

தற்காலத்திய முழு யுத்தத்தின் சொல்லுதற்கரிய பயங்கரங் களை நான்காண்டுகள் அனுபவித்தபின்னர், இயல்பான ஓர் எதிர்ப்பென ஆங்கில மக்கள் சமாதானத்தையும் ஒரு முகமான படைக் குறைப்பையும் அமைதி காணும் வழிகளெனக் கருதினர் கள். மேலும் சர்வ தேச சங்கத்தைச் சகலத்தையும் மாயா ஜாலத்தாலும் இயல்பான முறையிலும் பாதுகாக்கின்ற ஒரு கருவியாகவும் வாழ்த்தினர். ஆனால் அச்சங்கத்தின் வழிவகை கள் ஒழுங்காக வரையறுக்கப்படவில்லை. இங்கிலாந்து மட்டும் சர்வ தேச சங்கத்தின் நோக்கங்களை மதிக்கவேண்டு மென்று விரும்பி இருந்தால், அது அவற்றை அமுலாக்கக் கூடிய நிலையில் தன்னையே அமைத்துக் கொண்டிருக்கும். ஏனெனில் அவற்றை நிலைநாட்டுவதற்குத் தேவையான வன்மையும், மன வலியும் வேறு எந்த நாட்டிற்கும் இல்லை. இங்கிலாந்து ஒரு ஐரோப்பிய நாடாக இருக்கவேண்டு மென்று விரும்பி இருந்தால், மற்றநாடு களைப்போன்று தன் படைபலத்தை அதிகமாக வளர்த்திருக்கும். 1933ல் நடந்த நாஸிப்புரட்சி எல்லாவிதத்திலும் ஓர் எச்சரிக்கை யாக விளங்கியது. இதற்குப் பின்னரும் நம்மைப் பொறுத்த வரை எந்த இணையான ஏற்பாடுமின்றி ஜெர்மனி தன் பெரிய படையைப் புனர் அமைக்கமட்டுமின்றி, ஆகாயத்தில் தற்கால ஆதிக்கம் பெறவும், சமாதான ஒப்பந்தத்திற்கு முரணாக ரைன் ஆற்றுப் பகுதியில் இராணுவத்தைக் குவிக்கவும், நம்மை மத்திய ஐரோப்பாவினின்றும் துண்டித்துவிட, ரைன் பகுதியில் சீக்பிரிட் அரணை (Siegfried) அமைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப் பட்டது. அதே நேரத்தில் ஆஸ்திரியாவுடனும், பால்கன் நாடு களுடனும் நமது தொடர்புகளைக் கட்டுப்படுத்திய இத்தாலிய ஜெர்மனியின் செல்வாக்கினுக்குள் விரட்டப்பட்டது. 1935-36–ல் முஸோலினி (Mussolini) அபிஸினியாவை (Abyssinia) ஆக்ர மித்தபோது நமது பொருளாதார முட்டுக்கட்டைகளைச் சரியான முறையில் பயன்படுத்தாததே இதன் காரணமாகும். இந்த மிக இக்கட்டான விவகாரத்தில் இங்கிலாந்து இதில் தலையிடுவதி

னின்றும் விலகிக்கொள்ளவோ, அல்லது இதில் முழுமனத்துடன் போரிடவோ முடியவில்லை. ஐரோப்பா அபிஸினியாவிற்கு வீணில் பலியானது. இதற்கிடையில் நாஸி ஜெர்மனியின் ஆக்ரமிப்புக் களைக் கட்டுப்படுத்துவதில் ரஷ்யாவுடன் உடன்பாடு செய்து செய்துகொள்ள எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

வருங்கால வரலாற்றறிஞர்கள், நாட்டில் அடுத்தடுத்து நிறு வப்பட்ட அரசாங்கங்களுக்கும், என்றும் வேறுபட்டுக்கொண் டிருந்த எதிர்க்கட்சிகளுக்கும், பொதுமக்கள் எண்ணத்திற்கும் இடையே நடந்த நீண்ட தொடர்பான பல தவறுகளுக்கும் காரண மான பழியைப் பகிர்ந்து கொள்ளுகின்ற நல்ல பணியை ஆற்று வார்கள். மேற்கூறிய பொதுமக்கள் கருத்துக்களை அரசாங்கங்கள் வன்மையான முறையில் பின்பற்றவில்லை. 1939ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தான், சில மாதங்களுக்கு முன் செய்யப்பட்ட மியூனிச் (Munich) ஒப்பந்தத்தை மீறி ஹிட்லர் பிரேக்கை (Prague) ஆக்ரமித்தபோது, பிரிட்டிஷ் அரசாங்கமும், மக்களும் நிலைமையின் பயங்கரமான உண்மையை உணர்ந்தனர். இந்த ஆபத்தில் அவர்கள் கடந்த இருபதாண்டுகளாகவே தம்மையறி யாமலே சென்று கொண்டிருந்தனர். இந்நிலையிலும் கூட, பிரிட்டன் தனது படைபலத்தை மீட்டுக்கொண்ட விரைவு நெருக் கடிக்குப் பொருத்தமான முறையில் அமையவில்லை. போர் தொடங்கி ஆறு மாதங்களின் பின்னர்தான் கட்சிகளின் ஒற்று மையும், போர் முயற்சிகளின் முழு முன்னேற்றமும் நிறை வேறின. இறுதியாகத் தன் பழைமையான வீரத்துடன் இங்கிலாந்து இந்த அபாயத்தை எதிர்த்தது. இவ்வீரத்தின் இணையற்ற அடையாளமே வின்ஸ்டன் சர்ச்சில் ஆவார்.

ஆகவே அமெரிக்காவில் வளர்ந்து வந்த தனித்து வாழும் இயக்கமும், பிரிட்டனின் அமைதி நாடு இயக்கமும் சேர்ந்து உலகத்தை அதன் வழியே நடக்கவிட்டனர். அவர்கள் வின்ஸ்டன் சர்ச்சில் அவசியமற்ற போரை அனுமதித்ததின் மூலம் இதனை நிறைவேற்றினர். முதல் உலகப் போரின் முடிவில் ஐரோப்பா வின் நாடுகள் உரிமைப் பெற்றுச் சுதந்திர நாடுகளாக விளங் கின. போலந்து, செக்கோஸ்லாவிக்யா (Czecho Slovakia) ஹங் கேரி, பால்கன் நாடுகள், பால்டில் நாடுகளுங்கூடச் சுதந்திரத்தை அனுபவித்தன. ஏனெனில 1918–ல் முடிவுற்ற யுத்தத்தில் ரஷ் யாவும், ஜெர்மனியும் தோற்றுவிட்டன. எனவே ஐரோப்பா விடுதலை பெற்றது. இரண்டாவது போர் நிகழ்ந்திராவிடில் அது இன்னும் உரிமையுடன் விளங்கி இருக்கும். இரண்டாம் யுத்தம்

(1939-45) மீண்டும் ஜெர்மனியின் தோல்வியில் முடிவுற்றபோதிலும், கீழ்த்திசையில் ரஷ்யாவின் வெற்றிக்கு வழி வகுத்தது. நாம் எந்த நாடுகளின் சுதந்திரத்திற்காக ஜெர்மனியை எதிர்த்துப் போராடினேமோ, அவற்றில் பல ரஷ்யாவிடம் தங்கள் சுதந்திரத்தை இழந்து நிற்கின்றன. மேலும் ஐரோப்பா ஆன்மீகத் துறையிலும், லௌகீகமாகவும் அடைந்துள்ள அழிவு உலக வரலாறு கண்ட எந்தப் போரும் செய்திராத அளவு இதன் மூலம் செய்யப்பட்டது.

மிக விரைவாகச் சென்று கொண்டிருக்கும் விஞ்ஞானப் புதுமைகளைப் படைக்கின்ற முன்னேற்றத்தினல் இருபதாவது நூற்ருண்டு இடைவிடாத அமைதியின்மையாகிய இயக்கத்தில் உழன்று கொண்டிருக்கின்றது. இவற்றினல் மனித சந்ததியாரும் தெரிந்து கொண்டிராத பாதையிலே துணையற்ற அகதிபோல, நிலைத்த அமைதியின்றி, விரைந்து கொண்டிருக்கின்றது. மோட்டார் யுகம், வாழ்க்கையை ரயில் யுகத்தைவிட அதிக அளவில் மாற்றி இருக்கின்றது. இப்போது வானயுகம் இன்னும் அதனை மாற்றி வருகின்றது. புதிய அணு ஆற்றலுடன் இனி நடக்க விருப்பது என்ன என்பதை நாம் அறியோம். பெரும் நகரங்களில் அமைந்துள்ள வாழ்க்கையானது ஆங்கில மக்களை இயற்கையுடன் தொடர்பு அறுத்துக்கொள்ளச் செய்துள்ளது. தொழில் நுணுக்கம் மறைந்ததும், அதன் இடத்தைப் பொறிகளின் உதவியால் பெருவித அளவில் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை முறை கைப்பற்றிக்கொண்டதும், மனிதர்களின் வாழ்வினின்றும் இன்பத்தையும், உழைப்பின் பெருமையையும் நீக்கி உள்ளது. ஆனல் கல்வித் துறையில் பெரிய முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது. செய்தி பரப்புகின்ற முறைகள் உருவாகியுள்ள அறிவியல் சார்ந்த மாற்றங்களைப் பற்றி மதிப்பிடுவதற்கு இன்னும் காலம் உள்ளது. இப்பெருமாற்றங்களின் கணக்கை சரிவரக் கணித்துச் சொல்வது அவ்வளவு எளிதானதன்று. ஆனல் இதன் தைரியமூட்டுகின்ற அம்சம் என்னவென்ருல், முதல் உலகப்போரின் பயங்கரமான விளைவுகளின் பின்னரும் இங்கிலாந்து மக்களின் பெரும்பான்மையினரின் வாழ்க்கைத் தரம் முந்திய தலைமுறையில் இருந்ததைவிட 1939-ல் அதிக அளவில் காணப்படுவதாகும். முன்னைவிட அதிக ஆண்மையுடனும், வீரங்காட்டும் பண்புடன் பிரிட்டிஷ் மக்கள் இரண்டாவது போரை நடத்தினர். முதல் யுத்தத்தில் இவர்களின் தந்தையர்கள் காட்டிய திறமையையும், வீரத்தையும்விட இவர்களின் பங்கு சிறந்ததாகும், எனவே மனிதன் தனது புதிய ஆற்றல்களைப் பழங்காலத்தைவிட தன் வாழ்வை முழுமை பெறவும்

அதிக இன்பமுள்ளதாக்கவும் பயன்படுத்துவான் என்ற ஒரு நம்பிக்கை எழுகின்றது. ஆனால் இது நிறைவேற சர்வாதிகாரப் போரினின்றும் வன்முறைகளினின்றும் ஒரு விடுதலை, பெற வேண்டும்.

இந்தச் சிறு நூலில் இங்கிலாந்துத் தீவின் மக்கள் உரு மலர்ச்சியைப் பலகோணங்களிலிருந்து காட்ட நான்விழைந்தேன். இம்மலர்ச்சி தொன்மைக் காலந்தொட்டு இயற்கை நமது நாட்டை எந்த முறையில் ஆக்கித் தந்ததோ, பசுமை படர்ந்த அடர்காடாக, பாதி நீர் தேங்கியும், அங்கும் இங்கும் மனிதர் வாழக்கூடிய மேட்டு நிலங்களில், விலங்குகளில் தலைசிறந்த மனிதன் தன் இனத்தைச் சேர்த்துக்கொண்டு கூடாரங்களிலும் சமூகங்களிலும வாழவும், தன்னையும், தன் மக்களையும், தன் மந்தைகளையும் ஓநாய்களின், கரடிகளின் தன் இனத்து எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், தொடங்கிய அந்தப் பண்டைநாள் தொட்டு, இன்று நாம் வாழுகின்ற முழு மாறுதல்கள் மலிந்துள்ள இருபதாம் நூற்றாண்டு வரையும் எனது கண்ணோட்டம் சென்றுள்ளது. பழங்காலத்தில் மனிதன் இயற்கையுடன் நிறைவு பெற்று வாழச் சக்தி அற்றிருந்த நிலையில் விலங்குப் பண்புடனும், செயல்களைக் குறைத்துக்கொண்டும் நடந்து கொண்டான். ஆனால் இன்றோ அவன் வியத்தகு முறையில் அற்புதமான வழியில் இயற்கையை வென்றுவிட்டான். இந்த வெற்றியே அவனை எதிர்நோக்குகின்ற பேராபத்தாகவும் இருக்கின்றது.வருங்காலத்தைப்பற்றிப் பிறர்காண்கின்றஅளவே வரலாற்று அறிஞர்களும் காண முடியும். பழங்காலச் சின்னங்களைக் காட்டுகின்ற வழிகாட்டியைப் போல, வரலாற்று அறிஞனும், பழங்காலத்தின் பலப்பல, மர்மமான செய்திகளைத் தான் சுட்டிக்காட்ட முடியும்.

இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

மார்ன் யுத்தம்—டார்டன்னல்லஸ்—கடல்போர்—மேற்கில் முட்டுக்கட்டை—ஹெயிக்கின் இறுதி வெற்றி—போர்—பேரரசில் மாறுதல்கள்—போருக்குப் பின் லிபரல் ஒப்பந்தங்கள்—கடல் போர்—உள்நாட்டுப் போர் முனை—போர்க்கால அரசியல்.

கலைச்சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Act against truck payments	கொடுப்பதைத் தடைசெய்யும் சட்டம்
Act of Union	ஐக்கியச் சட்டம்
Adult Education	முதியோர் கல்வி
Agents Provocateurs	அமர்த்தப்பட்ட கையாட்கள்
Agricultural Labourer's Treade Unions	விவசாயத் தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கங்கள்
All India Federatian	அனைத்துஇந்தியக் கூட்டாட்சி
Anti-Corn Law-Leaul	தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்
Artisans Dwelling-Act	ஊழியர் குடியியல்பு மசோதா
Asendancy Party	மேலாட்சிக் கட்சி

B

Ballot Act	வாக்குச் சட்டம்.
Benefit Societies	உதவி சபைகள்
Bill pains and penalties	தண்டனை மசோதா

C

Cabinet	அமைச்சரவை
Charter Act	புதிய பட்டயச் சட்டம்
Colonial Preference	சலுகைச் சுங்கத் திட்டம்
Combination Act	தொழிலாளர் கூட்டத் தடைச் சட்டம்
Compulsory Church rate	கட்டாயக் கோவில் வரி
Conseratives	கன்ஸர்வேடிவ்கள்
Criminal law	குற்றவியல் சட்டம்
Criminal Law Amendment Act	குற்றச் சட்டத் திருத்தச் சட்டம்

D

Despotic monarchies	குடியரசு வல்லாட்சி
Direct Representation	நேரடிப் பிரதிநிதித்துவம்
Dual Allance	இரட்டை ஒப்பந்தம்

E

Ecclesiastical Commissioners	சமய ஆணைக் குழு
Entente cordiale	நேச உடன்படிக்கை
Established Church	நிலைநாட்டப்பட்ட திருச்சபை
Evangelicalism	நற்செய்தி பரப்புவோர்

F

Factory Act	தொழிற்சாலைச் சட்டங்கள்
Federal Constitution	கூட்டாட்சி அரசியலமைப்பு
Federal Executive	கூட்டாட்சி நிர்வாகத் துறை
Free trade	தடையில்லா வாணிக முறை

G

Government of India Act	இந்திய அரசாங்கச் சட்டம்
Grand Fleet	பெருங்கடற் படை
Grand National Trade Union	மிக்குயர் தேசிய தொழிற் சங்கம்
Grand Old Man	மாண்புறு முதியவர்

H

Habeas Corpus Act	ஆளுரிமைக் காப்புச் சட்டம்
Health Insurance Act	சுகாதார உறுதி ஈட்டுத் திட்டங்கள்
Holy Alliance	புனிதக் கூட்டு
Home Rule Bill	சுய ஆட்சி மசோதா
Home Secretary	உள்துறைச் செயலாளர்
House of Commons	பொது மக்கள் சபை
House of Lords	பிரபுக்கள் சபை

I

Imperial Preference	பேரரசு வரிச் சலுகை திட்டம்
Imperialist Movement	பேரரசு இயக்க காலம்
Incipient Socialism	ஆரம்ப சோசியலிசம்
Indian Secretary	இந்தியக் காரியதரிசி
Industrial Insurance	தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டங்கள்
Instinets of herd morality	மந்தை இயல்பு–உணர்ச்சிகள்
Institutional life	நிறுவனஞ் சார்ந்த வாழ்வு

J

Jaeobins — ஜேக்கோப்பினர்
Jingoism — நாட்டுப் பற்று
Jobbery — அரசியல் தரகு
July Revolution — ஜூலைப் புரட்சி

L

Land League — நிலச் சங்கம்
League — சங்கங்கள்
Licensing Bill — அனுமதிச் சீட்டுச் சட்டம்
Little Englanders — சிறிய இங்கிலாந்தியர்
Local Government Bill — தல ஆட்சிக் குழு

M

Magna Carta — மகாசாசனம்
Manhood Suffrage — ஆடவர் வாக்குரிமை
Minimum Wage — குறுமக் கூலி
Minister of Munitions — படைக் கல அமைச்சர்
Monroe Doctrine — மன்ரோ கொள்கை
Municipal Corporations Act — நகரபரிபாலனச் சபைச் சட்டம்
Municipalities — நகராண்மைக் கழகங்கள்

N

National Liberal Federation — தேசியத் தாராளவாதிகளின் கூட்டணி
Nationalism — நாட்டுணர்ச்சி
Navigation Acts — கப்பல் போக்கு வரத்துச் சட்டம்
New Poor Law — புதிய இரவலர் சட்டம்
Non Conformity — இணங்காதார்

O

Open Competitive Examination — பகிரங்கப் போட்டித் தேர்வுகள்

P

Parish Councils	ஆளுகை வட்டக் குழுக்கள்
Parliamentary aristocracy	பாராளுமன்ற உயர் குடியாட்சி
Pension	ஓய்வூதியங்கள்
Physical-force Redicals	வன்முறை தீவிர வாதிகள்
Political Franchise	வாக்குரிமை
Political Register	அரசியல் பதிவேடு
Protection	காப்பியல் முறை
Protestant Non-conformists	புரோட்டஸ்டாண்டு இணங்காதார்
Public Health Act	ஊழியர் சுகாதாரச் சட்டம்
Public-houses	மதுக் கடை
Purchasing Power	கூலிகள் வாங்கும் திறன்

R

Radicalism	தீவிரவாதம்
Rating and Valuation Act	வரிவிதிக்கும் மதிப்பீட்டுச் சட்டம்
Regeney	பேராட்சி
Rotten Boroughs	சிதைந்த பரோக்கள்
Royal commissions	ஆணைக் குழுக்கள்
Royalists	அரசனை ஆதரிப்போர்

S

Salvation Army	ஈடேற்ற சேனை
School Board	பழைய பள்ளிக் கழகங்கள்
Sweated Industries Act	கடின உழைப்புத் தொழிற் சட்டம்

T

Tariff Re Form-Movement	சுங்க வரிச் சீர்திருத்த இயக்கம்
Ten Hours Bile	பத்துமணி மசோதா
Territoral Force	பிரதேசப் படை
Test Act	சோதனைச் சட்டம்
Trade Union Act	தொழிற் சங்கச் சட்டம்

Treasury Grants in Aid	தல ஆட்சி கருவூலக் கொடைகள்
Treaty of Agreement	நல்லிணக்க ஒப்பந்தம்
Trench War Fare	அகழிப் போர்
Triple Alliance	முக்கூட்டு ஒப்பந்தம்
Tropical	வெப்ப மண்டலம்
Two-Party System	இரு கட்சி முறை

U

Unphilosophic Radicalism	தத்துவத்திற்குட்படாத தீவிரவாதம்
Utilitarianism	பயனீட்டுவாதம்

V

Vassals	கூட்டு நாடுகள்

W

War office	போர்ப் பணி மன்றம்
Woman's Suffrage.	பெண்டிர் வாக்குரிமை

பொருள் அட்டவணை

ந

நி

நீ

நெ

நே

நை

ப

பா

பி

பீ

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1965 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

			ரூ.	பை.
*1.	பொருளாதாரம்-II	சி. வேலாயுதம்	9	00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12	00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I	தி. சி. மோகன்	12	00
4.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10	75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7	00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11	50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7	50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5	50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4	75
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன்	10	00
11.	இந்தியப் பொருளியல்-II	எம். லூர்துநாதன்	4	25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I	சி. சுந்தரராஜன்	10	75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை-II	எஸ். குழந்தைநாதன்	10	50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	கீ. சீ. இராமசாமி	6	00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-II	,,	6	00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5	00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I	மு. க. சுப்பிரமணியம்	11	00
18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	மா. குமாரசாமி	10	00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	தே. வேலப்பன்	10	00
20.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10	00

* மூல நூல் (Original Book)

			ரூ.	பை.
*21.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடைய பிள்ளை	9	50
22.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	கு. ரா. கறுப்பண்ணன்	11	00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு-I	கி. ர. அனுமந்தன்	10	00
*24.	பிரிட்டன் வரலாறு-II	,,	9	75
*25.	ஐரோப்பிய வரலாறு-I	டி. வி. சொக்கப்பா	4	50
26.	ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15	00
27.	இங்கிலாந்து வரலாறு-I	இரா. அண்ணமலை	13	00
28.	இங்கிலாந்து வரலாறு-II	பா. மாணிக்கவேலு	13	00
29.	இங்கிலாந்தின் வரலாறு-I	க. த. திருநாவுக்கரசு	15	00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I	தி. வெ. குப்புசாமி	7	50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4	75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8	50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8	50
34.	பன்னுட்டு அரசியல்-I	திருமதி நூர்ஜஹான்பாவா	16	00
35.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	வீ. கண்ணையா	9	00
36.	பொதுத்துறை ஆட்சி இயல்-II	அ. ஜெகதீசன்	7	25

உளவியல்

37.	குழந்தை உளவியல்-I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8	00
38.	குழந்தை உளவியல்-II	,,	7	00
39.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7	00

No.	நூல்	ஆசிரியர்	ரூ.	பை.
40.	இளையோர் உளவியல்-I	தி. இரா. அரங்கராசன	12	00
41.	இளையோர் உளவியல்--II	,,	9	00
42.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9	25
43.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11	00
44.	பித்தரின் உள்ளம்	,,	3	00
தத்துவம்				
45.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5	50
அறவியல்				
46.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8	50
அளவையியல்				
47.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2	50
மானிடவியல்				
*48.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4	75
49.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5	50
சமூகவியல்				
50.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10	00
புவியியல்				
*51.	ஆசியா-I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
*52.	ஆசியா-II	,,	8	75
*53.	ஐரோப்பா கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8	50
*54.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8	25

* மூல நூல் (Original Book)

No.	நூல்	ஆசிரியர்	ரூ.	பை.
*55.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4	00
*56.	புவிப் புறவியல்-II	நா. அனந்த பத்மநாபன்	6	00
*57.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9	00
*58.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6	25
*59.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6	50
60.	காலநிலை இயல்-I	கொ. சேஷ. நரசிம்மன்	10	00
61.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11	00
*62.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4	75
புள்ளியியல்				
*63.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10	00
64.	புள்ளியியல் முறைகள்-I	கோ. சண்முகசுந்தரம்	10	00
65.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமி நரசிம்மன்	6	50
விலங்கியல்				
*66.	விலங்கியல்	பெ. மா. அண்ணமலை, இரா. முருகேசன்	12	00
பௌதிகவியல்				
67.	ஒளி நூல்	ச. சம்பத்து	10	00
பொது நூல்கள்				
68.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3	25
69.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3	50
70.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8	00
71.	சேமக் கை–நூல்	ஆ. சுப்பிரமணியன்	2	50
*72.	நீரிழிவு—க்ஷயரோகம்	ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன்	2	50

* மூல நூல் (Original Book)